மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

(தொலைத் தொடர் கல்வி இயக்ககம்)

திருநெல்வேலி – 12

இக்கால இலக்கியம் - கவிதை

முதுகலைத் தமிழ் முதலாமாண்டு

முனைவர்மு.ஜெகதீசன்

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

திருவள்ளுவர் கல்லூரி,

பாபநாசம் – 627425

திருநெல்வேலி மாவட்டம்.

இக்கால இலக்கியம் – கவிதை

பொருளடக்கம்

அலகு 1

பாரதியார் – கண்ணன் பாட்டு

பாரதிதாசன் – வீரத்தாய்

கண்ணதாசன் – ஆட்டனத்தி ஆதிமந்தி (14L)

அலகு 2

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் – பாட்டாளியின் குரல்

மீரா – ஊசிகள் (10L)

அலகு 3

வைரமுத்து – கொடிமரத்தின் வேர்கள்

அப்துல் ரகுமான் – பறவையின் பாதை

மு. மேத்தா – ஆகாயத்துக்கு அடுத்த வீடு (12L)

அலகு 4

பா. விஜய் – கண்ணாடி கல்வெட்டுக்கள்

அறிவுமதி – வலி

நெல்லை ஜெயந்தா – திணை மயக்கம் (13L)

அலகு 5

இன்குலாப் – காந்தள் நாட்கள்

ஆண்டாள் பிரியதர்ஷினி – கடவுளின் கடைசி நாள்

இரா.மோகன் (தொ.ஆ.) – தமிழ் ஹைகூ ஆயிரம் (11L)

(Totel 60L)

அலகு – 1

கண்ணன் பாட்டு

- பாரதியார்

மகாகவி பாரதியார் கவிதைகளும், கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியன முப்பெரும் பாடல்கள் என்று சிறப்பாக வழங்கப்படுவன. நெடும்பாடல்கள் என்ற வகையில் இவைக்கிடையே சில ஒற்றுமைகள் இருப்பினும் பொருளடிப்படையில் பல வேற்றுமைகள் உள்ளன. குயில் பாட்டு கவிஞரின் கற்பனைத் திறனுக்கு வளம் சேர்ப்பன. மாலையழகின் மயக்கத்தில் தோன்றிய கற்பனை. தற்புதுமையான கற்பனைப் படைப்பாகும். மகாபாரத இதிகாசக் கதைக் கூறில் ஒரு பகுதியைத் தழுவி எடுக்கப்பட்டது பாஞ்சாலி சபதம் ஆகும். கண்ணன் பாட்டு கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிப்பன.

பாரதியாரின் கண்ணன் பாட்டில் வரும் கண்ணன் யார் என்பதற்குக் க.கைலாசபதி, **முதலாவது:** "மஹாபாரதத்திலும் வைணவ புராண இலக்கிய மரபிலும் வரும் ஸ்ரீகிருஷ்ணனே என்று ஒரு சாரார் கூறுவர். பாரதியாருக்குச் சமகாலத்தவரும் நெருங்கிய நண்பருமான பரலி சு.நெல்லையப்பரும், வ.வே.சு. ஐயரும் இக்கருத்தை முற்பட எடுத்துக் கூறியவர் ஆவர். பாரதியாருக்குக் கண்ணபிரான் மீதுள்ள அதி தீவிர பக்தி காரணமாக இந்நூலிலுள்ள பாடல்கள் வெளியாயின (பரலி சு.நெல்லையப்பர்), பாரத நாட்டின் குலதெய்வமாகி விட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை.. அந்த உருவமானது நம் கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு

சோபையைக் கொடுத்தது. இஷ்ட தெய்வத்தைப் பல பாவங்களால் வழிபடலாகும் என்று நமது பக்தி சாஸ்திரங்கள் கூறுகின்றன. நமது ஆசிரியரும் இதை அனுசரித்துக் கண்ணன் தாயாகவும், தந்தையாகவும், எஜமானாகவும், குருவாகவும் சோழனாகவும், நாயகியாகவும், நாயகனாகவும் பாவித்துப் பாடுகிறார். (வ.வே.சு. ஐயர்)

இரண்டாவது: கண்ணன் பாட்டில் வரும் கண்ணன் கற்பனையில் முகிழ்த்த உருவம் என்பர். இதிகாசங்களிலும், நாலாயிரப் பிரபந்தம் முதலிய பக்திப் பனுவல்களிலும் வரும் தெய்வீகக் கண்ணனுக்கும் பாரதியார் படைத்துள்ள கண்ணனுக்கும் “இரத்த உறவு” எதுவுமில்லை என்பது இவர்களது வாதம். “ஆழ்ந்து பார்த்தால் அப்பாட்டுக்களிலிருந்தும் (கண்ணன் பாட்டு), மற்றைய பாட்டுக்களிலிருந்தும் தோன்றுவது இதுதான். கண்ணன் என்ற கவர்ச்சி உருவத்திற்குப் பாரதியும் ஒரு கற்பனை மாலை சூட்டியிருக்கிறார் அவ்வளவே. நாயக நாயகி பாவத்திலாவது பக்தி மார்க்கத்தில் வழங்கப்படும் தசவித பாவங்களில் ஏதாவது ஒன்றிலாவது ஈடுபட்டு, பாரதி தன்னை நாயகி முதலிய அவஸ்தைகளில் வைத்துக் கொண்டு பாடியிருக்க முடியாது என்று தெரிகிறது.

முன்றாவது: கண்ணன் பாட்டிலே உயிர்த்துடிப்புள்ள பாத்திரமாக வார்க்கப்பட்டிருக்கும் கண்ணன், கவிஞரது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டு அவருக்குத் தார்மீக பலமும் தெளிவும் அளித்த பெருமகன் ஒருவரது பிரதிபிம்பமே என்பர். “இந்த மாயக் கண்ணனைப் பற்றி இலக்கிய விமர்சகர்கள் ஒரு நிச்சயமான முடிவுக்கு வர முடியாமல் இருக்கிறார்கள். எனக்குத் தோன்றும் ஒரு சந்தேகத்தையும் ரசிகர்களிடம் சமர்ப்பித்து விடலாமென்று நினைக்கிறேன்..... பாரதியின் கண்ணன் முழுமையும் ஸ்ரீகிருஷ்ண அவதாரம் அல்ல.

வெறும் கற்பனைச் சிலையுமல்ல. ஆனால், பாரதியின் இந்த மாயக்கண்ணன் பெரும்பாலும் அவருடைய வாழ்வில் அத்யாத்மக வாழ்வில் சம்பந்தப்பட்டு அதை மலரச் செய்த ஒரு மஹாபுருஷனுடைய பிரதிபிம்பமாகத்தான் இருக்க வேண்டும்" எனப் பல்வேறு ஆய்வறிஞர்கள் படைப்பறிஞர்களின் கருத்துக்களின்வழி குறிப்பிடுகிறார்.

பக்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய கிருஷ்ண சரிதம் என்ற நூலில் கிருஷ்ணன் புதிய பாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளான். "கிருஷ்ணன் கடவுள் அல்ல. ஆனால் எக்காலத்துக்கும் உரிய இலட்சிய மனிதன் அல்லது அதிமனிதன். போராடிக் கொண்டிருக்கும் இந்திய மக்கள் அவனது கொடியின் கீழ் ஒற்றுமைப்பட்டு தேசிய ஒருமைப்பாடு காண முடியும் என்று அவர் எண்ணினார். கண்ணன் என்னும் பாத்திரத்தைத் தேசிய ஒற்றுமைக்குச் சின்னமாகப் போற்றி மதித்தார்." இக்கருத்து பாரதியார் குறிப்பிடும் கண்ணன் கருத்துடன் ஒத்துப்போகிறது. கண்ணனைப் பாரதியார் மனிதன், அதிமனிதன் என்ற தன்மையில் காணுகிறார். "உருவும் உயிரும் பெற்று நித்திய யௌவனத்துடன் மனித உள்ளங்களுடன் ஒட்டி உறவாடும்" பாத்திரமாகக் கண்ணனைப் படைத்துள்ளார்.

பெரியசாமித் தூரன், கண்ணன் பாட்டிற்குத் தரும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. கண்ணனைக் காதலனாகவும், கண்ணம்மாவைக் காதலியாகவும், குழந்தை, சேவகன் முதலிய வெவ்வேறு நிலைகளில் கற்பனை செய்து பாரதியார் இவற்றை உருவாக்கினார். "எங்கும் உன் முகத்தினையே கண்டேன்" என்று கூறுகிறார். எங்கும் இறைவனைக் காண்கிற தத்துவம் இனிதாக அமைந்துள்ளது. உண்ணும் உணவிலும், பருகும் நீரிலும்,

தின்னும்வெற்றிலையிலும் கண்ணன் எம் பெருமானையே காணுதும். பெண் முகத்தில் திரையிட்டு மறைப்பதைக் கண்டிக்கிறது. “காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை” என்பதும், பின் வந்து கண் மறைக்கின்ற கண்ணம்மாளின் முகம் எந்த இடத்திலும் தெரிகிறது. இரண்டிற்கு எந்தவொரு வித்தியாசமும் இல்லை. கண்ணன் தன் காதலனே என்று பாடுகிறார்.

கண்ணன் பாட்டில் கண்ணனைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், சற்குரு வாகவும், காதலனாகவும் பாடுகிறார். கண்ணம்மாவைப் பற்றிப் பாடுகையில், குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும், காதலியாகவும், குலதெய்வமாகவும் பாடுகிறார்.

கண்ணன் என் தோழன் சுபத்திரையைப் புறம் கொண்டு போவதற்கு வழி செய்திடுவான். கானகத்தில் இருக்கும் போது நெஞ்சில் கலக்கம் ஏற்படாதவண்ணம் பார்த்துக் கொள்வான். படைகளுடன் போர்ச் செய்யும் போதில் தேரை வழிநடத்துவான். நோய்வருகையில் உற்ற துணையாக இருந்திடுவான். மருந்தும் சொல்வான். கவலை உறுகையில் இதம் சொல்லி மாற்றிடுவான்.

பிழைக்கும் வழி சொல்லுவான். உழைப்பதற்கும் வினையாளும் வழிப்பயனுக்கும் உண்ணுவதற்கும் வழி சொல்லுவான். அழைக்கும் போது போக்கு சொல்லாமல் அரைநொடிக்குள் வருவான். பசி நேரத்தில் உணவளித்து வாழ்வினுக்கு வழி செய்வான். கேட்ட பொழுதில் கொடுப்பான். கேலி பொறுத்திடுவான். ஆட்டங்கள் காட்டியும் பாட்டுப் பாடியும் ஆறுதல் செய்திடுவான்.

உள்ளத்தில் கருவம்கொண்ட போழ்தில் ஓங்கி அடித்திடுவான். நெஞ்சில் கள்ளத்தைக் கொண்டு ஒரு வார்த்தை சொன்னால் அங்கு காறி உமிழ்ந்திடுவான். சின்னச் சின்னக் குழந்தை போல் விளையாட்டுக் காட்டிச் சிரித்திடுவான். கோபத்தில் ஒரு சொல் சொல்லிச் சிரித்திடுவான். சொன்னபடி நடவாவிடில் தொல்லை அளித்திடுவான்.

ஆபத்தில் பக்கத்தில் வந்து நின்று அதனை விலக்கிடுவான். தீமைகளைத் தடுத்திடுவான். உண்மை தவறி நடக்கும் போது தடுத்திடுவான். வண்மையினால் மாத்திரம் பொய்கள் உரைத்திடுவான். சொல்லும் மொழிகள் குழந்தைகள் போலொரு சூதறியாது சொல்வான். நல்லவருக்கு ஒரு தீங்கு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வான்.

கண்ணன் என் தாய் உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதமாகும் அவள் தரும் பால். எனக்குக் கண்ணன் என்று பெயர் சூட்டியவள். கையிலணைத்து மடியில் வைத்து கதைகள் சொல்லிடுவாள். இன்பக் கதைகள், வெற்றிக் கதைகள், துன்பக் கதைகள், தோல்வி கதைகள், வீழ்ச்சிக் கதைகள் போன்றன சொல்லுவான்.

சோலைகளில் விலங்கினங்கள், பறவையினங்கள், கனி வகைகள் போன்ற கதைகள் சொல்லுவாள். பொம்மைகளை எனக்காகக் குவித்து வைத்தாள். தின்பண்டங்கள் கொடுப்பதோடு செவிகளில் தெவிட்டாத பாட்டுகளும் கொடுத்தாள். என் உடன் தோழர்களுக்கும் கொடுத்தாள். சகோதரத்துவத்தை ஊட்டினாள். வேண்டியன விரும்பும் முன் கொடுத்திடுவாள். ஆண்டவன் அருள் புரிந்திடுவாள். நீண்டதொரு புகழ் வாழ்வும் பிறருக்கு நிகரான பெருமையும் அவள் கொடுப்பாள்.

கண்ணன் என் தந்தை தாம் பிறந்த சரித்திரத்தை உரைப்பார். தெய்வத்திற்கோர் குறையில்லை. சேமித்த பொன்னுக்கு அளவில்லை. கல்வியில் சிறந்தவற்றைக் கற்றுக்கொடுப்பார். பல்வேறு மாண்பிடையே கொஞ்சம் பயித்தியம் அவ்வப் போது தோன்றும். நல்வழி சொல்லுபவரை மனம் நையும்வரை சோதனைகள் நடத்தை உண்டு. உண்மை சொல்லித் தருவார். வருண சாத்திரங்கள் சூனியப் பொய் என்று நகைப்பான். ஏழைகளோடு தோழமை கொள்வான். செல்வம் ஏறியவரிடம் விலகி இருப்பான். தளர்ச்சி கொள்ளாதவர்க்குச் செல்வம் அளிப்பான். நிலத்தை நாடியிருப்பான். இன்பம் இதுவெனவும் துன்பம் இதுவெனவும் எண்ணுவதில்லை. அன்புக்குப் பஞ்சமில்லை. தெளிந்த அறிவிற்குப் பஞ்சமில்லை. வேதங்களில் மனிதர்கள் மொழியில்லை என்றுரைப்பான். நாலு குலங்களை அமைத்தவன் மூடன். குலத்தினில் சிறந்தவர் உயர்ந்தவர் என்று எவருமில்லை. போலியைச் சொல்லித் தரும் சுவடிகளைப் பொசுக்கி விட்டால் நன்மை உண்டாகும் என்று எண்ணுவான். வயது முதிர்ந்த போதிலும் வாலிபக் கலையில் மாற்றமில்லை. துயரில்லை. மூப்புமில்லை. சோர்வில்லை. நோயென்று எதுவுமில்லை. நடுநின்று விதிச் செயல் கண்டு மகிழ்வான். துன்பத்தில் உள்ளவர்கள் ஆறுதலும் உதவியும் செய்வான். இன்பத்தை எண்ணுபவர்க்கு என்றும் இன்பமிகத் தருவதில் இன்ப உடையவனாக இருப்பான்.

கண்ணன் என் சேவகன் கூலி மிகக் கேட்போர் கொடுத்த எல்லாவற்றையும் மறந்து விடுவர். வேலை அதிகமெனில் வீட்டில் தங்கிவிடுவார். ஒன்றுரைக்க வேறு செய்வார். உள் வீட்டுச் செய்தி எல்லாம் ஊரில் பலருடன் உரைப்பார். என் வீட்டில் இல்லை என்றால் எங்கும் முரசம் அறைவார். சேவகர் இல்லாவிடில் செய்கை நடக்கவில்லை. மாடு

கன்று மேய்த்திடுவான். மக்களைக் காத்திடுவான். வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவான். சொன்னபடி கேட்பான். துணிமணிகள் காத்திடுவான். ஆட்டம் காட்டி அழாமல் பார்த்திடுவான். இரவு பகலானாலும் சிரமம் பார்ப்பதில்லை. நெஞ்சில் உள்ள காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்றான். பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே கண்டு மிகவும் களிப்புடன் நான் அவனை ஆளாகக் கொண்டு விட்டேன். பண்டமெல்லாம் சேர்த்து வைத்து பால் வாங்கி, மோர் வாங்கிப் பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற ஆதரித்து நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனுமாய், பண்பிலே பெரும் தவமாய் பார்வையில் சேவகனாய். எங்கிருந்தோ வந்தான். இடைச்சாதி நான் என்றான். இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன். செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற் கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், தெளிவே வடிவாம், சிவஞானம் என்றும் நலமனைத்தும் பெற்றவனான்.

கண்ணன் என் அரசன் பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும் பார்த்திருப்ப தல்லான் என்றும் செய்திட்டான். நகைபுரிந்து பொறுத்துப் பொறுத்தையோ நாட்கள் மாதங்கள் ஆண்டுகள் போக்குவான். கண்ணன் வென்று பகைமை அழிந்து நான் கண்ணில் காண்பது அரிதெனத் தோன்றுமே. படைகள் சேர்த்தல், பரிசனம் சேர்த்திடல், பணமுண்டாக்கல் எதுவும் புரிந்திடான். இடையன் வீரமில்லாதவன், அஞ்சினோன் என்றவர் சொலும் ஏச்சிற்கு நாணாதவன். முல்லை போன்ற மெல்லிதாகச் சிரிக்கும் மாதருடன் பொழுதுகள் போக்குவான். தானம், கீர்த்தனை, தாளங்கள், கூத்துக்கள், தனிமை என்றிவை போற்றுவான். நாம் அவனை நம்பியிருக்கும் போது நாணமின்றி பதுங்கி வளருவான். தீமை தன்னை விலக்கவும் செய்வான். சிறுமை கொண்டு ஒளிந்து ஓடவும் செய்குவான்.

தந்திரங்கள் பயிலவும் செய்வான். சவுரியங்கள் பழகவும் செய்வான். மந்திரங்கள் பல காட்டுவான். வலிமையின்றி சிறுமையில் வாழ்வான். காலம் வந்து கைகூடும் போது புதிதாக விளங்குவான். வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் வெந்து போகும் அளவிற்குப் பகைமை நீக்குவான். சக்கரத்தில் ஒரு கணம். தருமம் ஒரு கணம். உலகம் ஆயிரம் ஆண்டுகள் பட்ட துன்பத்தை ஒரு நொடியில் மாற்றுவான். திண்ணை வாயில் பெருக்க வந்து எனைத் தேசம் போற்றத்தக்க மந்திரி ஆக்கினான்.

கண்ணன் என் காதலன் தூண்டில் புழுவினைப் போல் சுடர் விளக்கினைப் போல் நீண்ட பொழுதாக என் நெஞ்சம் துடிக்குதடீ, கூண்டுக் கிளியினைப் போல் தனிமை மிகவும் நொந்தேன். வேண்டும் பொருளை எல்லாம் மனம் வெறுத்தடீ.

பாயில் தினமும் படுத்திருக்கையில் தாயினைக் கண்டாலும் சலிப்பு வந்ததுடீ, வாயில் வந்ததெல்லாம் வளர்த்துப் பேசிடுவீர். நோயினைப் போல் அஞ்சினேன். உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. மணம் விரும்பவில்லை. மலர் பிடிக்கவில்லை. குணம் உறுதியில்லை. எதிலும் குழப்பம் வந்ததடீ. கணமும் உள்ளத்திலே காணக் கிடைத்ததில்லை.

கனவு கண்டதிலே ஒரு நாள் கண்ணுக்குத் தோன்றாமல் இனம் விளங்கமில்லை. எவனோ என்னகந் தொட்டு விட்டான். கண் விழித்தேன். மேனி மறைந்து விட்டான். மனதில் மட்டில் புதிதோர் மகிழ்ச்சி கண்டதடீ. உச்சி குளிர்ந்ததடீ. உடம்பு நேராச்சு. மச்சிலும் வீடுமெல்லாம் முன்னைப் போல் மனத்துக் கொத்ததடீ. இச்சை பிறந்ததடீ. எதிலும் இன்பம் விளைந்ததடீ. அச்சம் மொழிந்ததடீ. அழகு வந்ததடீ.

எண்ணும் பொழுதிலெல்லாம் அவன் கை பட்ட இடத்தல் குளிர்ச்சி பொருந்தியிருந்தது. எண்ணியெண்ணிப் பார்த்தேன் அவன்தான் யாரெனச் சிந்தை செய்தேன். கண்ணன் திருவுருவம் கண்ணின் முன் நின்றதடீ.

உறக்கமும் விழிப்பும் சகிப் பெண்களிடம் கண்ணன் மீது காதல் கொண்ட தலைவி பேசுவதாக அமைந்துள்ளது.

நேரம் அதிகரித்து இன்னும் தூக்கம் இல்லாமல் உங்கள் நினைப்பு தெரியவில்லை. கூத்தடிக்கிறீர்கள். சூரியன் உறங்கும் நள்ளிரவில் என்ன தூளி படுகுதடி. இவ்விடத்தில் ஊரை எழுப்பிவிட எண்ணுகின்றீர். அன்னை ஒருத்தி உண்டு என்பதையும் மறந்துள்ளீர்கள். சலிப்பு தருகின்றீர்.

நானும் பல தினங்கள் பொறுத்திருந்தேன். இது நாளுக்கு நாள் அதிகமாக விட்டது. கூனன் ஒருவன் வந்து இந்த நாணிப் பின்னலைக் கொண்டை மலர்கள் சிதற நின்றிழுத்ததும். ஆனை மதம் பிடித்து வஞ்சியம்மையின் அருகினில் இவள் மூர்ச்சையுற்றதும். பானையில் வெண்ணெய் முழுவதும் தின்றுவிட்டதால் ரோகிணி நட்சத்திரம் கொண்ட பாங்கிக்கு நோவு வந்ததாம்.

பத்தினியாளை ஒரு பண்ணை வெளியில் பத்துச் சிறுவர் வந்து முத்தமிட்டதும், நத்தி மகளினுக்கு ஓர் சோதிடன் வந்து நாற்பது அரசர் வாக்களித்ததும். வீணி என்ற பெண் மேற்குத் திசைமொழிகள் கற்று வந்ததும். என்று எத்தனை பொய்கள் சொன்னீர். என்ன கதைகள் சொன்னீர். என்னை உறங்க விடாமல் இன்னல் செய்கிறீர்கள். சத்தமிடும் குழல்கள் வீணைகளெல்லாம் தாளங்களோடு கட்டி மூடி வைத்தீர். அங்கே அதிகமான

வெளிச்சம் இல்லாமல் மேற்குச் சுவரருகில் வைத்ததன் பின்னர் என்னைத் தனியாக நித்திரை கொள்ளவிட்டு நீங்கள் எல்லோரும் உங்கள் வீடு செல்லுவீர்கள்.

பின்பு அவள் தனியாகப் பேசுகின்றாள்: கண்கள் உறங்கவொரு காரணம் உண்டோ. கண்ணனை இன்றிரவு காண்பதன் முன் பெண்கள் எல்லோரும் வீடு சென்று விட்டனர். பிரிய மிகுந்த கண்ணன் காத்திருக்கிறான். வெண்கல வாணிகரின் வீதி முனையில் வேலிப் புறத்திலெனைக் காண் என்றான். கண்கள் உறங்குமா, கண்ணனைக் கையிரண்டும் கட்டப்படவில்லை.

கண்ணனைக் காட்டிலே தேடுதல் திக்குத் தெரியாத காட்டில் உனைத் தேடித் தேடி இளைத்தேன். மிக்க நலமுடைய மரங்கள், பல விந்தைச் சுவையுடைய கனிகள், எந்தப் பக்கத்தையும் மறைக்கும் உயர்ந்த வரைகள். அங்குப் பாடி நகர்ந்து வரும் நதிகள்.

நெஞ்சில் கனல் மனக்கும் பூக்கள் எங்கும் நீளக் கிடக்கும் மலை கடல்கள். மதி வஞ்சித்திடும் அகழிச் சுனைகள். முட்டிகள் மண்டிக் கிடக்கும் துன்பம் கொடுக்கும் புதர்கள்.

ஆசை பெற விழிக்கும் மான்கள். உள்ளம் அஞ்சக் குரல் பழகும் புலிகள். நல்ல நேசம் மிகுந்த கவிதை சொல்லும் பறவை. அங்கு நீண்டே படுத்திருக்கும் பாம்பு.

தன்னிச்சை கொண்டு அலையும் சிங்கம். அதன் சத்தத்தில் கலங்கும் யானை. அதன் முன்னின்று ஓடும் இள மான்கள். இவை முட்டாது மணலில் பதுங்கும் தவளை. கால்கை

சோர்ந்து விழலானேன். இரு கண்களும் தூங்காதவளானேன். வேல் கைக் கொண்டு கொலை வேடன் உள்ளம் வெட்கம் கொண்டு ஒழிய விழித்தான்.

பெண்ணே உனது அழகைக் கண்டு மனம் பித்தம் கொள்ளுகிறேன் என்று நகைத்தான். அடிக் கண்ணே, என் கண்மணியே உனைக் கட்டித் தழுவ மனம் கொண்டேன்.

சோர்ந்தே படுத்திருக்கலாமா. நல்லத் துண்டங்களைப் போட்டுக் கறி சமைத்துத் தின்போம். சுவை தேர்ந்தெடுத்துக் கனிகள் கொண்டு தருவேன். நல்ல தேன் கள்ளுண்டு இனிது களிப்போம் என்று கொடிய விழியுடைய வேடன் உயிர் போகும் அளவுக்கு உரைத்தான். தனியே நின்று இருகரமும் குவித்து அந்த நீசனிடம் இதைச் சொல்வேன்.

அண்ணா உனதடியில் வீழ்வேன். எனை அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டாம். பிறரை மணமுடித்த பெண்ணை உன் கண்ணால் பார்த்திடவும் தகுமா?

ஏடி பெண்ணே சாத்திரங்கள் வேண்டாம். உனது இன்பம் வேண்டுமடி கனியே. உனது அழகு மொந்தை வாய்ந்த பழைய கல்லைப் போல தலையைக் கிறக்குதடி.

காதால் இந்த உரை கேட்டேன். வெற்றி கொள்ள முடியாமல் வீழ்ந்தேன். இந்த இக்கட்டான நேரத்தில் கண்ணனே உன்னைக் கண்டேன். வேடன் எங்கு போனான் என்று தெரியவில்லை. மணிவண்ணா என்ற என் அபயக் குரலில் என்னை வாழ்விக்க வந்த அருளே நீ வாழ்வாயாக.

பாங்கியைத் தூது விடுத்தல் கண்ணன் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் தோழியைத் தூது விடுக்கிறாள். அவளிடம் தன் காதலை எடுத்துரைத்து கண்ணனிடம் ஒரு சொல் கேட்டு வரவேண்டும் என்று தூது மொழிகிறாள்.

கண்ணன் மனநிலை தங்கம் போன்றது. அதனைக் கண்டு வர வேண்டும். எண்ணத்தை உரைக்க வேண்டும். பின்னர் ஏதேனும் செய்ய வேண்டும். கன்னிகையாகவே இருந்து காலம் கழிப்போம். அன்னிய நிலத்தைச் சேர்ந்த மன்னர்களும், மக்களும் பூமியில் இருக்கிறார்கள். சொன்ன மொழி தவறும் மன்னவனுக்கு எங்கும் தோழமைகள் இருப்பதில்லை. என்ன பிழைகள் இங்குக் கண்டிருக்கிறான் என்று கண்ணனிடம் தெளிவு பெறக் கேட்டுவிட வேண்டும்.

விருப்பத்தை அளித்துவிட்டு தலை மறைவாகத் திரிபவருக்கு மானம் உண்டா? பொய்யை உருவமாகக் கொண்டவன் என்று கிழப் பெண்கள் கூறுகிறார்கள். முன்னொரு நாள் ஆற்றங்கரையில் என்னை அழைத்துத் தனியிடத்தில் பேசியது எல்லாவற்றையும், நகர் முழுவதும் முரசம் அடித்துத் தூற்றி வருவது என்று சொல்லி வை என் தோழியே.

இழிவான பெண்களிடம் அவன் சூழ்ச்சியையும், திறமையையும் காட்டுகிறான். அதே போன்று வீரமிகுந்த பெண்ணிடம் காட்ட வேண்டியதில்லை என்று கண்ணனிடம் சொல்லி வை என் தோழியே.

பூமியில் பெண் என்று பிறந்துவிட்டால் மிகவும் இழிவு தன்மை இருக்குது என் தோழியே. கண்ணன் பண் ஒன்றை குழலினில் இசைத்தவாறு வந்துவிட்டான். அதை என் மனம் ஒருபோதும் மறக்க இயலவில்லை. நேரம் முழுவதிலும் பாவியாகிய கண்ணனையே

நினைத்து நெஞ்சம் உருகுகிறது. தீர ஒரு சொல்லையாவது கேட்டு வந்துவிட்டால் தெய்வம் இருக்கிறது என்ற நம்பிக்கை வரும் என் தோழியே.

பிரிவாற்றாமை காதலால் உள்ளம் உருகி பிரிவு ஆற்றாமையால் வருந்திப் பாடும் பெண்ணின் நிலையைப் பாரதியார் பாடுகிறார்.

ஆசை முகமறந்து போச்சே – இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி!
நேச மறக்கவில்லை நெஞ்சம் – எனில்
நினைவு முகமறக்க லாமோ?

கண்ணில் தெரியுதொரு தோற்றம் – அதில்
கண்ண னழகுமுழு தில்லை
நண்ணு முகவடிவு காணில் – அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணோம்.

ஓய்வு மொழிதலுமில் லாமல் – அவன்
உறவை நினைத்திருக்கும் உள்ளம்
வாயு முரைப்பதுண்டு கண்டாய் – அந்த
மாயன் புகழினைபயெப் போதும்.

கண்கள் புரிந்துவிட்ட பாவம் – உயிர்க்
கண்ண னுருமறக்க லாச்சு
பெண்க ளினத்திலிது போலே – ஒரு
பேதையை முன்புகண்ட துண்டோ?

தேனை மறந்திருக்கும் வண்டும் – ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்

வானை மறந்திருக்கும் பயிரும் – இந்த
வைய முழுதுமில்லை தோழி!

கண்ணன் முகமறந்து போனால் இந்தக்
கண்க ளிருந்துபய னுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் – இனி
வாழும் வழியென்னடி தோழி?

கண்ணன் கனிகள் கொண்டு தருவான். கற்கண்டு போல் இனிதாய் பேசுவான். சந்தனம் உள்ளிட்ட நறுமணங்களை குளிர்ந்த நெற்றியில் பூசுவான். வட்டமாக பொட்டிடுவான். சவ்வாதும் தெளிப்பான்.

கொண்டையில் தைலங்கள் தடவுவான். விழியில் மையும் தடவுவான். பஞ்சு போன்ற பாதத்தில் தண்டை அணிந்திருப்பான். அவனின் இனிமை தரும் பேச்சுக்கள் பெண்களின் மனம் கவருவதாய் அமையும்.

குங்குமம் கொண்டு வாருங்கள் கண்ணனின் மார்பில் பூசு வேண்டும். அவனது மார்பினை மையல் செய்யும் பெண்களே! அவனுக்கு எவ்வித துன்பமும் இல்லாமல் முகம் பார்த்திருந்தாள் போதும். மங்களம் ஆகும். வருத்தம் தீரும். விந்தை விந்தையாக எனக்கே சில தோற்றங்கள் காட்டுவாள்.

கண்ணம்மா என் குழந்தை

சின்னஞ் சிறு கிளியே – கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே – உலகில்

ஏற்றம் புரிய வந்தாய்!

பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா

பேசும் பொற் சித்திரமே!

அள்ளி யனைத்திடவே – என் முன்னே

ஆடி வருந் தேனே!

ஓடி வருகையிலே – கண்ணம்மா

உள்ளங் குளிரு தடீ

ஆடித்திரிதல் கண்டால் – உன்னைப் போய்

ஆவி தழுவு தடீ.

உச்சி தனை முகந்தால் – கருவம்

ஓங்கி வளரு தடீ

மெச்சி யுனையூரார் – புகழ்ந்தால்

மேனி சிலிர்க்கு தடீ.

கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்

கள்வெறி கொள்ளு தடீ

உன்னைத் தழுவிடிலோ – கண்ணம்மா!

உன்மத்த மாகு தடீ

சற்றுன் முகஞ் சிவந்தால் – மனது

சஞ்சல மாகு தடீ.

நெற்றி சுருங்கக் கண்டால் – எனக்கு

நெஞ்சம் பதைக்கு தடீ.

என் கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா!

என்னுயிர் நின்ன தன்றோ?

சொல்லு மழலையிலே கண்ணம்மா!

துன்பங்கள் தீர்ந்திடு வாய்!

முல்லைச் சிரிப்பாலே – எனது

மூர்க்கந் தவிர்த்திடுவாய்.

இன்பக் கதைக ளெல்லாம் – உன்னைப் போல்

ஏடுகள் சொல்லுவ துண்டோ?

அன்பு தருவதிலே – உனைநேர்

ஆகுமோர் தெய்வ முண்டோ?

மார்பில் அணிவதற்கே – உன்னைப்போல்

வைர மணிக ளுண்டோ?

சீர்பெற்று வாழ்வதற்கே – உன்னைப்போல்

செல்வம் பிறிது முண்டோ?

கண்ணம்மா என் காதலி என்னும் தலைப்பில் கண்ணம்மாவைத் தலைவியாகப் பாவித்து காதல் மொழிகள் பாடுகிறார். குறிப்பிடம் தவறிய தலைவனின் மனநிலையைப் பாடுவதாக அமைகிறது.

தீர்த்த கரையில் தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்தில் எதிர் பார்த்திருந்தால் நான் வருவேன். வெண்ணிலாவில் பாங்கியோடு ஒன்று சொன்னாய். வார்த்தைத் தவறிவிட்டாய் கண்ணம்மா என் மார்பு துடிக்குதடி. பார்த்த இடமெல்லாம் உனைப் பாவை தெரியுதடி.

மேனி கொதிக்கிறது. தலை சுற்றி வேதனை செய்கிறது. வானில் இடத்தில் எல்லாம் இந்த வெண்ணிலா வந்து தழுவுவது. இந்த உலகம் உறக்கத்தில் மூழ்கும் போது, நான் ஒருவன்

மட்டும் பிரிவு என்ற நரகத்தில் உழல்கின்றேன். உன் மாளிகையில் காவல் கடுமையாக உள்ளது. அடிமையாகிய நான் நினைக்கும் போது அங்கு வருவதற்கு இயலவில்லை. கொடுமை பொறுக்கவில்லை. கட்டும் காவலும் கூடிக் கிடக்கிறது. நடுவில் இருக்கும் அரசி அவள் எதற்காக நாணிக் குலைந்திடுவாள்.

கூடிப் பிரியாமல் ஓர் இரவு அங்கே கொஞ்சிக் குலவி, ஆடி விளையாடி, உன் மேனியை நாடித் தழுவி மனக் குறைத் தீர்ந்து நான் களி எய்தவும், பாடிப் பரவசமாய் நிற்கவும் தவமாய் கிடக்கிறேன்.

நீ எனக்கு பாயும் ஒளி. நான் உனக்கு பார்க்கும் விழி. வாயால் சொல்ல முடியாது உன் மேன்மை முழுவதும். நீ எனக்கு வீணை. நான் உனக்கு மீட்டும் விரல். காணுமிடம் எல்லாம் கண்ணொளி வீசுகிறது. நீ எனக்கு வான்மழை. நான் உனக்கு வண்ண மயில். நீ எனக்கு பானம். நங்கை உன் சோதி முகம் ஊனமில்லா நல்லழகாகும். என்னுள் சுவை எனக்குக் கண்ணம்மா.

நீ எனக்கு வெண்ணிலவு. நான் உனக்கு மேவும் கடல். நீ எனக்குப் பண்ணு சுதி. நான் உனக்குப் பாட்டின் இனிமை. கண்ணின் மணி போன்றவளே. கட்டிய அமுதே. நீ எனக்கு வீசும் கமழ். நான் உனக்கு விரியும் மலர். நீ எனக்குப் பேசும் பொருள். நான் உனக்குப் பேணும் மொழி. ஆசை மதுவே, கனியே, அள்ளு சுவையே கண்ணம்மா.

நீ எனக்குக் காதல். நான் உனக்குக் காந்தம். நீ எனக்கு வேதம். நான் உனக்கு விந்தை. பொங்கிவரும் தீம் சுவை. நாத வடிவானவள். நல்ல உயிர் கண்ணம்மா. நீ எனக்கு நல்ல உயிர். நான் உனக்கு நாடி. நீ எனக்கு செல்வம். நான் உனக்கு சேமநிதி. எல்லையற்ற

பேரழகு. எங்கும் நிறைந்த பொற்சுடர். முல்லை நிகர் புன்னகையாய் மோதும் இன்பமே கண்ணம்மா என்று பாரதியார் பாடுகிறார்.

கண்ணம்மா என் குலதெய்வம் உன்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா. பொன்னை உயர்வை விரும்பிடும் என்னைக் கவலைகள் தின்னாதவாறும் காத்தருள வேண்டும். அச்சம் என் நெஞ்சில் குடிமை புகுந்தது. அதனைக் கொன்று போக்க வேண்டும். தன் செயல் என்று எண்ணி உன் செயல் நிறைவு பெறும். துன்பம் இனியில்லை. சோர்வில்லை. இனித் தோல்வியில்லை. அன்புநெறியில் அறங்கள் வளர்ந்திட வேண்டும். நன்மை தீமை அறியாதவனாய் நான் இருக்கிறேன். நல்லதை நாட்ட வேண்டும். தீயதை ஓட்ட வேண்டும்.

வீரத்தாய்

- பாரதிதாசன்

புதுவையைச் சார்ந்த பாரதிதாசன், பாரதியாரின் சாதி மதம் கருதாத, தெளிந்த உறுதியான கருத்துக்களால் ஈர்ப்புற்றுத் தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதினார். புதுவையிலிருந்து வெளிவந்த தமிழ்ப் பத்திரிக்கைகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் என்ற பெயர்களில், பாடல், கதை, கட்டுரை, மடல்கள் எழுதினார். பத்து ஆண்டுகள் பாரதியாருக்குத் தோழனாக இருந்தார். இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றார். குடியரசு, பகுத்தறிவு பத்திரிக்கைகளில் எழுதினார். இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பாட்டெழுதிய முதல் பாவலர் பாரதிதாசன் ஆவார். சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் நகைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு நூல்களை வெளியிட்டார். நாத்திகர் மாநாட்டில் நான் ஒரு நிரந்திர நாத்திகன் என்று எழுதிக் கையெழுத்திட்டார். ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் என்ற இந்தியாவின் முதல் கவிதைப் பத்திரிக்கையைத் தொடங்கினார். பெரியார் தன்மான இயக்கத்தில் சிறந்தப் பாவலர் என்று பாராட்டு பெற்றார்.

எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு (ஐந்து பாகம்), பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு, அழகின் சிரிப்பு, முல்லை இதழ் தொடங்கி அமைதி – ஊமை நாடகம் வெளியிடல், சௌமியன் நாடக நூல், ஆத்திச்சூடி, குயில், காதலா கடமையா? முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள், கடல்

மேற்குமிழிகள், திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட புதுக்கரடி சேர தாண்டவம், தமிழச்சியின் கத்தி, ஏற்றப்பாட்டு, அமிழ்து எது? கழைக்கூத்தியின் காதல், தேனருவி, தாயின்மேல் ஆணை, இளைஞர் இலக்கியம், பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித்திட்டு, பிசிராந்தையார், வள்ளுவர் உள்ளம், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா ஆகியவை பாடல்களாகவும், சில தனித்தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

நம் பாடப்பகுதியில் வீரத்தாய் என்ற நாடகம் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்களின் வீரத்தினைப் போற்றும் நாடகமாக அமைந்துள்ளது. இழந்த ஆட்சியைத் தனது புத்திக் கூர்மையாலும், கல்வியாலும் மீட்டெடுக்கும் போராட்டம் நிறைந்த நாடகமாகும். கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுகிறார். சூழ்ச்சிகள் நிறைந்த இந்த நாடகம் படித்து இன்புறத் தக்கதானது.

மணிப்புரி நகரத்தில் அரசன் இறந்தபின்பு சேனாதிபதி ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்கிறான். அரசனின் மனைவி தலைமறைவாக இருந்ததைத் தனக்குச் சாதமாக்கி அவள் இறந்துவிட்டாள் என்று அறிவித்தான். மகனை கல்வியறிவு பெறக் கூடாது என்று காட்டில் ஒரு கிழவனிடம் பயிற்சி பெற அனுப்பி வைத்தான். அவன் வில், வால் போன்ற பயிற்சிகளைப் பெறலாம். ஆனால் கல்வி பெறக் கூடாது என்று கட்டளை இட்டான். அரண்மனையிலுள்ள இரகசிய அறையிலுள்ள பொருள்களையும் ஆவணங்களையும் கைப்பற்றி பிற நாட்டு மன்னர்கள் மத்தியில் அரசாட்சி ஏற்கவும், மக்களை ஏமாற்றவும் முடிவெடுத்தான். மந்திரி காங்கேயன் அவனுக்கு உற்ற துணை நின்றான். மன்னனின்

மனைவி விஜயதாரணி பெண் என்பதால் அவளால் ஏதும் செய்யமுடியாது என்று எண்ணினான்.

அரசாங்கப் பொக்கிஷத்தைத் திறக்கும் நாள் பார்த்தான். வயதான கிழவர் அந்தப் பொக்கிஷத்தைத் திறந்தார். பின் பதவி ஏற்க ஏற்பாடாயிற்று. மன்னர் இறந்தபின் வாரிசு இல்லை. அதனால் தானே மன்னனாக வேண்டும் என்று அறிவித்தான். பிற மன்னர்கள் பதவி ஏற்று வைக்க வந்தபோது, அவர்களுக்கு இரகசியம் கடிதம் வந்தது குறிப்பிட்டனர். அக்கடிதத்தில் வாரிசு உண்டென்றும் அதனை நீர் சூழ்ச்சியால் மறைத்தீர் என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் அனுப்பியவரை விசாரிக்கும் போது கிழவர் முன்னால் வந்து நின்றார். சேனாதிபதி அரசனின் மகனை வளர்ப்பதற்காக விடப்பட்ட கிழவர் தன் வேசம் களையும் போது அரசனின் மனைவியான விஜயதாரணி யாக நின்றாள். பின் வாரிசுபடி அரசனின் மகனுக்குப் பதவி ஏற்கப்பட்டு, வஞ்சகக்காரர்களின் சூழ்ச்சிக்கு ஆட்பட்ட அரசைக் காப்பாற்றி வீரத்தாய் என்ற நிலையில் விளங்கினாள்.

பாரதிதாசன் எழுதிய நாடகங்களில் வீரத்தாய் பெண்மையின் வீரமும் அறிவுநுட்பமும் பேசக்கூடிதாக உள்ளது. அக்கதை வருமாறு:

காட்சி: 1

[மணிபுரி மாளிகையில் ஓர் தனி இடம், சேனாதிபதி காங்கேயனும் மந்திரியும் பேசுகின்றனர்]

சேனாதிபதி :

மன்னன் மதுவினில் ஆழ்ந்து கிடக்கிறான்
மின்னல் நேர் சிற்றிடை ராணி விஜயா

நமக்கும் தெரியாமல் எவ்விடமோ சென்றாள்

அமைப்புறும் இந்த மணிபுரி ஆட்சி

எனக்கன்றோ? அன்றியும் என்னரும் நண்பர்

உனக்கே அமைச்சுப் பதவி உதவுவேன்!

மந்திரி :

மன்னன் மதுவினில் ஆழ்ந்து கிடக்கிறான்

மின்னல் நேர் சிற்றிடை ராணி விஜயா

நமக்கும் தெரியாமல் எவ்விடமோ சென்றாள்

அமைப்புறும் இந்த மணிபுரி ஆட்சி

எனக்கன்றோ? அன்றியும் என்னரும் நண்பர்

சேனாதிபதி :

அஞ்சுதல் வேண்டாம் அவளொரு பெண்தானே?

மந்திரி :

நெஞ்சில் நான் பெண்ணை எளிதாய் நினைக்கிலேன்

சேனாதிபதி :

ஆடை, அணிகலன் ஆசைக்கு வாசமலர்

தேடுவதும், ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்,

அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல் வாழுவதும்

கொஞ்சுவது மாசுக் கிடக்கும் மகளிர் குலம்

மானிடர் கூட்டத்தில் வலியற்ற ஓர் பகுதி!

ஆனமற் றோர்பகுதி ஆண்மை எனப் புகல்வேன்!

எவ்வாறா னாலும்கேள்! சேனையெல்லாம் என்னிடத்தில்

செய்வார்யார் நம்மிடத்தில் சேட்டை : இதையோசி!

மந்திரி : [சிரித்துச் சொல்வான்]

மானுஷிகம் மேல் என்பார், வன்மையுடைய தென்பார்

ஆன அதனை அளித்ததெது? மீனக்

கடைக்கண்ணால் இந்தக் கடலுகம் தன்னை

நடக்கும்வகை செய்வதெது? நல்லதொரு சக்தி

வடிவமெது? மாமகளிர் கூட்டமன்றோ? உன்சொற்

கொடிது! குறையுடைத்து! மேலும் அது கிடக்க :

மன்னன் இளமைத்தன் எட்டு வயதுடையான்,

இன்னும் சிலநாளில் ஆட்சி எனக் கென்பான்!

சேனாதிபதி :

கல்வியின்றி யாதொர் கலையின்றி, வாழ்வளிக்கும்

நல்லொழுக்க மின்றியே நானவனை ஊர்ப்புறத்தில்

வைத்துள்ளேன், அன்னோன் நடைப்பிணம் போல் வாழ்கின்றான்,

இத்தனை நாள் இந்த ரகசியம் நீயறியாய்!

மந்திரி :

ஆமாம் கல்வியிலான் ஆவி யிலாதவனே!

சாமார்த்திய சாலி தந்திரத்தில் தேர்ந்தவன் நீ!

உன் எண்ணம் என்ன சொல்? நான் உனக் கொத்திருப்பேன்!

முன்னால் செயப்போவ தென்ன மொழிந்துவிடு!

சேனாதிபதி :

ராசாங்க பொக்கிஷத்தை நாம் திறக்க வேண்டும் : பின்

தேசத்தின் மன்னனெச் சீர்மகுடம் நான்புனைத்தே

ஆட்சிசெய வேண்டும் என ஆசையிது! காலத்தை

நீட்சிசெய வேண்டாம் விரைவில் நிகழ்விப்பாய்!

மந்திரி :

பொக்கிஷத்தை யார் திறப்பார்? பூட்டின் அமைப்பை அதன்
மிக்க வலிமைத்தனைக் கண்டோர் வியக்கின்றார்
தண்டோராப் போட்டுச் சகலர்க்கும் சொல்லிடுவோம்
அண்டிவந்து தாம்திறப்பார்க் காயிர ரூபாய்கொடுப்போம்.

சேனாதிபதி :

தேவலை! நீ சொன்னதுபோல் செய்துவிடு சீக்கிரத்தில்
ஆவி அடைந்த பயன் ஆட்சி நான் கொள்வதப்பா!

காட்சி :2

[சேனாதிபதி அரச குமாரனாகிய சுதர்மனை மூடனாக்கி வைக்கக் கருதிக் காடு சேர்ந்த ஓர் சிற்றூரில் கல்வியில்லாத காளிமுத்து வசத்தில் விட்டு வைத்திருக்கிறான். கிழவர் ஒருவர் காளிமுத்தை நண்பனாக்கிக் கொண்டு உடன் வசிக்கிறார்.]

காளிமுத்து :

என்ன கெழவா? பொடியனெங்கே? இங்கேவா!
கன்னாபின்னா இன்று கத்துறிய என்னது?
மாடுவுளை மேய்க்கவுடு! மாந்தோப்பில் ஆடவுடு!
காடுவுளே சுத்தவுடு! கல்வி சொல்லித் தராதே!

கிழவர் :

மாட்டினொடும் ஆட்டி னொடும் மன்னன் குமாரனையும்
கூட்டிப்போய் வந்திடுவேன் குற்றமொன்றும் நான்புரியேன்
மன்னன் மகனுக்குக் கல்வியோ நல்லறிவோ
ஒன்றும வராமே உன் உத்தரவுபோல் நடப்பேன்.

காளிமுத்து :

ஆனாநீ போய்வா அழைச்சிப் போ பையனையும்

ஓநாயில் லாதஇடம் ஓட்டு!

காட்சி : 3

[கிழவர் ஓர் தனியிடத்தில் சுதர்மனுக்கு வில்வித்தைக் கற்றுக் கொடுக்கிறார்]

கிழவர் :

விற்கோலை இடதுகரத்தால் தூக்கி, நாணை
விரைந்தேற்றித் தெரித்துப்பார்! தூணீ ரத்தில்
பற்பலவாம் சரங்களிலே ஒன்றை வாங்கிப்
பழுதின்றிக் குறிபார்த்து, லட்சியத்தைப்
பற்றிவிடு! மற்றொன்று, மேலும் ஒன்று,
படபடவெனச் சராமாரி பொழி! சுதர்மா.
நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய் குன்றத் தைப்போல்!

நெளியாதே! லாவகத்தில் தேர்ச்சி கொள்நீ!

சுதர்மன் :

கற்போர்கள் வியக்கும்வகை இந்நாள் மட்டும்
கதியற்றுக் கிடந்திட்ட அடியேனுக்கு
மற்போரும், விற்போரும், வாளின் போரும்,
வளர்கலைகள் பலப்பலவும் சொல்லித் தந்தீர்!
நற்போத காசிரியப் பெரியீர், இங்கு
நானுமக்குச் செயும்கைம்மா றொன்றும் காணேன்!
அற்புதமாம்! தங்களை நான் இன்னா ரென்றே
அறிந்ததில்லை, நீரும் அதை விலக்கவில்லை.

கிழவர்:

இன்னாரென் றென்னை நீ அறிந்து கொள்ள
இச்சையுற வேண்டாங்காண் சுதர்மா என்னைப்

பின்னாலில் அறிந்திடுவாய் ! நீறு பூத்த
பெருங்கனல்போல் பொறுத்திருப்பாய் உன் பகைவன்
என் பகைவன்! உன்னாசை என்றன் ஆசை!
இஃதொன்றே நானுனக்குச் சொல்லும் வார்த்தை
மின்னாத வானம் இனி மின்னும் ! அன்பு
வெறிக்காட்டத் தக்கநாள் தூர மில்லை!

காட்சி : 4

[சுதர்மனும் கிழவரும் இருக்குமிடத்தில் தண்டோராச் சத்தம் கேட்கிறது.]

தண்டோராக்காரன் :

அரசாங்க பொக்கிஷத்தைத் திறப்பா ருண்டா?
ஆயிரரூபாய் பரிசாய்ப் பெறலாம் கண்டீர்!
வரவிருப்பம் உடையவர்கள் வருக! தீம் ! தீம்!
மன்னர் இடும் ஆணையிது தீம்! தீம்! தீம் ! தீம்!

கிழவர் :

சரி இதுதான் நற்சமயம் ! நான்போய் அந்தக்
தறுக்குடைய சேனாதி பதியைக் காண்பேன்
வரும்வரைக்கும் பத்திரமாய் இரு! நான்சென்று
வருகிறேன் வெற்றிநாள் வந்த தப்பா!

காட்சி : 5

[மந்திரியின் முன்னிலையில் கிழவர் அரசாங்க பொக்கிஷத்தைத் திறந்தார். மந்திரி கிழவரைக் கூட்டிக் கொண்டு சேனாதிபதியிடம் வந்தார்.]

மந்திரி :

தள்ளாத கிழவரிவர் பொக்கிஷத்தின்

தாழ்தன்னைச் சிரம மின்றித் திறந்துவிட்டார்!

சேனாதிபதி :

கொள்ளாத ஆச்சரியம்! பரிசு தன்னைக்

கொடுத்துவிடு! கொடுத்துவிடு! சீக்கிரத்தில்

மந்திரி :

விள்ளுதல் கேள்! இப்பெரியார் நமக்கு வேண்டும்

வேலையிலே அமைத்துவிடு ராசாங்கத்தில்!

சேனாதிபதி :

உள்ளதுநீ சொன்னபடி செய்க (கிழவரை நோக்கி) ஐயா,

ஊர்தோறும் அலையாதீர்! இங்கியிருப்பீர்!

கிழவர்:

அரண்மனையில் எவ்விடத்தும் சஞ்சரிக்க

அனுமதிப்பீர்! என்னால் இவ் வரசாங்கத்தில்

விரைவில் பல ரகசியங்கள் வெளியாம்! என்று

விளங்குகின்ற தென்கருத்தில்! சொல்லிவிட்டேன்!

சேனாதிபதி :

பெரியாரே! அவ்வாறே அட்டி யில்லை!

மந்திரி :

பேதமில்லை இள்று முதல் நீரு மிந்த

அரசப் பிரதானியரில் ஒருவர் ஆனீர்.

அறிவுபெற்ற படியாலே எல்லாம் பெற்றீர்!

காட்சி : 6

[சேனாதிபதி காங்கேயன், தானே மணிபுரி அரசனென்று நாளைக்கு மகுடாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறான். வெளிநாட்டரசர்களும் வருகின்ற நேரம், மந்திரி நாட்டின் நிலைமையைச் சேனாதிபதிக்குத் தெரிவிக்கின்றான்.]

மந்திரி :

மணிபுரி மக்கள் பால் மகிழ்ச்சி யில்லை!
அணிகலன் பூண்கிலர் அரிவை மாக்கள்!
பாடகர் பாடிலர்! பதுமம் போன்ற
ஆடவர் முகங்கள் அழகு குன்றின!
வீதியில் தோரணம் விளங்க வில்லை!
சோதி குறைந்தன, தொல்நகர் வீடுகள்
அரச குலத்தோர் அகம் கொதித்தனர்!
முரசம் எங்கும் முழங்குதல் இல்லை!

சேனாதிபதி :

எனக்கு பட்டம் என்றதும் மக்கள்
மனத்தில் இந்த வருத்தம் நேர்ந்ததா?
அராஜகம் ஒனறும் அணுகா வண்ணம்
இராஜக சேவகர் ஏற்றது செய்க!
வெள்ளி நாட்டு வேந்தன் வரவை
வள்ளிநாட்டு மகிபன் வரவைக்
கொன்றை நாட்டு கோமான் வரவை
ஏற்றுப சரித்தும் இருக்கை தந்தும்
போற்றியும் புகழ்ந்தும் புதுமலர் சூட்டியும்,
தீதர நாளை நான் திருமுடி புனைய
ஆதரவு அளிக்க! அனைத்தும் புரிக!

மந்திரி :

ஆரவாரம் அதுகேட் டாயா?

பாராள் வேந்தர் பலரும் வரும்ஒலி!

சேனாதிபதி :

லிகிதம் கண்ட மன்னர்

சகலரும் வருகிறார் சகலமும் புரிகநீ!

காட்சி : 7

[அயல்நாட்டு வேந்தர்கள் வந்தார்கள், சேனாதிபதி அவர்களை வரவேற்றுத் தனது மகுடாபிஷேகத்தை ஆதரிக்க வேண்டுகிறான்.]

சேனாதிபதி :

மணிபுரியின் வேந்தனார் மதுவை யுண்டு

மனங்கெட்டுப் போய்விட்டார் விஜயராணி

தணியாத காமத்தால் சென்றாள்

தனியிருந்த இளங்கோமான் சுதர்மன் என்பான்

அருமையுடன் வளர்ந்து வந்தும் கல்வியில்லை,

அணியாத அணியில்லை! அமுதே உண்பான்

பிணிபோல அன்னவன் பால் தீயொழுக்கம்

பெருகினதால் நாட்டினரும் அமைச்சர் யாரும்

என்னை முடிசூடு கென்னார், உங்கட் கெல்லாம்

ஏடெழுதி னேன் நீரும் விஜயம் செய்தீர்,

சென்னியினால் வணங்குகிறேன். மகுடம் பூணச்

செய்தென்னை ஆதரிக்க வேண்டு கிறேன்.

மன்னாதி மன்னர்களே, என் விண்ணப்பபம்!

மணிமுடியை நான் புனைந்தால் உம்மை மீறேன்!

எந்நாளும் செய்நன்றி மறவேன் கண்டீர்!

என்னாட்சி நல்லாட்சி யாயிருக்கும்!

வெள்ளி நாட்டு வேந்தன் : [கோபத்தோடு கூறுகிறான்]

காங்கேய சேனா பதியே நீர்ஓர்

கதைசொல்லி முடித்துவிட்டீர் யாமும் கேட்டோம்

தாங்காத வருத்தத்தால் விஜயராணி

தனியாக எமக்கெல்லாம் எழுதியுள்ள

தீங்கற்ற சேதியினைச் சொல்வோம், கேளும்!

திருமுடியை நீர்கவர, அரசருக்குப்

பாங்கனைப் பொல் உடனிருந்தே மதுப்பழக்கம்

பண்ணி வைத்தீர்! அதிகாரம்அபக ரித்தீர்!

மானத்தைக் காப்பதற்கே ராணி யாரும்

மறைவாக வசிக்கின்றார் அறிந்து கொள்ளும்!

கானகம் நேர் நகர்ப்புறத்தில் ராஜ புத்ரன்

கல்வியின்றி உணவின்றி ஒழுக்கமின்றி

ஊனுருகி ஒழியட்டும் என விடுத்தீர்,

உம் எண்ணம் இருந்தபடி என்னே! என்னே!

ஆனாலும் அப்பிள்ளை சுதர்மன் என்பான்

ஆயகலை வல்லவனாய் விளங்கு கின்றான்.

வள்ளிநாட்டு மன்னன்: [இடைமறுத்து உரைக்கின்றனான்]

சுதர்மனை நாம் கண்ணால் பார்க்க வேண்டும்

சொந்தநாட் டார் எண்ணம் அறிய வேண்டும்

இதம் அதிகம் தெரியாமல் உம்மை நாங்கள்

எள்ளளவும் ஆதரிக்க மாட்டோம் கண்டீர்!

கொன்றை நாட்டுக் கோமான்: [கோபத்தோடு கூறுகிறான்]

சதிபுரிந்த துண்மையெனில் நண்பரே, நீர்

சகிக்கமுடி யாததுயர் அடைய நேரும்.

குன்ற நாட்டுக் கொற்றவன் : [இடியென இயம்புவான்]

அதிவிரைவில் நீர்நிரப ராதி என்ப

தத்தனையும் எண்பிக்க வேண்டும் சொன்னோம்!

சேனாதிபதி : [பயந்து ஈன சுரத்தோடு]

அவ்விதமே யாகட்டும் ஐயன்மீர்! போசனத்தைச்

செவ்வையுற நீர் முடிப்பீர் சென்று.

காட்சி : 8

[சேனாதிபதி மந்திரியிடம் தனது ஆசாபங்கத்தைத் தெரிவித்து வருந்துவான்.]

சேனாதிபதி :

வரைமட்டும் ஓங்கி வளர்ந்த என் ஆசை

தரைமட்டும் ஆயினதா? அந்தோ! தனிமையிலே

ராணி விஜயா நடத்தி வைத்த சூழ்ச்சிதனைக்

காண இதயம் கலக்கம் அடைந்திடுதே!

வேந்தன் மகனுக்கு வித்தையெல்லாம் வந்தனவாம்

ஆந்தை அலரும் அடவிசூழ் சிற்றூரில்

போதித்த தார்? இதனைப் போயறிவோம் வா வா வா!

வாதிக்கு தென்றன் மணம்.

மந்திரி :

பொக்கிஷந் திறந்தஅந்த புலனுறு பெரியார் எங்கே?

அக்கிழவர்பால் இந்த அசந்தர்ப்பம் சொல்லிக் காட்டி

இக்கணம் மகுடம்பூண ஏற்றதோர் சூழ்ச்சி கேட்போம்

தக்கநல் லறிஞரின்றித் தரணியும் நடவா தன்றோ!

[கிழவர் காணப்படாத தறிந்து மந்திரி வருந்துவான்]

திருவிலார் இவர்என் றெண்ணித் நீங்கினை எண்ணி அந்தப்
பெரியாரும் நம்மைவிடடுப் பிரிந்தனர் போலும் நண்பா
அரிவையர் கூட்டமெல்லாம் அறிவிலாக் கூட்டம் என்பாய்
புரிவரோ விஜயராணி புரிந்த இச் செயல்கள் மற்றோர்!

சேனாதிபதி :

இன்னலெலாம் நேர்க! இனியஞ்சப் போவதில்லை
மன்னன் மகளைப் பார்ப்போம் வா.

காட்சி : 9

[கிழவர் சுதர்மனுக்கு வாட்போர் கற்பிக்கிறார். இதனை ஒரு புறமிருந்து சேனாதிபதியும் மந்திரியும் கவனிக்கிறார்கள்.]

தாழ்திறந்த அக்கிழவன் ராச தனயனுக்குப்
பாழ்திறந்து நெஞ்சத்தில் பல்கலையும் சேர்க்கிறான்
வஞ்சக் கிழவனிவன் என்னருமை வாழ்க்கையிலே
நஞ்சைக் கலப்பதற்கு நம்மை அன்று நண்ணினான்
வாளேந்திப் போர் செய்யும் மார்க்கத்தைக் காட்டுகின்றான்
தோளின் துரிதத்தைக் கண்டாயோ என் நண்பா!

[சேனாதிபதி கோபத்தோடு சுதர்மனை அணுகிக் கூறுவான்.]

ஏடா சுதர்மா! இவன்யார் நரைக் கிழவன்?
கேடகமும் கத்தியும் ஏன்? கெட்டொ ழியத் தக்கவனே!

சுதர்மன் :

என் நாட்டை நான் ஆள ஏற்ற கலையுதவும்
தென்னாட்டுத் தீரர் செழுந்தமிழர் ஆசிரியர்!

சேனாதிபதி :

உன் நாட்டை நீ ஆள ஒண்ணு மோ சொல்லடா !

சுதர்மன் :

என் நாட்டை நான் ஆள்வேன்! எள்ளவும் ஐயமில்லை!

[சேனாதிபதி உடனே தன் வாளையுருவிச் சுதர்மன் மேல் ஓங்கியபடி கூறுவான்.]

உன்நாடு சாக்காடே ஓடி மறைவாய்! பார்!

மின்னுகின்ற வாள் இதுதான்! வீச்சும் இதுவே!

[கிழவர் கணத்தில். சேனாபதி ஓங்கிய வாளைத் தமது வாளினால் துண்டித்துக் கூறுவார்.]

உருவியவாள் எங்கே? உனதுடல்மேல் என்வாள்

வருகுதுபார், மானங்கொள்! இன்றேன் புறங்காட்டு!

[என வாளை லாவகத்தோடு ஓங்கவே சேனாதிபதி தன்னைக் காத்துக்கொள்ள முடியாமலும் சாகத் துணியாமலும் புறங்காட்டி ஒடுகிறான். கிழவரும் சுதர்மனும் சபையை நோக்கி ஓடும் சேனாதிபதியைத் தூரத்திக் கொண்டு ஓடி வருகிறார்கள்.]

காட்சி : 10

[கூடியுள்ள அயல்நாட்டு வேந்தர்களிடம் சேனாதிபதி ஓடி வந்து சேர்ந்தான். அவனைத் தொடர்ந்து கிழவரும் சுதர்மனும் உருவிய கத்தியுடன் வந்து சேர்கிறார்கள்.]

வெள்ளிநாட்டு வேந்தன் :

ஆடுகின்ற நெஞ்சம், அழுங்கண்ணு மாகநீ

ஓடிவரக் காரணமென் உற்ற சபை நடுவில்?

சேனாதிபதியே, தெரிவிப்பாய் நன்றாக?

[சேனாபதி ஒருபுறம் உட்கார்தல்]

மானைத் துரத்தி வந்த வாளரிபோல் வந்து

குறித்தெடுத்துப் பார்க்கின்றீர், நீவிர்யார்? கூறும் !

[என்று பெரியவரை நோக்கி கூறிப் பின் அயல் நின்ற சுதர்மனை நோக்கிக் கூறுவான்.]

பறித்தெடுத்த தாமரைபூம் பார்வையிலே வீரம்
பெருக்கெடுக்க நிற்கின்றாய் பிள்ளையே, நீ யார்?

கிழவர் :

இருக்கின்ற வேந்தர்களே, என் வார்த்தை கேட்டிடுவீர்!
மன்னர் குடிக்கும் வழக்கத்தைச் செய்து வைத்தும்,
என்னை வசப்படுத்த ஏற்பாடு செய்வித்தும்,
செல்வனையும் தன்னிடத்தே சேர்த்துப் பழிவாங்கக்
கல்வி தராமல் கடுங்காட்டில் சேர்ப்பித்தும்
பட்டாபிஷேகமனப் பால் குடித்தான் காங்கேயன்
தாட் டவாள் துண்டித்தே தோள் திருப்பி இங்கு வந்தான்!

[தான் கட்டியிருந்த பொய்த்தாடி முதலியவைகளைக் களைகிறாள் கிழவராய் நடித்த விஜயதாரணி.]

தாடியும் பொய்! என்றன் தலைப்பாகையும் பொய்யே!
சூடியுள்ள அங்கியும் பொய்! கொண்ட முதுமையும் பொய்!
நான் விஜயதாரணி! நகைக்க புவியினிலே
ஊனெடுத்த காங்கேயன் ஒன்றும் உணர்கிலான்!
கோழியும்தன் குஞ்சுதனைக் கொல்லவரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில், ஆடவரைப்
பெற்றெடுத்த தாய்குலத்தைப் பெண்குலத்தைத் துஷ்டருக்குப்
புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே எண்ணி விட்டான்!

வெள்ளி நாட்டரசன் : [ஆச்சரியத்தோடு கூறுவான்]

நீரன்றோ அன்னையார்! நீரன்றோ வீரியார்!

ஆர்எதிர்ப்பார் அன்னையார் அன்பு வெறிதன்னை!

வள்ளிநாட்டு மகிபன் :

ஆவி சுமந்துபெற்ற அன்பன் உயிர் காப்பதற்கோ
இந்த தாயினெதிர், கொல்படைதான் என் செய்யும்?

கொன்றை நாட்டுக் கோமான் :

அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்
என்னும்படி அமைந்தீர்! இப்படியே பெண்ணுலகம்
ஆகும்நாள் எந்நாளோ? எந்நாளே துன்பமெலாம்
போகும் நாள், இன்பப் புதியநாள் என்றுரைப்பேன்!
அன்னை யெனும் தத்துவத்தை அம்புவிக்குக் காட்டவந்த
மின்னே, விளக்கே, விரிநிலவே வாழ்த்துகின்றேன்!

குன்றநாட்டுக் கொற்றவன் :

உங்கள் விருப்பம் உரைப்பீர்கள் இவ்விளைய
சிங்கத்திற் கின்றே திருமகுடம் சூட்டிடலாம்!
தீங்குபுரிந்த, சிறுசெயல்கள் மேற்கொண்ட
காங்கே யனுக்குக் கடுந்தண் டனையிடலாம்.!

ராணி:

கண்மணியே! உன்றன் கருத்தென்ன நீயேசொல்!
எண்ணம் உரைக்கின்றேன்! என் உதவி வேந்தர்களே!
இந்தமணிபுரிதான் இங்குள்ள மக்களுக்குச்
சொந்த உடைமை! சுதந்தரர்கள் எல்லாரும்!
ஆதலினால் இந்த அழகு மணிபுரியை
ஓதும் குடியரசுக் குட்படுத்த வேண்டுகிறேன்!
அக்கிரமம் சூழ்ச்சி அதிகாரப் பேராசை

கொக்கரிக்கக் கண்ட குடிகள் இதயந்தான்
மானம் உணர்ந்து வளர்ந்து எழுச்சியுற்றுக்
கானப் புலிபோல் கடும்பகைவர் மேற்பாயும்!
ஆதலினால் காங்கேயன் அக்கரமும் நன்றென் பேன்,
தீதொன்றும் செய்யாதீர் சேனா பதி தனக்கே!

மன்னர்கள் :

அவ்வாறே ஆகட்டும் அப்பனே ஒப்பில்லாய்!
செவ்வனே அன்புத் திருநாடு வாழியவே!
சேய்த்தன்மை காட்டவந்த செம்மால்! செழியன்புத்
தாய்த்தன்மை தந்த தமிழரசி வாழியவே!

சுதர்மன் :

எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!
வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக,
வில்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!

ஆட்டனத்தி ஆதிமந்தி

- **கண்ணதாசன்**

சங்க இலக்கியங்களில் காணப்பட்ட காதல் நிகழ்வுகளில் ஒன்று இக் காவியம். பாரதிதாசன் இக் காதல் கதையைச் சேர தாண்டவம் என்ற தலைப்பில் கதை எழுதியுள்ளார். கி.மு. ஐம்பது முதல் கி.பி. முப்பத்து ஏழாம் ஆண்டு வரை நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இக்கதையில் வரும் பாத்திரங்கள் சங்க காலத்தில் வழங்கப்பட்ட பெயர்களையே தாங்கியுள்ளது. இக்கதையைப் புனைவுகளுடன் மன்னாதி மன்னன் என்ற திரைப்படமாகவும் கதை சொல்லப்பட்டது.

காவியத் தவைனாக அத்தி யும், காவியத் தலைவியாக ஆதிமந்தி, மருதி ஆகிய இருவரும் தலைமைப் பாத்திரமாக உள்ளனர். கரிகால் பெருவளத்தான், நாகப்பட்டின மன்னன், புலவர் இரும்பிடர்த் தலையார், நமது தமிழகத்தின் வரலாற்றில் சுடர்விட்டு அணைந்த ஆட்டனத்தி – ஆதிமந்தி யின் மெய்க்காதல், காவியம் புனைவோருக்குச் சாகாத இலக்கியத்தைத் தீட்டக்கூடிய கருப்பொருளைத் தந்திருக்கிறது. கற்பனைக் காவியத்திலே கூடக் காண முடியாத காதற்சுவையும், வீரச் சுவையும், ஆட்டனத்தி ஆதிமந்தியின் காதல் வாழ்க்கையில் மிகுந்து காணப்படுகின்றன. மன்னர் குலத்து இள உள்ளங்களிலே அரும்பு விட்டு, மலர்ந்து கீர்த்தி கொண்ட ஆட்டனத்தி – ஆதிமந்தியின் காதல் தமிழகத்தின் சிறப்பியல்புகளுக்குச் சிறிதும் களங்கம் ஏற்படா வண்ணம் பூரணத்துவம் பெற்றது. தென்னாட்டில் உயர்பண்புகளை அகிலத்திற்கும் உணர்த்துவதாக இருக்கிறது.

ஆட்டன் – அத்தி

வாள்வலி மிகுந்த வீரர்
வனப்பினை வடித்த மாதர்,
தோள்வலி நிறைந்த வேந்தர்,
தூய்தமிழ் உணர்ந்த வாணர்
சூழ்ந்திருந் தழகு கூட்டும்
தூய்புலம் சேர நாட்டில்
வாழ்ந்தவன் அத்தி, ஆடல்
வல்லதால் ஆட்டன் அத்தி!

வஞ்சியான் என்றால் அன்னான்
வஞ்சியின் மன்னன் என்றும்
வஞ்சியான் பிறரை என்றும்
மன்னவன் கரிகாற் சோழன்
வஞ்சியை மணந்தான் என்றும்
வகைப்படும் பொருள்கள் தோன்றும்
வஞ்சியான் வஞ்சி நெஞ்சில்
வாழ்ந்ததே நமது காதை!

காவியத்தில் காதல் தலைவனாக வரும் ஆட்டனத்தி சேரர் குலச் செம்மல், சோழ நாட்டை இரண்டாம் கரிகாலன் ஆண்ட காலத்தில் வாழ்ந்தவன். மன்னர்களில் பெரும்பாலோர்,மு அவையைக் கூட்டி நீதி பரிபாலனம் செய்யக் கூடியவர்களாகவும், அயலவர்களால் நாட்டுத் தீங்கு வந்தால் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் கூர்வாளை ஏந்துபவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் ஆட்டனத்தி, நாடு காக்கும் போர் வீரனாகவும், நாட்டியத்தில் வல்லவனாகவும் விளங்கினான். நாட்டியம் ஆடுவதிலும்,

ஆட்டுவிப்பதிலும் அவன் பெருந்திறன் பெற்றிருந்ததால்தான், ஆட்டன் என்ற பட்டப்பெயர் அவனுக்குக் கிடைத்தது. சங்க காலத்தில் ஆட்டன் என்று அழைக்கப்பட்டது தான் இப்போது நட்டுவனார் என்று திரித்து வழங்கப்படுகிறது.

ஆடுவான் ஆடச் செய்வான்
அன்னமென் நடையா ரோடும்
பாடுவான் பாடச் செய்வான்
பல்கலைக்கழகம் போல்வான்
நாடியே வருவோர்க் கென்றே
நாட்டியம் பயிற்று விக்க
ஆடுவார் அரங்கம் கண்டான்
அரசனே ஆசான் ஆனான்!

ஆட்டன் புகழ், தமிழ் நிலம் முழுவதும் பரவியது. அவனிடம் பயிற்சி பெற வந்த அழகிகள் இருவர் ஆவர். முதலில், ஆட்டனத்தியை ஆசானாகப் பெறும் பேறு பெற்றவள் மருதி என்பவள். அடுத்தவள் ஆதிமந்தி.

மருதி

கற்பவ ரிடையில் நாகைக்
கன்னியாம் மருதி, சோழ
விற்பனன் செல்வி, கோவை
மெல்லிதழ் ஆதி மந்தி
அற்புத இளமை தோன்ற
அழகுவீற் றிருந்தா ளென்றால்
கற்பவர் கற்கக் கூறும்

காவலன் ஓய்வா கொள்வான்?

மருதி, நாகப்பட்டினத்து நெய்தல் நிலத்துத் தலைவனுடைய மகள், பேரழகி. பண்பின் திருவுருவம். மருதிக்கு அத்தி ஆட்டம் கற்றுக் கொடுத்தான். ஆட்டக் கலையிலே வல்லவனான அத்தி, மருதியை மயிலாக்கினான்.

வருதியோ பெண்ணே என்று
மன்னவன் பாடும் போழ்து
வருதியோ என்னும் வார்த்தை
வாள்வழி மருதி காதில்
மருதியோ என்றாற் போல
வடிவுறும் ஆதி மந்தி
வருகிறேன் என்பாள் தன்னை
மன்னவன் அழைத்தாற் போல!

மேலும், அவர்கள் இருவருக்குமிடையே ஆசாமில்லாமலேயே காற்கலையும் வளர்ந்தது.

கனவிடையில் அவன் தோன்றிக் கோதினாற் போல்
கருதியபெண் இதற்கூட்டிக் குவித்தே வைத்துக்
தினவழியத் தருகென்றாள், சேர வேந்தன்
தீரும் வரை முத்தங்கள் திரும்ப வைத்தான்
கனவிடையில் உணர்வேது? கண்வி ழித்தாள்
காளைகரம் முகம்மூடி வளைத்தல் கண்டாள்!
தனியிடமா? பலபேர்க்கு நடுவில் அந்தத்
தைரியத்தை என்னென்பாள்? தான் தளர்ந்தாள்!

ஆதிமந்தி

திடீரென்று ஒருநாள் எதிர்பாராத விதமாக, புலவர் இரும்பிடர்த் தலையார் அத்தியைச் சந்தித்தார். சோழன் கரிகாலனுடைய தாய் மாமனும், தமிழ்க் காவலருமான இரும்பிடர்த் தலையாரை அத்தி மகிழ்வோடு வரவேற்றான்.

அத்தியினைச் சந்தித்தான் சேதி சொன்னான்
அதற்குள்ளா? எதற் கொன்றான் அத்தி, சோழன்
நித்திலத்தைக் காணாமல் நிலைகு லைந்தான்
நிம்மதியும் இழந்தான் ஆதலினால் இன்று
சித்திரத்தை நான்கொண்டு சேர்த்தல் வேண்டும்
திரும்பிஒரு முறையிங்கு வருவேன் என்றான்!
பத்திரமாய்ச் செல்லுங்கள்! என்றான் அத்தி
பைங்கிளியாள் தேரேறி உறையூர் சென்றாள்!

கரிகாலன் மகளான ஆதிமந்திக்கு நாட்டியம் கற்பிக்க வேண்டினார் புலவர். அத்தி மறுக்கவில்லை. மருதிக்கு ஆதிமந்தி துணையானாள்.

தன்காதல் அறியானைத் தானே கொண்டாள்!
தளிரோடு சென்றான்பின் தானே சென்றாள்!
மின்னாமல் முழங்காமல் பொழியும் மேகம்
வியன்மாதர் நெஞ்சன்றி வேறே தாகும்?
செந்நாவை இதழ்மீதில் தேய்த்தாள் அந்தச்
சீராளன் பெயர்பாடக் குளிரே சேரந்தாள்!
பன்னூறு கூத்தங்கே மாதின் நெஞ்சில்
பார்க்கத்தான் அவளன்றி யாருங் காணோம்!

இருவரும் ஆடற் கலையில் தேர்ச்சி பெற்றார்கள். ஆடற்கலை அவர்களால் புகழ் பெற்றது. ஆடற்கலையால் அவர்கள் பெருமை பெற்றார்கள்.

நல்லிடிக்கோன்

இதே காலத்தில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழன் முதலாம் செங்கணான் ஆண்டு வந்தான். நல்லிடிக்கோன் அவனது குலச் செல்வன். செங்கணானுக்கு அறிவும், ஆற்றலும் பெற்ற மைந்தனாக அவன் விளங்கினான். ஒருகால், செங்கணானின் ஆளுகைக்குட்பட்ட கருவூரில் பசுபதி ஈஸ்வரன் கோயில் திருவிழா ஒன்று நடைபெற்றது. மருதி அந்த விழாவைச் சிறப்பிக்க ஆட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாள். மருதியின் ஆட்டம் மக்கட் பெருவெள்ளத்தைப் பேரின்பத்தில் திளைக்க வைத்தது. அவளுடைய எழிலையும் எடுப்பான ஆட்டத்தையும் கண்ட நல்லிடிக்கோன் மருதியிடம் வசமிழந்தான். உருகினான். தன்னுடைய ஆசையை அவளிடம் எப்படித் தெரிவிப்பது என்று தவித்தான்.

தூதாகப் போனாள்ஓர் தோழிப் பெண்ணாள்
        தொட்டார்கை மொட்டாகும் கொடியைப் பார்த்தாள்
தோதாகும் எழில் அண்ணல்! போரில் வீரன்
        துணையாகத் துடிக்கின்றான் ஏற்பீர்! என்றாள்!
தாதாகும் மொழிக்காரி அவளைப் பார்த்தாள்
        தளிராகும் உடலாடத் துடித்துச் சொன்னாள்
தேதாவும் பக்தர்க்குச் சொல்வாய், இந்த
        தேன்தாவும் வண்டந்தச் சேரன் செல்வம்!

மருதி, விழா முடிந்து நாகப்பட்டினம் திரும்புகையில், அவளை உறையூரில் தங்க வைக்க ஏற்பாடு செய்தான். மருதி உறையூர் இளவரசன் காட்டிய அன்பிற்கு நன்றி தெரிவித்தாள். ஆனால் அவனுடைய விருப்பத்திற்கு மட்டும் இணங்கவில்லை.

கருவூரின் ராணியடி! தள்ளா தே!உன்
காலடியில் சோணாடு தோயுஞ் செல்வம்!
தருவாராம் பிறர்க்கென்றால் நான்நீ என்றல்
சதுராடப் பலபேர்கள் வருவார்! ஆனால்
திருநாடன் அவைஎண்ணான்! உன்மேல் ஆசை
தீயாகக் கனல்கின்றான், ஏற்பாய்! என்றாள்
சிறுவாயின் முத்தங்கள் அணியாய்த் தோன்ற
சிரித்தாள் அச் செம்பாவை, சொன்னாள் பெண்ணே!

என் உள்ளத்திலே ஆட்டனத்தி குடியேறி விட்டார். இனி இன்னொருவருக்கு இடமில்லை என்று துணிந்து சொன்னாள் மருதி. காதல் முயற்சியில் முழுத் தோல்வி கண்ட நல்லிடிக்கோன் கொதித்தெழுந்தாள். ஆட்டன் உள்ளவரை, அழகி மருதி கிடைக்க மாட்டாள் எனக் கருதி போருக்கெழும்படி முரசறைந்தான். அத்திக்கும் நல்லிடிக்கோனுக்கும் கடும்போர் மூண்டது.

சோழன் தளபதி வந்தான் – பெருஞ்
சோகத்தி ருந்தவன் ஏறெனக் கண்டான்
ஆழம றிந்தலள் கன்னி! – இவள்
ஆணவம் நீக்குவன் காவிரிச் சென்னி!

வீரத்த ளபதி நீயும் – படை

வீரர் இருபதி னாயிரும் பேரும்

போரிற் புறப்பட வேண்டும் – வஞ்சிப்

பூவர சத்தியைக் கீறிடல் வேண்டும்!

காதலுக்குக் களம் அமைத்தது ரோமபுரிதான் என்போர், தமிழகத்தின் முதல் நூற்றாண்டுக் கதையை மறந்து விட்டார்கள்.

அத்திக்குத் துணையாகக் கரிகாலன் படை கொடுத்தான். புலவர் இரும்பிடர்த் தலையாரின் ஏற்பாடு அது.

சொன்னாரோ இலையோ அச் சோணாடன்

கரிகாலன் துள்ளி நின்றான்!

பொன்னாடன் தேன்வஞ்சிப் பூக்காட்டைக்

காப்பாற்றப் போவோம்! என்றான்

வின்னாடன் இது கேட்டான்! விலைமீறி

எழிலகாட்டும் சோழன் செவ்வி

மின்னாளும் இதுகேட்டாள்! கருவூரான்

தானுமதை வெதும்பிக் கேட்டான்!

எண்ணிப் பணித்திடில் ஆயிரம் பாவையர்

இம்மெனு முன்னர்தந் தோள்தருவார்!

மண்ணை இழந்தொரு பெண்ணநினை வால்உயிர்

மாளத் துணிந்தன மே!அடடா!

கண்ணை அவித்தது காமப் பெருங்கனல்

கற்பெனும் அற்புதம் இத்திறத்தோ!

எண்ணங் கெடுத்தது பேரழ கே! இனி

எந்தநி னைவிலும் லாபமில்லை‘!

தானையுந் தானையும் மோதிய தே!பெருந்

தாரையுங் கொம்புமு ழங்கியதே!

யானையும் யானையும் மோதிய தே!பரி

ஆயிர மாயிரம் வீழியதே!

வானையும் மண்ணையும் ஆட்சிசெ லுத்திய

மன்னவன் சோழனும் போர்க்களத்தே

பூனையைத் தேடிய பொங்கும்பு லியெனப்

போவது காண்! பகை தேய்வது காண்!

தொட்டுப் பிடிக்கும் அடிகள் அனைத்திலும்

வெற்றிச் சுவடுகள் முந்துறவே

எட்டுத் திசைக்கும் முரசொலித் தே,கரி

ஏறி நடந்தனன் காவிரியான்!

கொட்டு முரசுகள் கேட்டனனே!

தொட்டுத் தழுவிடத் தோகையர் தாவிடும்

தோளழகன் கலை ஆட்டனத்தி!

வெற்றி அத்திக்கே கிடைத்தது. நல்லிடிக்கோனைக் களம் காவு கொண்டது. கருவூர் சேர நாட்டொடு இணைக்கப்பட்டது. இந்த வெற்றி விழாவிற்குப் பிறகு புலவர் இரும்பிடர்த் தலையார் மிகுந்த அக்கறையோடு ஒரு காரியத்தைச் செய்தார். கவிபாடிக் கல்லையும் கரைத்து விடக் கூடிய ஆற்றல் பெற்ற அவர். அத்தியின் உள்ளத்திலே பதிந்திருந்த மருதியின் ஓவியத்தை அழித்து விடும் பெரும்பணியில் இறங்கினார். வெற்றியும் பெற்றார். ஆதிமந்தி, ஆட்டனத்திக்கு மனையரசி ஆனாள்.

சோழமகள் அந்தத் தூயவன் மேனியைச்

சுட்டுவிட்டாள் வழிப் பார்வையினால்!

வேழமவன் அந்த மெல்லிய லாள்மன

வேக மறிந்திலன்! பார்க்கவில்லை!

சோழ னிடையினில் நின்றிருந்தான்! இல்லை

தோகைஅம் மார்பினில் வீழ்ந்திருப்பாள்!

ஆழம் பெரியதும் காதலி லேஅணு

ஆகச் சிறுப்பது காண்பமன்றோ!

தேடிடும் மாதரைச் சேருவ தால்இவன்

சேரன் எனும் பெயர் பெற்றனனோ?

வாடிடும் வஞ்சியைக் கொஞ்சுவ தால், இவன்

வஞ்சி எனும் நகர் கொண்டவனோ?

கூடிய கோதையர் போற்றுவ தால், புகழ்க்

கோதை யெனும் பெயர் வந்ததுவோ?

ஆடிய எண்ணத்தில் ஆடிய பெண்மயில்

அத்தி முகஎழில் காணலுற்றாள்!

நெஞ்சி லிருந்தது கைக்குக் கிடைத்தபின்

நேரங் கழிப்பதை யார்விழைவார்?

கஞ்ச மலரடி தூக்கிவைத் தாள்!அவள்

காதலன் மார்பினில் பாய்விரித்தாள்!

வஞ்ச மகள்அட, வஞ்சிம கன்!மலர்

வஞ்சியி லுள்ளதை எண்ணவில்லை!

கொஞ்சக் கிடைத்தது, நெஞ்சந் துடித்தது

கொட்டி எடுத்துயிர் கொண்டுவிட்டான்!

மாறிமாறி முத்தமிட்டு

மார்பிருந்த மாமயில்

ஊறிஊறிக் காதலோடும்

ஒன்றி நின்ற வேளையில்

வேறுயாரும் ஈடிலாத

வேந்தர்வேந்து மங்கையின்

நேரிலாத கற்பினோடும்

நேரிருந்து மாந்தினன்!

ஆட்டனத்தி, ஆதிமந்தியை மணந்து கொண்ட சேதி, நாகப்பட்டினத்திலிருந்த மருதிக்கு எட்டியது. அன்று முதல் அவள் கன்னிமாட வாசியானாள். நாகப்பட்டினத்துக் கடற்கரையில், மருதிக்குக் கன்னிழமாடம் எழுப்பிக் கொடுத்தான் அவன் தந்தை.

அத்தியினைக் காணாத மருதி மங்கை

அகஞ்சோர்ந்து புறந்தேய்ந்து நாகை சென்றாள்.

சித்திரத்தின் நிலையறியாச் சேரன் இங்கே

தேன்மொழியாள் ஆதியெனும் போதை மிக்கான்!

இத்திசையில் சிலகாலம் கழிந்த பின்னர்

இரும்பிடர்த்த லையார்பால் விடைபெற் றேதன்

சித்தநகர் வஞ்சியினை நோக்கிச் சேரன்

சேயிழையைத் துணைதாங்கிப் பறந்து போனான்!

நாட்கள் நடந்துசெல்ல – இள

நாகைக் கனிமகள் மெய்தளர்ந்தே

வேட்கை தணிந்தவளாய் – இந்த

வேதனை நீக்க நினைந்தவளாய்

காட்டுக் குடில் புகுந்தாள் – ஒரு

காவிஉடைக்குள் மறைந்து கொண்டாள்

ஆட்டக் கலைமறந்தாள் – மன

ஆசைகள் முற்றும் துறந்துவிட்டாள்.

புதுப்புனல்

காவிரியில் புதுவெள்ளம் வந்தது. சோழன் கரிகாலன் தன்னுடைய மகள் ஆதிமந்தியையும், ஆட்டனத்தியையும் புனலாட்டுக்காகக் கருவூரிலிருந்து புகாருக்கு அழைத்திருந்தான். இருவரும் புகார் வந்திருந்தார்கள். அத்தி காவிரியின் புனல் விளையாட்டில் ஈடுபட்டாள். நேரம் போவதே அவனுக்குத் தெரியவில்லை. விளையாட்டு மிகுதியால் அவனுக்குக் களைப்பு அதிகரித்தது. அந்த நேரம் பார்த்துக் காவிரியில் மேல் வெள்ளம் வந்து விட்டது.

சோழன் தலைநகரில் – பொன்னி
தூவிடும் பூம்புனல் வாழ்ந்திடவே
வேழக் குடிமகளிர் – இன்பம்
மீதுறக் கூடிடும் நாளையிலே
தாழை தலைமுடிப்பாள் – எழில்
தங்கம்தன் நாயகன் அத்தியுடன்
சூழும் மகிழ்வுடனே – வந்து
சுற்றி உலாக்கொண்டு மெய்மறந்தாள்

ஆடிடும் கலையில் இந்த
        அதிசயம் செய்தார் யாவர்?
நாடின மாந்தர் கண்கள்!
        நங்கையும் மகிழ்ந்தாள்! கால்கள்
ஆடின! நீரின் மேலே
        அழகுற மிதந்தான் சேரன்!

ஓடிய பொன்னித் தேவி
 உவகையில் குதித்தாள் போலத்

தாவினாள்! எழுந்தாள்! நீரின்
 தடத்தினைப் பெருக்கிக் காட்டிக்
கூவினாள்! வெள்ளம்! வெள்ளம்!
 கொதித்தன மாந்தர் நெஞ்சம்!
ஆவியே வருவாய் என்றாள்
 ஆதியாள்! ஐயோ! வெள்ளம்
மேவியே எழுந்த தாலே
 வீழ்ந்தனன் அத்தி நீரில்!

மூழ்கினன்! எங்கே அத்தி?
 மூச்சுமில் லாமல் ஆங்கே
சூழ்குல மாந்தர் கேட்ட
 துயர்மிகு கேள்வி கேட்டு
வாழ்விழந் தவளே போல
 மயங்கினள் ஆதிமந்தி
ஆழ்கடல் நோக்கி, வெள்ளம்
 அத்தியை இழுத்தே ஏகும்!

ஆடற்கலையின் பேரரசு, அரிமாவின் சீற்றத்திற்கு ஈடான காவிரியின் வெள்ளம் பாய்ச்சலில் அடித்துக் போகப்பட்டான். வெள்ளம் கடலில் இணைந்தது. அத்தியும் கடலில் நெடுந்தூரத்திற்குச் சென்று விட்டான்.

கூவியே நடந்த மங்கை
 கொதிப்புறும் நெஞ்சை ஆற்ற

மேவிய மார்பின் மீதே
வெள்ளொளிக் கைகள் வைத்தே
ஆவியைப் பிடிப்பாள் போன்றே
அடுத்தடி தொடர்ந்தாள், கால்கள்
கேவிட தவழ்ந்தாள் சுற்றம்
கிளர்ந்தவள் பின்னால் செல்லும்.

இப்படி இருநாள் செல்ல
இன்முக வடிவம் மாறக்
கைப்பிடி மலராள் மேனி
கனலிடைச் சருகாய்த் தீய
மைப்பிடி கண்கள் வெண்மை
மாறிட இதயம் மட்டும்
எப்படி யேனும் நாதன்
இடத்தையான் காண்பே னென்னும்!

கடலில் கட்டுமரங்கட்டி மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் கண்டு, அவனைக் கரை சேர்த்து, நாகப்பட்டினத்துக நெயதல் நிலத் தலைவனிடம் சேர்ப்பித்தார்கள். அப்போது மருதி அங்கே இருந்தாள். தன் தந்தையின் அருகிலேயே இருந்தாள். தூக்கி வரப்பட்டவன் அத்திதான் என்பதைத் தெரிந்து கொண்டாள். தந்தையிடம் கலங்கிய கண்களோடு அத்தியின் பூர்வீகம் கூறிவிட்டு, அவனைக் கன்னிமாடத்திற்குக் கொண்டு சென்றாள்.

துறவெனில் எண்ணந் தானே?
தொடருநல் அழகைக் கூடத்
துறந்திடல் ஏலா தன்றோ?
துறவுறும் மருதிப் பெண்ணாள்

துறவுறும் முனிவோர் கூடச்
சுகமுணர்ந் திடவே எண்ணும்
முறையினில் – அழகில் ஆங்கே
முன்னடி வைத்தாள் மெல்ல!

திக் கென நெஞ்சம் விம்மித்
திகைப்புக் கண்டாள்! ஐயோ
இக்கனிக் காளை இங்கே
எப்படி வந்தான்? நெஞ்சில்
விக்கிய ஆசை மீண்டும்
வெளிப்படச் செய்கின் றானே,
தக்களன் துறவுக் கின்று
தடைபிறந் திடுமோ? என்றே.

எண்ணிய மருதிக் கோதை
இளைப்புக் கிடந்த அத்திக்
கண்ணியன் உருவைப் பார்த்தாள்
கால்பினும் நெஞ்சம் முன்னும்
நண்ணிடை நின்றாள்! கூவி
நங்கையர் சிலரைச் சேர்த்தாள்!
அண்ணலைத் தன்மாட த்தோர்
அறையினில் கொணர்ந்தே சேர்த்தாள்!

அத்திக்குக் களைப்ப நீங்குவதற்கும் காயங்கள் ஆறுவதற்கும் சில நாட்கள் பிடித்தன. உற்ற வேளையில் உதவி புரிந்த உத்தமிக்கு எப்படி நன்றி கூறுவது என்று திணறினான்

அத்தி. ஆனால் அத்திக்குப் பணிவிடை செய்து, அவனை மீண்டும் உயிர்ப் பெறச் செய்யக் கிடைத்த அரும் பெரும் வாய்ப்பை எண்ணி, ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் மருதி.

துணைப் பறவை பறந்தது

கரிகாலன் அரண்மனையில் பெரும் குழப்பம். ஆதிமந்தி அழுது புலம்பினாள். எட்டுத் திக்குகளுக்கும் ஆள் அனுப்பப்பட்டது. ஆட்டனத்தி அகப்படவில்லை. கணவனைக் காணாமல் புகார் திரும்புவதில்லை என ஆதிமந்தி உறுதி கொண்டாள். புறப்பட்டாள்.

எங்கெங்கும் தேடி அலுத்துப் போய் நாகப்பட்டினம் கடற்கரை சேர்ந்தாள். கன்னிமாடத்து மாடியில் அத்தியுமட் மருதியும் உட்கார்ந்து அலைபாயும் கடலைப் பார்த்தவண்ணம் இருந்தனர். பொறுப்பாளா மனையாள்? ஓடிப்போய் அத்தியைத் தழுவினாள். அவன் ஆறுதல் கூறினான். அருகிலே நின்ற மருதி, அழுது சிவப்பேறிய ஆதிமந்தியின் கண்களைத் துடைத்தாள். பின் ஒதுங்கினாள் – பிரிந்தவர்கள் கூடினார்கள். பேசித் தீர்த்தார்கள். மருதி குறுக்கிடவில்லை. அவளைக் காணோம்.

புகைபிடித் தன்பன் மேனி
புதுக்கனல் கொள்ளச் செய்தாள்!
நகைமுகத் தரும்பும் வேளை
நடந்தவள் மறைந்தாள்! அத்தித்
தகையவன் கண்கள் நீவித்
தானுள இடத்தைப் பார்த்தான்
வகையிதென் றறியா னாகி
வாய்திறந்(து) ஐயா என்றான்!

பேச்சினுக் கெதிர்ப்பேச் சில்லை
          பேரிறை எழுந்தான் சுற்றி
நாற்சுவ ரிடையில் வந்தான்
          நலமிகும் புத்தன் காலில்
மூச்சினை அடக்கி மாண்ட
          மொய்குழல் மகளைக் கண்டான்!
காற்சிறு சிலம்பச் சோடு
          கழற்றிஅங் கிருக்கக் கண்டான்!

கண்மணி! என்றான்! விம்மிக்
          கதறினான்! அழுதான்! கன்னி
விண்மணி யானாள்! காளை
          வீம்மினால் வருவ தேது?
மண்ணிடை மணியாய் வந்த
          மன்னவன் புத்தன் கால்கள்
கண்மணி உருவைத் தாங்கிக்
          கனிந்தன, மணமும் பெற்றே!

அத்தியின் குரலைக் கேட்டே
          அங்குவந் தடைந்தாள் ஆதி!
சித்திரக் கொழுநன் காலில்
          சிலையென விழுந்தாள்! மெல்ல
அத்தியும் அவளைத் துக்கி
          அணைத்தனன்! மருதி யென்னும்
பத்தினி உடலை அன்னார்
          பணிவுடன் எடுத்துச் சென்றார்.

கரிகாலன் மகள் ஆதிமந்தி கன்னிமாடம் வந்த செய்தி கேட்ட, மருதியின் தந்தை – நெய்தல் நிலத் தலைவன் கன்னிமாடம் வந்தாள். ஆதிமந்தியை வரவேற்றாள். கரிகாலனும் இரும்பிடர்த் தலையாரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் மருதியைத் தேடினார்கள். அவள் அகப்படவில்லை. மருதியின் உடல் கடற்கரை மணலில் அலைகளால் ஒதுக்கப்பட்டிருந்ததாகச் செய்தி கிடைத்தது. அனைவரும் ஆறாத துயரத்தில் ஆழ்ந்தார்கள். பெண்ணின் பெரும் பொருளாய் விளங்கிய மருதியை, அவள் வாழ்ந்த கன்னி மாடத்திலே அடக்கம் செய்து. கல் நட்டு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

எரிந்தது கனியின் மேனி
இடியொடும் மழையும் சேர்ந்து
சொரிந்தமா மலர்கள் போலத்
துளிவிடும்! சோழன் தானும்
மறைந்தமா மருதிப் பேரில்
மண்டபம் படைத்தான், இன்றும்
அருந்ததி வழியில் நின்று
அழகுறும் மருதிப் பேரே!

தமிழகத்துப் பொன்னோவியம் இது. காதலில் வெற்றி பெற்றது ஆதிமந்தி தான் என்றாலும், மருதிதான் தமிழ்நாட்டுப் பெண் தெய்வங்களில் ஒருத்தியாகக் கருதப்படுகிறாள். அவளுடைய பெயர்தான் தமிழகத்துக் கிராமப்புறங்களில் வழங்கப்படுகிறது.

அலகு – 2

பாட்டாளியின் குரல்

- பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

பிறப்பும் இளமையும்

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சாதாரண உழவர் குடும்பத்தில் பிறந்தவர். தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் செங்கப்படுத்தான் காடு கிராமத்தில் 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் நாள் பிறந்தவர். இவரது தந்தையார் திரு அருணாசலம் பிள்ளை தாயார் விசாலாட்சி அம்மையார் பட்டுக்கோட்டையின் தந்தையார் சிறந்த நாட்டுப்புறப் பாடல் கவிஞர் பட்டுக்கோட்டை தனது பெற்றோருக்கு இளைய மகன் இவருக்கு கணபதிசுந்தரம் என்ற அண்ணனும் வேதாம்பாள் என்னும் அக்காவும் இருந்தனர். கௌரவாம்பாள் இவரது அருமை வாழ்க்கைத் துணைவியார் இவருடன் சீரும் சிறப்புமாக வாழ்க்கை நடத்தினர் கவிஞர் 1959 ஆம் ஆண்டில் குமரவேல் என்னும் மகனைப் பெற்றார். ஆனால் அதே ஆண்டில் கல்யாணசுந்தரம் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பது பெரும் சோகம். பட்டுக்கோட்டையாருக்குப் பட்டறிவு ஏராளம். இவர் திரையுலகுக்குப் பாடல் எழுத வந்தபோது வயது இருபத்தி இரண்டு ஆனால் அதற்குள் 17 (பதினேழு) தொழில்கள் புரிந்தவர். அமரர் ஜீவா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கைக்குறிப்புகளை ஆராய்ந்தபோது அதிலிருந்து கவிஞர் பதினேழு வகைத் தொழிகளைச் செய்தது தெரியவந்தது என்கிறார். அவையாவன 1. விவசாயி 2. மாடு மேய்ப்பவன் 3. மாட்டு வியாபாரி 4. மாம்பழ வியாபாரி 5. இட்லி வியாபாரி 6. முறுக்கு வியாபாரி 7. தேங்காய் வியாபாரி 8. கீற்று வியாபாரி 9. மீன் நண்டு பிடிக்கும்

தொழிலாளி 10. உப்பளத் தொழிலாளி 11. இயந்திர ஓட்டுநர் 12. தண்ணீர் வண்டிக்காரன் 13. அரசியல்வாதி 14. பாடகன் 15. நடிகன் 16. நடனக்காரன் 17. கவிஞன்.

முப்பெரும் கவிஞர்கள்

முற்போக்குக் கவிஞர்கள் வரிசையில் பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையார் எனப் பிரிக்க முடியாத நிலையில் பிணைக்கப்பட்டுள்ளனர். மகாகவி பாரதி தேசிய கவி. பாரதிதாசன் புரட்சிகர திராவிட இயக்கம். பட்டுக்கோட்டையார் பொதுவுடைமை இயக்கம் ஆகியவற்றைத் தழுவி நின்றாலும் இயக்கங்கள் இவர்களுக்கு அடையாளமே தவிர இயக்கத்தைத் தாண்டி மக்கள் மனத்தை வென்றவர்கள். அதிலும், பட்டுக்கோட்டையாரின் பாடல் சினிமா பாட்டுக்கு இலக்கியப் பீட்த்தைப் பெற்றுத் தந்தது.

பெண்ணுரிமை மனித உழைப்பு,உழைப்பாளியின் பெருமை, மனிதநேயம்,சமூகச் சீர்திருத்தம் ஆகிய இவைகள்தாம் ஒருவன் முற்போக்குப் படைப்பாளி என்பதற்கு ஆதாரம். இவற்றைத் தொடங்கியவர் பாரதி, தூக்கிப் பிடித்தவர் பாரதிதாசன், அழுத்தம் கொடுத்தவர் பட்டுக்கோட்டையார்.பாரதி,பாரதிதாசன் தோற்றுவித்த சாலையில் கம்பீரமாய் பயணம் புறப்பட்டவர்தான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

பட்டுக்கோட்டையாரும் சினிமாவும்

பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் பல பொதுவுடைமை இயக்கத்தின் நாளேடான ஜனசக்தி யில் வெளிவந்தன. பொதுவுடைமை இயக்க நாடகத்திற்கும் பிற நாடகங்களுக்கும் அவர் எழுதிய நாடகப் பாடல்கள் பிரபலமாயின. திரைப்படப் பாடல்கல்

மூலமாகவே மக்களுக்கு அறிமுகமானார். திரைப்படத்திற்கு வெளியே அவர் எழுதிய பாடல்கள் மிகவும் குறைவு.

திரைப்படத்தில் பாடல்கள் வசனங்கள், நடிப்பு இவற்றில் மாறுதல்கள் தொடங்கிய காலத்தில் திரையுலகில் நுழைந்தவர் பட்டுக்கோட்டையார். அறிஞர் அண்ணா, கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், நடிகர் திலகம் சிவாஜி ஆகியவர்களின் கொடி ஓங்கிய காலத்தில் மருதகாசி, உடுமலை நாராயணகவி,கம்பதாசன்,கண்ணதாசன் போன்றோர் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்து வளர்ந்திருந்த காலத்தில் 1955 -1956 இல் திரைப்படத்திற்குப் பாடல் எழுத வந்தவர். முதலில் பாடல் எழுதிய படம் படித்த பெண் அப்படம் 1956 இல் வெளிவந்தது ஆனால் அதற்குப் பின்னர் பாடல் எழுதிய படம் மகேஸ்வரி 1955 இல் வெளிவந்தது. 15.08.1959 இல் ஜனசக்தி நாளேட்டில் பட்டுக்கோட்டையார் எழுதிய புது ஞாயிறு என்ற கவிதைதான் அவரது கடைசிக் கவிதை. அவர் 1959 இல் எழுதிய பாடல்கள் பின்னர் 1960 வரை பல படங்களில் இடம்பெற்று வெளிவந்தன.

ஆக மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் திரைப்படப் பாடலாசிரியராய்ப் பணிபுரியக் கிடைத்த மிகக் குறைந்த கால அளவில் சுமார் ஐம்பது படங்களில் இருநூறு பாடல்கள் எழுதி அசைக்கமுடியாத ஒரு இட்த்தைப் பெற்றவர் பட்டுக்கோட்டையார் ஒருவர் தான். அதற்குக் காரணம் அவரது த்த்துவப் புரிதல், தமிழ் மரபைப் புரிந்து கொண்டு மேற்கொண்ட எளிமையான நடை பொருளுக்காக மட்டும் பாட்டு எழுதாமல் பாட்டில் சிறந்த உயர்ந்தபொருளை வைத்து எழுதியவர் பளபளக்கும் சினிமா உலகின் பகட்டுக்கு அடிமைப்பட்டுப் பாழாகாமல் பக்குவமாய்ப் பாட்டாளியின் குரலை வெள்ளித்திரையில் வெளிப்படுத்தினார்.

முன்னோர் மரபைப் பொன்னெனப் போற்றியவர்

சராசரி மனிதனின் சாதாரண விருப்பு வெறுப்புகளையும் மன அசைவுகளையும் உணர்ச்சிப் பெருக்குகளையும் எளிமையாக உயிர்த்துடிப்பாகச் சொல்லும் மரபே நாடோடி மரபு. சிக்கல் நிறைந்த நிகழ்கால வாழ்க்கைத் தோற்றத்தை மிகச் சாதாரணமாகக் கேட்பவரின் நெஞ்சை உடனடியாகக் கவரும் விதத்தில் வழி வழியான ஆற்றலோடு வெளியிடுவதும் நாடோடி மரபின் இரட்டைக் கூறுகள்.

இது சித்தர்களின் மரபு. பாரதியார் இந்த மரபைச் சரியாகக் கடைப்பிடித்தார், அதேபோன்று இராமலிங்க அடிகளார் கவிமணி மற்றும் பாரதிதாசன் போன்றவர்களுக்கும் இந்த நாட்டுப்புற மரபிலான சிந்து காவடிச்சிந்து, கும்மி, குறவஞ்சி, பள்ளு, ஆனந்தக் களிப்பு மற்றும் தெம்மாங்கு முதலிய பாடல் உருவங்களை நன்றாகப் பயன்படுத்தி மக்கள் மனதில் இடம்பிடித்தனர். இதனைத் திரைப்படத்தில் பயன்படுத்தி இமாலய வெற்றி பெற்றவர் தோழர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

உழைப்பாளியின் உழைப்பு

கவிஞர் திரைப்படப் பாடல்களில் உழைப்பாளி மக்களைப் பாடுவதற்கு அவருக்கு உதவியது மார்க்ஸிய ஞானமே. ஜனசக்தி நாளிதழின் துணை ஆசிரியரான தோழர் ஐ.மாயாண்டி பாரதி அவர்களை அழைத்துப் பேசி உலக விஷயங்களை மார்க்ஸிய அரசியலைத் தெரிந்து கொள்வாராம். வர்க்க வேறுபாடுகளை உணர்ந்தவர். சுரண்டல் வர்க்கத்தால் சுரண்டப்பட்ட பாட்டாளி விவசாய மக்களுக்கு ஆதரவாகத் திரைப்பட்த்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவர்.

“மண்ணைப் பொளந்து சுரங்கம் வெச்சு

பொன்னை எடுத்துக் கனிகல் வெட்டி
மதிலுவெச்சு மாளிகை கட்டி, கடலில் மூழ்கி முத்தை எடுத்து
வழிகாட்டி மரமான தொழிலாளர் வாழ்வில்"

என உழைப்பாளி மக்களைச் சமூகத்தின் வழிகாட்டியென எழுதுகிறார்.

முதலாளித்துவ சமூகநலன் கூறுதல்

இச்சமுதாயத்தின் எல்லாக் கொடுமைகளுக்கும் காரணம் முதலாளித்துவ சமுதாயம் என்பதனை,

"குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் திருட்டு உலகமடா
தம்பி – வாழ்வில் புரிந்து நடந்து கொள்ளடா
என்கிறார். அத்துடன் மேலும்
கொள்ளை அடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா – தம்பி
புரிந்து நடந்துகொள்ளடா"

என்று தெளிவாகச் சொல்கிறார்.

"புரளி தட்டிப் பொருளை விற்கும் சந்தை
பச்சைப் புளுகை விற்றுச் சலுகை பெற்ற மந்தை
இதில் போலிகளும் காலிகளும்
ஆடுகின்ற பொம்மலாட்டம் வித்தை
சொன்னால் நிந்தை
என்றும்
சொட்டுச் சொட்டா வேர்வைவிட்டு
கண்ணீர் விட்டுப் பாடுபட்டா
கட்டுக் கட்டா நோட்டு சேருது
கெட்டிக்காரன் பெட்டியிலே அது
குட்டியும் போடுது வட்டியிலே"

என்று முதலாளித்துவச் சுரண்டலைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

பட்டுக்கோட்டையின் தந்தை உழவு வேலை செய்யும்போதே பாடுவாராம். பட்டுக்கோட்டையாரும் உடனிருந்து வேலை செய்வாராம். அதனை உள்வாங்கித் தனியாகப் பாடுவாராம். மாடு மேப்பாராம். மாடு மேய்க்கும்போது மாட்டை அதன் போக்கில் மேயவிட்டு மரத்தடியில் படுத்திருப்பார். அருகே குளத்தங்கரை. அப்படிப் படுத்திருந்த பின்னொரு நாளில் குளத்தினுள் துள்ளித் திரியும் மீன்களைப் பார்த்து தனது பன்னிரண்டாவது வயதில் தானே ஒரு பாடலியற்றிப் பாடினார்.

“ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டில்காரன் வரும் நேரமாச்சு – ரொம்ப
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே”

இவரது குடும்பம் நிலத்தில் பயிரிடும் விவசாயக் குடும்பம் பயிரிடுவதில் ஏற்பட்ட சில நெருக்கடியிலிருந்து மீளப் பக்கத்திலிருந்து அணைக்கட்டு என்ற ஊரில் இருந்த டேவிட் என்பவரிடம் உதவி நாடிச் சென்றுள்ளனர். அவர் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர். அவர் மூலம் திராவிடக் கொள்கைகள் பரிச்சயம் இவருக்கும், இவரது அண்ணனுக்கும் ஏற்பட்டது. இவரது அண்ணன் கணபதிசுந்தரம் பாடல் இயற்ற அதனைப் பட்டுக்கோட்டையார் திராவிடக் கழக மேடைகளில் பாடியுள்ளார். பின்னொரு நாளில் பட்டுக்கோட்டையாரே ”நல்லதைச் சொன்னால் நாத்திகனா” என்ற பாடலைப் பாடியுள்ளார். விவசாயிகள் அனைவரும் நிலச்சுவாந்தாரிடம் படும் பாட்டை நேரில் பார்த்தவர். அவர்களில் ஆதிக்கத்தை எதிர்த்த “செங்கொடி இயக்கத்தில்” இவருக்குப் பற்று ஏற்பட்டது 1946 ஆம் ஆண்டில் “ஜனநாயகம்” என்ற கம்யூனிஸ்ட் பத்திரிக்கையைத் தானும், அவரும் படித்ததாக அவரது நண்பரான பி.இரத்தினம் கூறுகிறார்.

பாட்டாளியின் தத்துவம்

“பாட்டின் சூழ்நிலை இதுதான். ஒரு அரசன் அவனுக்கொரு தம்பி, அரசன் மிகவும் நல்லவன், தம்பியோ மிகவும் கெட்டவன். தம்பி பல அக்கிரமங்களைச் செய்கிறான். மக்கள் கூட்டமாக வந்து மன்னனிடம் நியாயம் கேட்கின்றனர். அப்போது மன்னன் தான் மன்னனாக இருப்பதால்தானே என் தம்பி இப்படிச் செய்கிறான். அதற்குத் தீர்வு காண ஒரே வழி நான் என் பதிவியைத் துறக்கிறேன் எனத் தன் பதவியைத் துறந்து ஊர் ஊராக அலைகிறான். அப்படி அலையும்போது ஒரு பாட்டு பாடுகிறான்.

“குளத்தங்கரையும் களத்துமேட்டையும்
பாட்டுலே பாடிவச்சான் – நல்ல தம்பி
பாட்டிலே பாடிவச்சான்
காடு கழனியில் பாடுற பாட்டையே
ஏட்டில் எழுதிவச்சான் – சினிமா பாட்டுலே
பாடி வச்சான்”

உரையாடல் தன்மையிலும் திரைப்படப் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் இன்றளவும் தனித்துவம் மிக்கதாகவும் முதலாளித்துவத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதாகவும் இருக்கிறது. அப்பாடலை ஏற்றமுன்னா ஏற்றம் என்ற தலைப்பில் பாட்டாளியின் குரலாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒருவன்: ஏற்றமுன்னா ஏற்றம் இதிலேயிருக்குது முன்னேற்றம்
மற்றவன்: எல்லோரும் பாடுப்பட்டா – இது இன்பம் விளையும் தோட்டம்
ஒருவன்: எல்லோரும் பாடுப்பட்டா – இது இன்பம் விளையும் தோட்டம்
மற்றவன்: கிணற்று நீரை நிலத்துக்குத்தான் எடுத்துத்தரும் ஏற்றம்
ஒருவன்: கிளை வெடிக்கும் பயிர்களுக்கு உயர்வளிக்கும் கூட்டம்.
மற்றவன்: தந்தனத்தானே …………

ஒருவன்: ஏலேலோ ……………………

மற்றவன்: எறும்பு போல வரிசையாக எதிலும் சேர்ந்து உழைக்கணும்

ஒருவன்: இடுப்பே வளையா மனிதர் எதிர்பார்த்துப் பொழைக்கணும்.

ஒருவன்: உடும்புபோல உறுதிவேணும் ஓணான் நிலைமை திருந்தணும்.

மற்றவன்: ஒடஞ்சி போன நமது இனம் ஒண்ணா வந்து பொருந்தணும்.

ஒருவன்: ஓதுவார் தொழுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையிலே….

மற்றவன்: உலகம் செழிப்பதெல்லாம் … ஏர் நடக்கும் நடையிலே….

ஒருவன்: ஆதிமகள் அவ்வை சொல்லை அலசிப் பார்த்தா மனசிலே.

மற்றவன்: நீதியென்ற நெல் விளையும் நெருஞ்சி படர்ந்த தரிசிலே…..

மற்றவன்: விதியை எண்ணி விழுந்து கிடக்கும் வீணரெல்லாம் மாறணும்.

ஒருவன்: வேலை செஞ்சா உயர்வோமென்ற விபரம் மண்டையில் ஏறணும்.

மற்றவன்: நிதியை எண்ணும் பெரியவங்க நெஞ்சில் அன்பும் சேரணும்.

ஒருவன்: நிரந்தரமாச் சகலருமே சொதந்திரமாக வாழணும்.

மற்றவன்: தந்தனத்தானே ………… ஏலேலோ ……………

ஒருவன்: தந்தனத்தானே ………… ஏலேலோ ……………

உழைப்பாளி வர்க்கத்திற்கான வெளிப்பாடு

நாட்டில் முதலாளித்துவம் பெருக்கெடுத்து தொழிலாளித்துவம் சுரண்டப்படுவதை எதிர்க்கிறார். முதலாளித்துவத்தைப் போராட்டத்தினால் எதிர்க்க வேண்டும். உழைப்பின் முக்கியத்துவம் புரியவேண்டும். அனைத்து பிரதிநிதித்துவமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். உழவுத்தொழில் செய்யும் மக்கள் குமுறினால் இந்த உலகில் போராட்டமே எழும். உழைக்கும் மக்கள் எப்போதும் வறுமையில் வாடுபவர்களாக இருக்கின்றனர்.

“குடும்பம் குடும்பமாய்ப் பிச்சை எடுத்தலையும்

கொடுமைகளை இனிச்சகியோம்

கூழுக்குப் பலபேர் வாடவும் – சிற்சிலர்

கொள்ளை அடித்தலையும் சகியோம்”

காடுமேடுகளைத் திருத்தி ஒழுங்குபடுத்தி நல்ல விளைநிலங்களாக மாற்றும் உழைக்கும் பிரிவினர் வறுமையில் வாடுகின்றனர். அவர்கள் கண்ணீரில் தான் பயிர் வளர்க்கின்றனர். அதை நாட்டுக் கொடுத்ததும் அவர்கள் தான். ஆனால் வயிறு புடைக்கத் தின்று மாடியிலே உறங்கும் மனிதர்கள் இதனை அறியவேண்டும். உழவுத்தொழில் செய்பவர்களுக்காகச் சமத்துவம் பெருக வேண்டும். பணக்கார முதலாளிகள் உழவுத்தொழிலுக்குச் செய்யும் தீங்குகளைச் சரிசெய்ய வேண்டும். இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என்று எச்சரிக்கை செய்கின்றார்.

நேர்மை வளையுது கவிதையில் வஞ்சகர் செய்யும் சூழ்ச்சிகளைப் பட்டியலிடுகிறார். இந்த உலகம் உழைக்கும் மக்களுக்குக் கொடுமைகள் செய்கிறது. மக்களை வறுமைக்குத் தள்ளும் முதலாளித்துவத்தின் நிழலாக மாறுகிறது. அவர்களின் நிழல்களில் வாழ அதிகார வர்க்கம் உதவுகிறது. இதனால் ஏழைகள் நசுக்கப்படுகின்றனர். அவர்களின் உழைப்பு உறிஞ்சப்படுகிறது. உலகம் நேர்மை தவறியவர்களுக்காகச் செயல்படுகிறது. அவர்களுக்கு வேண்டுவன செய்கிறது. ஏழைகள் சருகுகளாகச் சுற்றுகிறது. அவர்களைக் கண்ணீர் சிந்தும் நிலைக்கும் ஆட்படுத்துகிறது. ஏமாற்று வழியிலும், குறுக்குவழியிலும் முன்னேற்றம் காணும் மக்களுக்காக நீதியும் வளைகிறது. அவர்களின் ஆசைக்கு இரையாகிறது அதிகாரம். அன்பை, இரக்கத்தை, கருணையை, சகிப்புத்தன்மையை, பொதுவுடைமையை அதிகாரம் கொண்டு செல்கிறது.

பழைய துணிகள், கந்தல் துணிகள் அணிந்தாலும் பசியில் வாடி உணவின்றி இருந்தாலும் தன் நேர்மை பாதையிலிருந்து உழைக்கும் மக்கள் ஒருபோதும் தவறுவதில்லை. பண்புள்ளம் கொண்டவர்களாக வாழுகின்றனர். ஆனால் அவர்கள் இருந்தநிலை தவறி இழுக்கான குற்றத்தைச் செய்வதற்கு முதலாளி வர்க்கம் தூண்டுகிறது. காரணமுமாகிறது. அவர்களுக்கு இழைக்கப்படும் தீமைகளால் அவர்களிடமிருந்த நேர்மை பொல்லாத சூழ்நிலையால் வளைகிறது என்று குறிப்பிடும் கவிதை வருமாறு:

“கொடுமை புரிவதே
தொழிலாச்சு – உலகம்
கொள்ளையடிப்பவர்க்கு
நிழலாச்சு!
வறுமைக்கு மக்கள் நலம்
பலியாச்சு – எங்கும்
வஞ்சகர் நடமாட
வழியாச்சு

சோகச் சுழலிலே
ஏழைச்சருகுகள்
சுற்றுதடா – கண்ணீர்
கொட்டுதடா
மோகச் செயலாலே
முன்னேற்றம் கண்டோரின்
ஆசைக்கு நீதி
இரைக்குதடா – அன்பை
அதிகார வெள்ளம் கொண்டு

போகுதடா

பழந்துணி அணிந்தாலும்

பசியாலே இறந்தாலும்

பாதை தவறாத

பண்புள்ளம்

இருந்தநிலை மறந்து

இழுக்கான குற்றம் தன்னைப்

புரிந்திட லாமென்று

துணியுதடா – நேர்மை

பொல்லாத சூழ்நிலையால்

வளையுதடா"

செய்யும் தொழிலே தெய்வம் என்னும் பாடலில் ஏழைகளின் உறுதித்தன்மையைக் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு உறுதியாக அமையும் காரண காரியங்களை விளக்குகிறார். ஏழைகளுக்கு உழைப்பாளிகளுக்கு செய்யும் தொழில் தான் தெய்வம். அவர்களின் திறமையே அவர்களுக்குச் செல்வமாகும். கையும் காலும் அவர்களுக்கு உதவியாக உள்ளது. உழைப்பு என்னும் கடமையைச் செய்வதில் தான் பதவி அடைகிறார்கள்.

உழைக்கும் மக்கள் பயிர்த் தொழில் செய்வதில் தான் வாழ்வின் மேன்மையான பலன் பெறுவர். அது அவர்களை மட்டுமல்ல. அவர்களைச் சார்ந்தவர்களின் உயிரை வளர்க்கும் உணவாக அமைகிறது. மழை, வெயில் உற்ற துணையாக அமைகிறது. வேர்வைகள் உழைப்பின் விதையாக அமைகிறது. உழைப்பவர்களுக்கு தினம் தினம் வேலை இருக்கிறது. குலத்தினைக் காக்கும் மானமும் நிரம்ப உண்டு. வருங்காலமும்

அவர்களுக்குச் செழிப்பாக உண்டு. இந்த உண்மைகள் சாமிக்கும் தெரியும். அவர்கள் வணங்கும் பூமிக்கும் தெரியும். மண்ணுக்கும் தெரியும். விண்ணுக்கும் தெரியும். மேலே உள்ள சாமி மறந்தாலும், பூமி அவர்களைக் கைவிடாது. என்றும் காக்கும் அரணாக அமையும். இந்த புவியைப் பாடிக் கொண்டாட வேண்டும். கோடிமுறை வணங்க வேண்டும். காயும் ஒரு நாள் கனியாகும். நல்ல விலைபெறும். அவர்கள் முன்னேற வேண்டும். பொதுவுடைமை பேணப்பட வேண்டும் என்ற கனவு ஒருநாள் நனவாக மாறும். வாடினாலும், பசியுடன் துடித்தாலும் மாறாமல் வாழ வேண்டும். விவசாயப் பொருள்களுக்கு விலை வைத்தல் என்பது உழைப்பவர்கள் அல்ல. அரசும், விற்பனை செய்யும் வியாபாரிகளும் ஆகும். உற்பத்தி செய்வது விவசாயிகளாகும். அவர்களுக்குப் போதுமான கூலி கிடைப்பதில்லை. மாறாகச் சுரண்டப்படுகின்றனர் என்பதை உணர்த்துகின்றார்.

“செய்யும் தொழிலே தெய்வம் – அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி

பயிரை வளர்த்தால் பலனாகும் – அது
உயிரைக் காக்கும் உணவாகும்.
வெயிலே நமக்குத் துணையாகும் – இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம்

சாமிக்குத் தெரியும், பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைம – அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை – இதைப்
பாடிப்பாடி விளையாடி ஆடிப்பல
கோடி கோடி முறை கும்பிடுவோம்

காயும் ஒருநாள் கனியாகும் – நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் – நம்
கனவும் நினைவும் நிலையாகும் – உடல்
வாடினாலும் பசி மீறினாலும் – வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்."

பள்ளம் மேடுள்ள பாதையிலே என்னும் பாடலில் முதலாளிகளிடம் கவனமாக இருக்கவேண்டும். சிந்தித்து செயல்பட வேண்டும். அவர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்றாற்போல தப்பித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒற்றுமை உணர்வுடன் இருக்க வேண்டும். உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது. பாகுபாடு பார்த்துப் பழகக் கூடாது. பத்தாம் பசலிகளாகச் செயல்படுபவர்கள் நம்மை ஏமாற்றுவதற்காக ஒன்று கூடுகிறார்கள். ஆகவே, உழைக்கும் மக்களே உங்கள் அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

பழமையான போக்குகளை மாற்றிக் கொள்ள வேண்டும். கல்வி கற்க வேண்டும். உழைக்கும் மக்கள் அனைவரும் நல்லவர்களாக இருக்கின்றனர். ஏமாற்றும் உழைப்பைச் சுரண்டும் வர்க்கத்தினர் நயவஞ்சகர்களாக இருக்கின்றனர். நாம் விளைய வைக்கும்

தானியங்கள் அனைத்தும் குறித்த மாதத்தில் அவர்கள் கையில் சேர்ந்து விடும் நடைமுறையை மாற்ற வேண்டும். மாடுகளுக்காவது வைக்கோல் வந்து சேர்ந்துவிடும். மனிதர்கள் மாட்டிலும் கீழாக வைக்கோலுமின்றி துன்புறுவர்கள். உழைக்கும் வர்க்கத்தினர் ஒற்றுமையுடன் இருந்து முதலாளிகளை எதிர்க்க வேண்டும். உழைப்பவர்களிடம் முதலாளிகள் காட்டும் அன்புப்பாலம் ஏமாற்றுவதற்காகும் எனப் பாடுகிறார்.

“பள்ளம் மேடுள்ள பாதையிலே
பார்த்து நடக்கனும் களைகளே!
பழைய போக்கிலே பயனில்லை – நல்ல
விஷயமிருக்கணும் மூளையிலே

நல்லவர் செய்த செயல்களிலே – பயிர்
நடனமாடுது வயல்களிலே – அது
நெல்லுகதிராகி முதிரும் நாளில்
நிலமுதலாளிகள் கையிலே – போய்
நிறைந்திடும் மார்கழி தையிலே

வல்லமையோடு வாழ்ந்திடும் எளியோர்
வாடிக்கைக் காரர் நாட்டுக்கு – பலர்
வாடுவதுண்டு சோற்றுக்கு – ஆனால்
மாடுகளே உங்க பாடுதேவலே
வைக்கோல் வந்திடும் வீட்டுக்கு

பச்சைக் கொடிகள் வேலியிலே
பாகுபாடின்றித் தழைக்குத – அதைப்

பார்த்திருந்தும் சில பத்தாம் பசலிகள்
பக்கம் ஒண்ணாய்ப் பறக்குது – அன்புப்
பாலம் பழுதாய் கிடக்குது.”

சகலரும் விரும்பும் டீ கவிதையில் டீ என்பது பொதுவானது. புத்துணர்ச்சி ஊட்டுவது. ஏழை, பணக்காரர், உழைப்பாளி, தொழிலாளி, வலிமையானவர், மெலிந்தோர் போன்ற பாகுபாட்டினைக் கடந்தது என்பதை விளக்குகிறார். சோம்பேறித் தனத்தைப் போக்கவல்லது. சுறுசுறுப்பை உண்டாக்க வல்லது. காரில் செல்வோர், நடந்து செல்வோர், காய்கறி விற்போர் போன்ற அனைவரும் விரும்பும் டீ. குடிசைகளில் வாழ்வோர் கோட்டையை விரும்பவைக்கும் டீ என்று குறிப்பிடுகிறார்.

“பாட்டாளித் தோழருக்கும்
பல தொழிலாளருக்கும்
கூட்டாளியா யிருக்கும் டீ –
கொஞ்சம் சூட்டோடு போட்டா
சோம்பேறி நண்பனுக்கும்
சுறுசுறுப்பு கொடுக்கும் டீ – இது
விறு விறுப்பு கொடுக்கும் டீ

காரிலே ஏறிட்டு ரோடுலே போறவங்க
காய்கறி பழம் விற்க கத்துறவங்க
உருகும் தாரிலே நடக்கற
சகலரும் விரும்பும் டீ – பலருக்கு
சாப்பாடு கூட இந்த டீ.

ஊருக்கும் பேருக்கும்

உடல் மெலிந்தோருக்கும்
உள்ளபடி உழைக்கிற நல்லவங்களும்
காருக்கும் கூறுக்கும் வம்பு தகராறுக்கும்
மல்லுக்கும் காரணமாய் உள்ளவங்களும் குடிக்க
கூழுக்கும் இல்லாத குடிசைகளும் பெருங்
கோட்டையும் விரும்பும் டீ – பழைய
குணத்தை மறக்க வைக்கும் டீ."

புது ஞாயிறு கவிதையில் சூரியனின் ஒளி, குளிர்ச்சி, வெம்மை போன்ற தன்மைகளையும், மனிதர்களின் குணங்களையும் ஒப்பிடுகிறார். சூரியன் சிவப்பு நிறத்தில் கிழக்கில் உதிக்கக் கூடியது. மக்களின் இருளை நீக்க வானில் உதிக்கக் கூடியது. சூரியன் உதிப்பதை கோழி கூவி அறிவிக்கிறது. பல பறவைகளும் ஒலி எழுப்பி அறிவிக்கின்றன. இந்த உலகம் சக்கரம் போல சூழலுகின்றது. இவ்வுலகைப் பீடிந்திருக்கின்ற இருள் சொல்லாமல் ஓடுகிறது. பத்துத் திசைகளிலும் மக்கள் சத்தம் முழங்குகிறது. தீய சக்திகளைச் சிவப்புக் கொடி தாங்கிய கைகள் எதிர்த்துப் போராடுகிறது. பல படைகள் கூடுகிறது. பொதுவான நடைமுறைகள் விதிக்கப்படுகிறது. குறுகிய மனம் உள்ளவர்களிடம் உரிமைகளைக் கோருகிறது.

"தீய செயல்களைச் செங்கைகள் சாடுது
பக்குவம் கொண்ட படை பல கூடுது
சிக்கலறுத்துப் பொதுநடை போடுது
சொத்தை மனந்திருந்தப் புது
சத்தம் பிறந்திடுதே?"

பறவைகள் கனிகள் நிரம்பிய மரங்களைப் பார்த்தவுடன் ஒற்றுமையுடன் கத்தித் தன் இனத்தைச் சேர்த்துக் கொள்கிறது. மனிதர்களிடம் வேற்றுமை என்ற பித்தம் நிரம்பிக் கிடக்கிறது. அவர்கள் பேதங்களை வளர்க்கின்றனர். உழைப்பவன் தன் உரிமைக்காகப் போராடுகையில் உத்தமர் வேசம் போடும் மனிதர்களின் ஆதிக்கங்கள் அடங்கி உழைப்பவர் கைகள் ஓங்கிவதற்குச் சூரியனை உவமையாகக் குறிப்பிடுகிறார்.

“பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
ரத்தம் வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே – ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே – மக்கள்
வெற்றி நெருங்கிடுதே!”

நாட்டுக்குப் பொருத்தம் கவிதையில் ஆட்சியாளர்களிடையே சுயநலம் இருக்கக் கூடாது என்பதை உணர்த்துகிறார். விவசாயிகள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். காடுகளிலும், தோட்டங்களிலும் உற்பத்தி செய்பவர்களின் கடமையால் வறுமை நீங்குகிறது. குடும்பத்தில் யாரிடமும் பாகுபாடு காட்டாது அனைவருக்கும் உழைக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஏற்ற குறித்த செலவுகளைச் செய்தல் வேண்டும். உலகம் உழைப்பவர்களைக் கண்டு வியக்க வேண்டும். ஒற்றுமையுடன் இருந்தால் முதலாளித்தனம் செய்வோர்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது. காலங்கள் மாறிக் கொண்டே வருகிறது என்ற உண்மையை அனைவரும் உணரவேண்டும். ஆட்சியாளர்கள்

காலமாற்றத்தை உணர்த்தவேண்டும் என்று பொதுவுடைமையைக் கட்டளை இடுகிறார் என்று உணரமுடிகிறது.

எல்லை மீறி துள்ளாதே கவிதையில் வீரனின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். வீரனாய் இருப்பவர் எதிரியை வீழ்த்துவர். சாட்டையைச் சுழற்றுவர். வேட்டையாடுவர். அரசனைப் போல் அதிகாரத் தொனியில் கத்திப் பேசுவர். எப்போதும் மகிழும் மனத்தைக் கொண்டிருப்பர். பெண்கள் விரும்பும் ஆடவனாக இருப்பர். பலரும் விரும்பும் ஆளாக இருப்பர். நினைத்ததை அடைவர். இவரின் குரலுக்குக் கட்டுப்படாமல் பகையை வளர்த்தால் இவர் பார்வையிலேயே வென்றிடுவர்.

“நல்லவனைப் போலிருந்து
குள்ளநரியாய் நடந்து
எல்லை மீறித் துள்ளாதே!”

வீரனிடம் ஏமாற்றுதல் நடக்காது. குள்ள நரி வேடமிட்டு மக்களை ஏமாற்றும் நயவஞ்சகர்களைக் துவம்சம் செய்திடுவர். இவரின் குணம் என்றும் பொதுவுடைமைக் கொள்கையில் நிற்கும். ஆக வீரர்கள் பொதுவுடைமையை விரும்புபவராய் இருப்பர். ஆதிக்கத்தை எதிர்ப்பர். அதிகாரத்தைத் தட்டிக் கேட்பர். மக்களை அனைவரும் வீரர்களாய் மாற வேண்டும் என்று உணர்த்தப்படுகிறது.

பிறவிக் குருடனும் கண் பெறுவான் என்ற கவிதையில் ஏமாற்றும் உலகத்தைச் சுட்டிக்காட்டுகிறார். அனைவரும் அனைத்து நேரங்களிலும் குருடர்களாய் அறியாமையில் இருக்க மாட்டார்கள். இங்குக் குருடர்கள் என்பது அறியாமையைச் சுட்டுகிறது. கண்

பெறுதல் என்பது சமூக விழிப்புணர்வைக் குறிக்கிறது. ஏற்றத்தாழ்வுள்ள சமூகம் என்பதை மக்கள் எளிதில் புரிந்து கொள்வர். ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டத்தை அடையாளம் கண்டு கொள்வர். சுரண்டலுக்கு எதிராகப் போராடும் காலம் எளிதில் வரும். பொறுமையாய் இருக்கும் மக்கள் புலியாய் மாறி வெகுண்டு எழும் போது, பொய்யும் புரட்டும் சொல்லி ஏமாற்றும் கூட்டங்கள் சீற்றத்திற்குப் பழியாகும்.

விடியலை அறிந்து கூவும் சேவலைக் கூட்டிலே அடைத்தாலும், இருளில் கவிழ்த்து போட்டு மறைத்தாலும், கல்லைத் தூக்கிப் பாரம் வைத்தாலும் அது நில்லாது. விடியலை அறிந்து கூவும். அதுபோல மக்களை ஏமாற்றுபவர்கள் அவர்களை இருளிலே வைத்திருந்தாலும், அறியாமையை ஊட்டி வளர்த்திருந்தாலும், ஏமாற்றிப் பிழைப்பு நடத்திக் கொண்டு இருந்தாலும் சேவலைப் போல எளிதில் விடுதலையை கூவுவர்.

தாழம்பூ தலையில் சூடினாலும், பெட்டிக்குள் போட்டுப் பூட்டினாலும் அதன் வாசம் என்றும் மறைவது கிடையாது. மறைக்கவும் முடியாது. அதுபோல சத்தியத்தின் உண்மையைச் சதி செய்து மறைக்கவும் முடியாது. மறையாது.

“அன்பு நெஞ்சிலே ஆத்திரம் வந்தால்
ஆண்டவன் கூட அஞ்சிடுவான்!
அறிவுக் கதவைச் சரியாய்த் திறந்தால்
பிறவிக் குருடனும் கண்பெறுவான்”

என்று கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். கற்றல் ஒன்றே அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆயுதம். அறியாமை என்னும் ஒளியைக் கண்ணில் பாய்ச்சி, பிறவிக்

குருட்டை நீக்கும் வல்லமை வாய்ந்தது. வம்பு பேசுவதையும், கலகம் செய்வதையும், சிக்கல் நிறைந்த வாழ்வை தீர்த்து வைத்தால் மனிதனை மனிதன் நம்புவான். வம்பும், கலகமும், சிக்கலும் ஆகிய இம் மூன்றும் தான் மனிதனை மனிதன் நம்பிக்கை கொள்வதற்குத் தடையாய் இருக்கும் கற்களாகும். இத்தடைக் கற்களை நீக்கினால் மடையனும் திருந்திடுவான். உலகம் குருட்டுத் தன்மை நீங்கி ஒளிபெறும் என்பதை உணர்த்துகிறார்.

இன்பநிலை வெகுதூரமில்லை கவிதையில் இன்பம் மக்களை எளிதில் வந்தடையும் என்பதை உணர்த்துகிறார். துன்பம் சோகத்தை உருவாக்கவல்லது. துன்பத்தை, சோகத்தை நீக்க வேண்டுமானால் இன்பம் பெற வேண்டும் என்று குறிப்பிடுகிறார். அந்த இன்பத்தைப் பெறும் வழிகள் எது? என்பதைக் குறிப்பிடுகிறார்.

“இங்குச் சொல்வதும் செய்வதும் மோசம்
வந்து சூழ்ந்திடும் நேசமும் வேஷம்”

மக்களை ஏமாற்றுவதற்காகப் பேசும் வார்த்தைகளும், செயல்களும் மோசமாகவே உள்ளன. இதனால் மக்களை வெளி வேசங்கள் சூழந்திருக்கிறது. இது துன்பத்தில் ஆழ்த்துகிறது. இன்பத்தைப் பறிக்கிறது. இதனைக் கலைந்தால் இன்பம் பெறலாம்.

இன்பம் பெற்றால் வஞ்சமில்லை. பஞ்சமில்லை. கவலைகள் இல்லை. போதை தெளிவு பெறும். வாழ்க்கையில் துன்பம் வரும் பாதைகளை இன்பம் அடைக்கும். அன்புதான் இன்பத்தைத் திறக்கும் சாவி. கோயில் அனைத்தும். மனிதனை மனிதன் மதிக்கும், நேசிக்கும் மாண்பு வந்தால், முதலாளி தொழிலாளி என்ற பேதம் நீங்கும். வாவென்று

அனைவரும் அழைத்துக் கொள்வர். நேசம் கொள்வர். இந்த உலகம் பேதங்கள் மறந்து வாழமுடியும். கொடும் தீமைகள் செய்யமுடியாது. பொறாமை கொள்ள முடியாது. விரோதங்கள் வளராது. இன்பங்கள் பெருகும்.

“இனி செல்கின்ற தேசத்தில் பேதமில்லை
கொடும் தீமை பொறாமை விரோதமில்லை
என்றும் துன்பமில்லை இனிச் சோகமில்லை
பெறும் இன்பநிலை வெகுதூரமில்லை”

வீரசிந்து கவிதையில் பாரதியார் பாடிய சிந்து இலக்கியம் தொனியில் பாடுகிறார். ஒன்று கூடி நின்று வீரசிந்து பாடுவோம். வெற்றி சூடுவோம். நேர்மையற்றவர்களை வீழ்த்துவதற்கு ஒற்றுமை என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்துவோம். ஏழைகளின் உழைப்பைச் சுரண்டும் ஈவு இரக்கமற்றவர்களை மாய்ப்பதற்கு ஒற்றுமை என்னும் ஆயுதம் வேண்டும். ஏழையை மிதித்து வாழும் எத்தர்களை வீழ்த்தவேண்டும். நம்மை கோழை என்று நினைக்கும் கொள்கை உடையவர்களைத் தோற்கடிப்போம். கிளர்ந்து எழுந்து தாக்க வேண்டும். ஒற்றுமை உணர்வுடன் கொடி உயர்த்துவோம். செல்வந்தர்கள் அதிகாரக் கொட்டத்தை அடக்க வேண்டும். சாதி, மதம், இனம், மொழி போன்ற சூழ்ச்சிகளால் நம் ஒற்றுமைகளைச் சிதைக்கும் ஆட்சியை முறியடிக்க வேண்டும். வஞ்சகர்களின் பணம், அதிகாரம், ஆதிக்கச் செறுக்குகளை அழிக்க வேண்டும். தனி மனிதனுக்கு உணவில்லை என்ற சொல்லை நீக்க வேண்டும். ஒற்றுமையான உலகை உருவாக்குவோம். எளியவர்கள் என்று நம்மை ஏளனம் செய்யும் அதிகாரவர்க்கத்தின்

மனப்பான்மையை வெல்ல வேண்டும். புரட்சிப் பாதையில் அணிவகுத்துச் செல்லவேண்டும். அனைரும் வீரர்களாய் அணிவகுக்க வேண்டும் என்ற பொருண்மை சுட்டும் கவிதை வருமாறு;

ஒன்று கூடிநின்று வீரசிந்து
பாடுவோம் – வெற்றி
சூடுவோம்
நேர்மையற்ற பேர்கள் வீழ நின்று
வாட்டுவோம் – நீதி
நாட்டுவோம்

ஈரமற்ற நெஞ்சுகொண்ட
ஈனர் மாய்கவே
ஏழையை மிதித்துவாழும்
எத்தர் வீழ்கவே!
கோழைஎன்று நம்மை எண்ணும்
கொள்கை போக்குவோம் – கிளர்ச்சி
கொண்டு தாக்குவோம்
கூடிநின்று கொடியுயர்த்திக்
கொட்டி முழக்குவோம் – செல்வர்
கொட்ட மடக்குவோம்
தோழர்காள்! – துணிந்த
வீரர்காள்!!

சூழ்ச்சியால் நமைக்கெடுத்த
ஆட்சி வெல்லுவோம்
வஞ்சகர் செருக்கொழிந்து

வாழ்க்கை எய்துவோம்
கஞ்சியில்லை என்ற சொல்லைக்
கப்பலேற்றுவோம் – ஜெகத்தை
ஒப்ப மாற்றுவோம்
பஞ்சையென்று நம்மை எண்ணும்
பான்மை வெல்லுவோம் – புரட்சிப்
பாதை வெல்லுவோம்!
தோழர்காள்! – துணிந்த
வீரர்காள்!!

சோர்ந்த கைகள் உயர்ந்தது கவிதையில் உரிமை நிலைத்தால் உண்மை பிழைக்கும் என்பதை உணர்த்துகிறார். உள்ளத்தில் அன்பு பொங்க வேண்டும். அன்பால் எத்தகைய துன்பத்தையும் நீக்க முடியும். தீராத சண்டைகளும் நீங்கிவிடும். உரிமை நிலைக்கும். உண்மை பிழைக்கும். உழைப்பவன் கேள்வியை உலகம் மதிக்கும். நீதி வெற்றி பெறும். சேரி வெற்றி பெறுதலே நிரந்தரமானது. சாதிகள் பேசி நம்மை தள்ளிவைத்தவர்கள், சாக்கடைகளாய் நினைத்தவர்கள், தனக்கே ஊர் முழுவதும் சொந்தம் என்று வளைத்துச் சொத்து சேர்த்தவர்கள் அனைவரும் சட்டங்கள் மாறியதால் சரிசமம் என்று மாறிவரும் காலம் வரும். பகலும் இரவும் ஓடாய் உழைக்கும் மக்கள் காலம் கடந்து பட்டினி கிடந்து சாகின்றனர். பயந்து பயந்து காலம் கழிக்கின்றனர். அன்பு என்ற ஆயுதம் இந்த ஏற்றத்தாழ்வினை நீக்கி சமநிலை பெற வழிவகுக்கும் என்று குறிப்பிடுகிறார்.

கலங்காதே கவிதையில் கலங்கும் சூழலை விளக்குகிறார். உலகத்தில் மரணத்தில் மட்டும் உயர்வும் இல்லை. தாழ்வும் இல்லை. உருவம் இல்லாத யாரோ ஒருவன் உண்டாக்கி

வைத்த நியதியாகும். கலங்காமல் உலகத்தைக் கவனிக்க வேண்டும். இன்பத்தைத் தேடி ஏழை நெஞ்சங்கள் ஏங்குகின்றது. ஏற்றத்தாழ்வு விதைப்பவர்கள், சாதியை அறுவடை செய்பவர்கள், உழைப்பைச் சுரண்டுபவர்கள் வீட்டில் அன்பு என்னும் ஆயுதம் அடைத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த உலகம் இல்லாதவனை வந்தாலும், போனாலும், வாழ்ந்தலும், கெட்டாலும் எட்டிப்பார்க்கவில்லை.

“மலையிளந்தோம் கல்லை உடைத்தோம்
மரம்பிளந்து வழிகள் அமைத்தோம்
வாடிக்கையாய் உள்ளம் உடைந்தோம்
வாழ்க்கையெல்லாம் துன்பம் அடைந்தோம்
எல்லோரும் சேர்ந்து ஏமாத்தும்போது
முன்னேறு பாதை ஏது.”

வியர்வையில் நம் மேனிகள் கலைந்து விடுகின்றன. வெயிலில் அழகு களைந்து விடுகிறது. பசியால் உடல் பலமிழந்து விடுகிறது. உழைக்கும் உடம்பும் வளைந்து விடுகிறது. இவ்வாறு தாங்காத துயரங்கள் நிரந்தரமாய் இருக்கும்போது நம் வாழ்வில் சந்தோசம் என்றும் நிலைப்பதில்லை என்பதை உணர்த்துகிறார்.

ஆனாலும் மக்கள் வயிறு காயுது என்ற கவிதையில் அதிகாரத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பனை உலகம் வஞ்சிக்கிறது என்பதை உணர்த்துகிறார். உண்மையைச் சொல்பவனை உலகம் வெறுக்கிறது. உதவி செய்ய நினைப்பவனை இவ்வுலகம்

ஏழையாக மாற்றுகிறது. உள்ளதையும் பறிக்கிறது. உள்ளத்தைக் கல்லாக்கி ஊமை போல் வாழ்ந்துவிட்டால் அவனை நல்லவன் என்று கூறுகிறது. இன்பம் நிறைந்த இந்த உலகத்தில் செல்வம் அதிகமாக உள்ளவர்கள் பிறருக்கும் கொடுக்க மறுக்கின்றனர். ஈரமற்ற நெஞ்சம் கொண்டவர்களாக இருக்கின்றனர். பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணுபவர்கள் வறுமையில் வாடுகின்றனர். அவர்களிடம் உதவி செய்யப் பொருட்கள் இல்லை. இரக்கம் கொண்டவனை இவ்வுலகம் எதிரி என்று சொல்லுகிறது. இல்லை என்பதையே இந்த தாரகமந்திரமாகக் கொண்டுள்ளது.

வயல்களில் நெல் விளைந்தும், உணவுப் பொருட்கள் விளைந்தும் செழித்துக் கிடக்கிறது. ஆனால் மக்களிடம் என்றும் பசியும் பட்டினியும் மண்டிக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நாட்டில் மாற்றம் எவ்வாறு உருவாகும். இந்த மக்கள் கூட்டம் ஒற்றுமை காணுமா? என்று கவிஞர் உள்ளம் ஏங்குவதாக அறியமுடிகிறது.

ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு **அஞ்சி நிற்கமாட்டோம்** என்ற கவிதையில் குறிப்பிடுகிறார். நன்றி கெட்ட மனிதர்களைக் கண்டு அஞ்சமாட்டோம். பொய் பேசும் மனிதர்களை நம்ப மாட்டோம். எளிய மக்களின் வாழ்வில் பணம் பெரும் பிரச்சினையாக உள்ளது. உழைக்கும் தொழிலாளர்கள் என்றும் வஞ்சனைக்கு ஆட்படுகின்றனர். பஞ்சம் நோய்க்கு அஞ்சமாட்டோம். பட்டினிக்கு அஞ்சமாட்டோம். மறுக்கப்பட்ட நீதியைக் கேட்பதற்கு அஞ்சமாட்டோம். நேர்மையற்றவர்களையும், கூலி என்று ஏளனம் செய்யும் மனிதர்களைக் கேலி செய்ய மாட்டோம். மனைவி என்பவள் இல்லத்தில் வேண்டுமான பணிகளைச் செய்தாலும் அவர்களைக் கணவர்கள் தவிக்க விடுவது போல தொழிலாளர்களைத்

தவிக்கவிடும் முதலாளிகளை என்றும் மறக்கமாட்டோம். என்றாவது ஒருநாள் கல்வியும் அதிகாரமும் தொழிலாளர்கள் கையில் கிடைக்கும் போது அவர்கள் இந்த உலகைவிட்டு ஓடவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கிறார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் தம் பாடல்களில்வழி பொதுவுடைமையை வலியுறுத்துகிறார். ஏழை – பணக்காரன், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், இருப்பவன் – இல்லாதவன், முதலாளி – தொழிலாளி, ஆணாதிக்கம் – பெண்ணடிமை, செழுமை – வறுமை, மிகுதியான உணவு – பஞ்சம் பட்டினி, கட்டமைக்கப்படும் அதிகாரம் – எதிர்க்கப்படும் போராட்டம், மறுக்கப்படும் நீதி – ஏழைக்கெதிரான அநீதி போன்ற முரண்நிலைகளைச் சுட்டிக்காட்டுகிறார். தனிக்கவிதைகள் வழியாகவும், திரைப்படப் பாடல்களின் வழியாகவும் சமத்துவம், சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறார் என்பதை அறியமுடிகிறது.

ஊசிகள்

- **மீரா (மீ.ராஜேந்திரன்)**

தமிழ் இலக்கியத்தில் மரபுக் கவிதை சவலை நோயால் பீடிக்கப்பட்டுக் கவலைக்கிடமாகி, நலிவுறும் நிலைக்கு வந்தபோது தான், கவிஞர் மீரா புதுக்கவிதை என்னும் சிவப்பு அணுக்களை அதன் ரத்தத்தில் பாய்ச்சினார். அவர் பாவேந்தர் பரம்பரையைச் சார்ந்தவர். மெய்யான பகுத்தறிவுக் கவிஞர். திராவிடச் சிந்தனை உள்ளவர். பொதுவுடைமைச் சிந்தனை உடையவர். வானம்பாடி இயக்கத்தைச் சேர்ந்தவர். பின்னாளில் கவிதை எழுதிய கவிஞர்களுக்கு வழிகாட்டியாய் நின்றவர். “கவிதைக் கலை என்பது பொழுதுபோக்குக் கலை அல்ல. அது விஞ்ஞானத்தைப் போல, மனித வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தை உருவாக்க, என்றும் கவிதை உதவவேண்டும்” என்பது கவிஞர் மீராவின் கவிதைக் கொள்கை.

கவிதை என்பது மனிதநேயம் (Humanism), சர்வதேசியம் (Internationalism), சோசலிசம் (Socialism), நடப்பியல் (Realism), ஒளிமயக் கருத்தியல் (Optimism) ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். கவிஞர்கள் பார்வையில் நானிலம் முழுவதும் படிய வேண்டும் என்றார்.

கவிஞர் மீரா, அப்துல் ரகுமான், பாலசுந்தரம் ஆகிய மூவரும் ஊசிகள் பற்றி நிகழ்த்திய கலந்துரையாடலில் கவிஞர் மீரா இவ்வாறு கூறுகிறார். ”சமுதாயத்தின் நோய்க் கிருமிகளைப் பார்க்கிறபோது சங்கடப்படுகிறேன். கோபமும் வருகிறது. ஒரு சுகாதாரமான சமுதாய ஆசை தான் இந்த ஊசிகளை உருவாக்கியது. ஊசிகள் இலக்கிய

உப்பரிகையில் உலாவுவதைவிடச் சமுதாய நடை பாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன். ஊசிகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. ஆனால் கருத்துக்கள் யாரையும் குறிப்பிடலாம். இவற்றிற்கு Historical Value உண்டு. சோவியத் நாடு வாங்குவதோடு நம்மவர்களின் ஆசை நின்று போகிறது. இதற்குமேல் பொதுவுடைமைப் பாதையில் நம்மவர்களால் நடக்க முடியாத பலவீனத்தைக் குத்திக் காட்டத்தானே வேண்டும்.

ஊசிகள் பற்றி அப்துல் ரகுமான், “இந்த ஊசிகள் மருந்து ஊசிகள். குத்தலாக எழுதப்பட்டிருக்கிற இந்த கவிதைகளுக்கு ஊசிகள் என்ற பெயர் நயமாகத்தான் உள்ளது. அகப்பொருள் பாட்டுகளுக்கு ஒருவர் பெயரைச் சுட்டக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது போல இத்தகைய கவிதைகளுக்கும் இருந்தால்தான் அவை வெறும் Scandal ஆகாமல் இலக்கியமாகவும் ஆகும். நிரந்தரமும் கிடைக்கும். ஒரு கிழிசலைத் தைக்க வாங்கிய ஊசியை மீண்டும் தேவைப்படும்போது பயன்படுத்தப் பத்திரப்படுத்திக் கொள்வதுபோல் இவைகளையும் பத்திரப்படுத்திக் கொள்ளலாம். பயிற்சியினால் வரும் Craftsmanship கவிதை ஆக்கத்திற்கு எப்படி உதவும் என்பதற்கு இவை உதாரணங்கள் என்று நினைக்கிறேன்” என்ற குறிப்பிடுகிறார்.

பாலசுந்தரம் ஊசிகளை “முன்பெல்லாம் புலவர்கள் பாடான் திணை என்று உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களுக்குத் தான் தங்கள் பாட்டில் இடம் கொடுப்பார்கள். எல்லாம் மாறுகிற காலமிது. இங்கே, ஊசிகளின் கதாநாயகர்கள் ஊழல் பேர் வழிகள். மீராவுக்கு நயமான நகைச்சுவை உணர்வு இருக்கிறது. சமுதாயத்தைக் கூர்மையாகப் பொதுநல

உணர்வோடு பார்க்கிறான். அவனது மொழிப்புலமை இதற்குக் கைகொடுத்திருக்கிறது. குத்தப்படுகிறவர்களுக்கு வலிக்கலாம். குற்றப்பிறவிகள், ஊசிகள் எங்களைக்குத்துகிறதே என்று ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை. இவர்களால் குத்தப்பட்ட நல்லவர்களைக் காணும்போதெல்லாம் கவிஞனுடைய கண்ணும் நெஞ்சும் குத்தப்பட்டிருக்குமே. அதை நினைத்துப் பார்த்தால் கண்ணில் ஏற்றும் ஊசிகளாக இருந்தாலும் சரிதான் என்று படுகிறது. அப்படிப் பார்க்கிறபோது இந்த ஊசிகள் உயர்ந்தவையாகத் தோன்றுகின்றன.

சில ஊசிகள் சிலரைக் குறிப்பிட்டுக் குத்துவதாகப் படுகிறது. பொதுவாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஊசிகளின் கருத்துகள் கற்பனையில்லை என்பதுதான் இவற்றின் வலிமை. கற்பனையாக இருந்திருந்தால் ஊசிகள் தைப்பதற்கு இடம் இல்லாமல் போயிருக்கும். எந்தச் சத்த உணர்வும் இல்லாமல் இன்றைக்கு எழுதப்படுகிற புதுக்கவிதைகளுக்கு நடுவே ஊசிகள் அகவல் ஓசையில் அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தச் சந்தம் கவிதைப் பொருளுக்குக் கைகொடுப்பதால் எனக்குப் பிடிக்கிறது. “கத்தி வந்தது டும்…டும், உறுமீன் வருமளவும் கல்வி சிறந்த தமிழ்நாடு, உயிருள்ள பத்திரிக்கை” போன்ற தலைப்புக்கள் கவிதைக்கு மேலும் நயம் கூட்டுவதாக நினைக்கிறேன். சில புகழ் பெற்ற அரசியல் முழக்கங்கள், இலக்கியத் தொடர்கள், பழமொழிகள், திரைப்பாடல் வரிகள் இவைகளைப் பொருத்தமாகக் கையாண்டிருப்பதால் கவிதைகளுக்கு வலிமை கூடியிருப்பதாகக் கருதுகிறேன்.

ஊசிகளில் சொல்ல வந்த கருத்துக்குப் பகைப்புலமாக முரண்பாடான ஒன்றை நிறுத்திச் சொல்லும் உத்தி திறமையோடு கையாளப்பட்டிருக்கிறது. “இந்தியப் பாதுகாப்புச்

சட்டப்படி" .... ஜனநாயக சோஷலிசம்" போன்ற சில கவிதைகளில் ஒரே கல்லில் இரண்டு பழங்களை அடிக்கும் விந்தையை ரசிக்க முடிகிறது. சமுதாயத்தின் ஒரு சில துறைகளைப் பற்றியே திரும்பத் திரும்பச் சலிக்கிற அளவுக்கு குறை சொல்லுகிற சிலரைப் போன்றில்லாமல் பல்வேறுபட்ட துறைகளையும் தயவுதாட்சண்யம் இன்றிச் சாடுவது பாராட்டக் கூடிய அம்சமாக நினைக்கிறேன்" என்று தம் கருத்துக்களைக் கூறுகிறார். ஊசிகள் வாசகர்களின்வழி சமுதாயத்தைக் குத்தும் கருவி.

தமிழ்ப்பற்று

தமிழ்ப் பற்று என்னும் கவிதையில் வார்த்தைகளை உச்சரிப்பதில் வெளிப்படுத்துகிறார்களே தவிர வடமொழி கருத்தினை யாரும் வெறுக்கவோ, மறக்கவோ இல்லை என்பதைப் பகடி செய்கிறார்.

"தேவ பாஷையில்
தேர்ச்சி மிக்க
சாஸ்திரி ஒருவர்
ஜாதி வேண்டும்
ஜாதி வேண்டும்
உடனே சீறி

ஒரு தமிழ் மறவர்
ஓங்கிக் கத்தினார்
ஓய் ஓய் இனிநீர்
ஜாதி வேண்டும்
என்றால் பொறுமையாய்

இருக்க முடியாது என்னால்

சரியாய்ச்

சாதி வேண்டும்

என்றே சாற்றும்.”

அரசியல்

அரசியலில் சுரண்டுதல் என்பது வழு உள்ளவரிடம் நடப்பதில்லை. ஏழை எளிய மக்களை ஏமாற்றி சுரண்டுவதை ஒரு வீரமாக, புத்திசாலித்தனமாகவும் எண்ணி வைத்துக் கொள்கிறார்கள். பணக்காரர்களையோ, வலிமை உள்ளவர்களையோ அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை மாறாக ஒத்துழைப்பு செய்கிறார்கள் என்பதைச் சுரண்டலாமா? கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

விழித்துப் பார்த்தேன்

விரலை மெதுவாய்க்

கடித்தொரு பாச்சை

கால்வாங் கியது

பதைத்துக் கேட்டேன்

பாவப் பூச்சியே!

கட்டை விரல் ஏன்

தட்டுப் படாமல்

போனதுன் கண்ணில்?

மெலிந்திருக்கின்ற

சுண்டு விரலைச்

சுரண்ட லாமா?

சுரண்ட லாமா?

சுரண்ட லாமா?....

ஏழை எளிய மக்கள் அரசியல் தலைவர்கள் வஞ்சிப்பதும், சுரண்டுவதும் என்பது மிகவும் அபத்தமானது என்பதைக் கவிஞர் சாடினாலும், அவர்களைத் தன் பக்கத்தில் சரிசமமாய் இருப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை. சாதி, பொருளாதார நிலைகளிலும் அவர்களைப் பின்தள்ளுகின்றனர். மாறாக பொதுவெளிகளில் அவர்களை வஞ்சிப்பது என்பதும் மிகவும் கொடுமையானது. அவர்களின் கந்தல் துணிகளையும், அழுக்கு நிறங்களையும், பரட்டைத் தலைகளையும் மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு வந்ததில்லை. மாறாக, அவர்களைப் புறந்தள்ளுவதையே தனது தன்மையாகவும், தான் கருவத்தோடு வாழ்வதாகவும் எண்ணுகின்றனர் என்பதை வறுமையே வெளியேறு என்ற கவிதையின் மூலம் புலப்படுத்துகிறார்.

எட்டு மாதமாய்

எங்கள் தலைவர்

தெருவில் நின்று

செழிக்கச் செய்தார்

முழக்கம்…..

வறுமை

வெளியே றிற்றா

விரைவாய்……..?

நேற்று

செட்டியார் வீட்டுத்

திருமணப் பந்தியில்

எதுவும் பேசாது
எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்....
வறுமை,
வேக வேகமாய்
வெளியே றிற்று –
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக........!

நம்நாடடில் சோசலிசம் என்பது மிகவும் தேவையாய் இருக்கிறது. பெரும் பணக்காரர்களிடமும் அதிகாரம் படைத்தவர்களிடமும் பணம் சேர்ந்து கொண்டே இருப்பது இந்நாட்டின் அவலம் ஆகும். சோசலிசம் உருவாவதற்கு ஏழை, நடுத்தர வர்க்கம் மிகப்பெரும் கூட்டத்தைக் கூட்டிக் கொண்டிருக்கிறது. போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதிகாரம் எப்போதும் செழித்துக் கொண்டிருக்கிறது. வேர் விட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. இதற்குக் கவிஞர் பெரும் யோசனை சொல்கிறார். சிறப்புடன் தான் உள்ளது. அந்த யோசனை சமூகத்தில் நிலவும் சட்டத்தின் ஆட்சியில் இருக்கும் குறைபாடாகவே அறியமுடிகிறது.

ஐந்து வருடம்
முடிந்தால் தேர்தல்
என்பதை மாற்றி
இங்கே
வருடா வருடம்

வைத்தால் போதும்..

பெரும் பெரும்
புள்ளிகள் எல்லாம்
வெள்ளிப் பணத்தை
அள்ளி இறைப்பார்
ஆடிக் கரைப்பார்

சுலப மாகச்
சோஷ லிசத்தை
அடையும் வழியிது.
அற்புத வழியிது.

அரசியல் தலைவர்கள் நாட்டில் நடக்கும் திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்களை அடக்குவதிலும், தடுப்பதிலும், துப்புதுலக்குவதிலும், கண்டுபிடிப்பதிலும், அதனை வெளியிடுவதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆனால் அரசியல் வாதிகள் செய்யும் ஊழலைத் தடுப்பதற்கு எந்த முனைப்பும் எடுப்பதில்லை. திருட்டு போன்ற குற்றங்களைவிட ஊழல்கள் நாட்டைக் சீர்கேடாக்குகிறது. இதனை சரண் என்ற கவிதையில் சுட்டுகிறார்.

ம.பி. முதல்வர்
மகிழ்ச்சி அடைகிறார்........

காட்டில் மலையில்
கண்படாதிருந்த
இரவுக் கொள்ளையர்
இதயம் வெளுத்துச்

சரணடைந்தார்களாம்
சபதம் செய்தார்களாம்

ம.பி. முதல்வர்

மகிழ்ச்சி அடைகிறார்.........

அதுசரி,

நாட்டில் தெருவில்

நடமாடு கின்ற

பாக்கி யுள்ள

பகற்கொள் ளையர்கள்

என்றைக்குச் சரண்

அடைய எண்ணமாம்!

ம.பி. முதல்வர்
மகிழ்ச்சி அடைகிறார்..
மக்கள் எப்போது
மகிழ்ச்சி அடைவதாம்?

காதல்

காதல் என்பது இந்த சமூகத்தில் உயர்ந்ததாகவும், மதிக்கத்தக்கதாகவும், போற்றத்தக்கதாகவும் கருதுகின்றனர். காதலுக்கு தரும் வரையறைகள் சொல்லில் அடக்கங்காதது. உண்ணும் உணவை, வாழும் உயிரைவிட, இருக்கும் இருப்பிடத்தைவிட, மதிக்கும் மனித மாண்பைவிட காதல் உயர்வான என்ற சிந்தனை தொடர்ந்து வளர்ந்து

கொண்டே இருக்கிறது. ஊடகங்களும் அவ்வாறு வளர்த்துக் கொண்டே உள்ளது. காதலுக்காகச் சாதலை மக்களிடம் தொடர்ந்து பரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். மக்களும் காதல் மாண்பை மதிப்பவர்கள் செயல்படுகிறார். காதல் என்பது உள்ளம் சம்பந்தப்பட்டது அவ்வளவுதான். சமூகத்திற்கும் உள்ளத்திற்குமான பிணைப்பு காதலில் அடங்கியிருந்தாலும் சமூகத்தில் இருக்கும் முரண்பாடுகளைக் காதலில் திணிக்கும் அவலங்களைச் செய்கிறார்கள். கத்தரிக்காய்க்கும் காதலுக்கும் உள்ள முரண்பாட்டுச் சிந்தனை சமூகத்தில் நிலவுவது இயல்புதான். கத்தரிக்காயை மலிவாய் எண்ணுவதும் காதலை உயர்வாய் எண்ணுவதும் சமூக அவலம் என்பதைக் காதலோ காதல் என்ற கவிதையில் சுட்டுகிறார்.

‘காதல் என்ன
கத்தரிக்காயா‘
என்ற தொடர்கதை
இரவில் எழுதிய
வாணி மணாளன்
பகலில்
வாரச் சந்தையில்
கிலோ விலை ரூபாய்
இரண்டெக் கேட்டதும்
அயர்ந்தார்: கண்களை
அகலத் திறந்தார்,……..

காய்கறிக் காரன்
கடுப்பில் கேட்டான்

அத்தனை மலிவாய்
அள்ளிக் கொள்ள
கத்தரிக்காய் என்ன
காதலா.....?

காதல் என்பது காலத்திற்கு ஏற்ப மாறக்கூடிய கருத்தியல் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். சாதி, மதம், மொழி, இனம், தேசம், பண்பாடு போன்ற அனைத்திற்கும் அப்பாற்பட்டு மனிதத்தன்மையோடு உருவாவதுதான் காதல் என்ற கருத்தியல் பழங்காலத்திலிருந்து இன்று வரை சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது அவ்வாறில்லை மேற்சொன்னை அனைத்தையும் பார்த்து வருவது தான் காதல் என்ற நிலைக்குக் கருத்தியல் மாற்றம் பெற்றுள்ளது. ஒரே ஊர், ஒரே சாதி, சொந்தக்காரர்கள் என்ற அனைத்தையும் தீர விசாரித்தப் பின்னேதான் காதல்கூட தோன்றுகிறது என்று குறிப்பிடுகிறார்.

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்-
வாசு தேவ நல்லூர்......

நீயும் நானும்
ஒரே மதம்.......
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பங் கூட........

உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்

சொந்தக் காரர்கள் –

மைத்துனன் மார்கள்

எனவே

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே

வறுமை

வயிற்றுப் பாட்டுக்குப் புகழ் பாடுதல் சமூகத்தில் அதிகரித்து விட்டது. புலமையும் வறுமையும் பிரிக்க முடியாதது. புலவர்கள் தங்கள் புலமைத்திறன் என்ற அடிப்படையில் புகழ்பாடுகின்றனர். யாரிடம் கெஞ்சிக் கேட்கும் எண்ணம் இல்லை என்றால் கவிதைத் திறத்தில் புகழ் பாடுதலில் வரும் வெகுமதிகள் அவர்களின் வாழ்க்கை பொருளாகிறது. எனினும் சங்கப் புலவர்களுக்குக் கிடைத்த மரியாதையும் வெகுமதியும் தற்காலப் புலவர்களுக்குக் கிடைப்பதில்லை. புலவர்களின் நிலையை எண்ணி எள்ளி நகைக்கும் மனிதர்களிடம் வாழுகிறார்கள். புலமையையும், வறுமையையும் மதிக்கும் சமூகமும், புரவலர்களும் இன்றில்லை என்பதை வயிற்றுப் பா(ட்)டு என்னும் கவிதையில் குறிப்பிடுகிறார்.

என்னை யாரோ

என்று நினைத்துப்

புலவன் ஒருவன்

புகழத் தொடங்கினான்

நீண்ட கண்கள்

கூரிய நாசி

அகன்ற நெற்றி
அழகிய பற்கள்
வயிரத் தோள்கள்
மலைபோல் பாம்பு

தொடர விடாமல்
இடையில் பாய்ந்தேன்

ஓகோ உனக்கு
ஒட்டிய வயிறு
போலும்….

போராட்டக் காரர்களை அதிகாரம் உடையவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. போராடுதல் அவர்கள் உரிமை. உரிமைகளைப் பெறுதல். ஆனால் போராட்டக்காரர்களின் அமைப்புகளைத் தடைசெய்து அவர்களை வன்முறையாளர்களாக சித்தரிப்பது இன்று நிகழ்கிறது. அதிகாரத்தில் உள்ளவர்கள் அவர்களுக்குத் தேவையான அடிப்படைகள் செய்துகொடுத்தால் ஏன் போராட்டங்கள் வெடிக்கின்றன? மாறாக போராட்டத்தினால் கிடைக்கும் புகழை மட்டும் எடுத்துக்கொள்ள முயலுகின்றனர். போராட்டத்தின்மூலம் ஒருவர் புகழ் அடைந்தால், போராடும் நோக்கத்தை விடுத்து பெறும் புகழை மட்டும் கருத்தில் ஏற்றிப் பொறாமைப் படுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஓ! ஓ! செல்வம்
உடைய பெரியீர்!
உங்களால் தாம்

பாரி ஆக

முடிய வில்லையே……

அதுகளேனும்

நக்சல்

பாரி ஆகிப்

போனால் என்ன?

புழுங்கி ஏன்நீர்

பொறாமைப் படுகிறீர்?

அரசாங்க அலுவலகம்

சிவப்பு நாடா? என்ற கயிறு அலுவலகக் கோப்புகளைக் கட்டிப் பாதுகாக்கும் கயிறாகும். ஆனால் அலுவலகக் கோப்புகள் தேங்கிக் கிடக்கும் நிலைக்குச் சிவப்பு நாடாக் கயிறு உள்ளது. ஆகவே, அதனைப் பகடி செய்கிறார் மீரா. சிவப்பு நாடா என்பது பலருக்கும் புரியாததாக உள்ளது. ஒவ்வொரு தேவைகளுக்கும் மக்கள் கொடுக்கும் மனுக்களை அலட்சியப்படுத்துகிறது. இலட்சியங்கள் சிவப்பு நாடாக்குள் பட்டுப் போகிறது. திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிப் போகின்றன. ஆகவே, சிவப்பு நாடா என்பது அதிகாரத்தின் முகம். மக்கள் பதைப்பதையும், எதிர்பார்த்திருப்பதையும் இளைக்கப்படுவதையும், திட்டங்கள் நிறைவேறாமல் தேங்கிக் கிடப்பதையும் அதாவது அதிகாரத்தினால் வெறும் அறிவிப்பாக மட்டும் கிடப்பில் கிடப்பதையும் சுட்டிக்காட்டுவது சிவப்பு நாடா ஆகும்.

கண்ணன் சொல்கிறான்

சிவப்பு நாடா எங்கும்......

சீராக்க வேண்டும்......

சீராக்க வேண்டும்......

ஊராட்சி ஒன்றியப்

படிக்கட்டி லிருந்து

தலைமைச் செயலக

உச்சி வரையில்

சிவப்பு நாடா எங்கும்.....

நிர்வாகத் தோட்டத்தில்

நிரூற்றத் தவறும்

அதிகார வர்க்கத்தின்

அலட்சியப் போக்கால்

நாங்கள்

நட்டு வைத்த

நல்ல இலட்சியம்

பட்டுப் போவதைப்

பார்க்கிறோம்... பதைக்கிறோம்...

திருநீல கண்டர்தம்

திருக்கை படாமல்

பலகைமேல் கொஞ்சமும்

கட்டு (க்) குலையாது

காட்சி யளிப்பதால்

நாங்கள்

தேனாய் நினைத்துத்

தீட்டிய திட்டம்

ஈனாதிருப்பதைப்

பார்க்கிறோம்….. இளைக்கிறோம்.

சிவப்பு நாடா எங்கும்

சீராக்க வேண்டும்….. டும்…. டும்…

மீரா கேட்கிறாள்

இது என்ன

சிவப்பு நாடா?

அவசரக்காரன் என்ற கவிதையில் அரசாங்கத்தின் அலட்சியம், மெதுவாக வேலைசெய்யும் திறனால் ஒருவன் இறந்தே போய்விட்டான் என்று அரசாங்க அலுவலகத்தை கிண்டல் செய்கிறார். மருந்துவமனையில் காசநோய் பிரிவில் வைத்தியம் பார்ப்பதற்கு மனுபோட்டு பின் அவர்கள் வரச் சொல்லும் போது செல்லவேண்டும் என்ற விதிமுறை இருந்துள்ளது. அவ்வாறு போட்ட மனுவிற்கு மூன்று வருடமாக பதில் வரவே இல்லை. மூன்று வருடத்திற்குப் பின்னால் பதில் வந்த போது அவன் இறந்துவிட்டான் என்று பகடி செய்கிறார்.

மூன்று வருடம் முன்னால்…

அருப்புக்கோட்டை

அழகர்சாமி

காசநோயின்

காரண மாக

இருமி இருமி

எலும்பாய் மாறி

ஆஸ்டின் பட்டி

அரசினர்

மருத்துவ மனைக்கு

மனுப்போட்டானாம் –

வந்து தங்கி

வைத்தியம் பார்க்க…

போன செவ்வாயோ

புதனோ

அவனுக்கு

அனுமதி வழங்கி

அஞ்சல் போனதாம்!

அதற்குள் என்ன அவசரம்?

போனமார் கழியிலோ

தையிலோ,

பொல்லாக்

காலன் போட்ட

கடிதம் கண்டதும்

போய்ச்சேர்ந் தானாம்

புத்தியில் லாமல்!

அழகர்சாமி

அவசரக் காரன்!

சினிமா மோகம்

பெருங்காயம்? என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் சமூக அவலத்தைச் சுட்டுகிறார். பெருங்காயம் என்பது குழம்பில் வாசனை கூட்டும் பொருள். நாட்டில் பெரும் காயம் படுதலில் வெவ்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் எது பயனுள்ளது. எது பயனற்றது என்பதான முகங்களைக் கிழித்துக் காட்டுகிறார் ஆசிரியர். பிற நாட்டினரிடம் வரும் பிரச்சனைகளால் நாட்டைக் காப்போருக்கும் பெரும் காயங்கள் ஏற்படுகின்றன. விபத்திற்கு உள்ளாகிறவர்களும் பெரும் காயங்களைச் சந்திக்கின்றனர். அதையெல்லாம் சினிமாவின் மீதும் சினிமாவில் வரும் பெண்கள் மீதும் மோகம் கொண்டு பித்தர்கள் கூட்டம் அலைமோதுவது அதிகம். அந்தக் கூட்டத்திலும் காயங்கள் ஏற்படுகின்றன. விபத்தினைவிட நாட்டைக் காப்பாற்றுவதைவிட இத்தகைய வீணாய்ப் போகும் கூட்டங்கள் நாட்டில் அதிகமாக உள்ளன என்பதைக் கவிதை சுட்டிக்காட்டுகின்றது.

சிந்தனைக் குரிய
செய்திகள் மூன்று:

மேக மலையில்
விமான விபத்து……
மூன்று பேர்க்கு

முதுகில் காயம்.
ஜெஸ்ஸுர் முனையில்
நடந்த சண்டையில்
முப்பது பேர்க்கு
முகத்தில் காயம்

சித்திரை வீதியில்
சினிமா நடிகை
ஸ்ரீஸ்ரீஸ்ரீயைத்
திக்கு முக்காடச்
செய்த கும்பலில்
சிக்கிய அறுபது பேர்க்கு
முதுகில் முகத்தில்
நெஞ்சில் காயம்!

சமூக ஏற்றத்தாழ்வுகள்

மரணம் என்பது அனைவரும் நிகழக் கூடியது. ஆனால் அது எப்படி இருக்கிறது என்பது மறைமுகமானது. ஏழ்மையின் பிடியில் சிக்கி ஒரு வேளை சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் இங்கே இறப்பவர்கள். இதே நாட்டில் அளவுக்கு மீறிய சாப்பாடுகளைச் சாப்பிட்டு வீணடித்து செல்வச் செழிப்பில் இருப்பவர்களும் இறக்கிறார்கள். இருவருக்கும் அகால மரணங்களும் நிகழுகின்றன. ஆனபோதும் அத்தகைய மரணத்திற்கான காரணங்களைப் பார்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. மரணத்திலும் ஏற்றத்தாழ்வுகள் நிகழும் நாடாக நம்நாடு உள்ளது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

இரண்டு பிணங்கள் எதிரேதிரே!

மருத்துவர் வந்தார்
அறுத்துப் பார்த்தார்
தற்கொலை என்றார்… சென்றார்
இரண்டு பிணங்கள் எதிரெதிரே!

நடைப்பிணமாக

நாளைக் கழித்து

நாடகம் முடிந்த தொன்று….

கடைப்பிண மாகக்

காசைப் பெருக்கிக்

கதையை முடித்த தொன்று…..

இரண்டு பிணங்கள் எதிரெதிரே!

மூட்டை தூக்கிப்

பிழைக்கவும் முடியாப்

பூச்சி,

மூட்டைப் பூச்சி மருந்தைக்

குடித்தான்… உடனே

குளிர்ந்து போனான்….. போனான்

வைர வியாபாரி

மன்னார்சாமி –

வாயில்

வைரக்கடுக்கனை நுணுக்கிப்

போட்டான்… உடனே

விறைத்துப் போனான்…..

போனான்……

ஓ……

செத்தாலும்

மேன்மக்கள் மேன்மக்களே!

கடவுள் பற்றிய கருத்தியல்

கடவுள் பற்றிய கருத்தியல்கள் மக்கள் மத்தியில் எப்போதும் தீராததாக இருக்கிறது. தற்போது அச் சிந்தனையை ஊட்டி மக்களிடம் வெறுப்புத்தன்மையை மிகுதியடையச் செய்வதற்கும் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்த்தப்படுகின்றன. இதனால் கடவுள் இருக்கிறார் இல்லை என்ற வாதம் ஒருபுறம் இருக்க. மதம் பற்றிய சிந்தனைகள் மிகுதியாகத் தலைக்கேறி மனிதனை மனிதனாகப் பார்க்கும் சிந்தனை மறைந்து போகிறது. மாறாக கடவுள் பற்றிய கருத்துகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறியாட்டங்களும் இச் சமூகத்தில் நிகழுகிறது. கடவுளைத் தேடி என்ற கவிதையில், கடவுள் இருக்கிறாரா என்ற விவாதத்தில் கொலைகளும் நடக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

“இருக்கிறார் கடவுள்
இல்லை கடவுள்?”
வாதம் பிறந்தது..
மோதல் வளர்ந்தது.

இப்போது
இல்லை ஒருவர் இங்கே
இருக்கிறார் ஒருவர்
தலைமறை வாக!

போத்தனூர்க் காவலர்
புலனாய் கிறார்!

முதலுக்கே மோசம் என்ற கவிதையில் யோகி ஒருவர் நாட்டையும் ஏமாற்றித் தன்னையும் அழித்துக் கொண்டதை எழுதுகிறார்.

யோகி ஒருவர்,
வெள்ளிக் கிழமை
விடியற் காலம்
தண்ணீரில்தான்
நடக்கப் போவதாய்
விளம்பரம் செய்தார்..

வேண்டிய மட்டும்
காணிக்கை அவர்
காலில் குவிந்தது.

பிறகு
குறித்த நாளில்
குறித்த நேரத்தில்
நீரில் யோகியார்
நிசமாய் விழுந்தார்
விழுந்தெழுந்து
எழுந்து விழுந்து…….
பிறகு தரையில் நடக்கவும்
முடியாது போனார்!

வன்முறை

சமூகத்தில் மாணவர்களை வன்முறைக்குத் தூண்டி அவர்களின் செயல்களால் இலாபம் அடையும் கும்பல் உள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய சமூகம் அவர்களை வன்முறை வெறியாட்டத்திற்குப் பயன்படுத்துகின்றனர். அதில் ஆதாயம் என்பது மாணவர்களுக்கு இல்லை. வன்முறையை வைத்து பிழைப்பு

நடத்தும் ஈனப்பிறவிகளுக்கு என்பதைப் பகடி செய்கிறார். நாங்கள் நினைத்தால் என்ற கவிதையில் போக்குவரத்தைக் கொழுத்துதல் என்ற வன்முறையைப் பதிவுசெய்கிறார். இதுபோல் போராட்டம் என்ற பெயரில் பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் வெறியாட்டங்கள் நாட்டின் அவலமாகும்.

நாங்கள் நினைத்தால்
நாலே நாளில்
பக்கத்தில் உள்ள

பட்டிகட் கெல்லாம்
போக்கு வரத்துப்
போய்வர நல்ல
பாதை போடுவோம்....

நாங்கள் நினைத்தால்
பாதையில் போய்வரும்
போக்குவரத்தைப்
பொசுக்கிப் போடுவோம்.....

நாங்கள் மாணவர்கள்!

இவ்வாறாக மீரா தம் கவிதைகளில் சமூகப் பிரச்சனைகள், மக்கள் பிரச்சனைகள், அரசியலில் நிகழும் தவறுகள், மக்கள் அதிகாரத்தின் மூலம் பிழியப்படும் தன்மைகள் போன்றனவற்றைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

அலகு – 3

கொடிமரத்தின் வேர்கள்

- **வைரமுத்து**

காலம் கவிஞனை உருவாக்குகிறது. ஆனால் ஒரு மகாகவிஞன் காலத்தை உருவாக்குகிறான். கவிதை மௌனத்தைப் பரிசாகக் கேட்கிறது. மௌனங்கள் பரிசுகள் ஆகாது. ஒரு நல்ல கவிதைக்கு பரிசுகள் மௌனம் தான். உணர்ச்சிகள் கவிதைகளை வடிவமைத்துக் கொள்கிறது. கற்பனைகளை உருவாக்குகிறது. உணர்ச்சிகளைக் கவிதைகளாகச் சேமிக்கப்படுகின்றன. கவிதைகள் கால்வாயாக இருக்கும்பட்சத்தில் அதன் கரைகளை நாம் தீர்மானிக்கலாம். அதே கவிதைகள் காட்டு வெள்ளமாய்ப் பிரவகிக்கிற போது தான் கரையை அதுவே தீர்மானித்துக் கொள்கிறது.

கவிதைக்கும் தேசத்திற்கும் உள்ள உறவுநிலை

கவிதை தேசத்தில் மண்டிக் கிடக்கும் வியாதிகளுக்கு மருந்துச் சீட்டுகள். மருந்துச் சீட்டு என்பது மருந்தல்ல. ஆயினும் நோயுற்றவன் மருந்துச் சீட்டைத் தின்றால் நோய் விலகாது. கவிதை என்பது நோயினை அடையாளப்படுத்துகிறது. நோயுற்றவனுக்கு உணவில் கலந்து கொடுக்கும் மருந்து. உணவும் தரும். மருந்தும் தரும். தரவில்லை என்றால் கவிதை ஆணையிடும். இத் தேசத்தில் ஆட்கள் இல்லை. ஆணைகள் அதிகம்.

தி.சு. நடராசன், கவிதையைப் பற்றி, கவிதை எப்போதும் நம்முடன் வாழ்கிறது. சமூக, அரசியல், பண்பாட்டு இலச்சினையாக, நம்முடைய அன்பு, காதல், ஏக்கம்,

எதிர்பார்ப்பு, ஆசை, சோகம், துக்கம், கோபம் ஆகியவற்றின் வெளிப்பாடாகக் கவிதை எப்போதும் நம்மோடு இருக்கிறது. மனிதன், எப்போதும் அழகைத் தேடிக் கொண்டிருக்கிறான். தன்னுடைய அறிவுக்கும் உணர்வுக்கும் ஒரு வடிவத்தை தேடிக் கொண்டிருக்கிறான்“ என்று குறிப்பிடுகிறது. கவிதை மொழியின் பிறப்பு. மொழியின் வழி கவிதை நம்மிடம் பேசிக் கொண்டிருக்கிறது. கவிதையை ஓர் வரையறைக்குள் அடங்குவதில்லை. வரையறைகளை மறுக்கிறது. ஆனால் வரையறைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. கவிதைதான், எல்லா இலக்கியங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது.

கவிதையின் உருவாக்கம்

மொழியின் கலை, ஆற்றல், தளம் போன்ற தன்மைகளில் கவிதை பிறக்கிறது. மானிட சமூகத்தின் உணர்வுக்கும் உயிர்ப்புக்கும் ஒரு வெளியையும் ஒரு காலத்தையும் சமைத்துத் தருவது கவிதையாகும். மனித உருவத்தை மீட்டு உருவாக்கம் செய்கிறது. தற்போதைய சூழலின் நெருக்கடிகளும், நெருக்கடிகளிலே அமிழ்ந்து போய்விடாத திமிறல்களும், உணர்வுகளும், எதிர்வினை கொள்கிற ஒரு சமூகத் தேவையைக் கவிதைகள் தருகின்றன. வைரமுத்து தம் கவிதைகளில் இத்தகைய ஆளுமைகளைக் கையாளுகிறார். கொடிமரத்தின் வேர்கள் கவிதைத் தொகுதியில் வரும் கவிதைகளை இருநிலைகளில் புரிந்துகொள்ள முடிகிறது. காதலின் நினைவுகள் என்பது ஒன்று. தேசத்தின் சிந்தனைகாக மற்றொன்று.

காதலின் ஞாபகங்கள்

மௌன பூகம்பம் தாடியையும், சோகத்தையும் சரிவிகிதத்தில் வளர்த்துக் கொண்டு வாழ்பவன் அவன், அவளின் ஞாபகங்கள் அவனுக்குச் சுவாசம். பன்னிரண்டு பாலைவன வருஷங்களுக்குப் பிறகு அவளை நள்ளிரவில் ஒரு ரயில் நிலையத்தில் அவன் பார்க்க நேருகிறது. எதிரெதிர் திசையில் செல்லும் ரயில்கள் இளைப்பாறிக் கொள்ளும் அந்த இடைவெளியில் – ரயில்களின் எதிரெதிர் பெட்டிகளில் பழைய நான்கு கண்கள் பார்த்துக் கொள்கின்றன. அப்போது ஏற்பட்டுள்ள மௌன பூகம்பத்தைக் கவிதை வரிகளில் காணமுடிகிறது.

கண்கள் வெறித்த நிலையில் பார்த்துள்ளன. இமைகள் காணாமல் போட்டுவிட்டன என்பது கண்கள் வெறித்ததைச் சொல்கிறார். என் கண்ணையே என்னை நம்பவில்லை. மனம் முழுவதும் திரவம் பீச்சியடிக்கிறது. இதயத்தின் ஆழத்தில் கிடந்த உன் முகம் மிதந்து மேலே வருகிறது. பல வருடங்கள் கழிந்த பின்பு மார்புகள் அதே பார்வையை மீண்டும் தடவிப் பார்க்கின்றன. அவள் புதியவள் கிடையாது. பழையவள். கனவுகளில் மேகமாய் அலைந்து திரிபவள்.

அவள் நினைவுகளில் பரண் போட்டு அமர்ந்திருந்தால் நான் எத்தனையாவது பரணில் இருக்கிறேன் என்று ஊகித்துப் பார்க்கிறான். அரும்பு மீசை முளைத்த போது முளைத்த காதல். அது முதிர்ச்சியடையும் போது காதலும் முதிர்ச்சியடைகிறது. தூக்க மாத்திரை போட்டுப் படுத்தாலும் உன் பெயர் நினைவுகளில் இருந்து நீங்கவில்லை.

ஆனால் நீ மாறியிருக்கிறாய். உன் புருவ அடர்த்தி கொஞ்சம் குறைந்திருக்கிறது. உன் சிவப்பு நிறம் வெளுத்திருக்கிறது. உன் இதழ்களில் மட்டும் அதே பழைய பழஞ்சிவப்பு நிறம் நிறைந்திருக்கிறது. காதலிக்கும் போதும் நாம் பேசவில்லை. இப்போதும் பேசப் போவதில்லை.

வார்த்தைகள் இருந்தபோது
பிரிந்து போனவர்கள்
ஊமையான பிறகு
சந்திக்கிறோமா

உன்நினைவுகள்
உன் கணவனைப் போலவே
உறங்கியிருக்கலாம்

ஆனால்
என் நினைவுகள்
உன்னைப் போலவே
விழித்திருக்கின்றன.

அவளுக்குக் கணவன் இருக்கிறான். அவன் உறங்கிக் கொண்டிருக்கிறான். குழந்தை மடியில் உறங்கிக் கொண்டிருக்கிறது. பழைய காதல் நினைவுகள் மட்டும் என்றும் உறங்குவதில்லை. இப்போதும் உறங்கவில்லை. ரயிலின் விசில் சத்தம் கேட்கிறது. நம்மில் ஒரு வண்டி நகரப் போகிறது. அது எந்த வண்டி என்று தெரியவில்லை. நான் செல்லும் வண்டியாக இருந்தால் போய் வருகிறேன். நீ செல்லும் வண்டியாக இருந்தால் போய் வா. விதியாவது சற்று நிற்கும். இரயில் கண்டிப்பாக நேரம் வந்தவுடன்

கிளம்பிவிடும். அப்போது ஒரே கேள்வி அவன் மனத்துள் நின்று கொண்டிருக்கிறது. “நீயும் என்னைக் காதலித்தாயா?” இந்த ஒற்றை காதலின் நிலைகளை விளக்குகிறது. ஒருதலைக் காதல் அல்லது சொல்லிக் கொள்ளாத காதல் அல்லது பார்வையால் மட்டும் நிறைந்த காதல் என்பன. காதல் மனித வாழ்வில் காலம் கடந்து நிற்கும் நினைவுகள். எப்போதும் நினைவில் நிறைந்திருக்கும். நேரில் கண்டவுடன் எண்ண அலைகள் ஓடுமே தவிர வார்த்தைகள் பரிமாறிக் கொள்ள மறுப்பதைக் கவிஞர் மௌன பூகம்பம் கவிதையில் விளக்குகிறார்.

துப்பாக்கி எப்போது பூப்பூப்பது? என்ற கவிதையில் ஓர் ஈழப் போராளிக்கு ஒரு காதலி எழுதிய கடிதமாக எழுதியுள்ளார். போர்க்களம் எப்போதும் கொடுமையானது. உயிர்களை வதைப்பது. அங்கே இருப்போர்கள் குடும்பங்களையோ, காதலையோ நினைப்பார்கள். ஆனால் அவர்களால் அந்த உணர்வுகளை வெளிப்படுத்தவோ, பரிமாறிக் கொள்ளவோ முடியாது. ஈழப் போர் என்பது உரிமைகளுக்கான போர். அதிகாரத்தில் நிகழும் போரைவிட, கொள்கைகளுக்காக நிகழும் போரைவிட உரிமைகளை நிலைநாட்டுவதற்காக நிகழ்த்தப்படும் போர் உன்னதம் நிறைந்தது. அக்களத்தில் இருக்கும் வீரனுக்கு அவன் காதலி எழுதியதாக ஒரு கடிதத்தைக் கவிதை ஆக்கியிருக்கிறார்.

அன்பில் நிறைந்தவனே, உன் தோழியைவிட துப்பாக்கியை நேசிக்கும் தோழனே. மெல்லிய இரவில் உன் நினைவுகளால் அழுது கொண்டிருக்கிறேன். என்னுடன் என் மெழுகுவர்த்தியும் அழுது கொண்டிருக்கின்றன. அக் கண்ணீர் கடிதத்தில் விழுகிறது.

அதில் வல்லின எழுத்துக்களும் மெல்லின எழுத்துக்களும் அழிகின்றன. கண்கள் அழுவது அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்திற்காகத்தான். நாங்கள் நட்சத்திரங்களைப் பார்த்து நாளாயிற்று. எங்கள் வானத்தைப் புகைமண்டலம் போர்த்தியிருக்கிறது. உலக உயிரினங்களில் மனிதன் மட்டும் தான் தன் உள்ளக் கிளர்ச்சியை சிரிப்பினால் வெளிப்படுத்துகிறான். அப்படி பார்க்கையில் இங்கு யாரும் மனிதர்கள் இல்லை. ஏனென்றால் நாங்கள் சிரிப்பதே இல்லை.

நீயும் நானும் ரகசியமாய் நடந்து போகும் ராத்திரிச் சாலை இப்போது – வெடிகுண்டுகள் விதைக்கும் விதைப் பண்ணையாகிவிட்டது. மரணத்திற்காக இங்கே யாரும் வருந்துவதில்லை. இது உயிர்கள் உதிரும் இலையுதிர் காலம். என் வாலிபத்தை வாசித்தவன் நீ தான். அங்கே என்னைப் எப்போதாவது நினைத்திருக்கிறாயா? துப்பாக்கிகளுடன் தோட்டாக்களுடனும் திரிகையில் பூக்களை நினைக்க வாய்ப்பில்லை. ஆனால் என் தலையணை அருகில் உலகக் காவியங்களும் உன் நினைவுகளும் தவிர வேறொன்றும் இல்லை. இப்போது திருமணம் முடிக்க விரும்பவில்லை.

பிள்ளைபெற்றுக் கொள்ளப்
பிரியப்படுகிறேன்
ஏனென்றால்,
ஈழ யுத்ததிற்கு
இன்னுமோர் போராளி தேவை

அடிமை ஈழத்தில்
தம்பதிகளாய் இருப்பதினும்
சுதந்திர ஈழத்தில

கல்லறைகளாய் இருப்போம்

ஈழம் சுதந்திரத்தை விரும்புகிறது. காதலைவிட உயர்ந்தது சுதந்திரம். காதலிப்பதற்குக் கூட சுதந்திரம் தேவை. அடிமைகள் சுதந்திரக் காற்றைப் பெறுவதற்கு இன்னுமோர் உயிரைக் கொடுப்பதற்குத் தயாரகிறாள். சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் பாடலில் வாழும் தலைவியைப் போல ஈழத்தில் வாழும் தலைவிகள் இருந்திருக்கிறார்கள் என்பதை நினைவூட்டுகிறது.

நான் தீக்குளிக்கிறேன் அவள் பூப்பறிக்கிறாள் காதலை அழமாகவும் அழகாகவும் சொல்லும் கவிதை. மனத்திற்குப் பிடித்தவளைப் பாராமல் மனசு சமுத்திரமாய் சத்தமிடுகிறது. அவளைப் பார்த்தால் சமுத்திரம் பனித்துளியாய் சுண்டிவிடுகிறது. நினைக்கும் போதெல்லாம் மனதில் காற்றழுத்தத் தாழ்வுமண்டலம் உருவாகிறது.

அவளின் கரங்கள் தொட முடியாத தூரத்தில் எண்ணங்களால் தொட முடிகிறது. தொட முடிந்த தூரத்தில் தொட முடியவில்லை என மனம் ஏங்குகிறது. அவள் காலடிச் சத்தத்தில் ஆண்மை அடிக்கடி உசுப்பப்படுகிறது. அவளின் புன்னகை மெழுகுவர்த்திகளை ஏற்றுக் கொள்கிறது. குரலில் எழும்புக்குள் தேன் சுரக்கிறது. ஏப்ரல் மாதத்தில் மழைக்காற்றாய் வீசுகிறாள். டிசம்பர் மாதங்களில் உஷ்ணமாய்த் தகிக்கிறாள். இதயத்தில் ஏவுகணை பிறக்கிறது. கடல், வானம், நிலா, நட்சத்திரம், நான் எல்லாம் இறந்துபடுவோம் என்று விஞ்ஞானிகள் இன்னும் அறிவிக்கவில்லை. அவளின் சுவாசத்தில் எனக்கான காற்று இருக்கிறது.

அவளுக்கு

என் கவிதையைப் போலவே

என்னையும் புரியவில்லை

ஒரு கைக்கிளை என்ற கவிதையில் ஒருதலைக் காதலைப் பற்றிப் பேசுகிறார். அவள் வெட்டிய வீசிய நகத்துண்டு வெண்ணிலாத் துண்டின் மூன்றாம் பிறை போல் உள்ளது. ஆனால், என்னை நகத்தில் இருக்கும் அழுக்காக நினைத்துவிட்டாய். உன் கண்கள் சொர்க்கத்தின் சாளரங்கள். அதில் என் கண்ணீரைத் திரையாக்கினாய். என்னை நிராகரிப்பதால் என் காதலில் பாதி நீர்த்துப் போகப் போவதில்லை.

இருவரும் சேர்ந்து

நான்

ஒருவனே அல்லவா

காதலிக்கிறேன்

இதயத்தில் கற்பூரம் ஏத்தி உன் மனம் எண்ணும் ஆலயத்திற்கு வருகிறேன். என்னை நாத்திகன் என்கிறாய். கசந்து கிடப்பதற்கு நான் ஒன்றும் எட்டிக்காய் அல்ல. என்னை விட்டு நீங்கிப் போகாதே. நிலவைக் குனிந்து பார்க்கும் உயரத்தில் நீ இருக்கிறாய். என் நிழலும் குனிந்து பார்க்கும் உயரத்தில் நான் இருக்கிறேன். என் பெருமூச்சுக்கள் உன் செவிப்பறைகளில் கேட்கவில்லை.

என்னிடம் எப்போதும் காட்டுகிற உன் மௌனம். நீ நடந்து வரும் ஓசையில் தணிகிறது என் காதல் தாகம். உன் நினைவுகள் என் இரத்தத்தில் கலந்திருக்கின்றன. போகிறேன்.

ஆசையோடு சாகின்றேன். உன் சிதைக்கு என் விலா எழும்புகள் விறகுகளாகும் மாறும் என்ற நம்பிக்கையில் சாகின்றேன் என்று ஒரு தலைக்காதலால் உயிரை விடும் மனிதர்களின் உன்னதங்களைத் தம் கவிதையில் வடித்துக் தருகிறார்.

நம் பாரத தேசம்

தாமதம் என்ற கவிதையில் தாமதத்திற்கான சூழலை விளக்குவதற்கு ஒரு எண்பது பக்கம் உள்ள நோட்டுத் தேவை. அப்போது தாமதத்திற்கான காரணத்தை எழுத முடியும். பேருந்தின் கூட்ட நெரிசலில் தொங்கிக் கொண்டு வந்ததால் வலக்கைக்கு வலுவில்லை. அதனால் நான் சொல்கிறேன் எழுதிக் கொள்ளும். என்னால் எழுத முடியாது.

கூந்தல் முடிந்து குளிக்கப் போனால் தண்ணீர் தாமதமாக வருகிறது. தண்ணீரோடு சம்பந்தப்பட்டதால் பாலும் தாமதம். எங்கள் வீட்டில் சிலிண்டர் இல்லாமல் போனதால் சமையல் தாமதம். பொருளாதாரம் இன்றி வரதட்சனை கொடுக்கமுடியாமல் அதற்குரிய பணம் சேர்த்து வைப்பதற்குள் முதிர் கன்னியாகிப் போனேன். பின் பணம் சேர்த்து திருமணம் முடிக்க தாமதம் ஆகிவிட்டது. இளமை பருவத்தில் குழந்தை பெற்றுக் கொள்ள இயலாது. முதிர்ந்த வயதில் குழந்தை பெற்றதனால் என் மார்பில் பால் சுரப்பதில்லை. ஆதலால் என் மகனுக்கு பாலூட்ட முடியவில்லை. அதுவும் சுரந்து வரத் தாமதம்.

அவசரத்தில் துணிகளைக் கூட உருப்படியாய் மாற்றாமல் வந்தால் பேருந்து தாமதமாக வருகிறது. பேருந்து கூட்ட நெரிசலில் என் கால்களை பல கால்களை மிதித்தனர். அதில் சேமித்து வைத்து வாங்கிய செருப்பு அறுந்துவிட்டது. அதைத் தைப்பதற்குத் தாமதம். இத் தாமதங்கள் எதுவும் என் தவறு கிடையாது. அது இந்தியாவின் தாமதம். இந்திய நாடு

அவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், மக்கள் தொகை நெருக்கடிகளிலும், அடிப்படை வசதிகள் இல்லா வாழ்க்கையில் அன்றாடம் காய்ச்சிகளை உருவாக்குவதில் சுதந்திர இந்தியா முன்னேறி வருகிறது.

இந்தியாவுக்குச்

சுதந்திரம் தாமதம்

இந்தியாவுக்குச்
சுபிட்சம் தாமதம்

போன நூற்றாண்டே
இன்னும் தாமதம்

சமுதாயத்தில் ஏற்படும் தாமதங்களைச் சொல்வதற்கு எண்பது பக்கங்கள் போதாது அடுத்து நோட்டு வருவதும் தாமதம் தான். தாமதம் என்றொரு வார்த்தையில் மனித நெருக்கடி, வாழ்க்கை, சமூகம், இந்தியா நாட்டை தோலுரித்துக் காட்டுகிறார்.

செவ்விந்தியா ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட போது இந்தியாவெங்கும் கலவரங்களும், பசியும், பஞ்சமும் நிறைந்திருந்த சூழலில் கவிஞர் எழுதிய கவிதை. இமயத்தின் ஈரக்காற்று குமரிக்கு குளிடூட்டும் தேசம் எம் இந்தியா. வெள்ளைப் புறாக்களின் மாடம்.

ஆனால்
இன்றைய நினைத்தால்

இதயம் வலிக்கிறது.

உலக வரைபடத்தில் நேற்று இந்தியா நெற்றிப் பொட்டு வைத்தாற்போன்று அழகாக இருந்தது. ஆனால் இன்றோ ரத்தம் சொட்டும் இந்தியாவாக உள்ளது. அந்நியர்களாகிய ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் போன்றோரால் தைக்கப்பட்ட அழகான தேசம் இன்று இந்தியர்களால் கிழிபடுகிறது. கூறுகூறாகச் சிதைக்கப்படுகிறது. காஷ்மீரில் மலர்கள் மலர்வதற்குப் பதில் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் மலர்கின்றன.

செழித்து வளம் பெறும் பஞ்சாபில் விவசாயமே நின்று விட்டது. அதனால் இந்தியா முழுவதும் உயிர்களை அனைத்தும் உணவின்றி தடுமாறுகின்றன. செத்து மடிகின்றன.

நாகலாந்து காடுகளில் அழிக்கப்படுகின்றன. காய்ந்து சருகுகளாகின்றன. மான்கள் துள்ளிவிளையாடும் தமிழகமோ, மனிதர்களின் மரணங்கள் துள்ளி விளையாடுகின்றன. தேசிய கீதம் கூட அரசியல்வாதிகளின் பதவிப் பிரமாணம் போல் அர்த்தம் இழந்து நிற்கிறது. கட்சிகளும் குழுக் கூட்டங்களும் பெருகி விட்டன.

கொடிமரம் எல்லாம்

கழுமரம் ஆவதும்

கட்சிக் கொடிகள்

சவத்துணி ஆவதும்

ஜனநாயகத்தின்

சகுனங்கள் அல்லவே

அரசியல்வாதிகள் தங்கள் ஆதாயத்திற்காக பேதங்களை உருவாக்குகின்றனர். ஜீவ ஆதாரத்தை மாற்றுகின்றனர். சிதைக்கின்றனர். அழிக்கின்றனர். விரல்கள் பிரிவது என்பது வேலை செய்வதற்காகத் தானே தவிர சண்டையிடுவதற்கு அல்ல. இருளைப் பார்ப்பதற்கு விளக்குத் தேவையில்லை. வெளிச்சத்தைப் பார்ப்பதற்காகவே விளக்குகள் தேவை. அன்பு நிறைந்த இந்தியா தேவைப்படுகிறது.

விடிவெள்ளி
விழுந்து விட்டால்
கிழக்கு மிச்சமிருக்கு

வற்றிப்போன நதிகளில்
ரத்தம் ஓட வேண்டாம்
காதலர் பூங்காவில்
பிணம் எரிக்க வேண்டாம்

விடியலுக்காகக் காத்திருக்கும் மக்களே சற்றுக் காத்திருங்கள். செவ்வானம் திரண்டு பகல் பொழுதைப் பிரகாசிக்க சூரியன் உதித்து வரும் காலம் வெகுதொலைவில் இல்லை. நதிகளில் ரத்தமும் பிணமும் கலக்க வேண்டும். சாதி, மத பிரிவுகளும் அரசியல் கட்சிகளின் சூழ்ச்சியாலும் சிதைந்து வெட்டுண்டு கொலையுண்டு சாக வேண்டாம். அன்பு என்னும் பூங்கா மலரட்டும். சமத்துவம் பெருகட்டும். நாம் நம்பிக்கையுடன் இருப்போம். இமயம் இன்னும் இடிந்து விடவில்லை. அது ஓங்கி உயர்ந்து தான் உள்ளது. குமரி

குறுகிவிடவில்லை. அது எப்போதும் பரந்து விரிந்து கிடக்கிறது. நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

அமுதத்தில் விஷம் நகரங்களில் காற்று நச்சு கலந்த காற்று வீசிச் செல்கிறது. இரு சக்கர வாகனங்களும், கார்களும், மோட்டார் வாகனங்களும், தொழிற்சாலைகளும் நிறைந்து எங்கும் கரிமூட்டமும், நச்சுப்புகை மூட்டமும் நிறைந்திருக்கிறது. அங்கே சுவாசிக்க ஏங்கும் மனிதனின் தவிப்பையும், நெருக்கடிகளில் சுவாசிக்க முடியாமல் சிக்கித் திணரும் மனிதர்களையும் அடையாளப்படுத்துகிறார். அவசரமாய் சுவாசிக்க வேண்டும் ஊருக்கு வெளியே போங்கள்.

இமைகளை இதமாய் மூடிப்
புருவமத்தி குறுகுறுக்க
நுரையீரல் விரிய விரிய
ஆழமாய்
அவசரமாய்
சுதந்திமாய்ச்
சுவாசிக்க வேண்டும்
ஊருக்கு வெளியே போ

இந்த நகரத்து காற்றில் புத்துணர்ச்சி இருக்கிறது என்ற நம்பிக்கை இல்லை. காற்றின் நிறம் கறுப்பு இல்லை. ஆனால் இங்கு அனைத்து காற்றுகளும் கறுப்பாக உள்ளது. இதில் உயிர் வாழ்வதற்குத் தேவையான காற்றினைப் பிரித்தெடுக்கும் சக்தி நாசிக்கு இல்லை. நம்மைச் சுற்றியுள்ளதும், நாம் சுவாசிப்பதும் காற்றுகளே இல்லை. பெட்ரோல் டீசல் தான் காற்றுகளாக மாறி உள்ளன. இதைச் சுவாசிப்பதற்கு எந்திரம் போன்ற மூக்கு வேண்டும்.

எந்திரங்கள் தான் பெட்ரோல், டீசலைச் சுவாசிக்கும். தொழில் யுகத்தில் காற்றினை மரணப்படுக்கையில் தள்ளி விட்டனர். புகைப்பிடித்தீர்கள் காற்று ரணமாக மாறியது. எந்திரங்களில் புகையைச் செலுத்துனீர்கள் காற்று இறுகியது. குப்பைகளை வானளவு கொட்டுவதால் காற்று கெட்டி படுகிறது. இந்தக் காற்றைச் சுவாசிக்க இரும்பு நுரையீரல் தான் வேண்டும். தசைகளால் ஆன நுரையீரல் தேவையில்லை. உணவு மாறினால் இரப்பையைப் பட்டினி போட முடியும். தண்ணீரில் கிருமிகள் இருந்தால் தாகத்தைத் தள்ளி வைக்க முடியும்.

காற்று திரிந்தால்

சுவாசப் பையும்

பட்டினி கிடக்குமா?

அணுஉலைகளும், ஆலைகளும், தொழிற்சாலைகளும் கலந்தால் மனிதன் அடுத்த நூற்றாண்டில் உயிருடன் இருப்பான் எனச் சொல்ல முடியாது. பற்று அறுத்த துறவியர்க்கும் புற்றுநோய் வருகிறது.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை” (குறள்.55)

என வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, பத்தினிப் பெண்கள் சொன்னாலே பருவமழை பொழிந்த நாடு இது. இன்று மேகத்தில் இருக்கும் காற்றுகள் செத்து விட்டன. காற்றே உயிரைக் குடிக்க ஆரம்பித்தால் தொட்டிலும் கல்லறையாக மாறும் என எச்சரிக்கிறார்.

வெள்ளம் வடிந்த பிறகு என்னும் கவிதை, ஒரு நூற்றாண்டு விழா இரைச்சலோடு முடிந்த பிறகு, மகாகவியின் சிலையருகே மௌனத்துடன் நிற்கையில் எழுதப்பட்ட உணர்ச்சி வெள்ளம்.

கடைசியில்.....

நாங்கள் ஜெயித்தோம்

பாரதி உன் பொம்மைகளைப் புதுப்பித்தோம். மலர்களால் மரியாதை செய்தோம். மாலைகளால் மூடிவிட்டோம். ஒரு வருடமாக நாட்டில் எதுவும் நகரவில்லை. அப்படியே முடங்கிக்கிடந்தன. பாரதிக்கும், திரு.வி.க. வுக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக மக்கள் மாறிப் போயினர். அவர்களின் கொள்கைகளை மாற்றிப் புரிந்துகொள்கின்றனர்.

பாரதியைப் பற்றி, பிற அரசியல் தலைவர்களைப் பேசும் பேச்சாளர்கள் வீட்டுக்குள் முடங்கினர். ஓவியர்கள் தங்கள் தூரிகைகளைப் பயன்படுத்தவில்லை. உன் கவிதைகள் குறுகி வடிவப் புத்தகமாக வெளிவரக் கூடும். உன்னைப் பற்றிய புத்தகங்கள் வரக் கூடும். உன்னை நினைத்ததில் களைத்துவிட்டோம். மகாகவிக்கு இப்படியொரு சத்தத்தோடு எடுக்கும் விழாக்களுக்கு மகாகவியே சம்மதிக்க மாட்டான். யாரும் அவர்களுக்காக சேமித்து வைக்கவில்லை.

அவன் படத்திற்கு இடும் சந்தனப் பொட்டுக்கும், அவனுக்கும் எந்த சம்மந்தமுமில்லை. குறிக்கோளுக்காக எழுதிய கவிஞன் என்ற சிந்தனை மறக்கடிக்கப்படுகிறது. வியாபாரிகள் அவன் படங்களை, சின்னங்களை, அடையாளங்களை விற்கின்றனர். அவன் கண்ட தேசியம் தேசத்தைப் பார்த்து நிற்கிறது.

அடிமை இந்தியா
தேசியம் கேட்டது
சுதந்திர இந்தியா
தேர்தல் கேட்டது

ஆகஸ்டு பதினைந்து சுதந்திரத்தின் பிறந்தநாள். ஆனால், தேசியம் நினைக்கப்படுவதில்லை. காவிரியும் கங்கையும் இணையப் போவதில்லை. இணைப்பது போல் பேசிக் கொள்கின்றனர். சிதறிக் கிடந்த தேசத்தை வெள்ளையர்கள் தைத்து முழுவதுமாக ஒப்படைத்தனர். ஓட்டுக்காக இந்த தேசம் ஒவ்வொரு துணியாக பிரித்துத் தொங்கவிடப் படுகிறது. மகாகவியின் கொள்கைகள் விழாக்களில் பேசப்படுகின்றன. கீழிறங்கியதும் மறுக்கப்படுகின்றன. இதுதான் இன்றைய இந்திய தேசமாக இருக்கிறது. தேசியத்தை மறந்ததாக இருக்கிறது.

கொடிமரத்தின் வேர்கள் காந்தியைக் கொண்டாடினார்கள். முத்திரை குத்தினார்கள். ஞாபகச் சித்திரங்கள் எழுதினார்கள் எங்கள் கிராமத்தில் வாழ்ந்த இரண்டு தியாகிகள். அவர்கள் நெற்றியில் இருந்த லத்தித் தழும்புகள் ரௌலட் சட்டத்தின் ஞாபகங்களை நினைவுபடுத்தியது. விரல்களில் ஒன்று விழுந்தும் விட்டது. உடம்பு உருகித் தேய்ந்து விட்டது. அவர்கள் கதர் ஆடையை அணிந்திருந்தனர். தலைமுடிகள் நறைத்திருந்தன. அவர்கள் உடம்பு வற்றிப் போயிருந்தது. வெள்ளிக்கிழமைகளில் மௌன விரதம் இருந்தனர். வந்தே மாதரம் என்ற தாரக மந்திரத்தை அடிக்கடி உச்சரித்தனர்.

அவர்கள் பத்திரிக்கை பார்ப்பதில்லை. வானொலி கேட்பதில்லை. அரசியல் பேசவும் ஆசைப்படவில்லை. அவர்கள் இறைத்த ரத்தம் தான் இன்றைய பத்திரிக்கைகளில்

சுதந்திரமாய் திரிகிறது. காந்தி சொன்ன குரங்குப் பொம்மை கவனத்தில் இருக்கிறது. நாட்டிற்காக ரத்தம் சிந்திய பாவத்திற்குப் பரிகாரமாய் ஒரேயொரு சமயம் கண்கள் அழுததுண்டு.

ஒருநாள் மந்திரி வரும் தேதியில் தியாகி இறந்து போனார். சாலைகளில் நூதனமான நுழைவுகளும் வரவேற்புப் பதாகைகளும் இருந்துன. பிரதான வீதியில் பிணம் வரக் கூடாது என்று சட்டம் போட்டனர். கட்சித் தொண்டர்கள் கட்டளை இட்டனர். வந்திருந்த போலீஸ் வழிமொழிந்தனர்

ஒரு தியாகியின் பிணம்
சுடுகாடு வருவதற்குச்
சுதந்திரம் கேட்டது
கிடைத்தா என்ன?

கிடைக்கவில்லை என்பது தான் உண்மை. தியாகிகளுக்குச் சமூகத்தில் எப்போதும் மரியாதை இருப்பதில்லை என்பதை இக் கவிதை உணர்த்துகிறது.

அந்த ஜெர்மானியத் தாடிக் காரன் கவிஞர் இங்கிலாந்து சென்ற போது லண்டனில் உள்ள காரல்மார்க்சின் கல்லறையை மலர்ச்செண்டு கொண்டு வணங்கினார். அப்போது எழுதப்பட்ட கவிதை. காரல்மார்க்ஸ் மிகப்பெரும் தத்துவவாதி.

அவன்
மானுடத்தின் வக்கீல்

அவன் உயிருடன் இருக்கும் போது அவன் பெயரை எழுதக் கூட மொழி மறுக்கப்பட்டது. இன்று ஒவ்வொரு காலைப் பொழுதும் அவனின் பெயர் உச்சரிக்கப்படுகிறது. அவன் உயிருடன் இருக்கும்போது அனைவரும் சட்டைசெய்யவில்லை. இன்று அவனது கல்லறையில் இருக்கும் புற்கள் கூட வணங்கப்படுகின்றன. மக்களை அறிவால் பிரமிக்க வைத்தவன். உலகின் இருட்டை எல்லாம் அறிவுக் கண்களின் வெளிச்சத்தில் மாற்றியவன். மனித குலத்தின் இறந்த காலத்தை ஜெயித்து முடித்த சிந்தனையாளன். கடவுள் நம்பிக்கையை வேரறுத்த மகான் அவன். மக்கள் கடவுள் சிந்தனைகளால் கட்டுண்ட போது அவன் பொதுவுடைமைச் சிந்தனைகளால் கட்டவிழ்த்தவன்.

காரல் மார்க்ஸ் இத்தகைய சிந்தனையை எழுதவில்லை எனில் இவ்வுலகத்தின் சரித்திரம் தற்கொலை செய்திருக்கும். பழைய சித்தாத்தங்கள் முதலாளித்துவத்திடம் அடிமைப்பட்டுக் கிடந்தன. முதலாளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப நடந்துகொண்டனர். அடிமைகள் அவர்களின் அதிகாரத்திற்கு உழைத்துக் கொடுத்தனர். அடுத்து வந்த தலைமுறையினர் பொதுவுடைமையோடு சிந்திப்பதற்கு ஏதுவாக அமைந்தது அவன் சொன்ன பொதுவுடைமை சிந்தனைகள்.

ரொட்டியை இறைவன்
தயாரிக்கிறான்
அதில்
புசிப்பவன்
பெயரையும்
பொறிக்கிறான் என்றன

இலக்கியமும் கலையும் இந்த முதலாளித்துவச் சமூகத்தோடும், ஏற்றத்தாழ்வு மிக்க சமூகத்தோடும் ஒத்துப் போகத்தான் கற்றுக் கொடுத்தன. நீதிநூல்களின் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது. மதங்களும், அதன் சிந்தனையில் எழுந்த தத்துவங்களும் மனிதனைப் பிறவிக் குருடன் போல வழிநடத்தியது. இத்தகைய சூழலில் எழுதப்பட்டது தான் மூலதனம். இச்சிந்தனை மனித குலத்தை, முதலாளித்துவத்தை, கடவுளால் கட்டுண்ட கொள்கைகளைச் சம்மட்டியால அடித்தன.

எழுந்திரு மனிதனே
உனக்கு
முன்னும் பின்னும்
இன்னொரு பிறவி
என்பதே இல்லை

நீ என்பதொன்றே
நிஜம்

என்ற உண்மையைப் பறைசாற்றினார். கடவுளின் சொல்லப்படும் சொர்க்கம் உள்ளிட்ட கதைகளை நிறுத்திவிட்டு உழைப்பவன் உழைப்பைச் சுரண்டுபவன் என்ற மேல், கீழ் விகிதத்தைச் சுட்டிக்காட்டுவது போல வர்க்கச் சிந்தனையை வளர்க்க வேண்டும். வியர்வைக்கு விலை பரலோகத்தில், மேலுலகத்தில் இல்லை. இவ்வுலகத்தில் தான் உள்ளது என்ற சிந்தனை உலகத்தை உலுக்கியது. பழைய முதலாளித்துவ, கடவுள் சிந்தனைகள் விஷத்தினை விதைத்தது. வேர்களாகப் பாய்ச்சியது. அச்சிந்தனை தவறு

என்பதைச் சுட்டிக்காட்டியது. அவன் வாழும் காலத்தில் வறுமையில் வசித்திருக்கிறான். இரைப்பையைப் பசிக்கு விற்றுவிட்டு அறிவுக்குச் சாப்பாடு போட்டவன் கார்ல் மார்க்ஸ்.

ஜென்னியின் புதல்வனான அவன் காலணிகள் இன்றி தன் அறிவுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருக்கிறான். தன் சுய வறுமையால் உலகத்து வறுமையை அழித்தவன். ஒரு நாட்டின் வெளிச்சத்திற்கு மின்சாரம் எந்த அளவிற்கு அவசியமோ, அதுபோல மனித வாழ்வு ஒளிபெறுவதற்குக் கார்ல் மார்க்ஸின் சிந்தனைகள் அவசியமாகிறது.

இனி எந்த தேசமும்
மின்சாரத்தையும்
மார்க்ஸையும்
ஒதுக்கிவிட்டு
உயிர்வாழ முடியாது

ரத்த சாசனம் இலங்கை மக்கள் துயரத்தினை முன்னிறுத்தி எழுதிய கவிதை. தமிழர்கள் உயிரைத் தின்கின்ற சிங்கள வெறியர்களின் கொடூர முகத்தைச் சுட்டிக்காட்டிய கவிதை.

தேசியக் கொடியே
பாதிக் கம்பத்தில்
பற

தேசியக் கீதமே
முகாரி ராகத்தில்
அழு

காலண்டரில்
இந்த ஆகஸ்ட் பதினைந்தை

அச்சடித்த சிவப்பில்
எனக்கு
இலங்கைத் தமிழனின்
ரத்த நெடி அடிக்கிறது

இலங்கை நான்கு புறமும் கடலாலும் சூழப்பட்ட ஒர் அழகிய தீவு. தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டுடன் செழித்து வளரும் தீவு. அங்கே சிங்களரும் வசிக்கின்றனர். சிங்களர்கள் தமிழர்களின் இனவெறி தாக்குதலில் மடிந்த தமிழர்கள் வாழ்வு என்பது ரத்த சாசனம். தமிழீழம் என்பது தமிழர்களின் ஒற்றைக் கோரிக்கை. இதனால் அழகிய தீவு. நெருப்பு சூழப்பட்டதாகியது. கடலும் கடலுக்கு வந்த வாய்க்காலும் ரத்தங்களால் நிறைந்து சிவப்பேறின.

தமிழர்களைத் தின்று… தின்று…..
நெருப்புக்கு அஜீரணமாம்

தாயின் மார்பகங்கள் அறுக்கப்பட்டன. தந்தையின் மண்டையோடுகள் சிதைக்கப்பட்டன. குழந்தைகள் அநாதைகளாய் விடப்பட்டன. பெண்களின் கற்பையும், கருப்பையையும் துப்பாக்கிகள் தொட்டுப் பார்க்கின்றன. குட்டி மணி என்னும் கொள்கை புலியின் கண்கள் சிறைக்குள் பிடுக்கப்பட்டன. சிங்கள நரிகளின் பூட்ஸ் கால்கள் மிதித்தன. பூமிக்கே கண்தானம் செய்தவன் குட்டிமணி.

சிந்திய குருதியின்
ஒவ்வொரு துளியும்

ஈழத்தைத் தமிழருக்கு

எழுதி வைக்கும் சாசனம்

இந்திய தேச படத்தில் இலங்கையையும் சேர்த்து எழுதி வைத்த அவன் தீர்க்கதரிசியாக மக்கள் மனங்களில் வாழ்கிறான்.

ஒரு தர்மதேவனின் மரணம் என்ற கவிதையில் மரணம் அனைவருக்குமானது. ஆனால் அனைத்து மரணங்களும் ஒன்றல்ல. மனிதன் வாழ்ந்த வாழ்விற்கு ஏற்ப மரணங்கள் பிற மனிதர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. புகழின் உச்சிக்குச் சென்ற மனிதனின் மரணமும், சாதாரண மனிதனின் மரணமும் இந்த உலகம் ஒரே நிலையில் வைத்துப் பார்ப்பதில்லை. சாதாரண மனிதனின் மரணம் அவன் வாழும் குடும்பத்தினருக்கும் மட்டும் இழப்பாக இருக்கும். ஆனால் புகழின் உச்சியில் உள்ள மனிதனின் மரணம். அவன் வாழ்ந்த உலகத்தின் பேரிழப்பாகும்.

மரணத்திற்குக் காது கேளாது. கண் தெரியாது. ஒருவனின் மரணம் பலரது இதயங்களைக் காயப்படுத்தும். கண்களில் ஈரம் இன்னும் காயவே இல்லை. இலக்கியவாதியின் இலக்கியப் பயணம் அவன் மரணத்தில் எடுத்துக்காட்டப்படும்.

டி.கே.சி. இறந்தபோது
கம்பன்
ஒரு கண்ணால் அழுதான்
துடைக்க நீயிருந்தாய் என்னும்
துணிச்சலோடு

நீ இறந்தபோது

அவன்

இரு கண்ணால் அழுதான்

துடைக்க ஆளில்லையே

என்னும்

துயரத்தோடு

இலக்கியங்களை மொழிபெயர்த்தவன். நடுநிலை தவறாத நீதிபதி. சட்டத்தை மொழிபெயர்த்தவன். இந்த நாட்டின் நீதிபதியும் நீயாவாய். உனது பேச்சு கம்பனை விழிக்க வைத்தது. உனது எழுத்து தமிழ்த்தாயையும் வாசிக்கச் செய்தது என்று மரணங்களின் இரங்கலைப் புலப்படுத்துகிறார்.

கொட்டு முரசே என்ற கவிதையில் இந்த தேசத்தின் அடையாளங்களைப் பறைசாற்றுகிறார். இந்திய தேசத்தில் எப்போதும் முரசங்கள் கொட்டிக் கொண்டே உள்ளன. இதுவரை முழங்கிய முரசங்களுக்கு எந்த முடிவும் எட்டப்படவில்லை.

வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று முரசம் அறைத்தார். அதில் வார் அறுந்து போனது. வள்ளலார் பசி என்னும் பிணியை அடக்க அணையா அடுப்பை வடலூரில் பற்ற வைத்தார். சுதந்திரம், சமத்துவம் என்னும் முரசங்களை பாரதி முழங்கினான். சமத்துவம் இன்னும் உருவாகவே இல்லை. பறை கிழிந்தது. காந்தி அறிவித்த முரசங்கள் காணவே இல்லை.

எங்கள்

முன்னோர் கொட்டிய

முரசங்களெல்லாம்

இன்று –

கையில்லாதவர்களின் மடிகளில்

முன்னோர்கள் உருவாக்கி வைத்த தேசம் இன்று ஊழல்வாதிகளிடம், கொள்ளைக்காரர்களிடம் கையில் கிடைத்திருக்கிறது. இன்று எப்படிப்பட்ட முரசங்கள் கொட்டினாலும் காது கொடுத்துக் கேட்பதற்கு யாரும் இல்லை.

முரசுக்குப் போர்த்த

தோல்களை விடவும்

நம்

செவிப்பறையின் சவ்வுகள்

சிறிது தடித்தவை

கணவர் இருக்கும் போதே விதவையான பெண்கள் அதிகம் பேர் உள்ளனர். ஒன்றிருக்கும் இருக்கும்போது இல்லாத நிலை உருவாகிறது. நீதியைக் கேட்க ஆளில்லாததற்குக் காரணம் நீதியைப் போதிக்க நிறைய பேர் உள்ளனர். தற்போதுள்ள போதனைகள் அனைத்தும் ஏழை எழுத்தாளனின் கிழிந்த சட்டையைப் போல் தொங்குகின்றன. இப்போது சமூகம் சாராயத்தில் உயிர் வளர்க்கின்றனர். அதனால் நாட்டுடமை, தேசியம், சமத்துவம், முன்னேற்றம், கல்வி, பொதுவுடைமை இத்தகைய முரசு சத்தங்களைக் காது கொடுத்துக் கேட்பதில்லை.

தற்போதுள்ள மனிதர்கள் சாதி, மதத்தை விரும்புகின்றனர். அதற்காகச் சண்டையிடுகின்றனர். அரசியல் கூட்டங்களில் பேசப்படும் வசைச் சொற்களுக்குச்

செவிமடுத்துக் கலவரம் செய்கின்றனர். இத்தகைய முரசங்கள் நாட்டின் சாபக்கேடுகள். மனிதனின் புரையோடிப் போன சிந்தனைக்கு முடிவுகட்டாமல் சமூகத் திருத்தம் என்பது சாத்தியப்படாது. மிகப்பெரும் மனிதப் பிரளயம் வந்து இந்த மனித மனங்களை மாற்றும் வரை வள்ளுவர், பாரதி, வள்ளலார் போன்ற பெரும் அறிவுஜீவிகளின் முரசங்கள் இந்த மனிதர்களின் காதுகளில் கேட்கப்போவதில்லை என்று குறிப்பிடுகிறார்.

யோசிக்கிறேன்

என் மௌன மயானத்தில்

வார்த்தைகளின் தகனங்கள்

பறவையின் பாதை

- அப்துல் ரகுமான்

வானம்பாடி இயக்கக் கவிஞர். தம் கவிதைகளை மிகுதியான உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின்வழி வெளிப்படுத்துகிறார். இக்கவிதைகள் தமிழில் முதல் சூஃபிப் கவிதைகள் என்று சொல்லப்படுகிறது.

படிமம் விளக்கம்

Image என்ற ஆங்கிலச்சொல் தமிழல் படிமம் என்றாகிறது. இதன் அடிச்சொல் Imithra (இமித்திரா), Imico (இமிக்கோ) ஆகிய இலத்தீன் சொல்லிருந்து பிறந்தாகும். இதற்குப் போலிமை என்பது பொருளாகும். போலிமை, பதிலீடு, மறுபடைப்பு, வடிவஉரு, சிலை, ஓவியம் ஆகியவை படிமத்திற்குக் குறிப்பிடப்படுகிறது. படி – படிமம் படி – கற்படி, முகத்தலவை, வேடம், வகை, முறைமை, பிரதி, உருவம், பூமி போலிமை (வேடம்), பதிலீடு (பிரதி), மறுபடைப்பு (உருவம்) ஆகிய பொருள்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒத்திருக்கின்றன. உருமாதிரி, ஒத்த வடிவம், கருத்துரு, காட்சி, நினைவு, கருத்து, அகத்தில் படிந்த புறப்பொருளாகும். தோற்றம், உவமை, உருவகம் ஆகியவை படிமம் ஆகும். உள்ளக்காட்சித் தொடர்பையும், மனத்தொடர்பையும் ஒன்றிணைத்துப் படிமம் காட்டும். தமிழில் படிமம் என்ற சொல்லாட்சியைக் கையாண்டவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் ஆவார்.

தமிழில் உருக்காட்சி, காட்சி உரு ஆகிய சொற்களில் பொருளைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவனபடிமம் என்ற சொல் சிற்பம், ஓவியம், உளவியல், தத்துவம், நிழற்படம், இலக்கியம், கட்டிடக்கலை ஆகிய துறைகளில் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. நகல் எடுத்தல் என்பதன் பாற்படும். ஆடியில் தெரியும் பிம்பங்களைக் குறித்தல். உருவத்தெளிவின்றி விழும் நிழற்படம். கண்ணுக்குப் புலனாகும், புலனாகாக் காட்சிப் பொருள். பொறிகளின் வழியாகப் புறவுலகப் புலனுணர்வுத் தூண்டுதல்களால் மனத்தில் எழும் பிரதிபலிப்பே படிமம். காட்சியாக அமையும் கலை வெளிப்பாடு. உள்ளம் உணர்ந்த சொல்லோவியம். எப்போதோ தன் மனத்தில் பதித்துள்ள படிந்துள்ள காட்சிகளையும், அனுபவங்களையும், கவிஞன் தன்னுடைய கற்பனைத் திறனில் சொற்களைக் கொண்டு பிறருக்கு உணர்த்துகின்ற நிலையில் அமைவதே படிமம். புறவய யதார்த்தத்தின் அச்சு நகலாகப் படிமம் இராது அதன் சில அம்சங்களை மிகைப்படுத்தி அழகியல் படிமம் உருவாக்கப்படும் என்று நா.வானமாமலை விளக்கமளிக்கிறார்.

படிமத்தை ஹியூம் என்பவர் அறிவும் உணர்ச்சியும் இயைந்த மனவிளைவைச் சட்டென்று தெரியக் காட்டுவது என்றும், எஸ்ரா பவுண்டு என்பவர், அறிவு நிலையிலும், உணர்வு நிலையிலும் எளிதில் விளக்க இயலாதவற்றை, நொடியில் தெளிவாக்கி நம்முன் நிறுத்த வல்லது என்றும், சி.சு. செல்லப்பா, புலன் உணர்வுகளோடும், மனவுணர்வுகளோடும் தொடர்பு கொண்ட காட்சிப்பொருள், கருத்துப்பொருள் ஆகியவற்றின் மன உருக்காட்சி நிலை என்றும் விளக்குகின்றனர். காட்சிப் பொருள், கருத்துப்பொருள் ஆகியவற்றைக் காட்சியாக்கும் ஒரு சொற்கூட்டம் படிமமாகும். உவமை, உருவகம், முற்றுருவகம் போன்ற அணிகளையும் பொருள்களையும் உள்ளடக்கக் கூடிய ஒரு மூலச்சொல்லாகும். பல

எண்ணங்களைத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தது. புலன்கள் மூலமாக வாசகர் உள்ளத்தில் உணர்வினைத் தொட்டு, உணர்ச்சியை எழுப்பி அறிவுநிலைக்கு அழைத்துச் செல்வது என்று படிமத்திற்கு விளக்கமளிக்கலாம்.

அப்துல் ரகுமான்,

உடைந்த படிமங்களில்
இறைவன் கடந்து போகிறார்
இல்லையில் வசிப்பதற்காக.

நான்
உன்னை
ஆலயங்களில் தேடினேன்.
நீ உடைந்த உள்ளங்களில்
இருந்தாய்.

எங்கே
பூக்கள் இருக்கின்றனவோ
அங்கே
வாசல்கள் இருக்கின்றன

தேவ கிரணங்கள் தீண்டும் போது படிமங்கள்
பூக்களாய் மலர்கின்றன.

மலர்களின் வடிவம் வேறாக இருக்கலாம்
வண்ணம் வேறாக இருக்கலாம்
வாசம் வேறாக இருக்கலாம்
ஆனால்

தேன் ஒன்றுதான்.

என்று தம் கவிதையில் குறிப்பிடுகிறார். படிமம் என்பதை மலர்களால் காட்சிப்படுத்துகிறார். தேனின் சுவையை உணரவைக்கிறார். மலர்களில் இறைவனைக் காட்சிப் பொருளாக்குறார். ஒவ்வொருவரின் உள்ளத்தில் இறைவன் என்ற கருத்துருவாக்கம் வேறாக இருக்கலாம். இறைவனைத் தேடும் இடங்கள் வேறாக இருக்கலாம். மலர்களில் பல்வேறு வடிவங்கள், வாசனைகள், வண்ணங்கள் இருப்பதைப் போல இறைவனும் பல்வேறு வடிவங்களில், வண்ணங்களில், வகைகளில், மதங்களில் இருக்கிறான். ஆனால் தேனைப் போல இறையருள் என்பது ஒருமைத்தானது தான் என்பதைக் காட்சிப்படுத்துகிறார்.

உருவம், உள்ளடக்கம், படிமம் இம்மூன்றும் சில ஒற்றுமைகளையும் சில வேறுபாடுகளையும் கொண்டுள்ளது. உவமை ஒப்பிட்டுக் காட்டுவது. உருவகம் ஒத்துக் காட்டுகிறது. செறிவு பெறுவது. படிமம் உருவகத்திலிருந்து செறிவு பெறுவது. உதாரணமாக, மின்னலைப் போல வெண்மை (ஒப்பீடு) இது ஒப்பிட்டுக் காட்டுவதாகும். மின்னல் வெண்மை (ஒத்திருக்கிறது) இது ஒத்துச் சொல்வதாகும். மின்னல் பளிச்சென்று பாய்ச்சும் வெண்மை (பாய்ச்சுதல் என்ற சொல் நம்முன் காட்சிப்பட வைக்கிறது) என்பது படிமமாகும். உவமை, உருவகம் வரையறைக்குட்பட்ட பொருத்தங்களைச் சொல்கிறது. படிமம் வாசகர்களின் எண்ணங்களுக்குத் தகுந்தாற்போலச் சிந்தனையைத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தது. தன்னில் இருந்தும் தன் வழியாகவும் தொடர்ந்து, புதுபுதுச்

சிந்தனைகளை எழுப்பிக் கொண்டிருக்கும் நீர்ச்சுழலே படிமம் என்று எஸ்ரா பவுண்டு விளக்கமளிக்கிறார்.

கவிதைகளில் படிமம் என்ற கருத்துநிலை கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்தது. கவிதை வெளியீட்டு முறையில் புதிய உத்திகள் தோன்றிய காரணத்தால் படிம இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. காட்சிப் பொருள்களையும், கருத்துப் பொருள்களையும், உருவத்தைக் காட்டும் முறையில் காட்சிப்படுத்தல், உணர்ச்சிக் கலப்பும் புதுமைத் தன்மையும் உடைய இலக்கியப் படிமத்தைப் படைத்தல், கவிதையின் உட்பொருளை விளக்கும் வகையில் படிமம் அமைத்தல் வேண்டும். கவிஞர்கள் சங்கம் என்ற அமைப்பின்மூலம் ஹல்ம் படிமம் வளர்த்தார். இமேஜிஸ்ட் என்ற சொல்லை உருவாக்கியவர் எஸ்ரா பவுண்ட் ஆவார். அமிலோவல் என்பவர் மூன்று படிமக் கவிதையின் தொகுப்புகளை வெளியிட்டார். பறவையின் பாதையில் கவிதைத் தொகுதியிலும் ஏராளமான படிமக் காட்சிகள் இடம்பெறுகின்றன.

சூஃபித்துவம் அல்லது சூஃபிசம்

சூஃபித்துவம் (Sufism) என்பது அரபு மொழி சொல்லாகும். இறைநிலையைச் சொல்வதாகும். இறை மதிப்புகள், இறைவனுக்குக் காட்டக்கூடிய சடங்கு முறைகள், இறைக் கருத்துக்கள் அடங்கிய கோட்பாடுகள், அதனைச் சார்ந்த நிறுவனங்கள் போன்ற இயல்புகளைப் பாடும் பாடுபொருள் சூஃபிசம் எனப்படும். சூஃபிக் கோட்பாடு இஸ்லாத்தின் கொள்கைகளை அடிப்படையாக்கி உருவனாலும், அதை அனைத்திற்கும் சமம் என்று அப்துல்ரகுமான் கருத்துருவாக்கம் செய்கிறார். மனிதன், தெய்வம்

கொள்கையின் நோக்கம், இறைவன் பற்றிய எண்ணங்கள் கேள்விகள், நேர்க்கோட்டுத் தன்மை, எதிர்நிலைக் கருத்தாக்கம், தத்துவம், உவமைகள், காதல் போன்று அனைத்திற்கும் பொதுவானதாக அமைகிறது.

ஆன்மீக வாதம், துறவறம் என்பது இஸ்லாத்தை வலியுறுத்தும் போக்கு இருந்தபோதிலும் இறைத்தன்மை என்பதில் ஒன்றிணைகிறது. அறிஞர்கள், சிலர் சூஃபியைக் "கம்பளி" என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகக் கருதுகின்றனர். பழங்காலத்தில் தோன்றிய மதங்கள் அதுதொடர்பான நம்பிக்கைகளை உள்வாங்கிய கொள்கை தான் சூஃபி என்றானது. ஆன்மிக வாதத்தில் கடுமையான ஏகத்துவ வாதம் என்பர்.

இஸ்லாத்தில் சூஃபி தத்துவஞானியை முஹியே அட்தின் இப்னு அரபி என்பர். அவர் பெற்ற ஞானத்திற்காக பெரிய ஷேக் என்று அழைக்கப்பட்டார். இவரது கருத்துக்களை, கொள்கைகளை ஞானத்தின் கற்கள் என்பர். கடவுள் ஒருவராகவும், அவருக்குள் எந்த வேறுபாடுகளும் இருப்பதில்லை. அனைத்து நிகழ்வுகளையும் உருவாக்குவது ஒருவராகவே இருக்கமுடியும். அறநெறி, நம்பிக்கை, தெய்வீகத்தின் சாத்தியம் அர்ப்பணிப்பு போன்ற அனைத்தும் போதனைகளும் ஒற்றுமையை வலியுறுத்துவன. மனித அறிவாற்றல் செயல்கள் உண்மையை உணர்த்துவனாகிறது. எதிரெதிர் கருத்துநிலைகள் ஒற்றுமையைச் சிதைக்கிறது. எதிரெதிர் ஒற்றுமை உணர்வே இறைவனைக் கற்பிக்கக் கூடியதாகிறது.

சூஃபி மனித குலத்திற்கு வழங்கப்பட்ட போதனைகளில் உயர்ந்ததாகவும், சரியானதாகவும் கருதப்படுகிறது. மாமிச பாவத்தை மறுக்கிறார்கள். மகிழ்ச்சி என்பது

ஆன்மிகத்திற்கு என்ற தனியாகவோ அல்லது பொருள்களுக்கென்று தனியாகவோ இருக்க முடியாது. மனிதனில் தேடல்கள், தேவைகள் பூர்த்தி அடையும் போது மகிழ்ச்சி நிரந்தரமாகத் தோன்றுகிறது.

சூஃபி தத்துவம் உலகத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றுகின்றன. இறைவன், இறைத்தன்மையை உலகத்திலிருந்து பிரிக்க முடியாதது. எந்தவொரு செயலின் முடிவும் நேரடியாக நோக்கத்தைப் பொறுத்தது. மனிதன் தேடுவதைச் சரியான முறையில் அடைவதற்கு வழிகாட்டுதலாக இருக்கிறது. மனிதன் கடவுளின் உருவகமாக இருக்கிறான். ஒவ்வொரு செயலிலும் இறைவனின் கொள்கையை வழிநடத்தும் சித்தமாக இருக்கிறான். மனிதனின் அனைத்து வழிகளும் இறைவனை நோக்கியே அமைகின்றன. மனிதனிடையே சகிப்புத்தன்மையையும், அறிவைத் தவிர வேறொன்றுமில்லை என்றும், உண்மையை எதிர்நோக்கிய பயணம் என்பதையும் வலியுறுத்துகிறது.

ஆன்மா மேன்மையுடனும், இறைவனுடன் ஒன்றிணைவதற்கான விருப்பத்தையும், தங்களை இறைவனோடு நேரடியாக இணைத்துக் கொள்வதையும், பூசாரித்தனங்களை மறுப்பதாகவும் அமைகிறது. இறைவன் பெயரால் மனிதனையும், மனிதன் பெயரால் இறைவனையும் துன்புறுத்தப்படுவதை சூஃபி தத்துவம் மறுக்கிறது. அன்புக்குரியவன் இறைவன். காதலனுக்கும் காதலிக்கும் இடையிலுள்ள ஒற்றுமையைப் போல மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள ஒற்றுமை ஒற்றுமை அன்பால் இணைக்கப்படுவதாகிறது.

மேய்ச்சல் கவிதையில் மேய்ப்பர்களான இறைத் தூதர்களைப் பற்றிப் பேசுகிறது. மனிதனைவிட உயர்த்து என்று இறைவனிடம் கேட்டபோது இறைவன் மேய்ப்பர்களை அடையாளப்படுத்துகிறான். அவன் பசுவாக்கினான். பசுமையான புல்வெளிகளில் மேய்ச்சலை நிகழ்த்துகிறான். உலகத்தினை வழிநடத்தவும், அசைபோடவும் கற்றுக் கொடுக்கிறான். வானுலகில் நிலைபெற்ற சூரியனும் நட்சத்திரங்களும் சப்தங்களும், ரசங்களும் இறைவனின் மேய்ச்சல் நிலமாகும். மனிதனின் பொதுத்தன்மையான வாசனைகளையும் ஸ்பரிசங்களும் மனிதனைவிட மேன்மையானது. இறைத்தூதர்கள் பலவானவர்கள். வெட்டவெளியில் நிசம்பதங்களான இடங்களில் மனிதனின் மனம் அமைதி பெறுகிறது. அங்கே மனிதன் இறைத்தன்மையை உணர்ந்து கொள்கிறான். நிதானம் அடைகிறான். அறிவு பெறுகிறான்.

நான் மேய்ந்ததெல்லாம்
என் இரத்தமானது.
என் மடி
ரத்தத்தை பாலாக்கியது.

முட்டி குடிப்பவர்களுக்கும்
கறப்பவர்களுக்கும்
என் மடி பால் சுரக்கிறது.

குடிப்பதற்கோ, கறப்பதற்கோ
யாரும் இல்லை என்றாலும்
என் பால், காம்புகளின் வழியே
கசிந்து சிந்துகிறது.

இறைவனின் அருளை, கருணையைப் புரிந்து கொண்டவர்கள் அதனைப் பிறருக்குப் பறை சாற்றுகிறவர்கள் மேய்ப்பர்களாக மாறுகின்றனர். இப் பிரபஞ்சம் முழுவதும் இறைவனின் அருள் தன்மையால் நிரம்பி வழிகிறது என்பது உணர்த்தப்படுகிறது.

ஒளிதல் என்ற கவிதையில் அன்பால் பின்னப்பட்ட மனித வாழ்வு உணர்த்தப்படுகிறது. அன்பு மனிதனை ஆட்டுவிக்கும் இறை சக்தி. அன்பிற்குள் சிக்குண்ட மனித வாழ்வு இறைத் தன்மையில் முக்தி பெறுகிறது. கனவாகவும், நீராகவும், இசையாகவும், அதனை மீட்டும் விரலாகவும், விதைக்குள் ஒளிந்திருக்கும் விருட்சமாகவும் அமைகிறது. மனிதன் செய்யும் பாவத்திற்கு மேய்ப்பவர்களிடம் மன்னிப்பு பெறப்படுகிறது. அங்கு மனிதனின் பல்வேறு முகத்திரைகள் வெட்ட வெளிச்சமாகின்றன. இறைவன் இவ்வுலகில் நீக்கமற நிறைந்துள்ளான்.

நான் உறக்கத்தில்
ஒளிந்தேன்
நீ கனவாக வந்தாய்

நான் விதையில் ஒளிந்தேன்
நீ நீராக வந்தாய்.

ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட்டு வெளியில் செல்லும் போது இறைவனிடம் தஞ்சம் புகுகிறான். ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் அவன் ஒளிந்து கொள்ளும் இடமாக இறைவன் இருக்கிறான். மனிதன் பனித்துளி என்றால் இறைவன் வெயிலாகக் காட்சித் தருகிறான்.

பனித்துளி நிறைவுபெறும் இடமாக வெயில் உள்ளது. இறைவனன்றி மனிதன் ஒளிந்து கொள்ள இவ்வுலகில் வேறெந்த இடமும் இல்லை என்பது உணர்த்தப்படுகிறது.

பனித்துளி
வேறு எங்கே ஒளியமுடியும்
வெயிலைத் தவிர.

எனக்கும்
வேறு வழி இல்லை
உன்னிடம் ஒளிவதைத் தவிர.

முகத்திரையற்ற வதனம் கவிதையில் சொர்க்கம், நரகம் பற்றிய சிந்தனை விவரிக்கப்படுகிறது. இறைவனை அடைதலுக்கு மனிதன் கருவியாகிறான். இறைவனை அடைதலே மனிதனின் சொர்க்கமாகவும், இறைவனை அடையும் கடுமையான வழிகளைவிட நரகம் உயர்வானது அல்ல என்பது உணர்த்தப்படுகிறது.

உன் தரிசனம் கிடைக்காத
என் விரகதாபத்தை விடவா
உன் நரகம் துயரமானது?

மதன யுக்தி கவிதையில் இறைவனை அடைதல் மனிதன் பெறும் ஆர்வமாகும். அனைத்து உயிர்களும் சமம். அதில் உண்மைத்தன்மை உண்டு. பூக்களின் மென்மையிலும், நட்சத்திரங்களின் ஒளியிலும், நிலவின் குளிர்ச்சியிலும், மின்னல்கள் பளிச்சிடும் ஒளியிலும் இறைவன் குடி கொண்டிருக்கிறான். அவனை அடைதலுக்கான

மனிதத்தன்மைகள் மதனயுக்தியாக அமைகிறது. பெண்களிடம் ஒளிந்திருக்கும் வெட்கம் போன்ற ஆர்வத்தைத் தூண்டும் மதனயுக்தியாக இறைவன் அமைகின்றான்.

அவள் முகத்திரைக்குள்
ஒளிந்திருப்பது
வெட்கத்தால் அல்ல.
அது ஆர்வத்தைக் கிளறும்
மதன யுக்தி.

ஏகாந்தம் கவிதையில் அதனைப் பூசிக்கொள்ளும் மனித மனத்தைப் பேசுகிறது. மனிதனின் மேல் கீழ் என்ற எதிரெதிர் நிலை பேசப்படுகிறது. ஏகாந்தம் தூசியாய் ஒட்டிக் கொள்கிறது. மனித அழுக்கின் தீர்க்கும் நீராடலாக இருக்கிறது. கடலுக்குள் இருக்கும் திமிங்கலம் மூச்சு வாங்க வெளியில் வருவது போல ஏகாந்தம் பூசிக்கொள்ள இறைவனை அடைய வேண்டும். மௌனத்தின் அனைத்து உயிர்களின் உணர்வுகளையும், மனம் அமைதியுறுகையில் எண்ணத்தின் விசாலங்களையும் உணரமுடிகிறது. சப்தங்கள் ஒடுங்கியப் பின் இருளின் அமைதியில் இறைவன் குடிகொண்டுள்ளான். இதனை,

உள்ளேயா? வெளியிலா?
என்று தெரியாமல்
இங்கும் அங்கும்
ஊசலாடும் உலகம் இது

இங்கு எனது என்று சொந்தம் கொண்டாடப்படும் எதுவும் அவருக்கானது இல்லை. அனைத்து ஊர்களும், உடைமையும், உறவினர்களும் மனிதனுக்குச் சொந்தமானவை அல்ல. இறைவனுக்குச் சொந்தமானவை. இரவு, பகல் என்ற வேறுபாடு அற்ற மேல், கீழ் என்ற பாகுபாடற்ற சூழல் உருவாகும் போது "நான்" என்னும் அகந்தை அற்றுப் போகிறது. அப்போது தான் மனிதன் சமமாகின்றான் என்பது உணர்த்தப்படுகிறது.

தல விருட்சம் கவிதையில் இயேசு கிறித்துவும் இறைத்தூதர் என்பது உணர்த்தப்படுகிறது. கிறித்துவின் இறைக்கொள்கையை ஏற்றுக் கொள்வது. ஆதாம், ஏவாளின் படைப்பு முதல் மனிதனின் படைப்பு என்ற கொள்கையை உள்வாங்கிக் கொண்டது. ஒரு விதையிலிருந்து தான் அடர்ந்த காடு விருட்சம் கொள்கிறது. அதுவே அதன் இருத்தலைத் தீர்மானிக்கிறது. பல்கிப் பெருகுவதற்கும் மூலமாகச் செயல்படுகிறது. ஒளிந்திருக்கும் விதை விருட்சம் கொள்வதற்கான தவமே தவிர, மறைக்கப்படுவதில்லை. ஒளிந்திருக்கும் விதை இறைவன். அவன் விருட்சம் கொள்ளுகையில் அகந்தைகள் மறைகின்றன. மனிதனின் திசைவெளிகள் நீளுகின்றன. கிளைகள் பரப்பப்படுகின்றன. மனிதனின் கவனத்தில் இறைவன் கனிகளாக மாறுகின்றன. மனிதன் கனிகளைப் பருகுகையில் இறைவனை அடைகிறான். விதையின் விருட்சத்தை உணருகிறான். பாவங்கள் தீர்க்கப்பட்டு இளைப்பாறுதல் அடைகிறான்.

என்னை அறையும்
சிலுவையும்
உன்னிடமிருந்தே
உண்டாக்கப்படும்

என்ற உண்மையை உணர்த்தப்படுகிறது.

காதலும் இறைமையும்

கண்ணீர் விலை கவிதையில் இறைவனைத் தேடும் தேடல்களை உணர்த்துகிறார். ஆலய மறுப்பு உணர்த்தப்படுகிறது. பூக்கள் அழகானது. மென்மையானது. விசித்திரமானது. அப்படிப் பூக்களில் மட்டும் தான் இறைவன் இருக்கிறான் என்று நம்பிக்கை கொண்டவர்களிடம் முட்களில் இருக்கிறான் எனக் குறிப்பிடுகிறார். புன்னகையில் மட்டும் இறைவன் அல்ல. அவன் கண்ணீரிலும் குடிகொண்டுள்ளான்.

நான் உன்னை
ஆலயங்களில் தேடினேன்
நீ உடைந்த உள்ளங்களில்
இருந்தாய்.

இறைவனிடம் கேட்பதற்கு என்றிருப்பதைவிடத் தன்னை அர்ப்பணித்தல் என்பது மேலானது. பூக்களில் படிந்த புழுதியைப் பனித்துளிகள் கழுவுவது போல கண்ணீர்த் துளிகள் இதயத்தைப் பரிசுத்தம் செய்கின்றன. இறைவனை அடைவதற்கு எடுக்கும் சிரத்தை என்பது அலாதியானது. புளகாங்கிதம் அடையச் செய்வது. விடுதலையை விட சிறை ஆனந்தமானது.

உன் கண்ணியில்
நான் சிக்கிக் கொண்டேன்
விடுதலையைவிட

இந்தச் சிறை
எவ்வளவு ஆனந்தமானது

வாழ்க்கையா? மரணமா?
எதையேனும் தேர்ந்தெடு
என்றாய்
நான் வாழ்க்கையைத்
தேர்ந்தெடுத்தேன்
அதுவோ
மரணம் நோக்கி
அழைத்துச் செல்கிறது.

மூச்சு வாங்கும் போது மனிதனின் பிறப்பும் மூச்சை வெளிவிடும் போது மனிதனின் இறப்பும் நிகழுகிறது. இறைவனை எளிதில் அடைய முடியாது என்ற கருத்து தவறானது. முட்களும், கண்ணீரும் அவனை அடைவதற்கான எளிய வழிகள். காதலன் காதலியின் இயல்பில் அன்பு ஆட்சி கொள்கிறது. அன்பினை உணர்த்தும் காதல் மகத்துவமானது. அன்பினால் உணரும் காதல் பிரிக்கமுடியாதது. இறைவனுக்கும் தனக்குமான அன்பு இயல்பானது என்றானப்பின் நீ ஏது? நான் ஏது? என்ற வேறுபாடற்ற கலப்பு உருவாகும் என்பதை உணர்த்துகிறார்.

மர்ம பாதைகள் கவிதையில் காதலும் இறைத்தன்மைக்கும் உள்ள இணக்கத்தைத் தொடர்புபடுத்தப்படுகிறது. காதலைச் சந்திக்க ஏற்படுத்தும் பாதைகளும் இறைவனைச் சந்திக்க ஏற்படுத்தும் பாதைகளும் சமத்துவமானவை. பௌர்ணமி வெளிச்சத்திலும், கடல் நீரிலும் பயணித்தல். மின்னல் போன்ற கொடிப் பாதையில் பயணித்தல். ஏகாந்தம் பூசிய

இரவிலும், சோக ஆலாபனையிலும் பயணித்தல். இருளில் பூத்த நறுமணத்தில் பயணித்தல். ஊதுவத்து வாசனையில், பறவையின் சிறகில், உதிர்ந்த இலையின் ஊஞ்சலாட்டப் பயணித்தில் செல்லுதல். கனவுகளில் பயணித்தல் போன்ற அனைத்துப் பாதைகளும் காதலையும் இறைத்தன்மையையும் வழிகாட்டுகின்றன. அன்பைத் தேடிய பாதையில் அவளை அடைவதைப் போலவே இறைவனையும் அடைய முடியும்.

அவளை சந்திக்க
ஒவ்வொரு முறையும்
ஒவ்வொரு பாதையில்
செல்கிறேன்.

பௌர்ணமி நிலா
கடல் நீரில் போட்ட
சரிகை சாலையில்....

சட்டெனக்
கிளைபிரிந்து ஓடும்
மின்னலின் கொடி பாதையில்.

கனவு
மர்மப் பாதையில்..

நான் நடந்து சென்று இருக்கிறேன்.

அவளைப் போலவே
அவனை அடையும் பாதைகளும்
மர்மமானவை.

அழகானவை.

பாதையைப் பற்றி
எப்போதும் நான்
கவலைப்பட்டதில்லை

ஏனெனில்
எல்லா பாதையும்
அவளையே அடைகின்றன.

பாடல் ஆடை கவிதையில் காதலின் மென்மையை உணர்த்துகிறார். வானவில்லில் அம்பாகத் தொடுக்கப்படுகிறாய். நட்சத்திர வெளியில் சிதறிக் கிடக்கிறாய். வெட்கப்படும் பூப்படைந்த நிலா பேசும் ஒளிர்கிறது.

என் காதலை
உன்னிடம் சொல்லும்போது
ஆதிக்கடல்
தன் வயிற்றில் உள்ளதையெல்லாம்
கக்குவதுபோல் இருந்தது

நீ சம்மதித்தபோது
நீ
நான் அறிந்த
எதுவாகவும் இல்லை.

பறவையின் பாதை கவிதையில் பயணங்கள் அற்புதமானவை. விசித்திரமானவை. புதிர்களின் பயணம் என்பதை உணர்த்துகிறது. பறவைகள் செல்லும் பாதை மனிதன்

செல்லும் பாதை வேறு யாரும் வழிகாட்டவில்லை. முன்னோர் நடந்த பாதை அல்ல. அது புதிதானது. ஒவ்வொரு பறவையும் தனக்கான பாதையைத் தானே உருவாக்கிக் கொள்கின்றது. யாரையும் பின்பற்ற பாதை. யாரும் பின்பற்ற முடியாத பாதை. அது அரூபத் தன்மை மிக்கது.

எந்த அடிச்சுவடும்
கறைபடுத்தாத
யாரையும் பின்பற்றாதே
யாரும் பின்பற்ற முடியாத
அரூப பாதை.

மனிதன் உருவாக்கியது போன்று அதில் சாலை விதிகள் இல்லை. இடப்புறம் வலப்புறம் என்ற நியதி இல்லை. விபத்துகள் நிகழுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் செல்லும் பாதை அவனவன் ஊருக்கு அழைத்துச் செல்கிறது. பறவைகள் பாதையும் நியதி இல்லாது இருப்பிடம் நோக்கிச் செல்கிறது.

என் ஊருக்கு
உங்கள் பாதையில்
எப்படிச் செல்ல முடியும்?

எனவே,
நான் என் பாதையில்
செல்கிறேன்

அவரவர் பாதைகள் அவரவர் வணங்கும் இறைவனிடம் அழைத்துச் செல்கிறது. அவனை அடைவதற்குப் பறவைகளைப் போல நியதி இல்லாத பாதைகளும் தேவை. மனிதன் இறைவனை அடைவதற்கான வழிகளை அமைத்துக் கொள்கிறான். ஒவ்வொருவனும் அவனவனின் எண்ணத்திற்கு ஏற்பப் பாதைகளை வகுத்துக் கொள்கிறான். ஒருவர் பின்பற்றும் பாதை மற்றவர்க்கு எளிமையாக இராது. ஒவ்வொருவரும் தனக்கான பாதையைத் தீர்மானிக்கும் போது தொடக்கத்தில் அமைவதெல்லாம் பறவைப் பாதையாகும். பசித்தப் பறவைகள் தனக்கான இறையைத் தேடப் பறக்கிறது. களைத்த பறவைகள் இளைப்பாறுவதற்கு கூடு திரும்புகிறது. பசியும் களைப்புமில்லாத மனிதர்கள் கட்டிய கூடுகள் அவர்களுக்கானதாக இருப்பதில்லை. மற்றவர்களுக்கானது. அப்பாதைகளைப் பின்பற்றுதல் என்பது அனைவருக்கும் இலகுவாக இருப்பதில்லை. மாறாக அத்தகைய பாதையில் ஓடும் மனிதர்கள் இறைவனை அடைதல் என்பது உடைந்த சருகுகளையும், உடைந்த சுள்ளிகளையும் கடப்பதற்கான சிரத்தை அடைகின்றனர் என்பதை உணர்த்துகிறார்.

பசித்தப் பறவை
இறை தேட பறக்கிறது.
களைத்த பறவை
கூடு திரும்புகிறது.

எனக்கு பசியுமில்லை
களைப்பும் இல்லை.

உதிர்ந்த சருகுகளாலும்
உடைந்த சுள்ளிகளாலும்

கட்டப்படும் கூடு

எனக்கானது அல்ல.

விலாசம் கவிதையில் இறைவனுக்காகக் கட்டப்படும் ஆலயங்களின் சிக்கல்களை எடுத்துக் காட்டுகிறார். இறைவனுக்கு ஆலயங்களைக் கட்டும் மனிதன் அவனை இழக்கிறான். பாகுபாடுகளை உருவாக்குகிறான். ஆலயங்கள் இருக்கின்றன மனிதர்கள் இல்லை. அதனை இறைவனுடைய வீடாக அடையாளப்படுத்துகிறான். இறைவனைத் தேடி ஆலயங்களுக்குள் தஞ்சம் புகுகிறான். இறைவன் கிடைக்கவில்லை எனில் ஆலயங்களை இடிக்கிறான்.

கடப்பாரைகளோடு

சென்றுகொண்டிருந்தவர்களைக்

கேட்டேன்

எங்கே செல்கிறீர்கள்?

அவர்கள் சொன்னார்கள்

ஆலயத்தை இடிப்பதற்காக

ஏன்? என்று கேட்டேன்

அவர்கள் சொன்னார்கள்

ஆலயத்தைக் கட்டுவதற்காக

கற்களில் கட்டப்படும் ஆலயத்தில் இறைவன் இல்லை. அதில் வன்மைகள் உண்டு. ஆனால் பூக்களில் யாரும் ஆலயங்கள் கட்டுவதில்லை. அதில் மென்மை உண்டு.

இறைவனுக்கு எழுப்பப்படும் ஆலயங்களில் வன்மையை எதிர்ப்பார்க்கும் மனிதர்கள் மென்மையை மறந்துவிடுகின்றனர். மென்மையில் இறைவன் வாழுகிறான்.

இறைவா!
நீ இல்லாத
இடம் உண்டா?
என்று கேட்டேன்

உண்டு என்றான்

எது? என்றேன்

ஆலயம் என்றான்

ஏன்? என்றேன்
வியப்போடு

மாறி மாறி
இடித்துக் கொண்டிருக்கிறார்கள்
அதனால் அங்கே
இருக்க முடியவில்லை என்றான்

இறைவனின் வீட்டை இடிக்க ஓடும் மனிதர்களுக்கு இருக்க வீடில்லை. மழையிலும், குளிரிலும் நனைந்து விறைத்தும் சாகின்றனர். அவனுக்குச் சமாதி கட்ட இறைவனுக்கு ஆலயம் கட்டப்பட்ட கற்கள் தான் தேவைப்படுகிறது.

கடவுளுக்கு ஒரு கடிதம் கவிதையில் கடவுளோடு நடக்கும் உரையாடல் மனிதர்களைக் கேலி செய்கிறார். “அன்புடையீர்” என்ற வார்த்தை கடவுள் ஒருவனை மட்டும் தான்

அழைக்க முடியும். சமூகத்தில் அக்கிரமம் செய்பவர்களும் சுவாசிக்கிறார்கள். காற்றை அனுப்புகிறவன் கடவுள். மனிதர்கள் கடவுள் என நினைத்து கல்லையும், மண்ணையும், குப்பை கூழங்களையும், மரங்களையும், சுவர்களையும், எந்திரங்களையும் என்று எதை எதையோ வணங்குகிறார்கள்.

நாம் இங்கே

நலமில்லை

நீ நலமா எனக் கேட்பது

அதிகப் பிரசங்கித்தனம்

கடவுள் அளிக்கும் மனித வாழ்வியலில் அவன் வாழ்ந்ததாக வாழ்க்கை இருப்பதாக அறியவில்லை. கடவுளுக்கு என்று தனியாக பெயரும் இல்லை. முகவரியும் இல்லை. வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகின்றவர்களைப் போல மனிதர்கள் கடவுளைத் தேடி காடு, மேடு, நீர், மரம், செடி, கொடி அத்தனையிலும் அலைகின்றனர். கல்லால் ஆலயங்கள் கட்டப்படுவதற்காக உயிர்களைக் கொல்கிறார்கள். மனிதர்களை வதைக்கிறார்கள். பாகுபாடு பார்க்கிறார்கள். உன்னை ஒரு பொம்மையாக வைத்துத்தான் விளையாடுகிறார்கள். கடவுள் படைத்த மனிதர்களை தீண்டத்தகாதவர்கள் என்கிறார்கள். அமைதிதான் கடவுள் என்பதை மறந்து சண்டைகளாலும், ஆர்ப்பரிப்பிலும் வணங்குகிறார்கள். இத்தகைய மனிதர்களிடம் நீ மறைந்திருப்பது நல்லதாகவே படுகிறது. சந்திரமதியின் கழுத்திலுள்ள தாலியின் ரகசியம் அரிச்சந்திரனுக்கு மட்டும் தான்

என்பதைப் போல உன்னை அறிந்தவர்களுக்கு மட்டும் தான் நீ கடவுள். மற்றையோர்கள் உண்மை விளங்காத மூடர்களாவர்.

நிலாவைக் காட்டிய விரல் கவிதை மனிதனின் அறியாமையைக் காட்டுகிறது. காட்டப்படும் வழிகளைத் தவிர்த்துவிட்டு வேறு எதையோ பார்க்கும் மனநிலை மனிதர்களிடம் பெருகி இருக்கிறதைச் சுட்டிக்காட்டுகிறது.

நிலாவைக் காட்ட

நீண்டது விரல்.

ஒருவன், விரலின் நகத்தைப் பார்த்து முத்துச் சிப்பியைப் போன்று உள்ளது என்றான். மற்றொருவன், ஒன்றுக்குப் போகணும் போல என்றான். இன்னொருவன், இல்லை அது நம்மை அதட்டுகிறது என்றான். அதன் ரேகையை ஆராய்ந்த ஒருவன், ஏதோ தீமை நடக்கப் போகிறது என்றான். ஒருவன் நகத்தில் மருதாணி பூசினான். மற்றொருவன் தங்க மோதிரம் போட்டான். பிறகு, விரல் வெட்டி எடுக்கப்பட்டு பூசைகள் வழிபாடுகள் செய்யப்பட்டன.

ஆனால்
யாரும் பார்க்கவில்லை

நிலாவை.

வெளிச்சம் கவிதையில் ஒளியைத் தவறாகச் சித்தரிக்கும் அடையாளங்களைக் காட்டுகிறார்.

நான் கேட்டது
இந்த ஒளிகளை அல்ல.

இரவில்
படுத்துவிடும் சூரியனை,
அமாவாசைகளுக்கு
விடுப்பு எடுக்கும் நிலாவை,
எனக்குப் பரிந்துரைக்காதீர்கள்

சூரியனும், நிலவும் வெளிச்சம் அல்ல. ஏனென்றால் அது நிரந்தரமானது அல்ல. கலங்கரை விளக்கமாக அமைக்கப்பட்ட வெளிச்சங்கள் வழிகாட்டவில்லை. கரையேறுவதற்கே உள்ளது. மின்னல் வெளிச்சம் அலாதியானது. ஆனால் அது நிரந்தரமாக இருப்பதில்லை. தீபங்கள் ஒளியைத் தரவில்லை. மாறாக, இருளை உமிழ்கின்றன.

ஏற்றப்படாத
அணையாத
சுடாத
காற்றில் நடுங்காத
சுடர்
என் விலாசம் காட்டும்
வெளிச்சம்
வேண்டும் எனக்கு

இமைச் சொல் கவிதை சொல்லின் தன்மைகளை விளக்குகிறது. சொற்களுக்கும் இமை உண்டு. இமையில் முடி உண்டு. சொற்களும் கண்களும் ஒன்றுதான். சொற்கள் உறங்கினால் மௌனமாக மாறும். அப்போது ஆடைகள் கலையும். சொற்களில்லாத

மௌனங்கள் எப்போதும் அழகானவை. சொற்களுக்கும் கனவுகள் வரும். சொற்களும் உறங்கும். தாலாட்டுக் கேட்கும்.

சொற்களுக்கும்
இமைப்பீலி உண்டு
கண்களைப் போல.

சொற்களும் கண்ணடிக்கும்

சொற்களுக்கும்
கண்ணீர் உண்டு

சொற்களும்
உறங்கும்
சில நேரம்
ஆடை விலக.

சொற்கள்
உறங்கும்போது
அழகாக இருக்கும்.

மேலும் உறக்கத்தில்
சொற்களுக்கு
கனவுகள் அகப்படும்.

எனவே
என் சொற்களுக்கு நான்
தாலாட்டு பாடுகிறேன்.

புத்தாயிரம் கவிதை பழைய × புதிய, புதிய × பழைய என்ற முரண்களை விளக்குகிறது. சூஃபி தத்துவத்தில் இத்தகைய எதிரெதிர் நிலைகள் இருக்கத்தான் செய்கின்றன. புதிய என்று சொல்லப்படும் எதுவும் புதியதல்ல. பழையது தான். ஆனால் புதியதாக்கப்பட்டது. புத்தாண்டுகள் மதுப்புட்டியுடனும் பட்டாசுடன் பிறக்கிறது. அன்றைய நாள் எல்லா நாளும் போல ஒன்றுதான். அந்நாளில் வழங்கும் நம்பிக்கையும் வாழ்த்தும் பழையதுதான். புதியதாக அறிமுகம் செய்யப்படுகிறது.

புதிய இயேசுவை
எதிர்பார்த்துக் காத்திருக்கிறது
பழைய சிலுவை

பைபிலிலும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது. இரண்டும் ஒரேவிதமாக கருத்தைத்தான் பிரசங்கம் செய்கிறது. காலண்டர்களில் பழைய காகிதங்களே புதிய தேதிகளாகக் கிழிக்கப்படுகின்றன. புதிய ரத்தத்திற்காகச் சப்புக் கொண்டுகின்றன. பழைய ரத்தக் காட்டேறிகள். பழைய வேசிகள் புதிய ஒப்பனையுடன் சந்தையில் நிற்கின்றனர். பழைய கத்திகள் புதிய காயங்களை உண்டாக்குவதற்காகக் கூர் தீட்டப்படுகின்றன. பழைய திருடர்கள் புதிய தூக்க மாத்திரைகளைத் தயாரிக்கின்றனர். புல்லை அறியாத நகரத்து மாடுகள் புதிய சுவரொட்டியைத் தின்கின்றன. பழைய நாய் புதியக் கொடிக்கம்பத்தில் காலுயர்த்தி நனைக்கிறது.

அவதராங்களே!
கடவுளின் தூதர்களே!

புரட்சியாளர்களே!

யாராவது வாருங்கள்

இந்தப் பரிதாபமான உலகத்தைப்

பூக்களாலும் பாடல்களாலும் ஆன

அந்தப் பழைய இடத்திற்கு

அழைத்துச் செல்லுங்கள்.

ஆயுத பூசை கவிதையில் ஆலயங்களில் நடக்கும் ரத்த வெள்ளத்தை அடையாளம் காட்டுகிறார். கடவுளை அறிமுகப்படுத்திய வேதங்கள் தான் மனிதனிடையே கலவரங்கள் உருவாகவும் காரணமாயிருக்கின்றன. மனிதன் வாழும் இந்த உலகத்தில் வேதங்களைத் தூக்கிக் கொண்டு மிருகங்களைப் போல் கொன்று புதைக்கின்றனர். புராதனத்தைக் காப்பதற்காக சவப்பெட்டிகளின் மூடிகளைத் திறந்து கொண்டு புதிய மனிதர்களைக் கொல்கின்றனர். ஆலயங்களும் மசூதிகளும் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றன. மனித உடல்களை எரிக்கும் தீயில்தான் இறைவனுக்கு ஆராதனை செய்யப்படுகின்றன.

பூக்கள் உதிர்ந்த

வேதங்களிலிருந்து

முளைக்கின்றன

கோரப் பற்களும்

இரக்கமற்ற நகங்களும்

போர்க்களத்தில் சிக்கிக் கொண்ட

பட்டாம்பூச்சியாய்

அமர்வதற்கு இடமின்றி

அலைகிறான் இறைவன்

ஓயாத மழை கவிதையில் நினைவுகளை வெளிச்சமிடுகிறார் அப்துல் ரகுமான்.

இதோ, மழை பெய்கிறது
அந்த மழை
நினைவுக்கு வருகிறது
எப்போது மழை பெய்தாலும்
அந்த மழை
நினைவுக்கு வந்துவிடுகிறது

அப்போது இருவரும் பால்ய பருவத்தில் இருந்தோம். அவிழ்ந்த மொட்டுக்களைப் போல மணம் வீசிக் கொண்டிருந்தோம். வீட்டின் வாசற்படியில் நின்றிருந்தோம். இருளும் இல்லை. விடியவும் இல்லை சிவந்த செவ்வானத்தில் நின்றிருந்தோம். கடைக்குப் போய் ஏதோ வாங்கிக் கொண்டு திரும்பினோம். திடீரென பெய்தது மழை. அது பேய் மழை. மின்னல்கள் பளிச்சிட்டன. இடி இருவரும் உடலையும் நடுக்கியது. தெரு விளக்குகள் அணைந்தன. நீ பயந்துபோய் என் கையைப் பிடித்தாய். அந்தத் தொடுதல் என்னுள் தீயாய்ப் பரவியது. இனிமையான, மோசமான தீ அது. நான் உன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டேன். நீயும் ஒட்டிக் கொண்டாய். நாம் அதற்குள் காணாமல் போனோம். பாதி புரிந்த பாதி புரியாத பாடல் அது. திடீரென்று கதவு திறக்கப்பட்டு நான் உள்ளே தள்ளப்பட்டேன். இருளும் ஒளியும் கூடி விளையாடியது. பாதி புரிந்தது. பாதி புரியவில்லை. உனக்கும் இப்படித்தான் உடல் சொல்லியது.

ஒருவரை ஒருவர் எரித்தோம்
ஒருவரில் ஒருவர் எரிந்தோம்

மோசமான, இனிமையான நெருப்பாக அது இருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தோம் என்று தெரியவில்லை. எத்தனையோ இரவுகள் வந்து போய்விட்டன. அந்த இரவு மட்டும் விடியாமல் அப்படியே இருக்கிறது.

அந்த மழை

அந்த இரவு

அந்த நெருப்பு

என் நினைக்கு வருகிறது.

உனக்கு வருகிறதா?

வராமல் இருக்காது

புதுக்கவிதைக்கும் மரபுக்கவிதைக்குமான இடைவெளி

யாப்பு என்ற கட்டமைப்பை மீறி வெளியேறுவது புதுக்கவிதை என்பது வானம்பாடி கவிஞர்களின் கருத்து. அப்துல் ரகுமான் வானம்பாடி இயக்கத்தில் புதுக்கவிதையை வளர்த்தவர்களுள் முக்கியத்துவம் பெற்றவர். மரபுக்கவிதையை அறிமுகம் இல்லாத இடத்திற்கு அழைத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதை என்கிறார்.

யாப்பில் அடங்க மறுத்த
மின்னல்
என்னைத் திட்டிவிட்டுப்

போகிறது.

மரபுக்கவிதையில் சொற்கள் தடுமாறுகின்றன. தேவையற்ற சொற்களை நீக்கமுடியாமல் தவிக்கும் தவிப்பைத் தன் கவிதையில் உணர்த்துகின்றார். சொற்கள் பரந்த விசாலத்தில் செயல்படுவதில்லை. கட்டுக்குள் அடைக்கப்படும் சோகம். வாக்கியங்களை அமைக்க முடியாமல் தடுமாற்றம் கொள்ளச் செய்வது மரபுக்கவிதை என்கிறார். புதுக்கவிதையில் விடியலை உணர்த்த முடியும் என்று நம்புகிறார்.

பறவைகளின் பாடல்களை
உடுத்திய சூரியன்
ஸ்தம்பித்து நிற்கிறான்.

கொளுத்திப் போடும்
கண்ணீர்த் துளிகளில்
ஏதாவது ஒன்றுதான்
வெடிக்கிறது.

படிமங்களை உடைக்கக் கூடியதாக மரபுக்கவிதை உள்ளது. புதுக்கவிதைகள் புதிய புதிய படிமங்களைக் கட்டமைக்கிறது. சொற்கள் தடுமாற்றம் கொள்ளாமல் வெளியேறுகிறது. புதிய கருத்துக்களைத் தோற்றுவிக்கும் சொற்களைக் கையாளமுடிகிறது என்று உணர்த்துகிறார்.

சும்மா விற்கு நன்றி!
அது என்னை
உச்சஸ்தாயிக்குக்

கொண்டு போகிறது

வானம்பாடி கவிஞர்களில் அப்துல் ரகுமான் தம் கவிதைகளில் அரசியல், சமூக மாற்றம், மதம் சாராத ஆன்மிகத் தேடலை உணர்த்துகிறார். இசைப் பாடல்களின் வடிவத்தை உரைநடையில் எழுதியுள்ளார். மனநெகிழ்ச்சியும், உணர்வுநிலைகளும் வெளிப்படுத்துகின்றன. தம் எழுத்துப் பாணியில் மனத்தின் அறிதலும், அரசியல், சமூகக் கவலைகளை, ஆதங்கங்களை வெளிப்படுத்துகிறார். சூஃபிப் கவிதைகளில் தம் ஆன்மிகத்தின் தேடலை மெய்ஞானம் அடிப்படையில் விளக்குகிறார்.

ஆகாயத்துக்கு அடுத்த வீடு

- மு.மேத்தா

இந்தியா என் காதலி என்ற கவிதையில் பன்முகத்தன்மை கொண்ட தேசமான இந்தியாவை நேசிக்கும் சாதாரண மனிதனின் மனநிலையில் எழுதியுள்ளார். இந்தியாவை ஏன் நேசிக்க வேண்டும் என்ற கேள்வி உள்ளது. ‘காதலித்து உன்னைக் கட்டிக் கொள்ளவில்லை. கட்டிக் கொண்டதால் காதலிக்கிறேன்‘ என்று தொடங்கும் கவிதையில் புரிகிறது. வேறுவழியின்றி காதலிக்கிறேன் என்ற மனநிலை புலப்படுகிறது. ஒரு மனிதன் வாழ வழியின்றி தற்கொலை செய்ய முடிவெடுக்கும் முன் கொலை செய்யப்படுகிறான். சாதி, மதம் உள்ளிட்ட உப்புச் சப்பில்லாக் காரணங்களுக்காக. அவ்வாறு கொலை செய்யப்படுகையில் இங்குள்ள

“சட்டங்கள் விசிலடிக்க
ஜனநாயகம்
கை தட்டுகிறது”

பாராளுமன்றங்களில் சாதி மதத்திற்கு ஏதிராகப் பேசுபவர்களின் (குயில்கள்) குரல்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. காக்கைகளாய் கலகம் செய்கின்றனர். மக்கள் தொகைதான் பெருகிக் கொண்டே போகிறது. ஆனால் வறுமைகள் இன்னும் ஒழிக்கப்படவில்லை. இராம ஓவியங்கள் தீட்டுவதற்கு மனித இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். அதைத் தூரிகையில் இட்டு வரைகிறார்கள். ஆனால் மனித

இரத்தத்தை உறிஞ்சுகிறவர்களுக்கு ஆதாரவாகப் பேசுகின்ற கூட்டங்களின் மத்தியில் இந்தியா உள்ளது. மதங்களையும் சாதிகளையும் தோளில் தூக்கிச் சுமக்கிறார்கள். இவர்களைக் கண்டு கடவுள்கள் ஒளிந்து கொள்கிறார்கள்.

அன்னிய முதலீடுகளையும், முதலாளிகளையும் எங்கள் குருதியால் குளிர்விக்கிறார்கள். மனித வாழ்க்கையை முதுமக்கள் தாழிகளில் போட்டு மூடிவிடுகிறார்கள். கவிஞர்களும், எழுத்தாளர்களும், பத்திரிக்கையாளர்களும் எதிர்ப்புக் காட்டாமல் அவர்களோடு இணங்கிப் போகிறார்கள். ஆகவே, இந்தியா என் காதலி அவளை வேறு வழியின்றி காதலிக்கிறேன் என்று முழங்குகிறார்.

குற்றப் பத்திரிக்கை என்னும் கவிதையில் காதலைக் குற்றமென விளக்குகிறார். காதலியின் நினைவுகளாய் தவிக்கும் மனநிலையைப் பேசுகிறார்.

கம்பன் காவியத்தில்

வாலி வதை

கண்ணே நீ செய்வது

வாலிப வதை!

கம்பன் காவியத்தில் வாலி வதை என்பது முக்கியத்துவமானது. வாலி நேர்மையானவன். வாலியைக் கொன்ற இராமன் நேர்மை தவறி மறைந்திருந்து கொலை செய்கிறான். இருந்தபோதிலும் இராமனைத்தான் கொண்டாடுகிறார்கள். காதலில் நேர்மை இல்லை. ஆனபோதும் காதலைத்தான் கொண்டாடுகிறார்கள். நியாய விலைக்கடையில் நிற்க வைப்பது போல் என் ஆசைகள் வரிசையில் நிற்கின்றன. பூ, கைக்குட்டை, பேனா,

புன்னகை என்று எதுவும் இருப்பில் இல்லை என்று நியாய விலைக் கடையில் சொல்லப்படும் பதில்கள் போல காதலின் பதில்கள் உள்ளன.

குழந்தைகள்
கையில் கிடைத்த
பொம்மை போல்
உன் கையில்
கிடைத்திருக்கிறது
என் காதல்!
உருட்டி விளையாடு.....
உடைத்து விடாதே!

என்று காதலின் உணர்வுகள் மறுக்கப்பட்டு புறந்தள்ளப்படும் நிகழ்வுகளை உணர்த்துகிறார்.

நிலையற்ற வாழ்கை உணர்த்தும் கவிதைகள்

ஞானம் என்ற கவிதையில் மனிதன் தன்னிடம் இருக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதில்லை. மாறாக அவன் கிடப்பில் போடுகிறான். பின்பு அப் பொருட்களை வெளியே கடத்திச் செல்லுகையில் விடுபட்ட பக்கங்களாய் நிற்கையில் பயன்படுத்தாமல் விடப்பட்டவை ஞானத்தில் உதயமாகிறது. பழைய புத்தகங்களைப் போல என்பதை உணர்த்துகிறார். புத்தகங்கள் வீட்டின் மூலையில் அடுக்கிக் கிடக்கின்றன. அதே புத்தகங்கள் எடைக்குப் போடும்தான் தெரிகிறது. அதில் படிக்காமல் விடப்பட்ட பயனுள்ள பக்கங்கள் என்று குறீயீடு படக் கூறுகிறார்.

மனித வாழ்க்கையைப் பெட்டி படுக்கைகள் சுமந்தபடி செல்லும் பயணம் எனச் சுட்டுகிறார். பல்வேறு பயணங்களில் செல்லும் மனிதர்கள் தங்கள் உடைமைகளை அதாவது உடுத்தத் துணி, போர்த்துவதன் படுக்கை என்ற பொருள்களைத் தான் சுமந்து செல்லுகிறார். மனித வாழ்க்கைப் பயணத்தில் இத்தகைய பொருட்களை மனிதன் செல்லும் இடமெல்லாம் உடன் கொண்டு செல்லுகிறான். எப்போது இப்பொருட்களை உடன்சுமந்து செல்லாமல் இறங்கி வைக்கிறோமோ அப்போது சுற்றியிருப்பவர்கள் நம்மைச் சுமக்கத் தொடங்குகிறார்கள் என்று பயணம் முடிந்தநிலை உயிர்ப் பிரிந்த நிலை என்பதை வாழ்க்கை என்பது என்ற கவிதையில் உணர்த்துகிறார்.

சமூகத்தில் நிகழும் உண்மைச் சம்பங்களை, அவலங்களைத் தம் கவிதையில் வடித்தெடுக்கிறார் மேத்தா. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவிகள் மூவரை தர்மபுரியில் நடந்த சாதி, அரசியல் கலவரத்தில் உயிரோடு எரித்தனர். தமிழகத்தில் அரசியல் கட்சியின் சுய இலாபத்துக்காக நிகழ்த்தப்பட்ட அச் சம்பவத்தில் கொடூரமான முறையில் மூன்று அப்பாவி மாணவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டன. இதனை, உயிர் பாடும் ஒப்பாரி என்ற கவிதையில் அம் மாணவிகளின் அம்மாவின் குரல்களாய்க் கவிஞர் பாடுகிறார்.

காலையில் கல்லூரி சென்ற மகள் மாலையில் வீடு திரும்புவாள் என்று வாசலில் காத்திருந்தேன். மாலையில் பூக்கள் மலர்ந்து மணம் வீசும் தருணத்தில் வழிபார்த்துக் காத்திருந்தேன். வரும் மகளை ஆரத்தி எடுப்பதற்கு மஞ்சள் அரைச்சு வச்சேன் காத்திருந்தேன்.

மணமா மணக்குற என்

மாமதுர மல்லிகைய

பொணமா தூக்கிவந்து

போட்டுட்டாக வீட்டுக்குள்ள!

ஓர் அரசியல் தலைவர் ஊழல் செய்ததற்காக அவர்க்குச் சட்டம் தண்டனை வழங்கி உள்ளது. இதை எதிர்த்து அவரின் ஆதரவாளர்கள் ஊருக்குள் கலவரத்தை வேண்டுமென்றே நிகழ்த்தினர். இச் செய்தி பத்திரிக்கைகளில் வெளிவந்தும், தொலைக்காட்சியில் வெளிவந்தும் எழுதப்படிக்கத் தெரியாத அம்மாவால் கண்டுபிடிக்க முடியவில்லை. புரியவும் இல்லை. தன் உழைப்பில் கிடைத்த பணத்தை மிச்சபிடித்து அரைவயிறு உண்டு வாழ்ந்து வரும் அம்மா தன் மகள் கல்வியில் சிறந்து தன்னையும் தன் வறுமையும் போக்குவாள் என்ற கோட்டையை மனதிற்குள் கட்டிவைத்தாள்.

கோயிலுக்குப் போறதுக்குக்

கூடையில பூப்பறிச்சேன்

பூப்பறிச்ச கூடையில

தீப்புடிச்ச ஞாயமென்ன?

எங்கோ நடக்கும் வன்முறைகளில், யாருக்கோ கிடைக்கும் ஆதாயங்களுக்காகத் தன் மகள் கருகுவதைத் தீயில் வேவதை ஏற்றுக் கொள்வது என்பது என்ன நியாயம்.

பெத்த வயிறெரிய

பேதலிச்சு மனமெரிய

சுத்தி நெருப்பெரிய

எம்புள்ள

கத்துனது கேக்கலையே!

என்று தன் அபயக் குரலை எழுப்புகிறாள். அவரவர் பிள்ளைகளைப் பெத்து வளர்த்திருந்தால் பிள்ளைகளை எரிக்க மணம் வருமா? என்று தன் கோபக் குரலில் கேட்கிறாள். குப்பைகளை ஒன்று சேர்த்துத் தீமூட்டி குளிர் காயும் ஊருக்குள். கொழுந்து போன்ற பிள்ளைகளைத் தீ வச்சு குளிர் காய்ஞ்ச பாவி யாருன்னு தெரியலையேன்னு பரிதவிக்கிறாள். ஊன் உயிர் உருகிறது. மனம் பதறுகிறது.

தண்டிக்கச் சட்டமுண்டு
சடத்துல ஓட்டையுண்டு!
அப்பீலும் வக்கீலும்
தப்ப வழி செஞ்சாலும்
பெத்த வயித்துக்குள்ள
படிச்ச நெருப்பு இது
சுத்தி வளைச்சுருமே….
சுழட்டி அடிச்சிருமே!

என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறாள். இந்தியச் சட்டங்களைப் படித்த வழக்கறிஞர்கள் குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தருவதற்குப் பதிலாக, அதிலுள்ள ஓட்டைகளில் தப்பிக்கச் செய்து ஆதாயம் தேடுகின்றனர். குற்றவாளிகளைக் காப்பாற்றும் உலகமாகவும் மாறியிருக்கிறது. எனினும் பெத்த வயிறு கருகினது போல அவர்களும் வாழ்க்கையும் கருகிவிடும். நெருப்பில் அழிந்து விடுவர் என்று தன்

சாபத்தினால் பழிதீர்க்கும் அவலத்தைத் தவிர அவளால் வேறொன்றும் செய்ய முடியவில்லை என்று உணர்த்தப்படுகிறது. குற்றவாளிகள் தப்பித்து மீண்டும் குற்றங்கள் துணிவுறச் செய்யும் நாடாக உள்ளது. இதில் படிப்பறியாத, அரசியல் பலமில்லாத, அதிகாரத்துவம் பெறாத மக்கள் படும் திண்டாட்டத்தைக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

அரசியல் கிண்டல்கள்

குடியரசு தினமும், சுதந்திர தினமும் இந்திய அரசமைப்பில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் விழாக்கள். கொடியேற்றங்கள், இராணுவ அணிவகுப்புகள், பண்பாட்டு அணிவகுப்புகள், தேசம், தேசியம் குறித்த சிந்தனைகளை முழங்குதல், மரியாதை செய்தல், அரசியல் நிமித்தமான, சந்திப்புகள், கலந்துரையாடல்கள், விருந்துகள், உபசரிப்புகள், வாழ்த்துக்கள், மேடைப் பேச்சுக்கள் என பலநிலைகளில் கொண்டாடப்படுகின்றன. அவ்வாறு நிகழ்ந்த குடியரசு தினத்தில் ஆளுநர் மாளிகையில் நிகழ்ந்த விருந்தினைப் பற்றிக் கவிஞர் எழுகிறார்.

ஆளுநர் மாளிகையில்
விருந்து
அனைத்துக் கட்சித்
தலைவர்களுக்கும்!

பரிமாறிக் கொண்டிருந்த
பணியாளர்கள் தமக்குள்
பேசிக் கொண்டனர்.

”யார்

யாரைச்

சாப்பிடப் போகிறார்களோ?”

நீயும் நானும் கவிதையில் இரு நண்பர்கள் பேசிக் கொள்கிறார்கள். அவர்களின் இருநிலை வாழ்க்கையை. அதிகாரத்தில் ஒருவன் போராட்டத்தில் மற்றொருவன் என்ற நிலையில் உரையாடல் நிகழ்கிறது. அதிகாரத்தைப் பெற்றவன் வெற்றிக்கும், எளிய மனிதனின் போராட்டத்திற்கும் எதிரெதிர் நிலையான செயல்பாடுகள் உள்ளதைக் கவிதைப் புலப்படுத்துகிறது. அதிகாரத்தைப் பெறுகிறவர்கள் தன்னை வெளிப்படுத்தப் பிறரை மறைக்கின்றனர். சாதாரண மனிதன் உட்காருவதற்காக நாற்காலியைத் தேடுகிறான். ஆனால் அதிகாரத்தில் உள்ளவன் உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்து மரியாதை செய்வதற்காக ஒரு நாற்காலியை (ஆட்சி) எதிர்ப்பார்க்கிறான்.

மனிதர்களின் எண்ணங்களை வாக்குகளாக மாற்றி வெற்றி பெற்று அதிகாரத்தைப் பிடிக்கின்றனர். எளிய மனிதன் பொது மக்களின் தேவைகளைக் கோரிக்கையாக மாற்றி அவற்றைப் பெறுவதற்கு மனிதர்களின் உதவி நாடுகின்றனர்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் கனவுகள் விமானத்தில் பறப்பது போலவும், தேவதைகளோடு உலா வருவது போலவும் அமைகிறது. ஆனால் சாதாரண மனிதனின் கனவில் அழுக்கடைந்த பேருந்துகளும் வியர்வை சொட்டும் மனிதர்களும் தான் காட்சியளிக்கின்றனர்.

“போனால் போகிறது

ஒரே ஒரு நாள்

நம் கனவுகளை
இடம் மாற்றிக் கொள்வோம்”
என்கிறாய் நண்பனே!

வேண்டாம் –
என் கனவுகளின் நரம்புகளில்
ஓடிக் கொண்டிருப்பது
சிவப்பு ரத்தம்!
உன் கனவுகளின் நரம்புகளில்
சிவப்புச் சாயம்!

கனவுகள் இடம் மாறினாலும் காட்சி ஒன்று தான் என்பதை உணர்த்துகிறது. அதிகாரத்தில் பலத்தில் வாழ்கிறவர்கள் சாதாரண மனிதனின் ரத்தம் என்பது சிவப்புச் சாயமாகக் காட்சியளிக்கும். சாராதண மனிதனின் வாழ்க்கை ரத்தமும் சதையுமாகக் காட்சியளிக்கிறது என்று சமூக ஏற்றத்தாழ்வுகளையும், அதிகாரத்தனத்தைக் குறிப்பிடுகிறார்.

சமத்துவ தாகம்

இந்தியா முழுவதும் மத ஒற்றுமை நிலைக்க வேண்டும் என்பது கவிஞரின் தாகம். அதனைத் தம் கவிதையில் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டிச் செல்கிறார். இசுலாம், கிறித்துவம், இந்து இந்த மூன்று மதங்களும் ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது என்று நிரூபணம் செய்வதற்காக மனிதர் பாடும் பாடு அலாதியானது. தன் மதக் கருத்துதான் உயர்ந்தது. அதனை ஏற்று அனைவரும் செயல்பட வேண்டும். வணங்க வேண்டும்

என்பதற்காக ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் அவலங்களும், கட்டிடங்களைத் தகர்த்தெறியும் கூத்துக்களும் இந்தியாவில் பன்முனைப்பில் நிகழ்ந்தேறுகின்றன.

இடிந்து கிடக்கும் மசூதிகளுக்கு உள்ளிருந்து இறைவன் எட்டிப் பார்க்கிறான். எரிந்து கிடக்கும் தேவாலயங்களின் சாம்பல் குவியலில் கர்த்தரின் தலை அசைகிறது. காயம் பட்டுக் கிடக்கின்றன கோயில்கள். இடிப்பு சத்தத்தின் காதுகளைப் பொத்தியபடி கண்களைத் திறந்து கடவுள் பார்க்கிறான். இந் நிகழ்வுகள் நிகழும் போதெல்லாம் மக்கள் வேடிக்கை பார்க்கின்றனர். அப்போது இம் மூவரின் குரல் ஒரு சேர ஒலிக்கிறது. அவ் ஒலிப்பில் மனிதத்தன்மையைத் தேடுகிறது.

“உங்களில் யாராவது
ஒரு மனிதன் இருந்தால்
வரச் சொல்லுங்கள் –
ஒன்றாக நாங்கள்
உயிர்த்தெழுகிறோம்!”

சிறு குறிப்பு வரைக

ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்ற கவிதைத் தொகுப்பில் உண்மைச் சம்பவங்களின் நிலைகளைக் கவிஞர் தம் கவித்தன்மையில் திறம் உணர்த்துகிறார். சிறு குறிப்பு வரைக என்ற ஒற்றைத் தலைப்பின்கீழ் நெய்வேலி (டிசம்பர் 2003), குஜராத் (2002), தஞ்சாவூர் (ஜனவரி 2003), ஈராக் (2003), அமெரிக்கா ஆகிய பகுதியில் நிகழ்ந்த பிரச்சனைகளையும் போராட்டங்களை பட்டியலிடுகிறார். அப்போராட்டத்தின் அடிப்படைகள் தகர்ந்ததைச் சுட்டுகிறார்.

நெய்வேலியில் 2003 ஆம் ஆண்டு தண்ணீர் வேண்டி பிரமாண்டமான பேரணி நடந்தது. நிலக்கரி சுரங்கங்களால் நிலவளம் சுரண்டப்பட்டு மக்கள் அத்தியாவசியத் தேவையான தண்ணீர் மறுக்கப்பட்ட நிலையில் போராடினர். இந்த போராட்டத்தினை நடிகர்கள் பங்கேற்று அதைத் திசை திருப்பி மக்களின் பிரச்சனைகள் மழுங்கடிக்கப்பட்டன. நடிகர்களைக் காணக் காத்துக்கிடந்த கூட்டம் மழை வந்து அவர்களைக் காண்பதைக் கெடுத்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள். அவர்களின் நோக்கம் நிறைவேறாமல் திசை திருப்பப்பட்டதைக் காணமுடிகிறது.

குஜராத்தில் நடந்த மதக் கலவரத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். வீடுகளில் சென்று வெட்டிச் சாய்த்தனர். எங்கும் பிணங்களாகக் காட்சியளித்தது. இதனைக் கவிஞர் மதம் பிடிக்க வேண்டிய யானைகள் அமைதியாய் திரும்பின. ஆனால் மனிதம் காக்க வந்த மனிதனுக்கு மதம் பிடித்துள்ளதைக் குறிப்பிடுகிறார்.

குஜராத் வீதியொன்றில் யானைகள் நுழைந்தன. திரும்பின. எவ்வித அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. ஆனால், மதம் பிடித்த மனிதர்கள் சென்ற வீதிகளில் வீடுதோறும் பிணங்கள் விழுந்து கிடக்கின்றன.

தஞ்சைப் பகுதியில் மழையில்லாமல் விவசாய நிலங்கள் வறண்டு வறுமையில் வாடிய விவசாயிகள் எண்ணிறந்தோர் உயிரிழந்தனர். ஊருக்குச் சோறுப் போட்ட விவசாயிகளுக்கு இப்போது ஊர்க் கூடி சோறு போடுகிறது. காவிரியில் தண்ணீர் வரவில்லை. இறந்த விவசாயிகளுக்காக மயானத்தில் பொங்கல் வந்துவிட்டது.

ஈராக் போர் நிகழ்ந்து பல்வேறு அழிவுகள் நிகழ்ந்தன. அழிந்து போனப்பின் தான் தெரிந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விளைவால் நிகழ்ந்தது. பேரழிவு ஆயுதங்கள் ஏந்துவதற்கு ஏகாதிபத்தியத்தின் தேவை நிறைவு செய்வதன் நோக்கமாகும். அமெரிக்காவிற்குத் தேவை எண்ணெய் எரிபொருள். எண்ணெய்யின் தேவையை விலை கொடுத்து வாங்கவில்லை. மாறாக, ஏகாதிபத்தியத்தின் ஆயுதங்களைக் கொண்டு அச்சுறுத்தி வாங்குகிறது. கைப்பற்றுகிறது. ஒரு நாட்டைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் அதன் வளங்களைத் தானே அனுபவித்துக் கொள்ளலாம் என்ற மமதையில் செயல்படுகிறது. இதனைக் கவிஞர், அமெரிக்கா என்னும் தலைப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

தலையில் எண்ணெய்
தடவுவார்கள் உலகில்…..
அமெரிக்காவோ
எண்ணெய்க்காக
வளைகுடா நாடுகளின்
தலையைத் தடவுகிறது…..

காதல் நினைவுகள்

காதலை ஒவ்வொரு கவிஞர்களும் பன்முகத் தன்மையில் எழுதிச் செல்கிறார்கள். காதல் மனித வாழ்வின் அடிப்படை. திருமணம் காதல் வாழ்வில் பிரிக்கமுடியாத அங்கம். காதல் கவிதையின் அடித்தளம். வெளிப்பாடு. கவிதைக்குள் காதலைக் கொணர்வதும், காதலைக் கவிதையாகவே எழுதுவதும் கவிஞனின் மேன்மை. ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும்

தலைப்பில் மேத்தா காதலைச் சிலாகித்துச் சொல்லுகிறார். காதலின் உன்னதம் பிரிவுகளில் நிகழுவது. பிரிவுகள் காதலை மிகுதிப்படுத்துவது. நினைவுகளோடு வாழும் காதல்கள் புனிதத்தன்மை பெறுவது என்பதான புரிதலைத் தோற்றுவிக்கிறார்.

இக் கடிதம் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாய் என்னை உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிடும். நீ கடிதத்தைத் தொட்டவுடன் எனக்குச் சிலிர்க்கும். எழுத்துக்களின் வழியே நான் உன்னைப் பார்க்கிறேன். காற்று உன் வீட்டுக் கதவுகளை அசைப்பதைப் போல உன் இதயத்தை அசைக்க நான் எடுத்த முயற்சிகள் உன் நினைவிற்குத் தெரியும். உன் பார்வைகள் என்னுள் ஆல்பாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அர்த்தப்படுத்த அகராதிகள் கிடைக்கவில்லை. உன் வார்த்தைகள் வாடாமல் இருக்கிறது. இப்போதாவது என்னை என்னிடம் விட்டுச் செல். உன் திருமண அழைப்பிதழில் அறிந்து கொள்கிறேன். பரிசு விழுந்தது யாருக்கு என்பதை என்று காதலின் ஆழத்தை உணர்த்துகிறார்.

மனக்கதவு என்னும் கவிதையில் காதலின் இறுக்கத்தைக் குறிப்பிடுகிறார்.

யார் தட்டிய போதும்
திறந்ததே இல்லை

இப்போது
ஒவ்வொரு கதவையும்
ஓங்கி ஓங்கித் தட்டி
ஓய்கிறபோது
தெரிகிறது....

தட்டும் கையின் வலியும்

கவிதையின் உரையாடல்

காதலின் உரையாடலை இதயத்தின் தொலைபேசி என்ற கவிதையில் புலப்படுத்துகிறார். டிசம்பர் 2002 இல் தொடங்கிய உரையாடல் அக்டோபர் 2003 இல் முடிகிறதாகக் கவிதை அமைகிறது. கால இடைவெளியில் ஏற்படும் காதல் உணர்வின் தன்மைகளை வார்த்தைகளாக வடித்துத் தருகிறார்.

அவன்: அன்பானவளே! நேரம் கேட்டாய் என்னைப் பார்ப்பதற்கு அறிந்து கொண்டேன் என் நேரம் நல்ல நேரம் என்று

அவள்: தேடி வந்தேன் உன்னை அன்றுதான் நான் தொலைந்து போனேன்.

அவள்: ஒவ்வொரு தேதித் தாளின் மீதும் உட்கார்ந்திருக்கிறது உன்னைச் சந்தித்த முதல் தேதி.

அவன்: என் வாழ்க்கையை நீ தான் முடிவு செய்யப்போகிறாய் என்று முதல்முறை பார்க்கும் போதே முடிவு செய்துவிட்டேன்.

அவள்: ஓங்கி நிற்கும் கட்டிடங்களெல்லாம் நினைவுப் படுத்தும் உன் கம்பீரத்தை

அவன்: உன் நளினத்தை நடந்து போகும் நதிகளெல்லாம் ஞாபகப்படுத்தும்.

அவன்: ஏதேனும் தோன்றினால் எழுதுங்கள் என்கிறாய். ஏதேதோ தோன்றுகிறது…. எழுத முடியுமா?

அவள்: ஒரே ஒரு புகைப்படம் சேர்ந்து எடுத்துக் கொள்வோம் என்கிறாய் உனக்குத் தெரியுமா? தனித்தனியே படம் எடுத்துக் கொண்டாலும் இருவரும் அதில் இருப்போம்.

அவன்: உன்னிடமே வந்து உன் தோழிகள் என்னுடைய கவிதைகளைச் சொல்லக் கூடும்! அவை உன்னைப் பற்றிய கவிதைகள் என்று உளறிவிடாதே!

அவள்: தோழிகள் எதை எதையோ கேட்டதுண்டு என்னிடம்... என்னையே கேட்டவன் நீ

அவன்: நீ பார்த்த பார்வையால் பற்றிக் கொண்ட தீக்குச்சி நான் எரிந்து கொண்டே இருப்பேன் திரும்பி வந்து நீ அணைக்கும் வரை.

அவள்: சில காலமாய் எனக்குள் ஒளிந்து கொண்டிருந்தேன் இப்போது உனக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறேன்.

அவன்: கூட்டல் என்பது உன் பெயரோடு என் பெயரைச் சேர்த்துச் சொல்வது கழித்தல் என்பது உன் பெயரை மட்டும் சொல்வது.

அவள்: மூச்சுவிட மறந்து விட்டேன் என் வீட்டில் உன்னைப் பற்றிப் பேச்சு வந்தபோது

அவன்: …………………

அவள்: என் முகவரி கேட்கிறார்கள் உன் முகவரியைச் சொல்லட்டுமா?

அவன்: உயிரையே கொடுக்கலாம் உன் காதலுக்கு... ஒரே ஒரு தயக்கம் என் உயிரை நம்பி ஏழெட்டு உயிர்கள்!

அவள்: அன்று காதலியின் முகத்திரையைக் கழற்றச் சொன்னாய் நீ இன்று காதலின் முகத்திரையைக் கழற்றச் சொல்கிறேன் நான்.

அவள்: யார் நீங்கள்? என்று நீ கேட்டபோது சட்டென்று மறந்துவிட்டது நான் யார் என்று. தெளிவாகத் தெரிந்து விட்டது நீ யார் என்று.

அவன்: ……………………

அவன்: கண்ணாடி கைகுட்டை கவிதைத் தாள், பேனா எதையாவது மறந்து விட்டுவிட்டு வருவது வழக்கம்.... உன்னைப் பார்க்க வரும்போதெல்லாம்! வெகு கவனமாய் இம்முறை கொண்டு வந்து விட்டேன் என் திருமண அழைப்பிதழை உன்னிடம் கொடுக்காமலே.

அவள்: உன்னுடைய ஒவ்வொரு பிறந்தநாளன்றும் என் வாழ்த்து மடல் வரும் உனக்கு.... உனக்காகப் பிறந்தவள் எவள் என்று உணர்த்துவதற்கு!

அவன்: உன் கையெழுத்தைப் பார்க்கும் போதெல்லாம் படபடக்கும் ஒரு ஜன்னல் என் இதயத்தில்...

அவள்: மீண்டும் நாம் சந்திக்கும்போது உன்னிடம் காட்டுவதற்காக பத்திரப்படுத்தி வைத்திருப்பேன் இந்தக் கண்ணீர்த் துளிகளை!

அவன்: எந்த உறவையும்விட உயர்ந்தது நம் பிரிவு. கடவுளைவிட ரகசியமானது நம் காதல்...

அவள்: கவலைப்படாதே! நீ என்னைக் காதலித்ததை ஒருவருக்கும் சொல்லமாட்டேன். ஆதிவாசியைப் போன்றது என் இதயம் அடித்துச் சொல்லும்... அடிபட்டதைச் சொல்லாது!

அவன்: வாழ்க்கைப் பாதையில் கண்டும் காணாமல் செல்லக்க கற்றுக் கொடுப்போம்... காதலைக் கற்றுக் கொடுத்த நம் கண்களுக்கு!

இந்த உரையாடல்கள் காதலையும் அதன் ஆழத்தையும் உணர்த்தவல்லன. பல்வேறு சந்தர்ப்பங்களில் காலகட்டங்களில் நடைபெற்ற உரையாடல் வாழ்க்கைப் பாதையில் காதலின் அழுத்தத்தைச் சொல்லிச் செல்கிறது.

ஓர் உரையாடல் என்னும்தலைப்பில் நீதிமன்றம், காவிரி நடுவர்ஆணையம் அனைத்து உத்தரவுகளையும் மீறிக் கர்நாடக அரசு தமிழகத்திற்குத் தண்ணீர் தர மறுத்ததைக் உரையாடல் வடிவில் தனக்கே உரிய கவிதை பாணியில் எழுதியுள்ளார்.

செப்புத் தகட்டில் எழுதுவதா? கல்லில் செதுக்குவதா? எதில் எழுதி வைத்தால் நிலைக்கும் இந்திய ஒருமைப்பாடு என்றார்.

தயங்காமல் சொன்னேன் தண்ணீரில் எழுதுங்கள் என்று..

நீரில் மேல் எழுத்து நிலைக்காதே என்றார்.

நீரில் எழுதாவிட்டால் இந்திய ஒருமைப்பாடு நிலைக்காதே என்றேன்.

எந்த நீரில் எழுதச் சொல்வது என்றார்.

கிருஷ்ணாவைக் கூப்பிட்டுக் காவிரியில் எழுதச் சொல்லுங்கள் என்றேன்.

கவிதைகளில் மிளிரும் இத்தகைய வரிகள் இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை எழுத வேண்டிய உண்மை முகங்களைக் காட்டுகிறது. தேசிய ஒருமைப்பாடு என்பது பாரபட்சம் காட்டப்படுவதாக இருக்கிறது. பாரபட்சம் காட்டப்படுவது ஒருமைப்பாடே அல்ல என்பதால் தண்ணீரில் எழுதச் சொல்கிறார் கவிஞர்.

கும்பகோணம் பள்ளியில் குழந்தைகள் எரிந்து சாம்பலானது எழுதுகையில் கவிதையின் சொற்களில் கோபம் வெகுண்டெழுகிறது.

பள்ளியில்

அடுப்பு மூட்டியது

பிள்ளைகள் சாப்பிடவா?

பிள்ளைகளைச் சாப்பிடவா?

கண்ணகி கோவலனின் இறப்பிற்கு நீதி கேட்டுச் சென்று, மன்னன் நீதி தவறியதை அறிந்து கொதித்தெழுகிறாள். அவள் தன் மார்பினைத் திருகி எறிந்து மதுரையை எரிக்கிறாள். கும்பகோணத்தில் கொளுந்து எரியும் நெருப்பில் பற்றி எரிகின்றன. பாலூட்டிய அன்னையின் மார்புகள். மார்புகள் தீப்பிழம்பாக மாறிய தமிழ்நாட்டில் இன்று தீக்கிரையாகின்றன என்று குறிப்பிடுகிறார்.

மதுரையை எரித்த
கனல்
கண்ணகியின் மார்பு!
கும்பகோணத்தில்
கொளுந்து விட்ட நெருப்பில்
பற்றி எரிகின்றன
பாலூட்டிய மார்புகள்

கும்பகோணத்தில் மகாவதம் என்ற தலைப்பில் அமைந்த கவிதை வரிகளாகும்.

வெற்றியின் மறுபக்கம் என்ற கவிதையில் சுயநலச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறார். மனம் என்பது பிறர் மீது இரக்கம் காட்டுவது, அன்பு செலுத்துவது, பிறருக்காகவும் இருக்கக்கூடிய மனிதநேயம் ஆகும். ஆனால், உலகியலை உணர்ந்த அறிவுஜீவிகள் மனத்தை இறுக்கமாக வைத்துள்ளனர். அதனைப் பிறருக்காக அர்ப்பணிக்கவோ, பிறரின் உணர்வுகளுக்கு இடம் கொடுப்பதாக அமைப்பதில்லை. மாறாக தன்னைப் பற்றிய எண்ணம் மிகுதியாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

அனுபவம் மிகுந்த அறிவுஜீவி பிறருக்கு அறிவுரை கூறுவதன் மூலம் தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதைக் காணமுடிகிறது. மனதைத் திறந்து வைத்தால் பிறர் வந்து புகுந்து விடுவர், அமர்ந்து விடுவர், ஒட்டிக் கொள்வர், உடுத்திக் கொள்வர் என்று பேசுகிறார். புகுதல், அமர்தல், ஒட்டுதல், உடுத்துதல் போன்ற வார்த்தைகள் அவரின் சுயநலத்தின் வெளிப்பாடு. புகுதல் என்பது பலவந்தமானது. அமர்தல் என்பது இளைப்பாறுதல் என்பதன் பாற்படும். ஒட்டுதல் என்பது இரந்து நிற்பர். உடுத்துதல் என்பது அவர்களது தேவையை நிறைவு செய்து கொள்ளுதல் என்ற கருத்துநிலைகளில் உணரமுடிகிறது. ஆக தன்னிச்சையாக எதுவும் நிகழுவதில்லை. பிறரின் தன்மைக்கேற்பத் தன்னை ஆட்கொள்ளுவர். அறிவுஜீவிகளின் புத்திசாலித்தனம் பிறரின் தேவைகள் தன்னால் நிறைவேறி விடக் கூடாது என்பதில் கவனமாக இருத்தல் என்ற புரிதலும் உருவாகிறது.

அனுபவம் மிகுந்த
அந்த
அறிவு ஜீவி
அறிவுரை கூறினார்.

“மனதைத்
திறந்து வைத்திடாதே
எவனாவது வந்து
புகுந்து கொள்வான்
மனதை
விரித்து வைத்திடாதே.....
எவனாவது

அமர்ந்து கொள்வான்...

மனதை
ஈரமாய் வைத்திடாதே....
எவனாவது வந்து
ஒட்டிக் கொள்வான்

மனதை
உலர வைத்திடாதே
எவனாவது வந்து
உடுத்திக் கொள்வான்...."

மேத்தா தன் கவிதைகளில் சமகாலத்தில் நிகழும் சம்பவங்களின் உண்மை முகங்களை உணர்விலேற்றும் விதத்தில் கவிதையில் புனைந்துள்ளார். கவிதைகள் உணர்வுகளின் தன்மைத்தானது. அவரின் கவிதையில் காதல், மனிதநேயம், அரசியல், சமுதாயம், சாதி, மத வேறுபாடுகள் போன்றவற்றின் உண்மை முகங்களைத் தோலுரிக்கும் சமகாலத்திய பதிவுகளே அவரது கவிதைகளாகும். உணர்வின் வெளிப்பாட்டில் அமைந்தாலும் வாசகர்களின் மனதில் ஆணிஅடித்தாற் போன்ற உணர்வுகளை எளிமையான சொற்களில், நடையில் பதிவுசெய்கிறார்.

அலகு – 4

கண்ணாடிக் கல்வெட்டுக்கள்

– பா.விஜய்

சரித்திரம் மன்னர்களிடம் மட்டும் தொடங்குவதல்ல. மன்னர் செய்த சாதனைகள், அதிசயங்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளதால் அவை சரித்திரமாகப் பேசப்படுகின்றன. மக்கள் செய்த சாதனைகள் சரித்திரங்களுக்கு எந்த ஆதாரமும் கிடைக்கப்பெறவில்லை. ஆனாலும், அவர்களிடம் சாதனைகளும், சரித்திரங்களும் மலிந்து கிடக்கின்றன. சில இடங்களில் வாய்மொழியாக, திரிபு பெற்றும் கிடக்கிறது. ஒவ்வொரு ஊருக்கும் மண்ணுக்கும் ஒரு கதையும் பாதிப்பும் உண்டு. அக் கதைகள் அப்பகுதி மக்களால் வாய்மொழியாகக் கிடக்கின்றன. அவை நிசங்கள். அம் மக்களோடு வாழ்ந்து வரும் மரபுகள். வழிபாடுகள். சடங்குமுறைகள். அவ்வாறு சொல்லப்பட்ட, கேட்கப்பட்ட சம்பங்களின் தொகுப்பாக அமைகிறது இந்நூல். இவைகளுக்குத் தகுந்த ஆதாரமில்லை என்றபோதும் அவற்றைத் திரிபுகளோடு சேர்ந்து எழுதப்பட்டுள்ளவை செய்திகள் கண்ணாடிக் கல்வெட்டுக்களாக மிளிர்கின்றன. ஹைகூ வடிவம் போன்ற கவிதை வடிவில் அமைந்த அக் கல்வெட்டுக்கள் மறைக்கப்பட்ட சரித்திரத்தினை வெளிச்சமாகக் காட்டுவன.

காவல் மரம்

தமிழகத்தின் வயல்வெளிகளில் முத்தும் பவழமும் மிகுந்திருந்த காலம் சங்க காலமாகும். போர்க்களத்தில் கறைபடிந்த கத்திகளைத் தேன் குளத்தில் கழுவி விட்டு போகத்தில்

குளித்தப்பின் பக்தியில் நீராடிய காலம். வில், மீன், புலி ஆகிய சின்னங்கள் கொடிகளாக வீசிய காலம். அத்தகைய காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இங்கு சரித்திரமாகச் சொல்லப்படுகிறது.

பொள்ளாச்சி அருகில் புகழ்பெற்ற பகுதி ஆனமலை ஆகும். ஆழியாற்றங்கரையில் அமைந்த ஒரு நகரம். அதன் கொன்காணம் என்றும் அழைக்கப்படுகிறது. அதில் வேளிர் குலத்தைச் சார்ந்த நன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் போர் வெறி பிடித்தவன். சேரமன்னனான நார்முடிச் சேரலின் கைவசமிருந்த பாலக்காட்டு கணவாய் மீது நன்னனுக்குத் தீராத விருப்பம். அப்பகுதியைக் கைப்பற்றக் காத்திருப்பான். கைப்பற்றுவான். பின்பு சேர மன்னன் அதனை மீட்பான். இவர்களுக்குள் நிகழ்ந்த போர்முறையாகும். பாலக்காட்டுக் கணவாய்ச் சங்க காலத்தில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகள் இணையும் இடமாக இருந்தது.

பேரூர் – அவனாசி, ஈரோடு – சேலம் ஆகிய வழிகள் ஸ்ரீரங்கப்பட்டினத்தை இணைக்கின்றன. பேரூர் – சூலூர் – பல்லடம் – காங்கேயம் – கரூர் – திருச்சி ஆகிய வழிகள் காவிரிப் பூம்பட்டினத்தை இணைக்கின்றன. ஆனமலை – உடுமலை – பழனி – திண்டுக்கல் ஆகிய வழிகள் இராமேஸ்வரத்தை இணைக்கின்றன. இந்த வழிகள் வணிகப் போக்குவரத்திற்கு வாய்ப்பாக அமைந்தன.

நன்னன் சினம் மிகுந்த தலைவன். குணத்தில் குரூர எண்ணமும் உடையன். மனத்தால் அசுர பலம் கொண்டவன். கொன்காணப் பகுதியை ஆண்ட மன்னனுக்கு கொடிமரம், பட்டத்து யானை, காவல் மரம் (மாமரம்) ஆகிய மூன்று அம்சங்கள் உயிர்நாடியாக

இருந்தன. இம் மூன்று ஆழியாற்றங்கரையை அலங்கரித்தன. நன்னனின் போர்க்கலத் துணைவர்களான கோசர்களும், நண்பர்களான வேளாளர்களும், வீரர்களும், வணிகர்களும் மிகுந்திருந்தனர். காவல் மரத்தில் இலையைப் பறித்தால் கூட நன்னன் தலையைத் துண்டிக்கும் தண்டனை தருவான். அவனது அரண்மனையில் நெல்லும், நெல்லை விற்றப் பொன்னும் பொருளும் மிகுதிந்திருந்தாலும், அவனது எண்ணம் காவல் மரத்தின் மீது மிகுதியாக இருந்தது. கொங்கு நாட்டுப் பெண்கள் ஆழியாற்றங்கரையில் குளித்துக் காவல் மரத்தை வணங்கினர். தேயிலை மரங்களும், பலாமரங்களும் மிகுந்திருந்த சோலையில் உச்சம் தொட்டது காவல் மரமான மாமரம் தான்.

அவ்வூரில் மிகுந்திருந்த வணிகர்களில் முதன்மையானவரும், தலைமையானவரும் புலவருமாகிய மாமூலனார் இருந்தார். அரசனுக்கு நிகரானவர். கொங்கு நாடு முத் கொச்சின் பரப்புவரை வியாபாரத்தில் தோய்ந்தவர். மாமூலனாரின் வரவுசெலவுகளைக் கணக்குப் பார்ப்பதற்குப் பெரும் படை இருந்தது. அவருக்கு அழகு நங்கையாக மகள் இருந்தாள். அன்னையை இழந்த அவளுக்கு அன்னையாகவும், தந்தையாகவும், அனைத்துமாகவும் இருந்தார் மாமூலனார். மாங்கனிக்குக் காவல் மரம் தெய்வ மரமாகும். இயற்கை பேரழகு இருந்த ஊரில் தோழிகளோடு அழகு மங்கையாக வலம்வந்தாள். ராணி போல் பல பெண்கள் சேவகம் புரிய வாழ்ந்துவந்தாள்.

அவள் தன் தந்தையிடம் பல வண்ணங்கள் கொண்ட கிளி வேண்டும் என்று கேட்டவுடன் அதை நாடெங்கும் விசாரித்து போர்ச்சியில் பார்த்ததாக மாலுமி ஒருவன் சொன்னான். பாய்மரக் கலத்தில் சென்று வாங்கி தந்தார். ஆச்சரியப்பட்ட மகளிடம் உனக்காக மேல்

வானத்தையும் கீழ் வானத்தையும் அரைத்துத் தருவேன் என்று கூறினார். சித்திரை மாதத்தில் மாம்பழங்கள் பழுத்து சுவைதரும் மாதத்தில் அவள் ஆழியாற்றில் நீராடப் போன வேளையில் மாம்பழம் ஒன்று மிதந்து வந்தது. கனியைக் கையில் எடுத்தாள். இளமஞ்சளும் – இளஞ்சிவப்பும் கலந்த நிறத்தில் மாம்பழத்தை காவல் மரத்தை வணங்கிவிட்டு கடிக்கத்தான் வாய் வைத்தாள். அவளை இரண்டு ஈட்டிகள் சட்டென்று பிடித்தன. நன்னனின் காவல் மரக் காவலர்கள். தோழிகள் கத்தினர். நங்கையும் கூச்சலிட்டாள். ஆற்றில் மிதந்து வந்த கனி அது என்றும் கூறினாள். மாமூலனார் மகள் என்றும் சொன்னார்கள். காவலர் அவர்களை விடவில்லை. நன்னனிடம் கொண்டு சென்றனர். குற்றவாளி ஆக்கினர்.

குற்றவாளிகளைக்
குறைப்பதற்காக
சில நேரங்களில்
சிறைச்சாலைகள்
உருவாக்கப்படுகின்றன!

சிறைச்சாலைகளை
நிரப்புவதற்காக
சில சமயங்களில்
குற்றவாளிகள்
உருவாக்கப்படுகின்றன!

நீதியை
தராசு தட்டில் வைத்து
நிறுப்பதாகவும்

சில நேரங்களில்
சட்டமானது பயன்படுகிறது!

நீதியை
தராசு தட்டில் வைத்து
வியாபாரம் பண்ணவும்
சில இடங்களில்
சட்டமானது பயன்படுகிறது!

நன்னினின் தன்மானமாய் தன் உயிரின் அடையாளமாய் குருட்டுத்தனமாய் குடி கொண்டிருந்த காவல்மரக் கட்டுப்பாடு நங்கையைக் குற்றவாளி ஆக்கியது. போர்க்களங்களில் எதிரிகளின் தலைகளைக் கொய்யும் காட்சி கண்டு கை தட்டுகிற நன்னனுக்குப் பட்டுப்பூச்சி போலுள்ள நங்கையின் இதயம் தெரியவில்லை. நன்னனுக்குத் துணைநின்ற அனைவருக்கும் இச்செயல் பிடிக்கவில்லை. தான் ஒரு தவறும் செய்யவில்லை என்று இதயத்தில் பட்டத்தைப் பேசிய நங்கையின் பேச்சை நன்னன் செவி கொடுத்துக் கேட்கவில்லை. அவள் தலையைத் துண்டியுங்கள் என்று கட்டளையிட்டான்.

வாணிபத்திற்காகச் சென்ற மாமூலனார் குமுறினார். கெஞ்சினார். மன்னா விட்டுவிடுங்கள் என்று துடித்தார். அவருடன் ஆனமலை ஊரே அழுதது. மாங்கனிக்கு நிகராக எண்பது யானைகள், என் வாணிபம், என் உயிர், என் உடல் ஆகிய அனைத்தையும் அர்ப்பணிக்க முனைந்தார். நன்னன் கேட்கவில்லை. செவிமடுக்கவில்லை. எழுதிய தீர்ப்பு மாறிவிடும் என்ற மக்கள் சினந்தனர். அவ்வாறிருக்க தண்டனை நிறைவேறியது. நங்கையின் தலை துண்டிக்கப்பட்டது.

மக்கள் சினந்தனர். கோசர்கள், வேளாளர்கள், வீரர்கள் சினந்தனர். நன்னன் பயந்தான். அவன் சிம்மாசனம் சிதைய, கொற்றக்குடை மானம் முறிந்து வீழ, மக்களைக் கண்டு ஓடினான். மக்கள் புரட்சி தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டில் தான் மக்கள் புரட்சி என்றில்லை. சங்க காலத்திலேயே மக்கள் புரட்சி ஏற்பட்டுள்ளது. மக்கள் புரட்சியைத் தமிழர்கள் அறிமுகம் செய்து வைத்தனர். ஒரு அப்பாவி பெண்ணிற்காக ஒரு சாம்ராஜ்யமே உருத்தெரியாமல் அழிக்கப்பட்டது. அம் மக்கள் வணங்கும் தெய்வமாக அந் நங்கை மாறினாள். அநீதியைத் தட்டிக் கேட்கும் அவதராமானாள்.

ஆனமலைத் தொடரில் இருபது காத தூரத்தில் அந்த வெட்டுப் பாறை மலைப்பகுதி இன்றும் உள்ளது. இப்போது அது கேரளம். பிங்கொனாம் பாறை (பெண்ணைக் கொலை செய்த பாறை) என்று அழைக்கப்படுகிறது. தனக்கு நேர்ந்த அறியாயம் யாருக்கு நடக்கக்கூடாது என்பதற்காக உப்பாற்றங்கரையில் ஓர் தெய்வமாக அப் பெண் உள்ளாள். மாங்கனி தின்றதால் மரண தண்டனைக்குள்ளானதால் மாங்கனியம்மான் என்றாகினாள். பின்பு மருவி மாசாணியம்மன் என்று மக்களுக்குள் தோன்றி விட்டாள். தற்கால நன்னன்களுக்கு மாசாணியம்மன் ஒரு மிரட்டல் அத்தியாயம்.

கவிஞனின் ஜனனம்

அனுபவம் என்பது ஆயுர் வேதக் கடைசல். ஆடு மேய்த்தல், இலை பொறுக்குதல், பூப்பறித்தல், விண்மீன் எண்ணுதல், ஊஞ்சலாடுதல், கீழே விழுதல், எழுதல் என்பது போன்ற அனுபவங்கள் ஏராளம். மனிதனுக்கு மட்டுமல்ல. மண்ணுயிர்கள் அனைத்திற்கும் அனுபவம் பொதுவானது.

மயிலாடுதுறைக்கு மிக அருகில் தேரழுந்தூர் செம்மன் கப்பிகளும், செழிப்பான வரப்புகளும், காவிரிக்கும், மஞ்சளாற்றுக்கு இடையே அமைந்துள்ள ஊராகும். நம் தேரழுந்தூரை திருமங்கையாழ்வார் என்ற மன்னன் அழுந்தூர் என்றே பாடுகிறான் என்று ஒரு சிறுவன் தன் அப்பாவிடம் கேள்வி கேட்கிறான்.

குழந்தை அறிவாளியாவதும்

அறிவிலியாவதும்

பெற்றவர் சொல்லும்

பேருரைகளிலேதான் உள்ளது!

முன்னொரு காலத்தில் அழுந்தூர் என்றே அழைக்கப்பட்டுள்ளது. திருமால் அவதாரமாக கண்ணன் வந்தான். அவன் பெண்களுடன் ஆடிப்பாடுவான். அலற வைத்தான். ஆவினம் வளர்த்தான். குழலூதுவான். பசு மேய்ப்பது அவனுக்குப் பிடித்த தொழில். கண்ணனுடன் விளையாட நினைத்த பிரம்ம தேவன் அவன் மேய்த்த பசுக்களை அழுந்தூரில் அடத்து வைத்தான். பசுக்களைத் தேடி வந்த கண்ணன் மீட்டான். அப்போது பிரம்மன் ஒரு கேள்வி கேட்டான். இதனை மதுசூதன் கண்டான். உபரிசரவசு என்ற உல்லாசபுரி வேந்தன் ஒரு தேர் வைத்திருந்தான்.

மனிதனில் மூவகை உண்டு

இல்லாததையே எண்ணி

இருப்பதை மறப்பவன்!

இருப்பதைக் கண்டு

இனிமையாய் இருப்பவன்!

இரக்கமற்ற செயலால்
இருப்பவன் இழப்பவன்!

உபரிசரவசு மூன்றாம் வகையினன். விண்ணில் பறக்கும் ஓர் தேர் வைத்திருந்தான். அவன் தேர் பறக்கும் போது நிழல்படும் இடமெல்லாம் பூமி கொதிக்கும். தேர் நிழல் பட்ட ஜீவன் அனைத்தும் பாவப்பட்டுத் துடிக்கும். இது அவன் பெற்ற வரம். அறம் அறியா மரம். இதனைக் கண்ணன் பார்த்தான். அஃறிணை, உயர்திணை உயிர்கள் அலறின. தேரின் நிழல் கண்ணனிடம் வருகையில் அவன் தன் கால்களின் கட்டை விரலால் தேரின் நிழலை அழுத்தினான். உபரிசரவசுவின் தேர்அடங்காத ஆணவமும் பூமியில் விழுந்தது. அழுந்தூரில் தேரை அழுத்தியதன் நினைவாக தேரழுந்தூர் ஆனது என்று தந்தை விளக்கமளித்தார்.

உபரிசரவசுவின் ஆணவம் அதோடு நிற்கவில்லை. கண்ணனிடம் வந்தான். உமக்கு என்ன வேண்டும் கேள் என்றான். அதிகம் வேண்டாம். நான் ஒரு வெண்ணெய் பிரியன். இன்று கடைந்த வெண்ணெய் ஆயிரம் குடங்கள் வேண்டும் என்றான். உபரிசரவசு சிரித்தான். கேட்க வேறொன்றும் கிடைக்கவில்லையா? என்று நகைத்தான். ஆனை, அம்பு, சேனை என அத்தனையையும் அனுப்பினான். போகும் இடமெல்லாம் வெண்ணெய் நெய் எண்ணெயாகி இருந்தது. கலைத்த வீரர்கள் அந்தி மாலை சாயும் நேரம் 999 குடங்களில் தூக்கி வந்தனர். உபரிசரவசுவிற்கு உள்ளுக்குள் உதறல். ஒரு சூழ்ச்சி செய்தான். ஆயிரம் உள்ளதா என்று எண்ணியா பார்க்கப் போகிறார்கள் என்ற நப்பாசையில் ஒரு குடம் தண்ணீரைக் கலந்து வைத்தான். இடையனிடம் வந்து ஆயிரம் குடங்களில் உள்ளது இன்று கடைந்த வெண்ணெய் என்றான். மால்மருகன் மூடிக் கிடந்த குடங்களை

ஒவ்வொன்றாகத் திறந்தான். திறக்கத் திறக்க வெண்ணெய் இருந்த குடங்களிலெல்லாம் வெறும் தண்ணீரே இருந்தது. 999 குடங்களிலும் வெண்ணெய் இல்லை. தூய்மையான தண்ணீர். உபரிசரவசு வைத்த ஒரு குடம் தண்ணீர் மட்டும் வெண்ணெய்யாய் இருந்தது. மன்னரே ஆயிரம் குடம் கேட்டால் ஒரு குடம் வைத்துள்ளீர் என்று கண்ணன் கேட்டான். உபரிசரவசு ஆணவம் நீங்கி அப்படியே விழுந்தான்.

அந்த சிறுவனுக்கு கண்ணனின் மீது பக்தி உருவாகியது. இச் சிறுவன் மண்பாண்டம் செய்யும் குயவனின் மகன் பிற்காலத்தில் மகா கவிஞனாக மாறினான். அறிவில் இரு வகை உண்டு. ஒன்று அக அறிவு. மற்றொன்று அக அறிவு.

சொல்குழைத்தக் கவிதை
நீர்ப்பிசுக்கு ஓவியம்
கல்நெகிழ்த்தி சிற்பம்
உயிர்த்தெறிக்கும் இசை!

இவையெல்லாம்
அக அறிவு!

புற அறிவு வாழ்வில் இருந்து
புலரும்!
அகஅறிவு பிறவியிலேயே
மலரும்!

ஆதித்தன் என்ற அப் பெரியவரின் மகன் அக அறிவு கொண்டவன். சின்னஞ்சிறு வயதிலேயே கவிபாடும் வல்லமை கொண்டவன். சிறுவர்கள் அனைவரும் அவனது அறிவினைக் கண்டு மருட்சியடைந்தனர். பெரியவர்களும் அவனது அறிவினைக் கண்டு

மகிழ்ந்தனர். வியந்தனர். அவன் பெயரென்ன என்று ஊர் மக்கள் கேட்க ஆவலிட்டனர். ஆதித்தன் கம்பன் என்று சொன்னான்.

கம்பன் பிறந்தது ஒச்சர் குலத்தில் தான். அவர்கள் கைப் பட்டால் மண் என்பது பாண்டமாகும். ஆதித்தன் சுடாத மண் பிசைந்து சுட்டுப் பானையாக்கினான். கம்பனோ இலக்கணத்தில் கெடாத சொல் பிசைந்து கொட்டும் கவியாக்கினான். கம்பன் வாலிபன் ஆனான். இளையவரும், முதியவரும், ஆண்களும், பெண்களுமாய் அவன் கவிதைக்கு எளியவர் ஆனர். காளி கோயிலில் கம்பன் கவிபாடும் ஆற்றல் பெற்றான். ஓலைச்சுவடிகளும் எழுத்தாணி ஏடுகளும் கற்று கம்பனாக வலம் வந்தான். காளி முன் கவிபாடினான். வேண்டினான். மன்றாடினான். காளி தேவியே நேரில் வந்தாள். கண்டான். களித்தான். அமர்ந்தான். மகாகாளியே தன் ஆட்காட்டி விரலால் கம்பனின் நாவில் எழுதினாள். தமிழுக்குக் கிடைத்த தலைக்கிரீடம் நீயென்று தலைவருடிச் சென்றாள். அன்று முதல் கம்பன் காளி பக்தனான்.

வயல்வெளியில் ஓடித்திரிந்த கம்பனிடம் ஒரு குரல் கேட்டது. “மூங்கில் இலைமேலே… தூங்கும் பனிநீரே! என்று இருவரி கேட்டது. அத்தோடு நின்றது. அடுத்தவரி வரவில்லை. இரவெல்லாம் விழித்தான். இமையெல்லாம் தகித்தான். அடுத்தவரி கிடைக்கவில்லை. வயல்வெளியில் போய் நின்றான். மீண்டும் அந்த குரல் ஒலித்தது.

“மூங்கில் இலைமேலே

தூங்கும் பனி நீரே!

தூங்கும் பனி நீரை

வாங்கும் கதிரோனே!

கம்பன் மண்ணை வணங்கினான். தமிழ் மண்ணில் பிறந்தவனை கவிபுனைய வைக்கும் கரிசல் மண்ணே என்று வணங்கினான். கம்பனின் பெருமை, ஆற்றல், புலமை, வறுமை அனைத்தும் சடையப்ப வள்ளலின் காதில் விழுந்தது. யானை மேல் பல்லக்கும், யானை தாங்கா பொன் பொருளும் தேரழுந்தூரே தாங்காத ஆள், அம்பு, சேனையுடன் வந்தார். கம்பனைத் தன் அரண்மனையில் கவிச்சக்கரவர்த்தியாக அமர்விக்க விரும்பினார். சடையப்ப வள்ளலோடு கம்பர் சென்றார்.

கண்ணகி வந்த ஊர்

ஏமாற்றப்பட்ட ஒரு ஏழையின் வயிறு போல மதுரை எரிந்து கொண்டிருந்தது. கண்ணகியின் சினம் மதுரை மாநகர் முழுக்க புகை மண்டலமாய் தெரிந்தது.

பெண் ஒரு கட்டத்தில்
அமைதியின் பள்ளத்தாக்கு
ஒரு கட்டத்தில்
ஆறுதலின் நீர் வீழ்ச்சி!

ஒரு கட்டத்தில்
அரவணைப்பின் காற்றிசை!
ஒரு கட்டத்தில்
ஆத்திரத்தின் எரிமலை!

கண்ணகி என்ற எரிமலை
சுந்தர மதுரையை

சுட்டுப் பொசுக்கி விட்டு
புகார் நோக்கி நடந்ததாய்
புலம்புகிறது!

அந்த நியாய தேவதை
நீண்டு நடந்த வழியெலலாம்
வயல்வெளி கருகியதாய்
வசந்தங்கள் உதிர்ந்ததாய்
நாட்டுப்புறப் பாட்டுண்டு!

கண்ணகி நடந்த வழியில் சிறுவாச்சூர் என்ற ஓரு சிற்றூர் இருந்தது. பெரம்பலூருக்கு அருகே அந்த அழகிய ஊர் உள்ளது. சிறுவாச்சூரில் மாங்கிளையில் குறுகுறு பூப்பறித்து விருப்பப்பட்ட தெய்வத்தைப் பிரார்த்தித்த செல்லி என்ற ஒரு பெண் இருந்தாள். இளம் வயதுடைய அவள் இறைவனின் வழிபாடாக இருந்தாள். அவள் ஊர்க் கோயிலில் வசிப்பவள். வாழ்பவள். கோயிலைச் சுற்றிலும் கருவேல முள்காடும் முட்புதரும் மண்டிக் கிடந்தது. அவள் கோயில் மாடத்தில் தீபமேற்றும் பக்தியழகில் ஊர் முழுவதும் ஒளிர்ந்தது.

நல்ல பௌர்ணமி இரவில் செல்லி காதில் ஒரு உடுக்கைச் சத்தமும், குரலும் கேட்டது. வவ்வால்களின் சிறகசைப்பு, வயல் தவளைகளின் சத்தம், வல்லூறுகளின் ஓசையிலும் அக்குரல் கேட்டது. செல்லி பயந்தாள். மார்பில் மண்டை ஓட்டு மாலை. தோள்களில் தொங்கிய ஜடாமுடி. கைகளில் சுக்கு மாந்தடி. வாயில் சூ மந்திரகாளி என்று அழைத்தபடி பில்லி சூனிய சித்துக்களுடன் காளிங்கன் என்ற மாந்திரீகன் வந்தான். அவன் கன்னிகளை வேட்டையாடும் காம வெறி பிடித்தவன். ஊர்க் கோயிலுக்கு வந்தான்.

செல்லி உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் அழகினைக் காளிங்கன் கண்டான். அவளது கற்புக்குக் கடும் சோதனை காத்திருந்தது. விரதநிலாவை பக்திப் பாலை பாம்பு தீண்டிட முயன்றது.

பெண்மையின் சிறப்பே இதுதான்!
உறங்கும் நேரத்திலும் தன்
மழலை சிணுங்கல் கேட்டால்
உதறி எழுவாள்! – தன்
மாராப்பு விலகிச் சென்றால்
பதறி எழுவாள்!

செல்லி, காளிங்கனின் கண் பார்வை படுவது உணர்ந்து எழுந்தாள். வெடித்தெழுந்தாள். மிகத் துடிதுடித்து எழுந்தாள்.

கடவுளால்
படைக்கப்பட்ட மனிதரை விட
மனிதரால்
படைக்கப்பட்ட கடவுள்கள் மிகுதி!

கோயிலுக்குக் கோயில்
கோபுர விமானம் இருக்கின்றதோ
இல்லையோ!
கோடிகோடியாய் வருமானம்
இருக்கின்றது!

பக்திக்கு கதவு திறந்த
ஆலயங்கள் குறைவு!

பதவிக்கு கதவு திறக்கும்

ஆலயங்கள் அதிகம்!

செல்லி பொங்கி நின்றாள். அவள் விழியில் சூலாயுதம் இருந்தது. பார்வையில் வாளாயுதம் இருந்தது. காளிங்கன் மருண்டு போனான். காளிங்கன் செல்லியிடம் தன் காமத்தைப் புலப்படுத்தினான். “நான் காளியின் பக்தன். பக்தனுக்குப் படையலின் மீது பற்றாசை” என்றான். “உலகம் பெரியோர்கள் தவறிழைத்தால் கேட்காது. கண்ணில்லாத செவியில்லாத மூடம் தான் இந்த உலகம். உன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தது போல அர்ப்பணி அமைதி பெறுவாய்” என்று கூறினான்.

சீ முடனே! கோயில் புறாவை சிறைபிடிக்கும் கல்நெஞ்ச வேடன் நீ. உன் கண்களை இப்போதே மூடிவிடு. இது கோயில். நான் பக்தை ஓடிவிடு” என்று செல்லி திட்டினான். காளிங்கன், “அதனால் என்ன கோயிலை மன்மதக் கோட்டையாக மாற்றி விடுகிறேன். காமமும் ஒரு வகை தவசு தான். இருவர் ஒருவராய் இறுகும் தவம்” என்று அவளை நயவஞ்சகத்தால் இசைக்க முயற்சித்தான். செல்லியின் உயிர் வெளியே சென்றுவிடத் துடித்தது. பொழுது மெல்ல புலர ஆரம்பித்தவுடன், காளிங்கன் வேட்டை நாயைப் போல பற்களைக் காட்டி நகர்ந்தான்.

செல்லி துன்பத்தால் காய்ச்சல் கண்டாள். அவள் விழிநீர் நனைந்தது. உள்ளத்தில் ஊமை ரணங்கள் மிகுந்தன. காளிங்கனின் மாந்திரீகத் தர்பார் ஊருக்குள் அரங்கேறியது. நொடியில் குங்குமம் கொடுப்பதும், குழந்தைப் பேறு கொடுப்பதும், குபேர பலன் கொடுப்பதும் என்று ராஜாங்கம் செலுத்தினான்.

செல்லிக்குத் தினம் தினம் இரவு வரும். நிலவு வரும். பிறகு காளிங்கன் வருவான். துன்பம் தருவான். அவளின் வாழ்க்கைப் போராட்டமாக மாறியது. காளிங்கனிடமிருந்து தன் கற்பைக் காப்பாற்றுவது அவளுக்குத் தீர்க்கமுடியாத துயரமாக அமைந்தது. ஓர் இரவில் அமாவாசையில் கடும் இருளில் கோயில் வாசல் கதவு திறக்கப்டும் சிற்றோசை கேட்டது. செல்லி திடுக்கிட்டாள். கோயிலின் வாசலில் ஓர் உருவம். செல்லிக்குக் கழுத்து வியர்த்தது. உருவம் செல்லியிடம் வந்தது. அவள் உறைந்தே போனாள். காளிங்கனில்லை. வந்தவள் காளி. ஆம் காளி. கோபமும் குரூர விழியம் நிரம்பிய உருவமாய் காளி வந்தாள்.

செல்லி காலில் விழுந்து, காப்பாற்றம்மா! காப்பாற்று கைப்பிள்ளையைக் காப்பாற்று காளிதேவியே காப்பாற்று! என மூச்சிரைத்தாள். பெண்ணே! கேள். நான் காளியல்ல. கண்ணகி. ஆம் மதுரையை எரித்த கண்ணகி என்றாள்.

கண்ணீர் என்பது
பெண்களுக்கு அதுவரை
கேடயமாகவே இருந்தது!
கண்ணகிக்கு மட்டும்தான் அது
கத்தியாகப் பிறந்தது!
கற்பு என்பதும்
பெண்ணினத்துக்கு அதுவரை
மானமாக ஒளிர்ந்தது!
கண்ணகிக்கு மட்டும் அது
நெருப்பாக எரிந்தது!

சிறுவாச்சூரில், சந்தனக் காடாய் இருந்த மதுரையை சாம்பல் மேடாய் மாற்றிய தீ தேவி நின்றாள். செல்லி விழி மிரண்டாள். கோயிலுக்குள் நுழைந்த கண்ணகியின் கோபம் தணிந்திருந்தது. கண்களும் முகமும் ஒரு சூரியச் சதுக்கமாய் ஒளியடித்தது. “பெண்ணே நீ யார் இந்த கோயில் உன் நீ வசிக்கும் இடமா?” என்று கேட்டாள். செல்லி எனது பெயர். அனாதை பெண் துறவி என்று செல்லி கூறினாள். “இன்று இராப்பொழுது இக்கோயிலில் நான் தங்கலாமா? எனக் கண்ணகி கேட்டாள். செல்லி, “பெண்ணான நீ. தெய்வமம்மா. நீ தங்க யார் அனுமதி தருவது? என்று கூறினாள்.

மலர்ந்த செல்லியின் முகம் காளிங்கனை நினைத்து சுருங்கிப் போனது. அவளின் அக முக மாறுதல்களைக் கண்ணகி கவனித்தாள். திடீரென செல்லி கண்ணகியிடம், தாயே தாங்கள் இரவு தங்க ஊருக்குள் ஓர் நல்லிடம் உண்டாக்கித் தரட்டுமா? என்று கேட்டாள். “ஏனம்மா இக் கோயில் நல்லிடமில்லையா? கோயிலை விடவா சிறந்த இடம் உண்டு” என்று கண்ணகியின் பதில் செல்லிக்கு வருத்தத்தைத் தந்தது.

அம்மா நான் இங்கு அவஸ்தைப் படுகிறேன். உனக்கும் அதைத்தந்தால் தவறாகும் என்று மாந்திரீகன் காளிங்கனின் வரவும், காமத்தின் கோர முகத்தையும் எடுத்துரைத்தாள். கண்ணகி, “ஆனது ஆகட்டும் வருவது வரட்டும். இன்று நான் உனக்கு காவல் படை கோயில் கதவை முதலில் அடை” என்றாள்.

நள்ளிரவில் காளிங்கன் மதமதப்பாய் வந்தான். அண்டம், பிண்டம், சண்டம் என ஆளும் எனக்கு உன்னை அடையும் நேரம் இதோ வந்திருக்கு என்றான். ஆசை புத்தியைத் துரத்த ஆணவம் காமத்தை உயர்த்த ஆலயத்தினுள் ஆந்தை போல புகுந்தான். கண்ணகியைக்

கண்டாள். வியந்தான். ஆஹா, இது யாரடி? புதியவள். உன்னைவிட பெரியவள். முதலில் நீ பிறகு அவள்? வா” என்றான் காளிங்கன். வேட்டைநாய் போலக் காட்சியளித்தான்.

கண்ணகி, நில்லடா நிர்மூலனே! என்றொரு குரல். இது புதிய குரல் அல்ல. பாண்டியப் பெருஞ்சபையில் கேட்ட பழைய குரல். பாரடா என்னை! என்றாள். கண்ணகி கண்கள் சிவந்தன. “உண்மையைப் பழிக்க வந்த தீயே! நீ விஷ விருட்சத்தின் விதை. உன் ஒவ்வொரு பார்வையிலும் களங்கப்படும் பெண்ணினம். அம்மனின் முன்பு நின்ற ஆறடி உயர சூலத்தை வேரொடு பெயர்த்தாள். ஒழிந்து போ நீசனே! ஒழிந்து போ! என்று காற்றின் வேகத்தைப் போல காளிங்கனின் மார்பைப் பிளந்தது சூலம். சிறுவாச்சூர் சிலிர்த்தது. சிலிர்த்தது.

ஒரு தேவதை கல்லானாள்

உலகம்
சீமான்கள் அழுதால் துடைக்க
ஒரு கோடி விரல் நீட்டும்!
சாதாரணமானவன் அழுதால்
கண்ணீரை சிறுநீரினினும்
சிறுமை செய்யும்

எட்டையபுரம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் மணலும்.... மணல் சார்ந்த தொழிலுமாய் மகிழ்ந்தெடுத்த பட்டினம்! சிவகாமி காற்றுப் படாத கன்னியாய் நகரை வலம் வந்தாள். அவளுக்கு இரண்டு சகோதர்கள் பெரியவன் மாணிக்க பூபதி, சின்னவன் இளம்பெரு வழுதி. இருவரும் வீரமானவர்கள். எட்டையபுரத்தில் கத்திச் சண்டைசெய்யும் வீரர்களாக

வலம்வந்தனர். பெற்றோரும் உறவினரும் வயதான மூதாட்டியும் கொண்ட நிறை குடும்பமாய் சிவகாமி வாழ்ந்தாள். உயிரை விட மானம் பெரிதென வாழக்கூடிய குடும்பம் அது. மச்சு வீட்டில் மகாராணி போல் வாழ்ந்தாள். பூ முளைத்த திண்ணையும், வழவழப்பானத் தூண்களும், முற்றத்தில் படர்ந்த செடிகளும், மரத்தால் செய்யப்பட்ட மாடிப்படிகளும், விளக்கொளிரும் பாகனியுமான அழகிய இல்லத்தில் வாழ்ந்தாள்.

புஷ்பவதியான சிவகாமி எதைச் சொன்னாலும் அண்ணன்கள் செய்யக் கூடியவர்கள். மாட்டுக் கொட்டகையில் பெரிய அண்ணன் புதிதாய் பிறந்த கன்றுடன் மல்யுத்தம் நடத்திக் கொண்டிருந்தான். அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர். கன்றுக்குட்டிக்குப் பட்டு வேட்டியை இடுப்பில் கட்டச் சொல்லிவிட்டு வைக்கோல் கட்டின்மேல் கால்மேல் காலிட்டு சிவகாமி அமர்ந்திருந்தாள். சிவகாமியின் சின்ன அண்ணனும் வந்தான். விசயம் அறிந்தான். பெரியண்ணனுடன் போராடலானான். இறுதியில் கன்றுக்குட்டியை ஒருவர் தூக்கித் தோலில் போட மற்றவர் பட்டுப்பாவாடை அணிந்தான். ஒரு வழியாக வெற்றி கொண்டாடினர்.

பாசம் என்பது
தாய்ப்பால் தரும் முதலுணர்ச்சி
ரத்தம் குடிக்கும் புலிக்குட்டியும்
தாய்ப்பால் குடிக்கும் வயசில்
தாய்ப்புலியின் வாய் நக்கும்!

ஒருநாள் சிவகாமி குழந்தை மனது குழைய குளித்து வந்தாள். ஈரமான உடையில் ஒய்யாரமாக நடந்து வந்து உப்பரிகையில் தலை உலர்த்தினாள். தெருவைப் பார்த்து

அமைந்த மச்சு வீட்டு உப்பரிகையில் அதிகாலை தான் வரைந்த அழகுக் கோலம் ரசிக்கும்படி மாடி மீது நின்று மயிற்கோதியால் கூந்தல் ஒதுக்கினாள். உப்பரிகை வந்த காற்று வாசம் வீசியது. அச்சமயம் ஆலய வழிபாடு முடிந்து ஆள் அம்பு யானை சேனையுடன் எட்டையபுரம் மகாராசா வீதியில் பலக்கில் போனார். வீதி வழியாக வந்த அரசாங்கத்தின் நடை உடை கண்டு அப்படியே சிவகாமி நின்றாள். யானை அம்பாரி ஊர்வலம் என்றால் சிவகாமிக்கு மிகவும் பிடிக்கும். ஊர்வலம் வீதி வழியே மச்ச வீடு கடந்து போக அப்போது அடித்த காற்று சிவகாமி கூந்தல் சீவியது. அவள் கூந்தலில் சிக்கெடுத்து சுருட்டி வைத்த கூந்தல் சுருளை தூக்கியடித்தது. அம் முடிச்சுருள் யானைப் பல்லக்கில் இருந்த மகாராசனின் மடியில் விழுந்தது.

ஐம்பது வயதில் அரை உடம்பு நரை திரை எய்தி தொப்பையுடன் வந்த மகாராசா முடிச்சுருளை எடுத்தார். முகர்ந்தார். திரும்பினார். திரைச்சீலை வழியே ஒரு ஆயிரம் வட்ட நிலாவில் அகழ்ந்தெடுத்த சிலையாய் சிவகாமி நின்றிருந்தாள். உற்றுப்பார்த்தார் மகாராசா. அவரது ஆட்டுக்கடா மீசையில் ஒளிர்ந்திருந்த வெள்ளை முடிகளில் வேர்வை அரும்பியது. கண்களில் உமிழ்நீர் சுரந்தது. சிவகாமியின் சிற்றுடலை சிறுக சிறுகத் தன் வயோதிக விழிகளால் ரசித்தார்.

சில மனித மனம்
சதைகளிலும் கவிதை தேடும்!
சில மனித மனம்
கவிதையிலும் சதை பார்க்கும்!

அதிகாரம் கொண்டவன் ஆசைப்பட்டால் அடிமை மக்கள் தோலுறித்து ஆடை தைத்துத் தர வேண்டும். மகாராசா அரண்மனைக்குள் குமுறினார். அந்தப் பெண் வேண்டும். அனுப்புக பல்லக்கை. ஒரு மூட்டைத் தங்கக் காசு கொடுங்கள். சிவகாமி பல்லக்கைப் பார்த்தாள். தன் அண்ணன்களிடம் ஏதோ பல்லக்கு வந்திருக்கிறது என்று கூறினாள். இரவில் ஏன் வந்தது? சிவகாமி கேள்வி சிந்தினாள். இல்லம் பரபரப்பானது. இதயங்கள் பதறின.

உலகில்
எதற்கும் ஒரு
விலை வைப்பவனும் இருக்கிறான்!
எதையும் சென்று
விலை பேசுவனும் இருக்கிறான்!

சிவகாமியை ராஜ சேவைக்காக தரும்படி இரகசியம் பேசினர். சிவகாமியின் கற்புக்கு ராஜசேவை என்று பெயர் வைத்தனர். அண்ணன் மாணிக்க பூபதி கையில் தேங்காய் பிளக்க வைத்திருந்த குத்தீட்டி. தம்பி பெருவழுதி கையில் கோழி அறுக்கும் கொடுவாள். வந்தவன் நின்றவன் பார்த்தவன் கேட்டவன் சொன்னவன் சூழ்ந்தவன் என அவன் அவனும் கைபாதி கால்பாதியாய் காணாமல் போயினர். அந்த இடம் இரத்தக் களறியாய் மாறியது. பல்லக்கு முழுக்க பிணங்கள் ஏற்றி அண்ணன்மார்கள் அனுப்பினர். இல்லம் சோகமாக மாறியது,

பெரிய பாட்டி உயிர் போன வெற்றுடலாய் விழுந்தாள். தகப்பன் மானமறுந்த வாழ்க்கையாய் உடைந்தார். தாய் வயிறு கலங்கி நெஞ்சுடைந்து சாய்ந்தாள்.

அண்ணன்கள் ஆத்திரமும் அழுகையுமாய் புரண்டனர். அந்த தேன் சிட்டு சிவகாமி ஒரு புள்ளியாய் சிறுத்து பொசுங்கிக் கிடந்தது. மறுநாள் கருப்பான விடியல் எழுந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு பிரச்சனை வெடித்தது. சிவகாமியை அனுப்பு, சிவகாமியைக் கொடு, சிவகாமியைத் தா. மகாராஜா படுக்கையறை தூதுவர்களை மந்திமந்தியாய் அனுப்பினார். இன்று இரவு ராஜாங்க சேனை வருகிறது. சிவகாமியைக் கைப்பற்றுவதற்கு வருகிறது. அண்ணன்கள் இருவரும் அழுது அழுது சிவந்தனர். வீடே விரக்தி மயம் ஆனது. குடும்பத்தினர் கூடி அழுது ஒரு முடிவு எடுத்தனர். சிவகாமியை அழைத்தனர். நீராட்டினர். பூச்சூட்டினர். பொட்டிட்டனர். புது ஆடை சூட்டினர். ஆரத்தி எடுத்தனர். உட்கார வைத்தனர். உயிரொழுகப் பார்த்தனர். எதிரில் ஒரு தட்டில் தங்க நகை, வெள்ளி பாத்திரம், இனிப்புகள், கனி வகைகள், அலங்கார சாதனங்கள், ஆடை மணிகள் வரிசையாய் வைத்தனர்.

பெரிய பாட்டி மூர்ச்சையானாள். பெற்றவர்கள் இடிந்து போயினர். அண்ணன்கள் இருவரும் இடிந்து போயினர். சிவகாமியின் முகத்தில் புன்னகையுமில்லை. கண்ணீருமில்லை. அலறலுமில்லை. ஆவேசமுமில்லை. குழப்பமும் இல்லை. கொந்தளிப்புமில்லை. அந்த தேவதை கல்லாகி விட்டாள். சிவகாமியை வீட்டின் முற்றத்தில் ஒரு பெரிய பள்ளத்தில் இருத்தி சீர் வரிசைப் பொருட்களை அடுக்கினர். அழுதனர். அறற்றினர். பிதற்றினர். கதறினர். மூச்சடைத்து ஊறினர். சிவகாமி இமை மூடினாள். மௌனமானாள். மானம் கற்பு காக்க மதித்து வந்த பண்பு காக்க ஆவேசமாய் இறுகி மண் தள்ளினர். மண் சிவகாமியை ஏற்றுக்கொண்டது. மண்ணால் தன்னை மூடிக் கொண்டது. சிவகாமியைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினர்.

யாருமில்லாத கோட்டை

கம்பீரம் என்பது
எழுவதில் மட்டுமல்ல
விழுவதிலும் இருக்கிறது!

கம்பீரம் என்பது
ஒப்பனை அல்ல....
தோலின் நிறம்....
கம்பீரம் என்பது
உண்டாக்குவதல்ல
உருவாவது!

ஒரு கம்பீரவாதியின் தலைமறைவுச் சம்பவம். திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி பகுதியில் மேலை நாகை ஊர் என்ற ஊரில் மாலைப் பொழுதில் ஒரு உருவம் ஓடி வந்தது. அந்த உருவத்தைக் கண்ட நாய்கள் அமைதியடைந்தது. கருப்புச் சால்வை பொதித்து வைத்திருந்தது. காளி கோவிலில் அந்த உருவம் வணக்கம் போட்டது. மேட்டுப் பகுதியிலுள்ள ஒரு பாழடைந்த கோட்டையில் நுழைந்தது. தொப்பென்று விழுந்தான். தூங்கி விட்டான். மறுநாள் பொழுது புலர்ந்தது. பறவைகளும் எறும்புகளும் புறப்பட்டன. மனிதர்கள் சோம்பல் முறித்துக் கொண்டிருந்தார்கள். அஃறிணைகள் மலர்கின்றன. உயர்திணைகள் ஒதுங்குகின்றனர்.

அவன் இரவுப் பயணத்தால் ஏற்பட்ட காயங்கள் அவன் பாதங்களில் இருந்தன. உடையில் ஆங்காங்கே கிழிசல் இருந்தன. விழியில் ஒளியால் நிரம்பியது. அவன் எழுந்தான். கோட்டை ஒரு சின்ன ஆயுதச்சாலை போலிருந்தது. உள்ளே ஏகப்பட்ட உடைசல்கள்

இருந்தன. உள்ளே தரை வெடித்து கருவேல முள் மரங்கள் முளைத்திருந்தன. பறவைகள், மிருகங்களின் எச்சங்கள் நிரம்பிக் கிடந்தன. அந்த மனிதன் வெளிவந்தான். கோடையின் பின்புறம் குளமும், சுவரில் ஆலமரத்தின் விழுதுகளும் இருந்தன. அந்த சால்வை மனிதன் அங்குமிங்கும் ஆடி ஓடினான். கோட்டையின் முகப்பில் வந்து எட்டிப்பார்த்தான். செம்மண் வயல் தோட்டம் மிகுதியாக இருந்தது. சில நாட்கள் கழிந்தன.

தாகத்தில் பாகற்காய்ச் சாறும் இனிக்கும். அவன் பழகிக் கொண்டான். அந்தக் கோட்டை மனித வாசமற்ற பகுதி. தலைமறைவு வாழ்க்கைக்கு ஏற்ற பகுதி. உச்சிப் பொழுதில் ஆடு மேய்ப்புச் சிறுவர்களுடன் கல்லாட்டம் விளையாடினான். தோன்றும் போதெல்லாம் கோட்டையின் சுவர்களில் விறகுக் கரியால் ஏதேதோ எழுதினான். காற்றோடு பேசுவான். மரத்தோடு பேசுவான். நினைத்த போது தூங்குவான். இரவில் அழுவான். ஆடு மேய்க்கும் சிறுவர்களிடம் அணாபைசா கொடுத்துத் தின்பண்டம் வாங்கித் தின்பான். பழம் பறித்துத் தின்பான். குளத்தில் குளிப்பான். ஆடு மேய்ப்பாளருக்கு அன்றாடம் ஆனா ஆவன்னா சொல்லிக் கொடுத்தான். சிறுவர்கள் தினசரி ஆட்டுப்பால் தருவார்கள்.

ஒரு சிறுவன் கேட்டான். உன் பெயர் என்ன? சுப்பிரமணி. ஆடுகளும் ஆடு மேய்க்கும் சிறுவர்களும் ஆள் அம்பு சேனையாக அரசாண்டன் அந்த சுப்ரமணி. டேய் சரியாக எழுதடா. அ… இது ஈ…யடா முட்டாள். கொடியிழந்த கோட்டையில் சுப்ரமணி தர்பார் வெகுஜோராய் நடந்தது. மனிதன் இல்லாத பகுதி அந்த மனிதனுக்குப் மிகப் பிடித்துப் போனது. விறகு பொறுக்கி அடுப்பு மூட்டி சோளம் வாட்டினான். சிறார்கள் ஈந்த உடைந்த பாண்டங்களில் அரிசி பொங்கினான். ஆடு மேய்ப்பவர்களோடு வெல்லம் கலந்து

பொங்கலாக்கி பகிர்ந்துண்டான். சுப்ரமணி என்ற சுயம் கொண்ட அந்த நெருப்பு உள்ளே கனன்று வெளியே சிரித்தது. ஆடு மேய்க்கும் சிறுவர்கள் அரிச்சுவடி பயின்றார்கள். எழுத்துக் கூட்ட அறிந்தவர்கள் எழுதியது புரிந்தார்கள். கோட்டைச் சுவரில் அவன் எழுதியதைச் சத்தமிட்டுப் படித்தார்கள். எழுதியதன் கீழே அவன் பெயர் இருந்தது.

ஒரு சிறுவன் கேட்டான். இது என்ன ஆளே! உம்பேரு சுப்ரமணி தானே! அது என்ன இன்னொரு பேர்? அது என் பெயரில் மறுபாதி. அப்போ உன் முழுப் பேரென்ன? என் முழுப்பெயர் சுப்ரமணிய பாரதி என்று உரக்கச் சொன்னான்.

இந்தியாவிற்காக குரல் தந்த குரல் வளையை கைது செய்ய ஆங்கிலேய தர்பார் ஆணையிட்டது. இதனால் புதுச்சேரியில் தலைமறைவானான். தமிழ்ப் பேசியதற்காக தமிழ்நாட்டில் வாழ முடியாத தமிழன் ஆனான். ஆடு மேய்க்கும் சிறுவர்களுடன் அஞ்ஞான வாசம் இருந்தான். “யாரோ ஒரு ஆள்! அந்த பாழடைந்த கோட்டையில் பதுங்கி இருந்தானாமே!. நடு ராத்திரியில் சுத்துறானாம். பில்லி சூனியம் பண்ணுறானாம். கல் மண்ண திண்ணுவானாம். காளிகோயிலுக்கும் வருவானாம். ஒரு வேள அவன் தீவிர வாதியோ? வெள்ளைக்கார சர்க்கார் விரட்டுதாமில்லை. ஆடு மேய்க்கிற பசங்க அம்புட்டு பேரும் கெட்டுப் போய்ட்டாங்களே! என்று பாரதியின் வருகை ஊருக்குள் பதிவானது.”

ஆடு மேய்க்கும் சிறுவர்கள் தடை செய்யப்பட்டார்கள். நடுநிசியில் பாரதியின் கவியரங்கம் கேட்டு… கோட்டைக்குள் பேய் புகுந்ததாய்ச் சொன்னார்கள். வெள்ளைக்காரனின் கோர்ட் பாரதிக்கு விலங்கிடும் ஆணையை பிறபித்தப்பின்…குடும்பத்தைத் தாய்வீட்டிற்கு அனுப்பிப்பின் பாண்டிச்சேரிக்கு வந்துள்ளான். இப்போது மேலை நாகையில் உள்ளான்.

இங்கு வந்து குடியேறி இரண்டு மாதங்களானது. ஆடு மேய்ப்பவர்கள் வராததால் விரக்தி மண்டபமாகவே இருந்தது. வயிறு சிறுத்தது. ஊரில் ஒதுங்கி இருந்த ஒரு கடைக்குச் சென்றான். கம்புமாவு வாங்கினான். கட்டி வெல்லம் கலந்தான். நீர் விட்டுப் பிசைந்தான். சத்தான மாவுணவு உண்டான். போகும் வழியில் ஆடு மேய்ப்பவர்கள் அறிந்தனர். ஊருக்குள் உலா வந்தான். தண்ணீர் பந்தலுக்குள் நுழைந்தான். பெருசுகள் பாரதியின் வருகையால் பதறினர்.

யாருய்யா நீ தலையில் தலைப்பா தாடியில முகம். கன்னங் கரேலுன்னு சட்ட" என்று ஒரு நடுத்தர வயதான் ஆள் விசாரித்தான்.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா!

யானும் வந்தேன், ஒரு சித்தனிந்த நாட்டில்!

மனத்திலே நின்றிதனை எழுதுகின்றாள்

மனோன்மணி என் மாசக்தி வையத் தேவி" என்று பாடினான்.

அவர்கள் விழித்தனர். நான் பாரதி, சுப்ரமணிய பாரதி உங்கள் மொழியில் சொன்னால் கோட்டைப் பேய் என்று கூறி சிரித்தான்.

எங்கிருந்து வந்தே? என் ஊரிலிருந்து, எங்க போகப் போற? என் ஊருக்குத்தான். அது சரி இந்த ஊருக்கு ஏன் வந்தே? இது சரி இதுவும் என் ஊர் தான்ய்யா!"

ஊரார்கள் விழி பிதுங்கினர். அரைக் கிறுக்கனோ? என்றான் ஒருவன். இல்ல முழுக் கிறுக்கன். முக்கால் கிறுக்கன் என்றான். தாகத்திற்கு மோர் கேட்டான்.

நீ என்ன நம்மாளா? வேத்தாளா? என்றான். வேத்தாள் என்றால்? என்றான் பாரதி.

மேல் ஜாதியா? கீழ் ஜாதியா? மெதுவாய் ஒருவன் கேட்டான். பாரதி விழிகளில் தீ படர்ந்தது.

“சாதிகள் இல்லையடா முட்டாள்! குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”

என்ற பாரதி. குண்டுகட்டாய் உள்ளே புகுந்து மோர்ப் பானையைத் தூக்கினான். வயிறு புடைக்கக் குடித்தான். வீதியில் போட்டு உடைத்தான்.

பாரதியின் வெடிமருந்துக் கவிதைகள்
பிரிட்டிஷ் கண்களுக்கு
அஸ்திரமாகப் பட்டது!
இந்தியர்கள் கண்களுக்கு
அவஸ்தையாகப் பட்டது!

அப்போது ஊர் வம்பன் கத்தினான். யோவ் நீ என்னா சொன்னாலும் மேல் சாதி கீழ் சாதி எங்க இரத்தத்தில் இருக்குதய்யா! பாரதி சுருங்கிப் போனான். நடந்தான். காளி கோயில் வந்தது.

”ஓம் சக்தி சக்தி சக்தியென்று சொல்லு – கெட்ட

சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு! என்றான்.

இரவில் கோட்டையினுள் வவ்வால்களின் மொழி கற்றபடி உறங்கியவன். விழித்தான். அவனைச் சுற்றிலும் ஆங்கிலப் போலீஸ் இருந்தது. அவர்கள் கண்களில் சிங்கத்தைக் கைது செய்யும் கர்வம் இருந்தது. சில துப்புக் கெட்டவர்கள் துப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதிகாலையில் பாரதி கைது செய்யப்பட்டு ஊர்ச்சாலை வழியே அழைத்தும் செல்லப்பட்டான். தூரத்தில காளி கோயில் இருந்தது. சொன்னான்.

"தேடிச் சோறு நிதம் தின்று
சில சின்னச் சிறு கதைகள் பேசி
மனம்வாடி துனபம் மிக உழன்று
நரை கூடிக் கிழப்பரும் எய்தி
கொடுங் கூற்றுக்கு இரையெனமாயும்
சில வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?

இல்லை இல்லை என்பதைப் போல் கோயில் மணி முழங்கியது. ஊர் மக்கள் உண்மையறிந்து உணர்ச்சி மயமாய் நின்றிருந்தனர். சில ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கண்கள் பாரதிக்காக அழுதன. அன்று முதல் மேலை நாகையில் பாரதி தங்கியிருந்த பாழடைந்த கோட்டை "பாரதியார்கோட்டை" என்றே அழைக்கப்படுகிறது.

வலி

- **அறிவுமதி**

மீனை அரியும்போது
கிடைத்தது

குழந்தையின்
கண்

இலங்கையிலிருந்து தப்பிப் பிழைத்து, கடல் கடந்து இந்தியக் கரையில் சேர்ந்த ஈழத்தமிழ் மக்களின் துயர்களைக் கவிஞர் அறிவுமதி கவிதைகளாக வடித்துத் தந்திருக்கிறார். இதை வெறும் உணர்ச்சிச் சொற்களால் சேர்க்கப்பட்ட கவிதைகளாக அல்ல. அக்கறையுள்ள ஒரு கவிஞன் நெஞ்சிலிருந்து கசிந்து சொட்டும் இரத்தத் திவலைகளாகவே உணரமுடிகிறது. சிங்கள இனவெறியனின் நெருப்பினால் பாதிக்கப்பட்ட இலக்கியனின் சினம். உணர்ச்சிப் பிழம்பாய் த் தமிழ்நாட்டை உலுக்கி எடுக்கும் கேள்விகளால் நிறைந்தது அறிவுமதியின் கவிதைகள். தமிழீழ மண்ணில் சிலகாலம் தங்கி நேரில் அறிந்து அந்த உறவுகளின் வலிகளை எழுதிய கவிதைகளாகும். விடுதலை உணர்வை இக்கவிதைகள் விதைக்கின்றன.

இலங்கையின் நிலை

தழைத்துப் பழங்களாய் பாலை மரத்தில் புறாக்கள் தங்கும். நீலம் பளபளக்கும் பூக்குடிச்சான் குருவி காற்றில் அலையும். காட்டு மா மரங்களின் இலைகளின் மறைப்பில் அணில்கள் காதல் கொள்ளும். முயல்கள் விளையாடும். குருவியின் கூட்டில் குஞ்சுகளின்

கலகலப்பு இனிய ஓசைகளாய் பரவும். பச்சைப் புல்வெளிகள் புதிய குருத்துக்களை விரித்து பரப்பி நிற்கும். பன்றி, குட்டிகளோடு நிலம் கிழித்துக் கிழங்கு பறிக்கும்.

"கிளிகள்
புறாக்கள்
கொக்குகள்
நாரைகள்
பறந்த
வானத்தில்

அலுமினிய
கழுகுகள்"

இத்தகைய அழகிய காட்டில் புலிகள் நடமாடுவதாக சிங்கள உளவுத்துறை அடிக்கடி புலம்கிறது. இதனால் எதிரி விண்ணூர்திகளின் கொடிய குண்டு வீச்சில் சாம்பல் மேடானது காடுகள். பிளந்த முட்டையிலிருந்து தலை நீட்டிய குருவிக் குஞ்சுகள் சாவுதான் பிறப்பாக அமைந்தது. முல்லை நிலம் பாலை நிலமானது.

"முல்லை
மருதம் விட்டு
நெய்தல் தாண்டி
நாங்கள்
குடியேறிய
இடமெல்லாம்
பாலை"

இலங்கைப் போர் நிகழ்வு தரும் உணர்வு

இலங்கையில் போர் நிகழும் போது அங்குள்ள மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பட்டப்பாடுகள் சொல்லில் அடங்காதது. இதனைக் காசி ஆனந்தன் இவ்வாறு கூறுகிறார். “விண்மீன் பொத்தல்களால் மின்மினி வெளிச்சம் காட்டும் இருள். மாலை ஐந்து மணிக்கெல்லாம் கதவு சாத்தி வேளைக்கே விளக்கணைத்து – ஏக்கத்தோடும் பெருமூச்சோடும் கழியும் இரவுப்பொழுதுகள் தாம் ஏளாரமாகும். வீடுகள் அமைதியின் இறுக்கத்தில் கிடக்கும். பக்கத்தில் படுத்தும் அவர்களுக்கே கேட்காதபடி உதடுகள் சிறைப்பட்ட அச்சத்தில் வருகிறானோ? என்று முனங்கும். தொலைவில் ஊர்நாய்களின் குரைத்தல் சத்தம் நெடும் தூரம் தாண்டியும் கேட்கும். நெருங்கி வர வர நாய்களின் சத்தம் நெஞ்சைப் பதற வைக்கும் அளவிற்குக் கேட்கும். கணவனை மனைவி அணைக்க, குழந்தைகள் தாயை அணைக்க அச்சத்தின் பிடியில் வியர்த்த உடல்களோடு பாயில் அவர்கள் கயிற்றுப் பின்னலைப் போல ஒன்றிக் கிடப்பார்கள். இரும்புச் செருப்பொலிகள் பக்கத்தில் கேட்கும். கதவை உடைப்பானோ? என்ற எண்ணம் பதறும். குழந்தைகளை அணைத்தபடி தாய் ஒடுங்குவாள். மேற்சுவரின் ஓட்டை வழி சாராய நெடியும், வெண்சுருட்டு நாற்றமும் தும்மலை ஏற்படுத்தும். தும்மலை அடக்கிக் கொண்டு வாய்பொத்தி ஒடுங்கும் குழந்தைகளின் விசும்பல் வீட்டைக் கடந்து தெருவழியே வரிசை கட்டிச் செல்லும் செருப்புச் சத்தம் கேட்டு அடங்கும். சில பொழுது கழிய செருப்புகள் போன திசையில் எங்கோ குண்டுகள் முழங்கும் சத்தம் கேட்கும். மீண்டும் நாய்களின் சத்தம் காதைக் கிழிக்கும்” என்று எழுதுகிறார்.

மக்கள் பள்ளிக்குப் போன குழந்தைகளைத் தேடி அலையத் தொடங்கினர். வழியிலுள்ளோர்களைக் கேட்டு அழுவர். நெருப்புக் குண்டுகளுக்குத் தப்பி, தாய் மண்ணை விட்டு மக்கள் படகுகளில் செல்லலாயினர். மலை போன்ற அலையில் படகுகள் விழுதலில் அலறல் சத்தம் கேட்கிறது. குழந்தைகளை இறுக அணைத்தபடி தாய்மைகள் குலுங்கும் படகில் ஒன்றியிருந்தனர். தாய்மடியில் விழுவது தமிழ்நாட்டில் விழுவதற்காகக் கொத்துக் கொத்தாக புலப்படலாயினர். கோடிக்கரையில் கலங்கரை விளக்கத்தைப் பார்த்த மகிழ்ச்சி நெஞ்சில் ஒட்டுவதற்குள் சிங்கள வெறியர்களின் கப்பல் வெளித்திலும், வெடிகுண்டு வீச்சிலும், வெறித்தனமான அதிர்வலைகளிலும், தமிழீழ உறவுகளின் உடல்கள் கடலில் புதைக்கப்படும்.

அகதிகளின் வாழ்வு

தோழர் ஆர். நல்லகண்ணு தம் உரையில் இவ்வாறு பதிவுசெய்கிறார். "உலகில் பல்வேறு நாடுகளில் ஆளும் பாசிச சக்திகளால் பாதிக்கப்படும் மக்கள், தப்பிப் பிழைத்து வாழத் துடிக்கிறார்கள். பிறந்த மண்ணிலிருந்து வெளியேறி எங்காவது ஓடிப்போய் உயிர் வாழலாமென்று நினைத்துப் புலம்பெயர்ந்து செல்கிறார்கள். இவர்கள் அகதிகளாகக் கருதப்படுகிறார்கள். உலகெங்கும் அகதிகள் பிரச்சனையும் குடிமக்களின் பிரச்சனையாகக் கருதப்பட வேண்டுமென்று உலக மனித உரிமை அமைப்புகளும் ஐக்கிய நாட்டு அமைப்புகளும் செஞ்சிலுவைச் சங்கமும் அங்கீகரித்துள்ளன.

அதில் நாட்டுக்கு நாடு ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. திபெத்திலிருந்து வெளியேறி வந்த புத்த பிட்சு தலாய்லாமாவும், அவரைச் சேர்ந்தவர்களும் இந்திய நாட்டின் மரியாதைக்குரிய

அகதிகளாக ராஜமரியாதையுடன் நடத்தப்படுகிறார்கள். கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் தங்கியிருக்கிறார்கள். பங்களதேச அகதிகள் மேற்கு வங்கத்தில் வாழ்கிறார்கள்.

இலங்கை இனப்பிரச்சினை கடந்த கால் நூற்றாண்டாக நீடித்து வருகிறது. இலங்கை அரசு இப்பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியில் வேலையாட்களாக இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மலைகளில் தேயிலைத் தோட்டம் போட்டுக் கொடுத்தார்கள். நாடுகள் விடுதலை பெற்றதும் நாட்டைப் பண்படுத்திக் கொடுத்த இந்தியத் தமிழர்களை இலங்கை அரசு விரட்டியது. நாடற்ற தமிழர்களாகக் கருதப்பட்டார்கள். சாஸ்திரி பண்டார நாயகர் ஒப்பந்தம் நடந்தது. பல்லாயிரம் பேர் இந்தியாவில் தமிழகத்துக்கு வந்த நிரந்தர அகதிகளாக்கப்பட்டனர். பல்லாயிரம் தொழிலாளர்கள் இலங்கையில் மலையகத் தமிழர்களாக வாக்குரிமையற்றவர்களாக அறிவிக்கப்பட்டார்கள்.”

ஈழத்தமிழர்கள் இலங்கையின் பூர்வக் குடிகள். அத்தீவின் பெருமைக்குரியவர்கள் மட்டுமல்ல தமிழுக்கும் பல வகையில் பெருமை சேர்த்தவர்கள். மகாகவி பாரதியாருக்கு விழா எடுக்க வேண்டுமென்று முதல் குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர். சி.வை. தாமோதரப்பிள்ளை, ஆறுமுக நாவலர், கனகசபை, ந.சி. கந்தையா, கைலாசபதி, சிவத்தம்பி, வேலுப்பிள்ளை போன்ற தமிழரறிஞர்களின் தமிழ்ப்பணி மகத்தானது. கே.டேனியல், டொமினிக் ஜீவா, செ.கணேசலிங்கன், சேரன், அனார் போன்ற

படைப்பாளிகள் முக்கியத்துவம் பெற்றவர்கள். இத்தகைய பெருமை சேர்த்த மக்களின் வாரிசுகளான ஈழத்தமிழ் மக்கள் பிறந்த மண்ணில் வாழ முடியாமல் வெளியேறி உலகெங்கும் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்கிறார்கள். அவர்களின் துன்ப, துயரங்களை நினைத்து வேதனைப்படும் கவிஞர் அறிவுமதி தமிழ் அகதிகளின் மனத்துடிப்பைக் கவிதைகளாக வடித்திருக்கிறார். கடல் கடந்து வந்தவர்களின் முதல் சோகத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

"இராமேசுவரத்தில்
எல்லோரும்
குளித்துக்
கரையேறுகிறார்கள்

நாங்கள் குதித்துக்
கரையேறுகிறோம்."

“அங்கே
அவனா
என்று கேட்டு அடித்தார்கள்

வலிக்கவில்லை

இங்கே
திருடனா
என்று கேட்டு
அடிக்கிறார்கள்

வலிக்கிறது”.

தமிழ் அகதிகள் வாழும் இடம், சூழலைப் பற்றி சொல்வது மிகவும் வேதனை தருவதாக உள்ளது.

“நேற்றுவரை

சேலைகள்

இன்றுமுதல்

சுவர்கள்”

மிகவும் நெருங்கிய தூரத்தில் உள்ளது யாழ்ப்பாணக் கரை, தமிழகத்தில் அடைக்கலம் கேட்டு வந்திருக்கும் தமிழ் அகதிகளைப் பார்த்துப் பார்த்து மரத்துப் போன நமது மனசாட்சியைக் கவிதை வரிகள் உலுக்குகின்றன.

“பஞ்சம் பிழைக்க
மாநிலம்
தாண்டிப் போகிறோம்

உயிர் பிழைக்க
கடல் தாண்டி
வருகிறீர்கள்.”

“முகாமிற்கு
அருகில் உள்ள
பள்ளியிலிருந்து
கேட்கிறது

யாதும் ஊரே

யாவரும் கேளிர்”

பிஜித் தீவிலுள்ள கரும்புத் தோட்டத்தில் தமிழ்ப் பெண்கள் பட்ட துயரை மகாகவி பாரதி பாடியுள்ளார்.

”நாட்டை நினைப்பாரோ – எந்த
நாளினில் போயதைக்
காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ – அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்
கேட்டிருப் பாய் காற்றே”

அகதிகளின் வாழ்வில் கலந்த சோகங்களும், அவர்கள் தம் நிலம், வீடு, உடைமைகள் என்று அனைத்தையும் இழந்து வந்திங்கு பாடும் சோகம். தம் வாழ்நாள்கள் மீண்டும் கிடைக்காதா? என்ற சோகம் வாசகர்களின் நெஞ்சை உலுக்குவதாக அமைகிறது.

தமிழீழ அகதிகளுக்குப் போதிய வாழ்வாதாரமும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இலங்கைப் போரில் பட்ட அவதிகளைப் போல உயிர்ப்பிழைத்த அகதிகளும் அவதியுறுகின்றனர்.

“நடுக்கடலில்
இறந்திருந்தால்
நாறும்
பிணங்கள்

இங்கோ

நடைப்

பிணங்கள்”

”மயிலுக்குப்

போர்வை

தந்தான்

பேகன்

ஒழுகுகிறது

அகதி முகாம்”

“வேறுபாடு

இருக்கத்தான்

செய்கிறது

எங்கள் நாட்டுப்

பறவைகள்

வேடந்தாங்கல்

வருவதற்கும்

நாங்கள்

மண்டபம்

வருவதற்கும்”

”மருத்துவப் பட்டம்

வா

வா

என்கிறது

அகதிப்பட்டம்

போ

போ

என்கிறது."

"அங்கே

சிங்களத்தில்

கெட்ட கெட்ட

வார்த்தைகளில்

திட்டினார்கள்

புரிந்தது

இங்கே தமிழில்

கெட்ட கெட்ட

வார்த்தைகளில்

திட்டுகிறார்கள்

புரியவில்லை"

"தப்பித்து வந்த

குழந்தைகளுக்குக்

குடிக்க

பால்

கிடைக்கிறது

படிக்கத்தான்

தமிழ்

கிடைக்கவில்லை"

"கழிப்பிடம்

மோசம்

வசிப்பிடம்

மோசத்திலும்

மோசம்”

என்று அவர்கள் தங்கும் வீடுகள் கழிப்பிடத்தைவிட மோசமாக அருவருக்கத்தக்க வகையில் உள்ளது. அகதிகள் எறும்புகளாய் பயணிக்கிறார்கள். அவர்கள் தேவைகள், உணர்வுகள் உலக நாடுகளில் செவிகளில் விழவில்லை. ஆனால், சிங்களர்கள் சொல்லும் வார்த்தைகள், கட்டுப்பாடுகள், போர்களுக்கு உலக நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துழைப்பு தருகின்றன.

“ஆயிரமாயிரம்

எறும்புகளின்

கதறல்

யாருக்கும்

கேட்பதில்லை

ஒற்றை

யானையின்

ஓலம்

ஊரெல்லாம்

கேட்கிறது”

தமிழ்நாட்டில் இலங்கை வானொலியில் பாட்டுக் கேட்பதை மக்கள் அதிகம் விரும்புகின்றனர். ஆனால், அந்த மக்களின் அவலங்களைக் கேட்கத் தவறிவிடுகின்றனர்.

"இலங்கை
வானொலியிலிருந்து
நீங்கள்
பிறந்தநாள்
வாழ்த்து
கேட்கிறீர்கள்

நாங்கள்
மரண
அறிவித்தல்
கேட்கிறோம்"

என்ற குரல் நம் உணர்வுகளை உலுக்குகிறது. சில ஊர்கள் பறவைகளின் சரணாலயங்களாக இருக்கின்றன. அயல்நாடுகளிலிருந்து பறவைகள் வருகின்றன. அந்த பறவைகளைத் துன்புறுத்தக் கூடாது என்பதற்காக வெடிவெடிப்பதில்லை. உறக்க சந்தங்களுடன் எக் காரியங்களும் செய்வதில்லை. இதனை, கவிஞர் இலங்கையிலிருந்து வந்துள்ள குழந்தைகளின் உள்ளுணர்வினைக் குறிப்பிடுகிறார். அக் குழந்தைகளின் மனங்கள் வெடிச் சத்தத்தைக் கேட்டு நெஞ்சம் பதறுவதாக உள்ளனர். அகதிகள் பறவைகளுக்காக வெடிச்சத்தமிடாத மக்கள் எங்கள் குழந்தைகளின் உணர்வுகளையும் மதியுங்கள் என்று எதிர்பார்ப்பதாக அமைகிறது.

"அயல்நாட்டுப் பறவைகள்
அச்சப்படக் கூடாது
என்பதற்காக
தீபாவளிக்கு

வெடி வெடிப்பதையே

விட்டுவிட்ட

ஊர்கள்

இங்கே இருப்பதாகக்

கேள்விப்பட்டோம்

எங்கள்

குழந்தைகளுக்காகவும்

இரக்கப்பட்டு

இதனைக்

கடைப்பிடிப்பீர்களா”

“பறக்க வானமற்ற

ஊரிலிருந்து

வந்திருக்கின்றன

பறவைகளும்

அகதிகளாய்”

குழந்தைகளின் மன அதிர்வுகள் பல்வேறு கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்கள். போரின் தாக்கம் அவர்களின் வாழ்வியலாகவே கலந்து விட்டது.

“சாலைபோடும்

பெருவண்டியைப்

பார்த்ததும்

பதறிப்போய்ப்

பதுங்குகின்றன

விளையாடிக்

கொண்டிருந்த

குழந்தைகள்"

"மனநிலை

பாதிக்கப்பட்ட

நிலையில்

தனக்குத்தானே

சிரித்தபடி

அடிக்கடி அந்தப்

பெண் பிள்ளை

உச்சரிக்கிறாள்

தங்கச்சி மடம்"

அகதிகளுக்குத் தமிழகத்தில் கட்டுப்பாடு உண்டு. அவர்கள் மீது திருட்டுக் குற்றங்கள் சுமத்தப்படுவதால், அவர்கள் பகல் பொழுதில் எங்கும் செல்லலாம். ஆனால் மாலை ஆறு மணிக்கு மேல் எங்கும் செல்லக் கூடாது என்று எழுதப்படாத சட்டம் உள்ளது.

"நுணா

மரத்துக் கிளைகளிலும்

தூங்க

கோழிகளுக்கு

உண்டு

அனுமதி

ஆறு மணிக்குள்

நாங்கள்

கூடடைய வேண்டும்"

"பள்ளிக்கூட

பழக்கம்

ஆறுமணி

கணக்கெடுப்பில்

பொடியன்

சொல்கிறான்

உள்ளேன்

அய்யா"

இதனால் அவர்கள் வாழ்வில் செத்து செத்துப் பிழைக்கிறார்கள். இலங்கையிலிருந்து அதிபர்களோ, அரசியல் பிரமுகர்களோ இங்கே வந்தால் அரசு விருந்தும், விருந்தினர் மாளிகையும் ஏற்படுத்தித் தருகிறது. அவர்களை மதிக்கிறது. கேள்வி கேட்காமல் வரவேற்கிறார். ஆனால் அகதி முகாம்களில் கேள்வி கேட்டுக் கொல்கிறார்கள்.

"அவர்களுக்கு

விருந்தினர்

மாளிகை

எங்களுக்கு

அகதி

முகாம்"

வீடற்ற அகதிகளாக வாழும் இந்த நாட்டில் எங்களுக்கு அரசினர் ஒரு வீடு ஏற்படுத்தித் தரும் காலத்திற்குள் இலங்கையில் பிரச்சனை முடிவுக்கு வந்து தனி நாடே கிடைத்துவிடும் என்ற தன்மையில் கவிஞர் விளக்குகிறார்.

“இங்கே

வீடு

கிடைப்பதற்குள்

அங்கே

நாடு

கிடைத்துவிடும்”

தமிழீழ அகதிகளை முகாம் அடைப்பவர்கள் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுப்பதில்லை. அதிகமான வசைச் சொற்களிலும் அந்நிய மனிதர்களைப் போல நடத்துகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள மக்களில் எத்தனை வேற்றுமைகள், வகைகள், வறுமையில் வாடும் அவலங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அகதிகளாக வந்த மக்கள் இந்த மக்களைப் பார்த்து எண்ணிய எண்ணங்கள் கவிதைகளில் வெளிப்படுகிறது.

“உங்களை
நலம் விசாரிக்கத்தான்
வந்தோம்

எங்களை
விசாரிக்கிறார்கள்

யார்
அகதிகள்”

“விடைபெறும்போது
நீங்கள்

சொந்த

நாட்டுக்குத்

திரும்புவீர்கள்

நிரந்தர சிறையினில்

எங்களை

விட்டுவிட்டு”

“பஞ்சம் பிழைக்க

மாநிலம்

தாண்டிப்

போகிறீர்கள்

உயிர் பிழைக்க

கடல்

தாண்டி

வருகிறோம்”

“நீங்கள்

இறங்கியிருப்பது

கரையிலன்று

சிறையில்”

“எங்களால்

இறங்கி

வந்து

கரையேற முடிகிறது

உங்களால்

இரங்கி

வந்து

உரையாட

முடியவில்லை”

“வரிசையில்

நின்றபோது

கண்ணில் பட்டது

தமிழனென்று

சொல்லடா

தலை நிமிர்ந்து

நில்லடா”

“தமிழில் தான்

விசாரித்தார்கள்

தமிழர்களாய்

இல்லை”

இத்தகைய கவிதைகள் தமிழ் தேசியம், தமிழர் ஒற்றுமை, தமிழர்களின் உணர்வு போன்ற கருத்துநிலைகளில் பேசுகிறவர்களை, செயல்படுகிறேன் என்ற கொள்கைவாதிகளைக் கேள்வி கேட்கிறது. தமிழ்நாட்டில் வாழ்வாதாரமற்ற அகதிகள் போல் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்ற உணர்வுநிலையைச் சுட்டிக்காட்டுகிறது. வாழ்வாதாரமற்ற தமிழர்கள் அகதிகளாக வரும் தமிழர்களை நடத்தும் நிலைகளைக் கண்டு ஏளனம் செய்வதாக அமைகிறது.

அகதிகளாக வந்த தமிழீழ மக்கள் அங்கே விட்டுச் சென்ற வாழ்விடங்களை நினைவு கூறுவதும், இயலாமையை வெளிப்படுத்துவதும் போன்றவை கவிதைகளில் ஆழமாக அழுத்தமான உணர்வுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

“உறவுகளைப்
பிரிந்து வந்தோம்

வந்தவர்கள்
உறவானோம்”

“படகில்
ஏறினோம்

படகுகளை
விற்று”

“அவ்வப்போது
எடுத்து
அணைத்து
முத்தமிட்டுக் கொள்கிறோம்

கடற்படை
வெளிச்சங்களிலிருந்து
எங்களைக்
காப்பாற்றிய
அந்தக்
கறுப்புச்
சேலைய”

“நடுக்கடலில்

சுற்றிவளைக்கப்பட்ட

படகிலிருந்து

குதித்து

மூழ்கிக் கொண்டிருந்த

அக்காவைக்

காப்பாற்ற

துடிக்கவில்லை

பாசமுள்ள

தம்பி”

“அறுக்காமல்

விட்டுவிட்டு வந்த

வயலில்

பசியார

வரும்

குருவிகளையாவது

சுடாமல்

இருப்பார்களா?”

“இன்னும்

கவலையில்

இருக்கிறாள்

சிறுமி

நீரூற்றப்படாத

பூச்செடிகள்”

தமிழீழ மக்கள் அங்கே விட்டுவந்த உணர்வுகள் எண்ணத்தக்கது. தங்களுடன் வாழ்ந்துக் கொண்டிருந்த உறவுகளை விட்டு வந்தவர்கள். வந்தவர்களை உறவாக எண்ணி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கையில் பல்வேறு திசைகளில் வாழ்ந்தவர்கள் அறியா முகங்கள் இங்கு முகாம்களில் அறியும் முகங்களாகி உறவுகளாகி வாழ்ந்த நிலையைக் காட்டுகிறது. வரும் வழியில் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டவர்கள் ஏராளம். பாசமிகு உயிர்களைப் பாதி வழியில் பறிகொடுத்த நிலையை உணரமுடிகிறது. தன்னுடன் வந்த சக உயிர்களைக் காக்கத் தன் உயிரைத் துச்சமாக மதித்து செயல்பட்டுள்ளனர். இராணுவத்தின் அடாவடிகளுக்குப் பயந்து நடுக்கடலில் தற்கொலை செய்தவர்களும் உண்டு. கொல்லப்பட்டவர்களும் உண்டு என்பதை அறிவுமதி கவிதைகளில் உணரமுடிகிறது. தங்கள் நிலம், உடைமைகளை விட்டு வந்தவர்கள். அதனை எண்ணித் துன்பப்பட்டு வாழும் வாழ்க்கை கொடுமையானது. அவரவர்களுக்கு அவரவர் உணர்வுகள் முக்கியத்துவம் பெற்றது என்பதன் அடிப்படையில் அறுக்காமல் விடுபட்ட நெல் வயலை எண்ணி வருத்தப்படும் தந்தையும், இங்கு வந்தப் பின்பு தங்கள் நாட்டில் இருக்கும் குருவியை நேசிக்கும் மனப்பான்மையும் வெளிப்படுகிறது. தண்ணீர் ஊற்றாமல் விட்டுவிட்டு வந்த பூச்செடிகளை எண்ணி வருந்து குழந்தைகளின் உணர்வுகள் மதிக்கத்தக்கதாயும், போர் அவர்களின் இயல்பு வாழ்க்கையில் நினைவிற்குள் தள்ளியதையும் உணரமுடிகிறது.

பிறந்த குழந்தையின்

நெற்றியில்

வைக்கிறாள்

பிடி

மண்ணாய்

எடுத்து

வந்த

தாய்மண்

திணை மயக்கம்

- நெல்லை ஜெயந்தா

கவிதை உருவாவதற்குப் பரந்த வெளியை இந்தப் பிரபஞ்சங்கள் தந்து கொண்டே இருக்கின்றன. தனக்குரிய சில வரையறைகளின் அடிப்படையில் படைப்பு மனம் இயல்பிற்கேற்ப உள்வாங்கிக் கொள்கிறது. மனிதனின் வாழ்வியல், உணர்வுகள், உரையாடல் தரும் அனுபவங்கள் அப்படைப்பு மனத்தின் பதிவுகளாகக் கவிதைகளில் வெளிப்படுகிறது. தான் கண்டுணர்ந்த உலகத்தை அனுபவத்தைத் தன் கவிதைவெளியில் பாடுபொருள் வடிவத்தில் கொடுக்கும் படைப்பு மனம் அதன் இயல்புகளை வாசகனிடம் பல பரிமாணங்களை உணர்த்துவதாய் முன் நிறுத்துகிறான். சமூக யதார்த்தங்களும் முரண்பாடுகளும், பிறவற்றைப் போல அனுபவமாக உணரப்படத் தகுந்தவையாகிறது. கலை அனுபவம் என்பது கூடு விட்டுப் கூடு பாய்கிற ஒரு வித்தைதான்.

இதனை, தி.சு. நடராசன் இவ்வாறு குறிப்பிடுகிறார். “கலையில் – படைப்பிலக்கியத்தில் தனிப்பட்ட குறியீடுகள், பொதுநிலைக் குறியீடுகளாக மாறுகின்றன. அதுபோல், பொதுநிலைப் பண்புடையவனாகத் தோற்றமளிப்பவை. தனிப்பட்ட உணர்வுநிலைகளாக ஆகின்றன. அதாவது, தொலைவாக இருப்பவற்றை நெருக்கமாக ஆக்குதலும், நெருக்கமாக இருப்பவற்றைத் தொலைவாக ஆக்குதலுமாகிய ’ரசவாதம்’ கலையின் முக்கியமான வேலை.” படைப்பு மனம் வெளியிடும் குறியீடுகள் பொதுத்தன்மை வாய்ந்ததாகவும், தனிப்பட்ட உணர்வு நிலையை தன்னோடும் பிறவற்றோடும் தொடர்புபடுத்தி அமைபவை. புறவய, அகவய உண்மைகள் அழகியல் தன்மையில்

புலப்படுத்தப்படுகையில் கலைத்தன்மையில் உண்மையாகக் காட்சியளிக்கின்றன. இத்தகைய அடையாளங்களை நெல்லை ஜெயந்தா, திணை மயக்கத்தில் புலப்படுத்துகிறார்.

பொதுமையான தன் அனுபவம்

இயற்கையின் இயல்புகள் கண்டுணரத் தக்கன. அதில் பயணிக்கும் வாழ்க்கைப் பயணம் இன்புறத்தக்கன. இளமையில் இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பது அனுபவம் சார்ந்தது. அதில் ஏற்படும் சுவடுகள் என்றும் மாறாதவையும். இன்பியலைப் போல துன்பியலும் கூட. நீர்நிலைகளில் அலையும் விளையாட்டுக்கள் இளமையைக் குதூகலப்படுத்துபவை. அஃறிணை உயிர்களைப் போல துள்ளிக் குதிப்பவை. நீர்நிலையில் கால்ச் சட்டையுடன் கழற்றித் தாவி தவளைப் போல அடித்த நீச்சல்கள் துள்ளிக் குதிக்கத் தூண்டுபவை. கன்றுக்குட்டியைக் குளிப்பாட்டுவதற்காக துரத்தி ஓடிய நாட்கள் எண்ணத்தக்கது. மார்கழி மாதக் குளிரிலும் இதம் மாறாமல் குளிக்க ஓடிய நாட்கள் அனுபவம் வாய்ந்தவை. நடுச் சாமம் வரையிலும் ஆற்றுடனும் நண்பர்களுடனும் பேசிய நாட்கள் நாட்கள் நினைவில் நீங்காதவை என்று உணர்த்திய கவிஞர்,

“ஆற்றைப் பார்த்தாலே
அவ்வளவு மகிழ்ச்சி
அந்த
ஐப்பசி வெள்ளத்தில்
அப்பாவின் சடலம்
மிதக்கும் வரை”

என்ற வரிகள் அனுபவத்தை வாழ்க்கையோடு புரட்டிப் போட்ட நிகழ்வுகளாக மாறியது. ஐப்பசி மாதம் நல்ல மழைக்காலம். ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடக் கூடிய மாதம். தண்ணீரில் இழுத்துச் செல்லும் மரம் செடி, கொடிகளைப் போல அப்பாவையும் இழுத்துச் செல்லும் போது மகிழ்ச்சியையும் சேர்த்து இழுத்துச் சென்றுவிட்டது என்பது கண்டுணர்ந்த அனுபவத்தினைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

அவள் கவிதைகளில் காதல்

படைப்பு மனம் காதல் உணர்வுகளைப் பொதுமை உணர்வுகளாகக் குறிப்பிடுகிறது. காதல் தன்னுணர்ச்சியைப் புலப்படுத்துவதாக இருந்தபோதிலும் அது சுட்டிக்காட்டும் சமூக நிலைகள் அதன் நேர் எதிர் தன்மைகளைப் புலப்படுத்துவன. அவ்வாறாக ஒரு கவிதையில் முரண் நிலைகளில் வலைவீசும் உணர்வுகள் வெளிப்படுகின்றது. கண்கள் மீன் வடிவத்திற்கு ஒப்பாக அமைகிறது. ஆனால் அதில் வீசக் கூடிய பார்வை தூண்டிலாக அமைகிறது. “

அவள்
கண்களைப் பார்த்தால்
மீன்!
கண்களால்
அவள் பார்த்தால்
தூண்டில்!”

அவள் கொழுசு அணிந்து ஆற்றின் அருகில் நடந்து வருகையில் ஆற்று மீன்கள் சங்கீதம் கற்கின்றன. குளிக்கும் போது ஏற்படும் வளையல் ஓசையும், கொழுசுகளின் ஓசையும் ஆற்று மீன்கள் ரசிக்கின்றனவாகக் காட்சி அளிக்கின்றன.

ஆற்று மீன்களுக்கு

ஆசை

சங்கீதம் கற்க!

குளிப்பாளா அவள்

கொலுசுகள் அணிந்து?

பட்டாம்பூச்சிகள் எப்போதும் பூக்களைச் சுற்றிவருவன. அவைகள் பூக்களில் தேனை உண்ணும் போது தன்னையே மறந்து நிலைத்திருக்கின்றன. பசுமையான வெளிகளில் அலைந்து திரிவன. ஆனால், அவளின் கூந்தல் பூக்கள் மலரும் சோலையாக உவமைப்படுத்துகிறார். மேற்கிந்திய தீவுகளில் பயணம் செய்த கொலம்பஸ் அம்மக்களின் வாழ்வியலை அடையாளம் கண்டறிந்ததைப் போல, அவள் கூந்தலில் வண்ணத்துப் பூச்சிகள் அவள் கூந்தலைக் கண்டுபிடிக்க முயலுகின்றது எது? என்பதை அடையாளப்படுத்த முயலுகிறார்.

“பட்டாம்பூச்சிகளே

உங்களில் யார்

அவள் கூந்தலைக்

கண்டுபிடிக்கப் போகிற

கொலம்பஸ்?”

மூடநம்பிக்கைகள் இப்புவியில் ஏராளம் உண்டு. அதில் ஒன்று தேவதைக் கதைகளும் கற்பனைகளும் தான். கடவுள்களைச் சுற்றிலும் வெண்ணிற ஆடைகளை அணிந்து

தேவதைகள் வலம் வருவார்கள். கனவுகளிலும் தேவதைகள் வலம் வருகிறார்கள். அழகுநலம் பொருந்திய பெண்களையும், குழந்தைகளையும் தேவதைக்கு ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய வழக்கம் உலகலாவியதாக இருக்கிறது. கவிஞர் பெண்ணை தேவதைக்கு ஒப்பிடுகிறார். அவர்கள் இப்புவியில் வசிப்பதை நம்புவது கண்ணாடிகளில் மட்டும் தான். கண்ணாடிதான் தேவதைகளை அடையாளம் காட்டுகின்றன.

"அவள் மட்டுமே
முகம் பார்க்கும்
கண்ணாடியின்
மூட நம்பிக்கை
தேவதைகள்
பூமியில்
வசிக்கிறார்கள்"

புன்னகையை மின்சாரத்துடன் ஒப்பிடுகிறார். புன்னகையில் வெளிப்படும் மின்சாரம் பார்ப்பவர்களின் இதயத்தில் அல்லவா பாய்கிறது. மின்சாரம் உடலில் புகுந்தால் அது உயிரை உருக்கிவிடும் வல்லமை கொண்டது. மின்சாரத்தைக் கண்டுபிடித்தது தாமஸ் ஆல்வா எடிசன் இந்த இரண்டு சிந்தனைகளையும் ஒரு வார்த்தைக்குள் அடக்குகிறார்.

"எடிசன் இல்லையே
யார் நம்புவார்கள்
எவ்வளவு மின்சாரம்
விரயமாகிறது
அவள்

புன்னகைக்கும் போதெல்லாம்"

அவளையும் நிலவையும் ஒப்பிடுகிறார். நிலாவும் பெண்ணும் ஒன்றென பல்வேறு உவமைகள் கவிதைகளில் கவிஞர்களிடமிருந்து வெளிப்படுகின்றன. எனினும், ஒருத்தி அறிதல் என்பது எல்லோருக்கும் அவாவும் தன்மைத்தானது. ஒரு ஆண், ஒரு பெண்ணை அறிதல் என்பது நிலவுக்கும் பூமிக்கும் உள்ள தூரமாகும். அத் தூரத்தை, இடைவெளியைச் சுட்டுகிறார். மற்றும் நிலவு எப்போதும் குளிர் வீசக் கூடியதாகவும், பிரமிப்பூட்டுவதாகவும் அரிதில் விளங்கிக் கொள்ள இயலாததாகவும் இருக்கிறது. அது போல பெண்மையும் உள்ளது என்பதைக் கவிஞர் சுட்டுகிறார்.

"அவளைப் பற்றி
அதிகம் தெரியலாம்
நிலவுக்குப்
போனவர்களை
நேரில் விசாரியுங்கள்"

பெண்ணின் வெட்கத்தையும், வெட்கத்தில் முகம் சிவக்கும் தன்மையை மருதாணிச் செடியுடன் ஒப்பிடுகிறார். மருதாணி பூசி சிவக்கும் இளஞ்சிவப்பு வெட்கத்தில் சிவக்கும் முகச்சிவப்பிற்கு ஒப்பாகிறது.

"அவள்
வெட்கப்படும்பொழுதெல்லாம்
முளைக்கிறது
பூமியில்
ஒரு மருதாணிச் செடி"

கன்னிவெடி கவிதையில் பெண்ணின் சம்மதம் காதலின் அடிப்படையாகிறது. இதனை மதத்துடன் ஒப்பிடுகிறார். அவள் விழிகளோ அல்லது வார்த்தைகளோ அல்லது அசைவுகளோ சம்மதத்தைத் தரவல்லன. உன் இதழ்களில் உச்சரிக்கும் வார்த்தைகள் சரவெடியாகவும், இமைகள் மத்தாப்புகளாய் ஒளிவீசுவதையும் குறிப்பிடுகிறார். சத்தம் எழும்பும் வார்த்தைகளும் சம்மதத்தைத் தரவல்லன. என்றபோதும் ஒளிவீசும் மாத்தாப்புகள் கவர்ச்சியைத் தரும் கண்களாக அமைகின்றன.

“என் திருவிழாக்கள்

நம் மதத்தில் அல்ல

உன்

சம்மதத்தில்”

என்பது திருவிழாக்கள் எங்கும் நடந்தாலும் அதில் ஆர்வமோ, விருப்பமோ இல்லாத மத வேற்றுமைகளைக் கடந்த சம்மதம் முக்கியத்துவம் பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

திணை மயக்கம் கருத்துநிலை

திணை மயக்கம் என்பது சங்க இலக்கியங்களில் எளிதில் விளங்கப்படாதது. ஐந்திணைகளில் ஒன்றையொன்று சார்ந்த கருப்பொருள்கள் வழியும், உரிப்பொருள் வழியும் திணை மயக்கம் உள்ளது. இக் கவிதையில் திணை மயக்கத்தை ஏற்படுத்துவது கருப்பொருள்களில் ஒன்றான புறாவாகும். கருப்பொருள் என்பது மனிதன் அல்லாத அஃறிணைப் பொருள்களைக் குறிப்பதாகும். புறா அஃறிணைப் பறவையாகும். புறா என்பது சமாதனத்தின் அடையாளம். ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் நடக்கும்

போரைத் தடுப்பதற்கு புறா தூதுவாக விடப்படும். வெள்ளைப்புறாக்கள் சமாதானத்தின் உச்சம். வெள்ளை என்பது சமாதானத்தின் நிறம். புறாக்கள் பகைமையைக் கடந்து தூது செல்லவும் பயன்படுத்தப்படுகிறது. குருத்வாரா என்பது இந்து மதத்தின் புனிதத் தளமாகும். கிறித்துவர்களுக்கு சிலுவை என்பது உயரிய குறியீடாகும். தர்காக்கள் இஸ்லாமியர்கள் தொழுமிடம் ஆகும்.

இந்த மூன்று கடவுளும் ஒன்று தான் என்றாலும், மதத்தைப் பற்றிய மனிதர்கள் வேறுபாடுகளுடன் உள்ளனர். அவர்கள் வணங்கும் ஆலயங்கள் வசிக்கும் புறாக்கள் எப்போதும் சமாதானத்தை அடையாளப்படுத்துவன. திணை மயக்கம் என்பது ஒரு நிலத்தின் தன்மையை மற்றொரு நிலத்திற்கு மயங்குவது போல, மதங்களின் ஒழுக்கங்கள் மாறி ஒற்றுமையை ஓங்கும் வழியை அனைத்திற்கும் பொதுவான பயணம் மேற்கொள்ளும் புறாக்களிடம் முறையிடுகிறார்.

குருத்வாரா ஓரம் கூட்டமாய் இரை தேடலாம். சிலுவைகள் மீதமர்ந்தும் சிறகுகள் கோதலாம். தாகமா தார்கா வாசலில் தண்ணீர் பருகலாம். ஒற்றுமை உணர்த்தும் ஊர்வலமாகவும் செல்லலாம். கோபுர உச்சியில் கூட்டில் அடையலாம். எனினும்,

> “தெரிந்தால் சொல்
>
> திணைமாறும் வழி”

என்று புறாவிடம் கேட்பதாகக் கவிதை அமைகிறது.

பிச்சை – வறுமை சிந்தனைகள்

மனிதர்கள் தங்களது வறுமையைப் போக்குவதற்காக பிச்சை எடுக்கின்றனர். பிச்சை எடுத்தல் என்பது தன்மானத்தை இழந்த வறுமையின் உச்சமாகும். அவர்களின் பிழைப்பிற்காக, பணம் சேர்ப்பதற்காக அஃறிணை உயிர்களை வதைக்கின்றனர். கடவுளர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்ட உயிரினங்களைப் பயன்படுத்துகின்றனர். யானை, கிளி, குரங்கு, காளைகள், அப்பாக்கள் போன்றவை பிறரை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

யானை மிகப் பிரமாண்டமான உருவம் கொண்ட மிருகம். இதனைப் பழக்கப்படுத்தி அதன் துதிக்கையைப் பிச்சைப் பாத்திரமாகக் கோயில்களிலும், கடை வீதிகளிலும் பயன்படுத்துகின்றனர். பறந்து சுதந்திரமாகத் திரிந்த கிளிகளைக் கூண்டிலில் அடைத்து சீட்டெடுக்க வைத்து சோதிடர்கள் பிழைக்கின்றனர். அனுமன் கதைகளைச் சொல்லி புனிதப்படுத்தப்பட்ட குரங்குகளைக் குட்டிக்கரணம் அடிக்க வைத்து பிழைப்பு நடத்துகிற கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. மாடுகளின் கொம்புகளில் வர்ணம் பூசி அதனைப் பூம் பூம் மாடுகளாகத் தலையாட்ட வைத்து சம்பாதிக்கிறது. மற்றும் சிலரின் பிழைப்புகள். இவர்களை விட தன் உழைப்பை நிறுத்தி பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை வேலைக்கும் அனுப்பச் செய்யும் அப்பாக்களை விட இந்த விலங்குகளிடமும், பறவைகளிடமும் கோபப்படுதல் எந்தவொரு நிலையிலும் நியாயமில்லை என்று குறிப்பிடுகிறார்.

யாரிடம் கோபப்படுவது?

இரப்பை நிரப்ப
புத்தகப் பை பறிக்கும்
அப்பாக்களைப்
பார்த்த பிறகு!

விபத்துப் பகுதி கவிதையில் அநாதை இல்லங்களையும் அநாதைக் குழந்தைகளின் அவலங்களைக் குறிப்பிடுகிறார். அலுவலகத்திலிருந்து காலதாமதமாக வரும் அம்மா அலுத்து வருகிறாள். நிலாச்சோறு ஆசைகள் அவளது அலுப்பு நிராகரித்து விடுகிறது. ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது கேட்கப்டும் சத்தங்கள் அப்பாவின் வருகையைக் காட்டுகிறது. கூன் வளைந்த முதுகுகளோடு தாத்தாக்கள் முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுகின்றனர். அம்மா அப்பாவின் சொந்தங்கள் வயல் பிரச்சினைகளிலும் மேலோட்டமாகப் பேசிப் போவதிலும் ஒதுங்கி விடுகின்றனர். குழந்தைகள் அதிகமாக இருப்பதில் ஏற்படும் பொருளாதார, சமூகச் சிக்கல்களுக்குப் பயந்து அளவான குடும்பம் என்ற கருத்து பிறக்கிறது. இதனால் உறவுகளும் இல்லை. ஒற்றைக் குழந்தை என்ற கருத்தில் உடன்பிறந்த உறவுகளும் இன்றிப் போகின்றன.

“தனித்தனியாய்
விடுதிகளில்
தனியாய் வீடுகளில்
அநாதைக் குழந்தைகள்“

முதியோர் இல்லத்தில் தனியாக விடப்பட்ட தாத்தாக்களைப் போல் வீடுகளில் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டு விடுகின்றனர் என்பதைக் கவிதைகளில் தெளிவாகவும் ஆழமாகவும் புலப்படுத்துகிறார்.

காவிரி செழித்து ஓடும் தஞ்சையில் மழையில்லாமல் ஏற்பட்ட வறுமை கொடியது. கர்நாடகாவில் சிலபோது தண்ணீர் மறுத்த காலங்களில் காவிரி வறண்டு வறுமையைக் கொடுக்கிறது. அம் மக்கள் இயற்கையாலும், அரசியல் காலங்களிலும் எப்போதும் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட வறட்சி தமிழகத்தை மட்டுமல்ல. உலகையே உலுக்குவதாக அமைந்தது. அனைத்துக் கவிஞர்களின் கவிதைகளிலும் தஞ்சையின் வறுமையும் வறட்சியும் மிகுதியாக எழுதப்பட்டன. அப்போது பல்வேறு மக்களும் புலம்பெயர்ந்து வாழிடங்கள் தேடவும் ஆனார்கள். நெல்லை ஜெயந்தாவும் தஞ்சை வறட்சியைச் சற்று மாறுபட்ட கோணங்களில் எழுதுகிறார். இது நிலநடுக்கம் இல்லை நதி நடுக்கம் என்கிறார்.

நிலநடுக்கங்கள் வந்தால் நிலம் வெடித்து கட்டிடங்கள் இடிந்து பூமிக்குள் புதைந்து விடுகிறது. ஆனால், இங்கு நிலம் வெடிக்கிறது. பூமி புதையவில்லை. மாறாக வெளியே வந்துவிட்டது. கலப்பைகள் உறங்கிவிட்டன. ஆனால் விவசாயிகளின் இரைப்பை விழித்து இருக்கின்றன. அவர்கள் உணவின்றி துன்பப்படுகின்றனர். எலிகளைச் சுட்டு உண்பது போக, எலிகள் சேமித்து வைத்த தானியங்களை உண்டு வாழ மக்கள் பழகிவிட்டனர். ஆடு மாடுகள் உணவின்றி வறட்சி எய்தின.

“முதன்முதலாய்
வருத்தப்படுகின்றன
அசைவம்
சாப்பிடத் தெரியாத
ஆடு மாடுகள்”

என்று இயற்கை முரணான வாழ்க்கை நிலை மாறியதைக் குறிப்பிடுகிறார். ஆடு மாடுகள் பசிய புல்லை மட்டும் உணவாக உட்கொள்வன. ஆனால், அவைகளுக்கு மாமிசம் சாப்பிடத் தெரிந்தால் எலிகளைக் கூட உணவாக எடுத்துக் கொள்ள வேண்டிய முரண் ஏற்படக் கூடும் என்று வறுமையின் உச்சத்தைக் குறிப்பிடுகிறார். நிலங்கள் அனைவரும் உணவு என்னும் பிச்சை வழங்கவல்லது. ஆனால் அதுவே திருவோடு ஏந்தினால் எங்கே முடிவது வாழ்க்கை? என்ற கேள்வியை முன் வைக்கிறார்.

“அன்று
நஞ்சை உண்டு
சாகுபடி ஆனது!
இன்று
நஞ்சை உண்டு
சாகும்படி ஆனது!

யார் பிச்சை இடுவது?
நிலங்களே
திருவோடு ஏந்தினால்”

கண்ணீர் தீவுகள் கவிதையில் முதியோர்கள் அநாதைகளாக்கப்படுவதும் பிச்சைக்காரர்களாக மாறுவதும் சமூகத்தின் அவலம் என்று குறிப்பிடுகிறார்.

“இவை

வாழ்க்கைத் திருவிழாவில்

பிள்ளைகளால்

தொலைக்கப்பட்ட

பெற்றோர்கள்

ஆயுளைத் தொலைக்கிற

அசோக வனங்கள்!”

பிள்ளைகளால் துரத்தப்பட்ட பெற்றோர்கள் முதியவர்கள் ஆயுளைத் தொலைக்கும் அசோகவனத்தில் தஞ்சம் புகுகின்றனர். அவர்கள் உடம்பில் மூச்சு உள்ளது ஆனால் தகனங்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தங்களின் பழைய நினைவுகளில் மூழ்கிப் போய் வறுமையை எண்ணி வருந்துவதால் அவற்றைத் தவிர்க்கவே செய்கின்றனர்.

“இங்கே தான்

இருக்கிறார்கள்

வீட்டுக்கு விலக்கான

ஆண்களும்!”

சமூகத்தில் பெண்கள் பூப்பெய்தி விட்டால் அவர்களை வீட்டிலிருந்து சிலநாள் விலக்கி சடங்குகள் செய்வது வழக்கம். முதுமை எய்திவிட்டால் அதேபோல ஆண்களும் விலக்கி வைக்கப்படுகின்றனர் என்பது சமூக அவலம். இதயமற்ற பிள்ளைகளால் முடியாத வயதில் துரத்திவிடப்பட்ட அநாதைகளாகத் தண்டிக்கப்படுகின்றனர். அக்குழந்தைகள் எப்போதாவது ஒரு முறை பார்த்துவிட்டுப் போகும் என்ற ஆறுதல் இருப்பதால் அவர்கள் உயிருடன் வாழ்கின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.

“ஒரே ஒரு ஆறுதல்!
இந்த
மனிதக் காட்சி சாலைகளை
எப்போதாவது
பால் குடித்த
விலங்குகள் வந்து
பார்த்துவிட்டுப் போகும்”

சமூக மாற்றம்

பிச்சைக்காரர்கள் அதிகமாக உள்ளார்கள் என்றால் அந்த செல்லரித்துப் போன பொருளாதாரத்திலும் ஏற்றத்தாழ்விலும் பின்தங்கி உள்ளது என்று அர்த்தமாகிறது. ஆனால் ஊழல் அதிகரித்தாலும் அச்சமூகம் பின்னோக்கிச் செல்கிறது என்ற அர்த்தமாகிறது. ஊழல் புரையோடிப் போன சமூகம் வறுமையை அதிகரிக்கும் சமூகமாகும். மாறுவேடம் கவிதையில் நவீன ஊழல் வடிவங்களைச் சுட்டுகிறார். வரதட்சனை, இலஞ்சங்கள், நன்கொடைகள், தீபாவளி இனாம்கள் போன்ற கம்பீரமாகவும், உயர்ந்த நாகரிகத்தோடும் வசூலிக்கப்படுகின்றன. இத்தகைய வசூலிப்புகள் ஒருவகையில் பிச்சையாகத்தான் உள்ளன என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் பிச்சை என்பது எப்போதும் இரந்து கேட்கப்படுவதாகவே உள்ளது. வரதட்சனை வாங்குவதைப் பெருமையாகவும், இலஞ்சங்கள் நட்சத்திர விடுதிகளில் பரிமாறப்படுவதாகவும், நன்கொடைகள் கம்பீரமாக வாங்கப்படுவதாகவும், தீபாவளி இனாம்கள் வெட்கப்படாமல் வசூலிக்கப்படுகின்றன.

“பாவம் பிச்சைக்காரர்கள்!

பணிவாய்

கை நீட்டுகிறார்கள்”

என்று நகையாடப்படுகிறது. பிச்சையும் இவர்கள் அனைவரைப் போல கேட்கப்பட வேண்டும். இவர்கள் அனைவரும் ஒரு வகையில் பிச்சைக்காரர்களே என்பதை உணர்த்துகிறார்.

சமூகத்தில் வீடுகள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. அவர்களின் வாழ்விடம், சூழல், பொருளாதாரம், தேவை போன்றவற்றிற்கேற்ப வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் வீட்டின் மீதான உணர்வுகள் அனைவருக்கும் ஒன்றே. குடிசைகளில் வாழ்பவர்களும் சரி, மாளிகைகளில் வாழ்பவர்களும் சரி தங்கள் வீட்டின் மேலுள்ள பற்று மாறாமல் வைத்திருப்பர். வீடு என்பது அவர்கள் வாழுமிடம் என்ற போதும் அதன் மேல் இருக்கும் பிடித்தம் என்றும் மாறாததாக இருக்கும். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு புலம்பெயர்ந்தாலும் வீட்டின் மீதான சிந்தனைகள் மாறாதது. கிராமத்து வீட்டின் மீதான பற்றைக் கவிஞர் தன் உணர்விலேற்றிக் கூறுகிறார்.

அம்மா தன் வீட்டைக் கல்லால் ஆன கர்ப்பப் பை என்பாள். ஊர் சுற்றி விட்டு உறங்க வரும் அண்ணன் நினைப்பில் தொட்டில் உள்ளது. சுவரில் தொங்கும் புகைப்படங்கள் கல்வெட்டுக்கள் போல் காட்சி தரும். வெள்ளை அடித்தே வெகுகாலம் ஆனாலும் அப்பாவின் வார்த்தைகளில் அது அரண்மனைதான். எவ்வளவு தான் வயதானலும்,

நாகரிகம் மாறி நகரத்திற்குக் குடிபெயர்ந்தாலும் கிராமத்தின் வீட்டில் வாழ்ந்த ஆச்சிக்கு அது தாத்தா வாழ்ந்த கோயிலாகும்.

“சிதறிக் கிடக்கும்
செங்கல்கள்
இப்போதும்
பேசிக் கொண்டிருக்கின்றன

இரத்த சம்பந்தத்தை!

இடிக்கப்பட்ட
எங்கள் வீடு!”

இடிக்கப்பட்டாலும் வீடு என்பது அங்கு வாழ்ந்த ஒவ்வொருக்கும் தனித்தனியான வாழிட உணர்வுகளைத் தரவல்லன என்பதைக் கிராமத்து வீடு கவிதையில் உணர்த்துகிறார்.

காலமாற்றம் வாழ்க்கையை மாற்றுகிறது. வாழ்க்கை உணர்வுகளை மாற்றுகிறது. உணர்வுகள் பாடுபொருளை அசைபோடுகிறது. தொலைபேசி உரையாடல்கள் தற்போது அதிகரித்திருப்பதால் கடிதங்களின் உரையாடல் குறைந்துவிட்டது. ஆனால் கடிதங்கள் எழுதுவதும் அதனைப் படிப்பதும் நினைவுகளில் ஏற்றுவதும் அலாதியான உணர்வாகும். அம்மாவின் கடிதங்களில் தாய்ப்பால் வாசமான அன்பு வெளிப்படும். அப்பாவின் கடிதங்கள் பணவிடைத்தாளாக வரவேற்கப்படும். காதலர்கள் கடிதங்களைப் படித்தும் பசி ஆறுகின்றனர். நண்பர்கள் தரும் செய்திகளிலிருந்து அவர்கள் வயதினை அறிந்துகொள்ள முடியும். பிரசவத்திற்குச் சென்ற மனைவிகளின் கடிதங்களில் வழியும் அன்பால் கணவனின் கற்புகள் காப்பாற்றப்படுகின்றன.

”இப்பொழுதெல்லாம்

என்

கண்களில் படுகின்றன

தொலைப்பேசிகள்

கடிதங்களின் சவப்பெட்டியாக”

மாறுகண் கவிதையில் நடைபாதை வாசிகளின் உணர்வுகளும், குடிசை மக்களின் அவலங்களும், கால மாற்றத்தில் ஏற்படும் அவஸ்தைகளும் குறிப்பிடும் கவிதையாக அமைகிறது. அனைத்தும் ஹைகூ வடிவங்களில் சொல்லப்பட்ட கவிதைகள் அதன் பொருள் எளிதில் விளங்கக்கூடியது. ஒழுகும் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு எப்படி மழையை ரசிப்பது. சோளக்காட்டிற்குக் காவலுக்குச் சென்றால் கொத்த வரும் கிளிகளின் மொழியை எப்படி ரசிக்கமுடியும். நடைபாதையில் வசிப்பவர்கள் பௌர்ணமி ராத்திரிகளால் தாம்பத்தியம் செய்து கொள்வது மிகவும் ரணகொடூரமான வாழ்க்கை போன்ற உணர்வுகள் கவிதைகள் தனித்துவம் பெற்றவையாகிறது.

“எப்படி ரசிப்பது

மழையை

ஒழுகும் குடிசையில்”

“கிளிமொழியைக்

கேட்பதில்லை

சோளக்காட்டுக் காவல்”

“பௌர்ணமி ராத்திரிகளைப்

பழிக்கிறது

நடைபாதைத் தாம்பத்யம்!”

பழைய சோறு கவிதையில் மாறிவரும் கிராம வாழ்க்கைப் பேசுகிறார். கிராம வாழ்க்கை எப்போதும் ஒற்றுமையுடன் எள்ளி நகையாடி மகிழ்ந்து வரும் வாழ்க்கையாகும். அவ்வாழ்க்கையில் நுழைந்த நவீனம் அவர்களை முற்றாக மாற்றுகிறது. எனினும் கிராமம் அடைப்பட்டுப் போனாலும் பாதி நகரங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

"மீண்டும் வேண்டும்
பாதி நகரமான
எங்கள்
மீதி கிராமம்"

நர்சரி பள்ளிகளின் தொடக்கத்தால் குழந்தைகளின் மீதான பாசம் அற்றுப்போய் விட்டது. விதவிதமான வெளிவந்துள்ள விவசாயக் கருவிகள் சர்க்கரை நோய்களை உருவாக்குகிறது. தொழிற்சாலைகள் மிகுதியாகத் தொடங்கப்படுவதால் நுரையீரல்கள் அழிந்து மக்கள் நோய்களுக்கு ஆட்படுகின்றனர். தெருவில் குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்த திண்ணை வாசிகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உறவுகளை மறக்கடித்தன. தலைவர்கள் சிலைகள் அதிகமாக திறக்கப்பட்டு உயிர்களைப் பலிவாங்கும் கொலைக்களமாகச் செயல்படுகின்றன என்று மாறிவரும் வாழ்க்கையைக் குறிப்பிடுகிறார். மீண்டும் கிராமங்கள் உயிர்த்தெழ வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்.

வேசி

பசித்தது
உணவில்லை
உணவானாள்

பசியில்லை

காலணி ஆதிக்கம்

தேசியப் பறவைக்கும்
கிட்டுவதில்லை
சபைகளில் பறக்கும்
வாய்ப்பு

கொள்ளை

வீடுகளைப்
பூட்டும்பொழுது
பள்ளிகளைத்
திறக்கும்பொழுது

குறுங்கவிதைகளில் நறுக்குத் தரித்தாற்போல் சமூகத்தில் அவலங்களை எடுத்துக்கிறார். இவ்வாறாக தம் கவிதைகளில் காதலையும், சமூகத்தையும், இயற்கைகளையும் மாறிவரும் வாழ்க்கைமுறைகளையும் திணை மயக்கங்களாக நெல்லை ஜெயந்தா குறிப்பிடுகிறார்.

அலகு – 5

காந்தள் நாட்கள்

- இன்குலாப்

தமிழ் கவிதை மரபில் இருபதாம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட புதிய சிந்தனைகள் கட்டமைக்கப்பட்ட பழமை மரபுகளையும், புதிதாக கட்டமைக்கப்பட்ட சமூக அடையாளங்களின் உண்மை முகங்களையும் வெளிக்காட்டும் கண்ணாடியாக இலக்கியப் படைப்புகள் தோன்றின. புதுக்கவிதைகள் சமூகத்தை அதன் ஆணிவேரை அசைத்துப் பார்க்க முயன்றது. தினம் தினம் நடைபெறும் அவலங்களை அவனது அடிப்படைகளைக் கேள்வி கேட்கும் சுட்டிக்காட்டும் உணர்வு வெளிப்பாடாக அமைந்தன.

கவிதைகள் காலத்தின் தேவைக்கேற்ப புதிய வடிவங்களில் பழமை, புதுமை வாய்ந்ததாகக் கருதப்பட்ட சிந்தனைகளில் தம் உணர்வுகளைப் புகுத்தி பார்க்கும் தன்மை உருவானது. நவீனம், பின்நவீனச் சிந்தனைகள் மனிதனின் கொள்கைகளில் புகுத்திப் பார்ப்பதாகவும், அன்றாட நிகழ்வுகளின் பொய்மை முகங்களைத் திரைப்படுத்தி வெளிச்சத்தில் நிறுத்துவதுமான வேலைகளைச் செய்தன. சாதி, சமயம், பண்பாட்டு உள்ளிட்ட கட்டமைப்புகள் பின்னப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டுவதோடு, அதனை எதிர்ப்பதும், அடிப்படைகளை உணர்த்துவதில் மனிதத்தைக் கட்டமைப்பதுமான இயக்கத்தைப் பெற்றன.

இலக்கியப் படைப்பாளனின் சமூகக் கண்ணோட்டங்கள் அவனது படைப்பின் வழி சமூகத்தின் நடைமுறைகளைத் தனி மனித உணர்விலேற்றி அவற்றிலுள்ள சிக்கல்களை அடையாளம் காணுவதும், எள்ளி நகையாடுவதுமாக இருந்தது. இன்குலாப் தன் கவிதைகளில் சமூகத்தின் தேவையை, நேர்எதிர் கருத்துகளை வெளிப்படுத்துகிறார். பேராசிரியர் ஞானி, “கவிதைகள் வெறும் மனதின் குரலாக நின்று விடுவதல்ல. அது மக்களின் குரலாகத் திசைகள் தோறும் எதிரொலிக்கும் இயக்கமாகும்” என்கிறார். இங்கு மக்களின் குரலாகக் கவிஞர்களின் குரல்கள் அமைகின்றன. இன்குலாப் கவிதைகள் அடித்தட்டு மக்களுக்கான படைப்பாகும். அம் மக்களின் மீது திணிக்கும் படும் மலங்களை, அவலங்களை, திட்டமிட்டும், திட்டமிடாமலும் நடத்தப்படும் வன்முறைகளைச் சுட்டுகின்றன. அன்றாட வாழ்வில் இயல்பான நிலையன்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தும் காயங்கள் அவர்களின் வாழ்வு முழுவதும் வடுக்களாகச் சுமந்து செல்லும் அவலங்களைக் காட்சிப்படுத்துகிறது. கலை என்னும் வடிவத்தில் அவை சொல்லப்பட்டாலும் படிப்பவர் மனதில் ஊசி குத்தும் வேலையைச் செய்கினறது. அவ் வடுக்களை வாசகனும் சுமந்து செல்லும் நிர்பந்தம் இன்குலாப் கவிதைகளில் ஏற்படும் உணர்வாகிறது. இது கவிதை சமூகத்தைச் சுட்டிக்காட்டும் போர் என்றாலும், அப்போரில் வாசகனும் பங்கேற்கிறான். அவனும் படைப்பாளனோடு பயணிக்கும் எதிர்குரலாக அமைகிறான்.

காந்தள் நாட்கள் கவிதைத் தொகுதியில் சமகால விழுமியங்களை, நிகழ்வுகளை, கருத்தியலோடு இணைத்துப் பயணிக்கும் சமூகத்தின் தேவையை உணர்த்துவதாகிறது. சமூக குறைகளைச் சுட்டிக்காட்டுவதும், அவற்றின் அழகியலைக் கவிதையாக

உருக்கொண்டு தினமும் கழித்தெறியும் நாள்காட்டிகளின் அவலங்களாகச் சுட்டுகிறார். மக்களுக்கான களப்போராட்டத்தைத் தாண்டி காலந்தோறும் நிலைத்திடுகின்றக் கருத்துப்போரையும் முன்னெடுக்கிறார். சமகால பிரச்சினைகளின் வேர்களாக அமைந்திருக்கும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் பிற்போக்குத் தனத்தின் தாக்குதலைத் தொடுக்கிறார்.

இன்குலாப் கவிதைகள் நிகழ்த்தும் சொற்போர்

இன்குலாப் நிகழ்த்திய கவிதைகள் சொற்போர் என்றும் கருதலாம். தம் கவிதை வழியாக நிகழ்த்துகிறார். சமூகத்தில் ஏற்கப்பட்ட மரபுகள் அடித்தட்டு மக்களுக்கு எதிராக இருக்கிறது. அவர்களை வஞ்சிக்கிறது. உணர்வு ரீதியாக ஒடுக்குகிறது. அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. மாறாக, நிர்வாகக் கட்டமைப்புகள் அநீதிகளைப் பாதுகாக்கும் அரணாகவும், ஒடுக்குவோருக்குத் துணைநிற்கும் சட்டமாகவும், ஒடுக்கப்படுவோருக்கு நீதி வழங்காமல் அநுதாபத்தை மட்டும் காட்டிச்செல்லும் அவலத்தை நிகழ்த்தும் அதிகாரம் என்பதைத் தன் சொற்போரில் காட்டுகிறார். சமயம், தேசியம், கல்வி, சட்டம், பெண்ணியம், இலக்கியம் போன்ற பலகோணங்களில் நிகழும் முரண்பாடுகளை எதிர்க்கிறார். தம் கவிதைகளில் குரலற்ற மக்களின் குரலாக ஒலிக்கிறார்.

புனிதத்தன்மை மிக்கதாகக் கட்டமைக்கப்பட்ட சமூகத்தின் கருத்தியல்களில் பாதிக்கப்படும் மக்களின் குரலாக ஒலிக்கிறார். இங்கு புனிதங்கள் என்பது வெறும் அடையாளங்கள். அவைச் சமூகத்தை மேல் கீழ் கட்டுமானத்தில் நிகழ்த்துவதன் ஏமாற்று

வெளி. அடித்தட்டு மக்களை வஞ்சிப்பதற்காகவே கட்டமைக்கப்பட்ட பொதுமை நெறி. சமயங்கள் வழிபாட்டின்வழி பண்பாடுகளைக் கட்டமைக்கிறது. பண்பாடுகள் ஆண், பெண் என்ற ஏற்றத்தாழ்வைக் கட்டமைக்கிறது. சமயங்கள் கடவுளின் வழிநின்று சாதியத்தைக் கட்டமைக்கிறது. சாதியம் அனைத்து மனிதர்களும் சமம் என்பதை மறுக்கிறது. அனைத்தையும் வேறுபாடுகளையும் தோற்றுவிக்கும் ஆணிவேரான சமயங்கள் புனிதத்தன்மை பெறுகிறது. அது விதைத்த சாதியக் கட்டுமானம் மனிதர்களிடேயே ஆண் பெண் பாகுபாடு, கல்விப் பாகுபாடு, உழைப்பில் பாகுபாடு, பொருளாதாரத்தில் பாகுபாடு, பிணங்களில் பாகுபாடு, உணவில் பாகுபாகு, நடைமுறை ஒழுங்கில் பாகுபாடு, அதிகாரத்தில் பாகுபாடு, அரசியலில் பாகுபாடு போன்ற அனைத்துப் பாகுபாடுகளுக்கும் அடிப்படையாகச் சாதியம் விளங்குகிறது.

சாதியம் நிகழ்த்தும் பாகுபாடுகளில் ஏற்படும் வன்முறைகளுக்கு வழங்கப்படும் தீர்ப்புகளும், தண்டனை முறைகளும் சாதியக் கட்டுமானத்தை மீறாமல் வைத்திருக்கின்றன. சட்டங்களும், அதிகாரங்களும், அரசியல் ஒற்றுமைகளும் தன் சாதிய வன்மத்தைக் காப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால் இச் சமூகத்தில் வன்முறையாளர்கள் என்றும் வன்முறையாளர்களாகவே இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இத்தகைய தன்மைகளை இன்குலாபின் காந்தள் நாட்கள் வழி அறியமுடிகிறது.

புனிதங்களைத் தம் படைப்புகளில் ஆய்வு செய்த இன்குலாப், தமிழர்ப் பண்பாட்டை முழுவதும் மாற்றினால் தான் சமூக மாற்றம் உருவாகும் என்று வாதிடுவதற்குக் காந்தள்

நாட்கள் இடமளிக்கவில்லை. அதேவேளையில் இந்திய சமூகச்சூழலில் பெரும்பான்மை மரபுகள் ஏற்புக்கு உகந்தவை அல்ல என்பதையும் உணரமுடிகிறது. தமிழ்ப் பண்பாடுகளில் பழமரபுகளினால் அடித்தட்டு நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டங்களில் சாதாரண மனிதனின் மனநிலையில் நின்று தமது கேள்விகளை எழுப்புகிறார். படைப்பாளனுக்கு தன் சமூகத்தைப் பற்றிய புரிதலும் நோக்கும் அவசியமாகிறது. மக்களுக்கான படைப்பு என்பது சமூகத்தைப் பிரதிபலிப்பதாக அமைவதாகும்.

சேலம் தனம் கவிதையில் கல்வியின் ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பிடுகிறார். சேலம் மாவட்டம் கட்டிநாயக்கன் பட்டிப் பள்ளி ஒன்றில் உயர்சாதி மாணவர்களுக்காக வைக்கப்பட்டிருந்த தம்ளரில் தண்ணீர் குடித்ததற்காக ஆசிரியரால் தாக்கப்பட்டு, தனம் என்ற தலித் மாணவி கண்பார்வை இழந்தார். இது உண்மை நிகழ்வு. இந்நிகழ்வினை இன்குலாப் கவிதையாக்குகிறார். அனைவருக்கும் பொதுவான கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியன் சாதியத்தை நேரடியாகவோ, மறைமுகமாக சுமந்து செல்கின்றான். இந்திய மரபில் கல்வி தொடக்க காலத்திலிருந்தே சாதியத்தைத் தூக்கிப் பிடித்துச் சுமந்து கொண்டுதான் வருகிறது. பல்வேறு படிநிலைகளைத் தாண்டி கல்வி சென்றபோதிலும், சாதியமும் கற்பிக்கப்படுகிறது.

துரோணாச்சாரியாரின் கையில்
வில்லாய் இருந்தது
ஆண்டுகள் கடந்தும்
செல்லரிக்காது

வகுப்பறையில்

ஒரு

பிரம்பாய் நீண்டது"

பஞ்ச பாண்டவர்களைக் காப்பாற்றுவதற்காகத் துரோச்சாரியார் தன் கையிலுள்ள வில்லை வைத்து பல லட்சம் பாமர வீரர்களைக் கொன்றது போன்று, இன்று தன் சாதியத்தைக் காப்பவதற்காக ஆசிரியர்களிடம் பிரம்பாய் உள்ளது. அது குருதிகளைக் கசியச் செய்கின்றன. சாதியத்தைக் காக்கும் கல்வி நிறுவனங்கள் விடுதலை அறியாத துருப்பிடித்த கூண்டுகளாக உள்ளன. இக் கூண்டுக்குள் நுழையும்,

ஆசிரியன்
ஆசாரியனாய் நுழைகிறான்
கையில் பிரம்புடன்
மனசில் பூணூலுடன்

காலம் மாறியுள்ளது என்பதை இங்கு எவரும் உணருவதில்லை. கால மாற்றத்திற்கேற்ப சாதியமும் மாறவேண்டும் என்பது தான் நியதி. ஆனால், காலம் மாறலாம் கல்வி மாறலாம் சாதியம் மட்டும் மாறக்கூடாது என்பதே இங்கிருக்கும் கட்டமைப்பாக இருக்கிறது. அன்னை மடியில் தாலாட்டுப் பெற்ற குழந்தைகள் அப்பாடலில் இறந்த காலத்தைக் கற்கிறார்கள். ஆனால், தண்டிக்கப்படும் போது நிகழ்காலத்திற்கேற்ப தண்டிக்கப்படுகிறார்கள்.

"சாதி காக்க

கற்பித்துக் கொடுப்போர்

அணிவகுக்கும் போது,
மதிபட்டுத் துடிக்கும்
கட்டை விரல்களும்
கண்களும்
கல்வியும்”

இந்தியக் கல்விமுறை சாதியத்தைக் கற்றுக்கொடுக்கிறது. இந்தியாவே மாறினாலும் சாதியம் என்போதும் மாறாததாக உள்ளது. இதனால் அன்று ஏகலைவனிடம் கட்டை விரல் அறுபட்டது. இன்று கண்கள் பிடுங்கப்படுகின்றன என்பதை இன்குலாப் உணர்த்துகிறார்.

கொலைக் கயிறுகள் குறித்து கவிதையில் இந்தியச் சட்டத்தில் பயன்படுத்தப்படும் தண்டனைக் கயிறுகள் பாகுபாடு பார்க்கிறது. நீதியில் சமத்துவம் இல்லை. குற்றவாளிகளுக்கு நீதியுடன் தண்டனை வழங்கும் நீதிமன்றம். பாகுபாட்டுடன் அத்தகைய செயலைச் செய்கிறது. ஊமையர்களின் குருதியில் கறைபடிகிறது.

“மறுதலிக்கப்படுகின்றன
இயல்பான வாழ்க்கை
இயல்பான சாவு”

இயல்பாக வாழ்க்கை வாழமுடியாத நாட்டில் இயல்பான நீதியும், சாவும் கிடைப்பதில்லை எனக் குறிப்பிடுகிறார். தூக்கு தண்டனைகள் பல்வேறு நாடுகளில் ரத்து செய்யப்பட்டுள்ளன. தலையைத் துண்டித்து குற்றங்களை நிகழ்த்திய நாடுகள் கூட நாகரிகம் அடைந்து விட்ட சமுதாயத்தில் தூக்கு, கொலை போன்ற தண்டனைகள்

தேவையில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டன. ஆனால் பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் நாடான இந்தியாவில் தூக்குத் தண்டனைக்கென்று புதிது புதிதாகக் கயிறுகள் திரிக்கப்படுகின்றன.

“உண்மையைச் சிலுவையில் அறையும் அதிகாரம்
சந்தேகத்தையே உறுதிசெய்கிறது”

பசியும் பட்டினியுமாக வாடும் மக்களைக் கண்டுகொள்ளவில்லை. மேல், கீழ் என்று பாகுபாடும் மக்களையும் கண்டுகொள்வதில்லை. அதிகாரத்தைச் செலுத்தும் போது மட்டும் அவர்களை மக்களாகப் பாவிக்கின்றனர். தனிமனிதனின் உரிமை பற்றி பேசுகின்றனர். கண்ணீர் தொடங்கும் மக்களின் வாழ்க்கையை, குற்றங்களை நீதிமன்றங்கள் தண்டனை என்ற பெயரில் ரத்தத்தால் நிறைவுசெய்கின்றனர். ஆனால் இம்மக்களைக் காயப்படுத்துவது யார்? குருதியின் முதல் துளியைச் சிந்துவது யார்? என்ற கேள்வியைக் கேட்காத நீதிமன்றம் குருதியில் தொடங்கி குருதியில் முடிக்கும் தீர்ப்பை மட்டும் வழங்குகின்றது என்பதை உணர்த்துகிறார்.

நீதிமன்றத்தில் அதிகாரத்தின் கொலைக் கத்திகள் மறைக்கப்படுகின்றன. சட்டம் மனசாட்சி வற்றிப் போனதாக உள்ளது. நீதிமன்றம் என்ற பெயரில் கண்ணுக்குக் கண், ரத்தத்திற்கு ரத்தம் என்று மிகவும் காலதாமதப்படுத்தி வழங்கப்படும் தீர்ப்புகள் காலவதியாக உள்ளன.

“பார்க்கப்படவே இல்லை
எங்களது பக்கம்

ஏற்கப்படவே இல்லை
எங்களது நியாயம்
இலட்சங்களில் விலைபோகும்
வாதங்களை வாங்கப்
போதுமானதாய் இல்லை
எங்கள் வாழ்க்கை”

என்று புரையோடிப் போன ஊழல் மிகுந்த நாட்டிலும் நீதிமன்ற வாதங்களிலும் நியாயங்கள் ஏற்கப்படுவதில்லை என்பது உள்ளத்தை வருத்துவதாகிறது.

“வாயில்லாதவர்களுக்கு உறுதிசெய்யப்படுகிறது
தடியடி, கைவிலங்கு, சிறை, தூக்குக் கயிறு
வாழ்க்கை தவிர”

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கும், உரிமைகள் மறுப்பதற்கும், பொருளாதார சமத்துவம் பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள்தான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறார்கள். அம் மக்களுக்குத் தூக்கு முதலிய தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கலாம். அரசு இயந்திரங்கள் அதனை உறுதி செய்திருக்கலாம். ஆனால் உலக மக்களின் மனசாட்சிப்படி இத் தண்டனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பேச்சுச் சுதந்திரமற்ற மனிதர்களின் வழக்கை ஏற்று வாதாடும் வக்கீல்கள் அதிகார அச்சுறுத்தலாம மாறுகின்றனர். கலப்படங்கள் செய்கின்றனர். தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்களால் கூட ஒருபோதும் இக்கொலைக் கயிறுகள் கௌரவிக்கப்படுவதில்லை என்பது கவிதையில் உணர்த்துகிறார்.

ஐயா நீதிமானே! கவிதையில் தாழ்த்தப்பட்ட, அடித்தட்டு மக்களை அனைத்து சாதியினருடன் சேர்ந்து நீதி மன்றமும் சரியான நீதி வழங்கவில்லை என்பதை உணர்த்துகிறது. எங்களைச் செருப்பால் அடித்ததையும் காய்ச்சிய இரும்புக் கோலால் சுடு வைத்ததையும், செய்யாத குற்றத்திற்காக ஒவ்வொருத்தன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டதையும், தண்டத் தொகை கட்டச் சொன்னதையும், பீ தின்ன வச்சதையும் எங்கள் சாதிகாரனும் பார்த்தான். சட்டத்தைக் கட்டிக்காக்கும் நீதியர்களும் வேடிக்கை பார்த்தனர். எங்களுக்கென்று ஆறுதலாக ஒரு சொல்லும், ஆதரவாக எந்தவொரு கரமும் நீளவில்லை.

"பீ தின்ன வச்சதை
நம்ம முடியலயாம்
ஐயா! நீதிமானே!
எதத்தான் நம்புனீங்க?

தஞ்சாவூரில் பெண்களையும், குழந்தைகளையும் சேர்த்து மொத்தமாக நாற்பத்தைந்து பேர்களை கூலி உயர்வு கேட்டதற்காக ஒரே குடிசையில் போட்டுக் கொளுத்தினீர்களே அதை நம்ப முடியவில்லையா? அல்லது செத்த மாட்டுத் தோலை உரிச்சதுக்காக சித்திர வதை செய்தீர்களே அதை நம்ப முடியலையா? பலாத்காரம் செய்யப்பட்ட எங்க வீட்டுப் பெண்கள் வாயில் சீலையைப் பொதைச்சி அழுதார்களே அதையா? கிணற்றில் மின்சாரம் பாய்ச்சி குழந்தைகளைத் தண்ணீரிலேயே கொன்றார்களே அதை நம்பவில்லையா? என்ற கேள்விகளுக்கும் மௌனமே பதிலாக உள்ளது.

"இதுவரைக்கும்
ஒங்களுக்காக அடித்த தப்ப

எங்களுக்கு நீதி கேட்டு
ஒருநாள் அடிச்சதுக்கே
நாங்க
தம்மானிப் பட்டுத்தல குனிஞ்சி நின்னத
எல்லப் பயலுவளும்
எமைக்காமப் பார்த்தான்”

தன் சாதி இந்துக்கள் செய்தத் தவறுகளை, சாதிப்பாகுபாடு பார்க்கிற, பார்க்கிறவர்களுக்குத் துணைநிற்கின்ற நீதி மன்றகள் எப்படி தண்டிப்பான் என்ற கேள்வியை முன் வைக்கிறார்.

திண்ணியத்தில் தாக்கியவர்கள் அனைவரும் சாதி இந்துக்கள் என்பதும், தாக்கப்பட்டவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதும், உண்மையாக இருக்கும்போது, சார்பற்ற சாட்சிகளுக்கு எங்கே போவது? இருதரப்பினரின் சாதிச் சார்பையும் கண்டு கொள்ளாமல் தனி சரிநிகர் தனிமனிதர்களாக அவர்களை நீதிபதி பார்க்க முற்படுவதால் தான் சார்பற்ற சாட்சிகளைத் தேடுகிறார்.

நடந்த ஒவ்வொரு நிகழ்வுக்கும் பின்னணியில் சாதிப் பிணக்க இருக்கையில் எவரும் சொந்தச் சாதிக்காரர்களுக்கு எதிராக சாட்சியம் அளிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. சாதியற்ற ஒருவர் வந்து சாட்சியமளித்தால் தான் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமென்றால் அப்படி ஒருவருக்கு எங்கே போவது? சார்பற்ற சாட்சிகள் இல்லை என்று குறைபட்டுக் கொள்ளும் நீதிபதியே சார்பற்றவர் தானா என்ற வினா எழத்தான் செய்யும்.

பலியிடப்பட முடியாத சிங்கங்க என்ற கவிதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குச் சமர்ப்பணமாக எழுதியுள்ளார். இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததில் எண்ணற்ற தியாகிகள் இடம்பெற்றுள்ளனர். ஆனால், அனைத்து மக்களும் சமத்துவம் பெற்று வாழ்வதற்குச் சாதி, மத வேறுபாடில்லாத சுதந்திரம் வேண்டும் என்று போராடியது அண்ணல் அம்பேத்கர் அவர்களாகும். இந்தியாவை நிலத்தின் அடிப்படையில் கட்டமைத்தது படேல் உள்ளிட்ட பலர் இருந்தபோதிலும், மக்களின் சமதர்ம வாழ்க்கையைக் கட்டமைத்ததில் பெரும்பங்கும் அண்ணல் அம்பேத்கர் அவர்களைச் சாரும். அவர் போராடிய சமத்துவம் இன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே நிதர்சனம். சாதியப் பாகுபாடு இந்திய மக்களிடையே புரையோடி உள்ளது. அந்தப் பாகுபாட்டின்வழி மக்களைச் சுரண்டுதலோடு, வஞ்சிக்கும் போக்கும் இன்றும் நிலவி வருகிறது. ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுத் தந்த சுதந்திரமும், குடியரசும், அணிவகுப்பு மரியாதை, பீரங்கி முழக்கம், கொடியேற்றுதல், உரையாற்றுதல் என அனைத்து நிலைகளிலும் ஒவ்வொரு ஆண்டும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

அண்ணல் அம்பேத்கர் பெற்றுத் தந்த சமத்துவம், அடித்தட்டு மக்களுக்குப் பெற்று தந்த உறுதிமொழியும், கவுரவமும் கயர்லாஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு அப்பாலும் கரும்புள்ளிகளாய் சிதறடிக்கப்படுகிறது. வானத்தில் நீலம் பாரித்த உன் சிலைகளும் உயிர்ப்புத் தன்மையற்றும் மரத்தும் போகின்றன என்று சொன்னாலும் அது மிகுதியாகாது. சாதிய எண்ணங்களும், வக்கிரங்களும் புரையோடிப் போன இன்றைய

இந்தியாவில் அண்ணல் அம்பேத்கரின் எழுத்துக்கள் மௌனம் காப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

"மலந் திணித்த கைகளும்
வல்லாங்குச் செய்த குறிகளும்
ஒரு குறையுமின்றி ஒன்றுபட்டுக் கொண்டாட
இயல்பென்று அமைதிகொள்ளலாம்
இந்தியா என்கிற பாதம்
மௌனம் காக்குமோ
உன் எழுத்தும்
வழிமொழியும்
என் பேனாவும்"

என்று இன்குலாப்பின் பேனா, அண்ணல் அம்பேத்கர் எழுதிய சட்டங்களும், போராடிய சமூக நீதியும் மௌனம் காக்க வைத்துவிட்டார்கள் என்பதை வழிமொழிகிறது. ஆனால், மலம் திணித்த கைகளும், தலித் பெண்களை வல்லாங்கு செய்த ஆண்களும் தான் தவறு செய்கிறோம் என்று கூட உணராமல் எந்தவொரு குறையோ, குற்ற உணர்ச்சியோ அற்று இயல்பாக உள்ளனர். இதுவே இந்தியாவின் இயல்பென்று ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கமும் அமைதி கொள்கிறார்கள் என்பது வேதனை அளிப்பதாக உள்ளது.

தாய்மை நெடி கவிதையில் சுதந்திரமற்ற தேசத்தில் பிறக்கும் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந் நாட்டில் வண்ணத்துப்பூச்சிகளைப் பறக்கவிடுவதாயும், வானவில்லை அடையாளம் காட்டுவதாயும் வியந்து கொள்கிறார்கள் தாய்மார்கள்.

ஆனால், அவர்கள் கொண்டாடும் எந்த வண்ணங்களிலும் சுதந்திரம் இல்லை என்பதை உணர்த்துகிறார்.

“நீ கொண்டாடும் எந்த வண்ணங்களிலும் இல்லை
குருதியின் சூடு!”

இந்த குழந்தையிடம் தாய்மை நெடி வீசுகிறது என்று அம்மாக்கள் சொல்கின்றனர். தாய்நாட்டில் அம்மாக்களே சுதந்திரமற்ற வாழ்க்கை வாழுகின்றனர் என்ற உணர்வுகளை ஏற்றுக் கொள்வதுமில்லை. குழந்தைகள் கருப்பையிலேயே சலவை செய்யப்பட்டு, சாதி, மத வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு பிறப்பதாக அனைவரும் உணர்கின்றனர். ஏற்கனவே பெற்ற அம்மாக்களின் பிள்ளைகள் புதிதாய்ப் பிறக்கும் குழந்தைகளின் பாதங்களில் மிதிக்கவும், முளைவிடுகையில் அழிக்கவும், எரித்துக் கொள்ளவும் காத்திருக்கின்றனர் என்பதை உணர்த்துகிறார்.

“ஏதோ
கருப்பையிலேயே
சலவை செய்யப்பட்டுப் பிறந்தது போல.

அழுத்திக் கொண்டிருக்கும் பாதங்களை எரித்து
முளைவிடக் காத்திருக்கின்றன
நீ வீசி எறிந்த
வித்துகள்”

காணக் கிடைத்த காந்தள் என்ற கவிதை எழுதுவதற்கு, 2006 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஸ்விட்சர்லாந்துப் பயணமும், திரு. பொ.ஐங்கர நேசனின் “தேசியவாதம் வீசும்

கார்த்திகைப் பூ” என்ற கட்டுரையும் உந்துதலாக இருந்தது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தில் கணக்கிலடங்காத மலர்கள் இருக்கின்றன. அனைத்து மலர்களுக்குமான பெயர்களை அனைவரும் அறிந்ததில்லை. அனைத்து மலர்களையும் பார்த்தவர்களும் யாரும் இந்திருக்க முடியாது. தேனீக்களுக்கும், வண்ணத்துப் பூச்சிகளுக்கும் தான் தெரிந்திக்கக்கூடும். எல்லாப் பூக்களும் மலர்வதற்கும், வாழ்வதற்கும், அழிவதற்கும் காலங்களும் அதன் மாற்றங்களும் காரணமாக இருக்கின்றன. என்றபோதும் இலக்கியங்களில் படித்த மலர்களை அனைவரும் பார்த்ததில்லை. குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிட்ட தொண்ணூற்று ஒன்பது மலர்களைப் பட்டியலிடுகிறார். பழங்குடி மக்கள் ஆயிரத்துக்கு மேலும் அடையாளம் காட்டுகிறார்கள். கபிலர் சுட்டியப் பூக்களை அனைத்தையும் விட காந்தள் மலரை மட்டுமாவது பார்க்க வேண்டும் என்பது இன்குலாப்பின் விருப்பமாகும். தமிழிலக்கியத்தில்,

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்”
வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்”
வெறியாட்ட யர்ந்த காந்தள்”
“உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்”
“வள்ளிதழ் ஒண் காந்தள்”

என்று காலம் காலமாக புலவர்கள் சொன்னதாகப் படித்து வந்திருக்கிறோம். ஆனால், அதனைக் கண்டதில்லை. சுவிட்சர்லாந்து பயணத்தின் போது ஓரு பசுமை வெளியில் பெயர் அறியாத பூக்கள் இருந்ததைக் காணுகிறார். ஒத்தையடிப் பாதையில் ஓரத்தில்

இருந்தன. நீலமும், மஞ்சளும் கலந்த நிறத்தில் இருந்தன. கிவி பழங்கள் மரத்தில் காய்க்கும் என்று நம்பியவை பந்தற் கொடிகளில் காய்த்துத் தொங்கின. இங்குக் காந்தள் பூக்களையும் காணமுடியும் எனத் தோழர் பாலசந்திரன் சொன்னார். சின்னதொரு பாத்தியில் காந்தளைக் காட்டினாள்.

ஒரு கார்த்திகை மாதம் கடும்பனியில் சாலையோரத்தில் புதரில் தலை நீட்டிய காந்தள் மலர்களை நம்மூரிலும் பார்க்க முடிகிறது. ”உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்” என்று ஔவை பாடிய வரிகள் இவ்விதழில் இருந்தன. முருகிய வளையலைப் போல ஐந்து விரல்களாய்க் கன்னம் வருடின.

“நினைவில் கொண்டேன்
தன்னினம் அழிக்கும் எதிரிகளிடமிருந்து
தற்காத்துக் கொள்ள
நஞ்சுதரிக்கும்
காந்தளம் பூக்களே
தமீழழத்திற்கும் தேசிய மலரென.
புதை கிழந்திருந்தொரு போராளி போல”

அழகிய மலராக நம்நாட்டில் வீசிய காந்தர் இலங்கை சென்றால் போரிடுவதற்குத் துணை நிற்கிறது. இனம் காத்தலுக்கு நிகழும் போர் என்பது நம் இனத்தில் ஆண்டாண்டுகளாய் மலர்ந்து மணம் பரப்பி, எழுதப்பட்டிருக்கும் காந்தள் மலரைக் காப்பதற்கும் சேர்த்துதான் என்பது இன்குலாப்பின் கவிதை உணர்த்துகிறது.

தேசியத்தின் புன்னகை கவிதையில் தமிழீழப் போராட்டத்தின் வடுக்களைக் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டிற்கும், தமிழீழத்திற்கும் நடுவில் கடல் மட்டும் தான் உள்ளது. கடலின் மறுகரையில் ஒலிக்கும் தணியாத விசும்பல் நம் செவிகளில் மரத்துப் போகாது. மக்கள் மனசில் காலம்காலமாக இருந்தது. கருகிய தென்னை மரங்கள் போரை நினைவுப்படுத்திக் கொண்டே உள்ளன. கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட காடுகளில் தான் இனத்திற்கும் மொழிக்கும் சொந்தமான உயிர்கள் வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வு பசுமை வாய்ந்ததாக இருக்குமா? அல்லது கருகுமா? என்பதைப் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் தீர்மானிப்பதாக இருக்கிறது. அவர்கள் கோரிக்கைகள் உணவுப்பொருட்களைக் கூட ஆயுதமாக்கியது.

தம் மக்களின் அமைதி வாழ்க்கைக்காக வீரர்களும், வீராங்கனைகளும் இவ்வளவு இழப்புகளைச் சந்தித்தனர். ஆயுதம் ஏந்திய கைகளில் அன்பின் மகரந்தமும் இருந்தது.

> “மரணத்தைக் கழுத்தில் தரித்த
> ஒவ்வொருவர் முகத்திலும்
> வாழ்வுக்கான நேசமும் இருந்தது”

போரினால் ஏற்படும் இழப்புகளுக்கு மத்தியிலும் விருந்தினர்களை வரவேற்றுப் பேசியதைவிட சிரித்தது அதிகமாகும்.

> “பேறுகால உதிரப் பெருக்கின் சூட்டுடன்
> நனைகிறது தமிழீழம்

பெறுத்தாட்டும் கைகளில்

தேசத்தின் குரல் கேட்கும்.

திரும்ப மலரும் தேசத்தின் புன்னகை.”

தீபாவளி – ஈழத்தமிழருக்கு கவிதையில் அவர்களிடையே வெடிக்கும் வெடிச் சத்தங்களின் உணர்வுகளும், அதனுள் கரைந்த வாழ்வியலும் கூறுகிறார். தீபாவளி நாளில் இந்தியாவில் மத்தாப்புகளின் ஒளிச்சிதறல்கள், வண்ணப்பூங்குடைகளும் விரிந்து மகிழ்ச்சி பரப்பும். ஆனால் இலங்கையில் அவர்களின் வாழ்விட மண்களைப் பறிக்கும். அவர்கள் வாழ்வியல் மெல்லிய பட்டாசுச் சத்தங்கள் இல்லை. குண்டுகள் முழங்குகின்றன. அவர்களின் கூரைகளுக்கு மேலேயேயும் கதவுகளுக்கு வெளியிலும் வெடிச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றன. ஆனால் பண்டிகை நாளில் சிதறிய காகிதவெளிகள் இல்லை. அணுகுண்டு பட்டாசுகள். புத்தாடைகள் இல்லை. புன்னகைகள் இல்லை. வானத்தில் நெருப்புக் கோளங்கள் உண்டு. புகை மூட்டங்கள் உண்டு. மக்கள் மனதில் கண்ணீரும் காயங்களும் உண்டு.

“எங்கள் மண்குளிர்ந்து

ஒரு பச்சையம் துளிர்க்கவும்

தீப்பரவாத கூரைகளில் ஒரு சுரைக்கொடி படரவும்

என்ற ஏங்கங்கள் அவர்கள் நெஞ்சில் உண்டு. குழந்தைகள் பயமின்றி பள்ளிக்குச் செல்லவும், காயமின்றி வீடு திரும்பவும், இன்னும் ஒரு பிடி சோறு சாப்பிடவும், அனைத்திற்கும் விடுதலை வாழ்க்கை வாழவும் வேண்டும் என்று அவள் ஏங்காத

நாளில்லை. குண்டுகள் முழக்கத்தில் தாக்குப் பிடிக்காத வாழ்க்கையைப் புலம்பெயர்வதின் மூலம் மாற்றிக் கொள்கின்றனர்.

“புலம்பெயர்ந்தோம்.
குதிகாலில் ஒட்டியமண் உதிராமல்.

விட்டுவந்த மண்ணில்
ஒவ்வொரு குழியிலும்
இன்றும்
தீயின் கொடி!

அவர்கள் பதுங்கி வாழ்ந்த குழிக்குள் வெடித்த குண்டுகள் தீயைப் பரப்புகின்றன. எண்ணிலடங்காத உயிர்கள் சாகின்றன. தமிழ்நாட்டிலும், பிற பகுதிகளிலும் போர்க் கூடாது என்ற முழக்கங்களும், போதனைகளும் இருந்து வருகின்றன. தவிக்கும் இனம் தமிழர்களாய் இருக்கின்றன. உண்மை முகமான எதிரிகள் யாரென்று தெரியாமல் தவிர்க்கின்றனர். உலக நாடுகளின் ஒட்டுமொத்த துரோகத்தின் உச்சமாய் மாண்டு போகின்றனர் தமிழர்கள்.

“பாருங்கள்
கடல்வெளி எங்கும் துரோகத்தின் காவல்.
அலைகளுக்கு அடியில்
எம் விடுதலையின் முத்து.
காற்றின் துணுக்குகளில் நமக்கான பெருவெளி.
ஏற்றும் தீபங்களில் ஒருதுளி விடுதலைக்கு
மூச்சு தமிழ் ஈழத்துக்கு”

அவர்கள் இருந்த நிலம் கரித்துண்டுகளாகக் கிடந்தன. அவர்கள் நம்பிக்கைகள் இரத்தப் பிசுபிசுப்புகளாக மாறியுள்ளன. மரத்தடியில் குளிரில் நடுங்குவதும், பசியுடன் பாலர்கள் கையேந்தி வருவதும், சாவு அவர்களைத் துரத்திக் கொண்டு வருவதையும் பார்க்க முடிகிறது. அனைத்து வீடுகளிலும் ஒப்பாரிகள் கூப்பாடு போடுகின்றனர். சூதும் குரோதமும் பின்னிய இனஒழிப்பைப் பார்க்க முடிகிறது. கண்ணீரில் நனைந்து குருதியில் சிவந்து, அமைதியை உலாவும் சொற்கள் வீதிகளில் மிதக்கின்றன.

"திசையெட்டும் சிதறினும்

நம்பிக்கையோடு

எம்திசை நோக்கிய ஈழமுகங்களே!

.தமிழே என்றாலும் நாம் பேசும் தமிழுக்கும், அவர்கள் பேசும் தமிழுக்கும் வேறுபாடுகள் அதிகம். வார்த்தைகள் இல்லை. கண்ணீரைத் தவிர வேறொன்றையும் தருவதற்கில்லை. ஆடைகளைக் கலைந்து சப்பாத்துக் காலால் மதிபட்டு, வன்புணர்ச்சிக்கு ஆளாக்கிக் கொன்று வெறி தீர்க்கும் கொடுமையைக் காணமுடிகிறது. வெள்ளை ஆடைகள் உடுத்தித் தன்மானத்தோடு வாழ்வதற்கு வெட்கம் கொள்ள வேண்டும். தங்களுடைய வரிப்பணத்தில் கொலைகள் செய்கிறார்கள் என்பதற்காக வேதனைப்படுகிறேன் என்று கவிதைகளில் கண்ணீர் உகுக்கிறார்.

"தலைகுனிகின்றேன்
உங்களைக் கொலை செய்த
கருவிகளின் கொள்முதலில்
என்வரிப் பணமும் இருந்த
இழிசெயலுக்காக."

குருதி கொட்டும் செம்மொழி தமிழைச் செம்மொழி என்பதில் அனைவரும் பெருமைபட்டும் கொள்கிறோம். ஆனால் தமிழர்களாய் இருந்து கொலையுண்டு வீழ்கையில் செம்மொழியில் குருதி கொட்டியது. பறவைகள் பறப்பதற்கு வானம் மறுக்கப்பட்டது. மாறாக, வானூர்திகள் அலுமினியக் குண்டுகளைச் சுமந்து கொண்டு கழுகுகளாய்ப் பறந்தன. வீடுகளும் வெளிகளும் கலைக்கப்பட்டன. மண்கள் குருதியால் சிவந்திருந்தன. காற்றும் நெளிந்து கூக்குரலிட்ட நாட்களாகும். உலக நாடுகள் தன் சந்தைகளை, கடைகளைப் பரப்புவதற்காகச் சப்புக்கொட்டிக் கொண்டு பச்கைக் கறிவிற்பதற்கு நடந்த போராகும்.

“கிளிகளுக்கு இரங்குவதாய்
அழுத பூனையொன்று
ஒரு சிட்டுக்குருவியின் சிறகுரிக்கும் நேரமே
உண்ணாதிருந்த
மாபெரும் போராட்ட நாட்கள்”

அறைக்கூவல்களாகவும், ஆரவாரங்களாகவும் பழங்காட்சியகங்களில் பாராட்டப்படும் மொழியாகச் செம்மொழி நிலைந்து நின்றது. தமிழ் பேசும் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அதிகாரத்தின் கடைக்கண் பார்வைக்கு நெடுமரங்களாகச் சாய்ந்து கிடக்கின்றனர். முள்ளிவாய்க்கால் கரையில் அலைந்து கொண்டிருக்கிறது. என் உண்மையான தாய்மொழி குருதி கொட்டும் செம்மொழியாகப் பரிதவிக்கிறது.

ஒருசிலை உயிர்ப்பில்லாது… கவிதையில் தமிழன்னை உயிர்ப்பில்லாமல் சிலையாக வாழ்கிறாள். அவளை வைத்து செய்கின்ற அதிகாரங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

அவளுக்குச் சிலை செய்து அலங்கரித்திருந்தன. சிலைக்கு உயிரில்லை என்ற குறையுடன் இருந்தது. அவர்களைப் பாராட்டாத கவிஞர்கள் இல்லை. பத்திரிக்கைகள் இல்லை.

“கல்விக் கூடத்தில் விழியிழந்தும்
நீதிமன்றத்தில் நெஞ்சிழந்தும்
கோவில்களில் நாவிழந்தும்
ஊடகங்களில் உணர்விழந்தும்

வெளியில் நின்றவளை
உணராதவர்களுக்கு
உணர்த்தாதிருந்ததும்
அந்த
உயிர்ப்புத்தான்.”

தமிழை வளர்க்கவும், நிலைநாட்டவும் மொழிப்பற்றுடைய சான்றோர்களின் போராட்டம் அளவிடற்கரியது. தமிழினம் என்றொரு கூட்டம் போலித்தனமான முகத்திரையில் செயல்பட்டும் வருகின்றது. அவர்கள் கண்ணகியின் நெருப்பையும், மணிமேகலையின் கருணையை அறியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் கொண்டாடுவதை மட்டும் பங்கெடுப்பவர்களாக இருந்தனர். இத்தனை முன்பின் முரண்பாடுகளில் தனக்கான இடத்தை எப்போதும் ஆரியத்தின் குரலாகக் கட்டமைக்கப்பட்ட சமஸ்கிருதத்தை எதிர்த்துப் திராவிடத் தூணாகவும் தமிழ் போற்றப்படுகிறது.

வாகையின் உச்சி அரும்புகள் சிவக்கும் என்ற கவிதை மருதுபாண்டியர்களின் வாழ்க்கையைக் குறிப்பிடுகிறது. விஜயநகர ஆட்சியில் நியமிக்கப்பட்ட

பாளையக்காரர்கள் அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் தென்தமிழகத்தில் பல்வேறு பாளையங்களாகப் பிரிந்தனர். குறுநில மன்னர்களாகச் செயல்பட்டனர். ஆங்கிலேயர்களின் ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்ட அரசாக மாற்றுகையில் அதன் கட்டுப்பாட்டில் செயல்பட மறுத்து எதிர்த்தனர். இதனால் பாளையங்கள் சிதைக்கப்பட்டு போரிட்டு அழிய வேண்டியதாகிற்று. தன் நாட்டைக் காக்கும் முனைப்புடன் நிகழ்ந்த போரில் வீரம் பறைசாற்றப்படுகிறது. குருதிகள் சிந்திய பூமியாக பாளையங்கள் மாறின. அதில் மருதுபாண்டியர்கள் சிவகங்கைச் சீமையை ஆண்டவர்கள். அவர்கள் நிகழ்த்திய போர்களில் குருதிகள் பரவின. செம்மண் புழுதியில் நிணவாடை அடித்தன. மரப் பொந்துகளிலும், காடுகளிலும், வெளிகளிலும் வசிக்கத் தொடங்கினர். ஈட்டி பாளையக்கார்களின் ஆயுதம், துப்பாக்கிகள் ஆங்கிலேயர்களின் ஆயுதம். விடுதலைப் போரில் தாக்குப்பிடிக்க முடியாமல் தவித்தனர்.

பாரி மன்னன் பறங்கி மலையில் நிகழ்த்திய போருக்குப் பின் மீண்டும் அதிர்ந்தது. தற்போது அது பிறான்மலை. பாரி மகளிர் நாட்டை இழந்தது போல, மருது சகோதர்களும் சூழ்ச்சியால் நாட்டை இழந்தனர்.

“திருப்பத்தூரின் இடிந்த கோட்டையில்
நட்ட இரு தென்னைகளுக்கு
நடுவில்
கட்டப்பட்ட குறுக்கு மரத்தில்
கமுதியில், திருச்சூழியில், பாஞ்சாலக் குறிச்சியில்
விடுதலைப்போரின் குவிமையங்களில் எல்லாம்
மீண்டும் இறுகின

தூக்குக் கயிறுகள்”

விடுதலை கொண்டு சின்ன மருது மீண்டும் பறந்துவிடுவான் என்றஞ்சிக் கூண்டில் அடைத்தே கொலைக்கயிற்றில் ஏற்றினர். எனினும் அம் மண்ணில் இன்னும் வீரம் சாகவில்லை. வீரத்தின் அடையாளமாக அவர்களின் இடிந்த கோட்டைச் சுவர்கள் நிலைத்திருக்கிறது. கள்ளிக்காடும், கௌதாரிகளும், முயலும், பாழும் கிணறுகளும், நரிகளும் வாழுமிடமாக மாறியிருந்தாலும், அவர்களின் சுவடும், குரலும் என்றும் நிலைத்திருக்கிறது என்பதை உணர்த்துகிறார்.

“வளரியும் வாளும்
தூங்குமோ துருப்பிடித்து?
இறந்த காலம் கனக்கும்
இழப்புகளோடு
வருகிறது
வாகையின் உச்சி அரும்புகள் சிவக்கும் காலம்”

அரிதான மனிதன் அவன் கவிதை நாத்திகம் நந்தனாரின் நினைவாக எழுதப்பட்டது. ஒரு முடிதிருத்தும் தொழிலாளியின் மனநிலையை உணர்வு நிலைகளை எழுதியுள்ளார். நந்தனார் நாவிதன் குடும்பத்தில் பிறந்தவன் அவன் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி. அவன் ஒரு அரிதான மனிதன். மனிதனை அடையாளம் காணும் முயற்சியில் தன் பிறப்பைச் சொல்ல தயங்கியவன் பிற்காலத்தில் பிறரைப் போல அவனும் சொன்னான் நாவிதன் குடும்பத்தில் பிறந்தவன் என்று. மனித நேயம் மிக்கவன். நேர்மையானவன். அவன் சொல்லும் செயலும் நேர்மையுடன் அமைந்திருக்கும். பிறருக்கும் மருத்துவம்

செய்வதையே தன் தொழிலாகக் கொண்டவன். அவன் உடலை மண் தின்றாலும் அவனது அறிவு மருத்துவத்திற்குப் பயன்பட்டது. சாலையில் மரங்கள், பூக்கள் அனைத்தும் சாதி மதங்கள் பாராது மணம் வீசுபவை.

“சொல் அவனுக்குச் செயல்
சொல்வது அவனுக்கு வாழ்வது
வரித்த வாழ்க்கைத் துணையில்
மக்களுக்குச் செய்வித்த மணங்களில்
ஒருபோதும் இருந்ததில்லை
சாதியும் சடங்கும்”

தேசத்தின் குரல் கேட்கும்.
திரும்ப மலரும் தேசத்தின் புன்னகை.”

பெண்ணிய சிந்தனைகள்

சமய மரபுகள் பெண்களின் இயற்கைகளைப் பிற்போக்குத் தனமாகக் கட்டமைத்து அவர்களைப் பாதுகாப்பதாகக் கருதி அடிமைப்படுத்தின. இதனால் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆட்பட்ட பெண்கள் தங்கள் கருத்துக்களை, கொள்கைகளை, முழக்கங்களைப் பெண்ணியத்தின் சிந்தனைகளாக தம் எழுத்துக்களில் புலப்படுத்துகின்றனர். பெண்களின் அடிமைத்தனத்தை ஆண் கவிஞர்களும் அவர்களுக்கே உரித்தான குணங்களில் கொள்கைகளில் புலப்படுத்துகின்றனர். எழுத்தாளர் பாமாவின் மொளகாப்பொடி சிறுகதை, ஸ்ரீ ஜித் இயக்கத்தில் கட்டியக்காரி என்ற நாடக அமைப்பின் சார்பில் மேடை நாடகமாக்கப்பட்டது. அதன் இறுதிப்

பகுதியில், காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படும் பெண் கூலித் தொழிலாளர்கள் பாடுவதாக வரும் பகுதியை இன்குலாப் இத் தொகுப்பில் எடுத்துக்காட்டியுள்ளார்.

கட்டியங்காரி 1, கட்டியக்காரி 2, காவல்துறை ஆகிய மூவர்களின் உரையாடல் பகுதி பெண்களின் அடிமைத்தனத்தைக் குறிப்பிடுகிறது. போலீஸ் ஸ்டேசன் வரைக்கும் நம்மை இழுத்துக் கொண்டு வந்து இழிப் பேச்சும், ஏச்சுக்கும் ஆளாகும்படி ஆகிவிட்டது. வேலை கெடைத்தால்தான் நமக்குக் கஞ்சி. பட்டினி ஒன்றும் நமக்குப் புதுசில்லை. வெறும் வயிற்றோடு தூங்குவதும் பழக்கப்பட்டதுதான். கெட்டழிஞ்சு போறதுக்காக நாம் பருத்திக் காயைத் திருடவில்லை. பங்களாக் கட்டவும் இல்லை. மெத்தையில் படுத்துத் தூங்கவும் இல்லை. கூலி கிடைக்காததால் இந்த வேலை செய்தோம். அரை வயிற்றுக் கஞ்சிக்காகத் திருடினோம். இதுக்காக போலீஸ் ஸ்டேசன் வரவேண்டியதாகிப் போச்சு.

நீங்க பில்லைப் புடுங்கினாலும் போலீஸ் பல்லைப் புடுங்கிடும். ஆனால் ஊரை எல்லாம் திருடுவான். அவன் காரைத் துடைத்துவிடும் காவல் துறை. பத்து ரூபாய் தண்டம் கட்ட வேண்டும் என்று காவல்துறை கூறியது. பத்து ரூபாய் இருந்தால் அவ காட்டுப் பருத்தி யை ஏன் திருடுறோம்? கேட்பாரில்லாத பழைய கதை இது. நாங்கள் தொட்டாத் தீட்டு என்று பொத்திப் பொத்தி வச்ச உங்க புனிதமெல்லாம் கலங்கிப் போச்சு. ஆறாக ஓடுகிறது நாங்கள் அடைகாத்த கோவம் எல்லாம். இப்போது நாறுறது வீதியும் தான். புன்செயும் நன்செயும் கலந்துள்ள கரிசல் காட்டில் புல்லும், நெல்லும் வெளஞ்ச போதும் எங்கள் வாழ்க்கைத் தரிசாகத்தான் கிடந்தது. வெடிச்ச கம்மா கரம்பு மண்ணில் வெள்ளரிக்குக்

களவெட்டினால் கூலி கொஞ்சம் கிடைக்கும். புன்செய் காட்டில் விளையும் புற்கள் கருகிக் கூடச் சாகலாம். அதை நாங்கள் அறுத்தால் போலீஸ் வருகிறது என்று பாடும் கவிதைகள் பெண்களின் உணர்வுகள் பெருகிக் கிடக்கின்றன.

ஆண்மையோ ஆண்மை கவிதை, தோழர் வ.கீதா எழுதித் தோழர் அ.மங்கையால் இயக்கப்பட்ட ஆண்மையோ ஆண்மை என்னும் நாடகத்தில் இடம்பெறும் பாடல். இது தோழர் பிரேமா ரேவதியால் எழுதப்பட்ட கவிதை இதற்கொரு வடிவம் தந்தது மட்டும் தான் எனது பணி என்று இன்குலாப் குறிப்பிடுகிறார்.

சாதி குறிப்பிடும் வீரத்தையும் பெருமையும் சுக்கு நூறாக்க வேண்டும். மீசை முறுக்கும் ஆண்மை அதிகாரம் மீண்டும் எழக்கூடாது. கற்பு என்னும் பெண்ணுடலை வஞ்சிக்கும் கயமை ஒழிந்திட வேண்டும். ஆண்மை பெண்மை என்ற வேறுபாடு கலைய வேண்டும்.

> “மீசை முறுக்கம் ஆண்மை அதிகாரம்
> மீண்டும் எழாமல் விழ வேண்டும்
> கற்பெனும் கயமை ஒழிந்திடவும்
> என் அடிமைக் கட்டுகள் தகர்ந்திடவும்
> ஆண்மை பெண்மை எதிர்நிலை தூர்ந்த
> மானுட உருத் துளிர்க்கவும்”

இறுதி வரை வெளிவராது புதைந்த உண்மை எத்தனையோ உள்ளன. அம்பலம் ஏறாத ஏழைச் சொல் எத்தனையோ உள்ளன. வெட்டி வீழ்த்த வேண்டும் இவ்வுயிர் கொல்லி

மரத்தை விரைந்து வாருங்கள் காப்போம் நம் மானுடத்தை என்று அழைக்கிறார் என்பதை அறியமுடிகிறது.

காந்தள் நாட்கள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் சமகாலத்தைப் பேசுகிறது. சாதிய ஆணவத்தால் செய்யப்படும் படுகொலைகளையும், மதவெறியை ஊட்டும் பரப்புரைகளையும், ஈழத்தமிழர்கள் போரில் இழப்புகளையும், பெண்ணியத்தின் குரலகாவும், அழகியல் தன்மைகளையும் முன் வைக்கும் குரலாகப் பார்க்கமுடிகிறது.

கடவுளின் கடைசி நாள்

- ஆண்டாள் பிரியதர்ஷினி

பெண்கள் எழுதிய வலியைவிட

எழுதா வலியின் வலிஅதிகம்

பெண்கள் அழுதக்கண் ணீரைவிட

அழாத கண்ணீர் மிகஅதிகம்

ஆண்டாள் பிரியதர்ஷினி எளிய மொழியில் இயல்பான நடையுடன் காத்திரமான கருத்துக்களை தம் கவிதைகளில் எழுதியுள்ளார். இக்கவிதைகள் எதார்த்த நடையில் அமைந்திருந்தாலும் கடவுள், நம்பிக்கை குறித்த கருத்தியலையும், இதன் எதிர்க்கருத்தியலையும் சுட்டிக்காட்டுகின்றன. கேள்வி கேட்கின்றன. யதார்த்தம் என்பது இக்கவிதைகளில் தொடர்ந்து இழையோடுகிறது. வருணனைகள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. சிந்தனையின் தொடர்ச்சியைக் கவிதை முழுவதும் காணமுடிகிறது. மனித வாழ்வின் அர்த்தப்படுத்தல்கள், அதனை வழிநடத்திச் செல்லும் சக்தி வெளிப்பாடுகளை கேள்வி கேட்கிறது. இப் பிரபஞ்சத்தில் மனிதன் ஏதோ ஒரு கருத்தியலோடு தான் வாழ்கிறான். அதற்குள் தன்னை இணைத்துக் கொண்டு அது தொடர்பான உலகமாக வாழ்கிறான். நேர் சிந்தனை, எதிர் சிந்தனை மரபுகளில் இயங்குகிறான். அதுவே அவனது யதார்த்தமாகவும் மாறிவிடுகிறது என்பதான புலப்பாடுகளை அடையாளப்படுத்துவதோடு அதனைக் கேள்வியும் கேட்கிறது. வசன கவிதைப் பாணியில் அமைந்த கவிதைகள் பெண்களின் உணர்வுகளைக் முன்னிறுத்துகிறது. சமூகத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்

கொள்வதற்காக பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட சமூகக் கருத்தியலைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அது தவறுமில்லை.

சமூகம் அவர்களுக்கென்று ஒரு அடையாளத்தைப் பிறப்பித்து இதுதான் வேலி என்று பாதுகாப்பு என்று கருதுவது தவறில்லையோ, அதே கருத்தியலை அவர்கள் கையாளுவதும் தவறில்லை. கருத்தியலைக் கையாளும் விதத்தைவிட இங்கு பாதுகாப்பு என்பதே பிரதானம் ஆகிறது. கூழ்க்காரி, தண்ணீர்க்காரி, தொகுப்பாளினி, கோலப்பொடிக் காரி போன்ற கவிதைகள் இத்தகைய கருத்துநிலைகளைத் தோற்றுவிக்கின்றன.

கடவுள் மறுப்புச் சிந்தனைகள்

கல்லறை கூடக் கோயிலடா கவிதையில் கடவுளையும், அதற்குச் செய்யும் பரிகாரங்களின் உண்மை முகங்களையும், அக் கருத்தியல் மாறும் முறைமைகளையும் சுட்டுகிறார்.

ஆத்திகம் எனக்குப் பிடிக்கவில்லை
நாத்திகம் என்பதும் பிடிக்கவில்லை.
மதத்தினைப் போலொரு போதையில்லை இப்படிச்
சொல்வதால் நானொரு மேதையில்லை

பூஜை புனஸ்காரம் நம்பவில்லை
சடங்குகள் செய்துநான் வெம்பவில்லை
கட்டுக் கதைகளில் இஷ்டமில்லை நான்
வணங்காமல் சாமிக்கும் நஷ்டமில்லை

என்பதான கவிதை வரிகள் கடவுளின் அடையாளத்தைக் கேள்விக்கு உட்படுத்துகின்றன. ஆத்திகம் என்பது கடவுள் சிந்தனை என்றால், நாத்திகம் அதனை ஏற்க மறுக்கும் சிந்தனையாகிறது. ஏற்பதும் மறுப்பதும் மதத்தினுள் இயங்குவதாகும். ஆதலால் அது போதையாகிறது. மனிதனின் சிந்தனையை மழுங்கடிக்கும் போதையாகிறது. அதற்குச் செய்யும் பூஜைகள், சடங்குகள், உண்மை என்று நம்ப வைக்கும் கட்டுக்கதைகள் நம்மை முடமாக்கும் சிந்தனை முறைகள் என்கிறார்.

மதம் என்பது மனிதனின் வசதிக்காக ஏற்படுத்திக் கொள்ளும் சிந்தனை. அதனை உயர்வு என்று முன்னிறுத்துவது பெரும் சதியாகும். மனம் அனைத்தையும் விட உயர்வாகும். பூமி தான் அனைத்திற்கும் தாய். அதில் வாழும் ஒவ்வொரு உயிரும் அர்ச்சனை செய்யப்பட வேண்டியவை. கோயிலில் உள்ளது வெறும் கற்சிலையாகும். அன்பு தான் உண்மையான மதம். ஒருவருக்கொருவர் தோழமை செய்வது தான் சமம். பார்க்கும் உயிர்களை அனைத்தும் கடவுளாகக் காட்சி தருகின்றன என்பதை உணர்த்துகிறார்.

மனுஷப் பய என்னும் கவிதையில் கடவுளை வணங்கும் மனிதர்களின் வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

சாமி வாழ்வதெல்லாம் மனுஷப்பய எண்ணத்தால்
சாமி இருப்பதெல்லாம் நம்பிக்கை உள்ளத்தால்
ஆசாமி இல்லையென்றால் சாமிக்கம் வேலையில்லை
சாமிகளும் இல்லையென்றால் ஆசாமி பெருந்தொல்லை

தொழில் முறையில் மனிதர்களிடையே எத்தனை வேறுபாடுகள் என்பதைக் கடவுளை வணங்கும் முறையில் தான் அறியமுடிகிறது. தொழிலில் இதைச் செய்யும் தொழில், இது செய்யக் கூடாத தொழில் என்ற பாகுபாடுகள் கடவுளின் வணங்குதலின் அடிப்படையில் மனிதனிடமும் மிகுந்து கிடக்கிறது. கடவுளின் தன்மைதான் சமூகத்தில் இயங்கும் கருத்துநிலையில் இது தவறு. இது சரியென்று சுட்டப்பட்டுள்ளது. சமூகத்தில் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் மொத்த உருவமாகக் கடவுள் இருக்கிறான். ஆனால், அந்த தொழிலைச் செய்பவர்கள் தொழில் சிறப்புற நடைபெறுவதற்குக் கடவுளை வழிபடுகின்றனர் என்பது கேலிக்கூத்து.

காசப்புக் கடைக்காரன் × வள்ளலார் பக்தன், தாசி × பத்தினி, ஆசைப்படுபவள் × உத்தமி (ஆசைப்படாதவள்), மழை வேண்டி விவசாயி × வெயில் வேண்டி வண்ணான், மாடி வீடுகளில் வாழும் பணக்காரர்கள் × குடிசையிலே வாழும் ஏழை, உயிர் போகும் முதியவன் × உயிர் தாங்கும் கர்ப்பிணி போன்ற ஆசாமிகள் அனைவரும் மூலாதாரம் சாமிதான். கடவுள் எங்கே இருக்கிறான் என்பது யாருக்கும் தெரியாது. என்ன செய்கிறான் எவருக்கும் புரியாது. ஆனால் அவனை அழைப்பது வாழ்வாகிறது. இத்தகைய ஆசாமிகள் இல்லையென்றால் சாமி வேலையில்லை. சாமி இல்லையென்றால் ஆசாமிகளின் அழிச்சாட்டியம் அதிகமாக இருக்கும் என்ற புரிதல் உருவாகிறது.

வேறு நல்ல சாமி என்ற கவிதையில் சாதி உருவாக்கிய சாமி எந்தச் சாதி என்று கேட்கிறார். நம் நாட்டில் சாதிகளின் எண்ணிக்கையை அறுதியிட்டுச் சொல்லமுடியாது. ஆனால் சாதி வாரியாக உள்ள சாமிக்கு செய்யும் அர்ச்சனைகள் ஏராளம். சாதியைப்

போல் இருக்கிறது. சாமி செட்டியாரா? முதலியாரா? ஐயரா? ஐய்யங்காரா? வெள்ளாளரா? வண்ணானா? பறையனா? பள்ளனா? இன்னும் சொல்லப்படாத சாதியா? எனத் தெரியவில்லை. சாதிக்கொரு சங்கம் இருப்பதைப் போல் சாமிகளுக்கும் சங்கம் இருக்கத்தானே செய்யும் என்கிறார். சாமி எந்த சாமியை வணங்குவார். அவர் எந்த சாமியைக் கும்பிட்டு அருள்தருவார். வேறு நல்ல சாமியைத் தேடுவாரா? தட்சணை போடுவாரா? கூட்டத்தில் ஆடுவாரா? மொட்டை போட்டு அலகு குத்தி விரதம் இருப்பாரா? சாமிக்கும் வணங்குவதில் வழக்கம் ஏதும் உண்டா? கருவறையைக் கட்டிலறையாக ஆக்கியது உண்டா? பம்பைத் தலை பம்மாத்து சிக்கியதுண்டா? கஷ்டப்பட்டதுண்டா? அழுததுண்டா? பகுத்தறிவு ரகசியம் உண்டா? உண்டியலில் கறுப்புப் பணம் போட்டதுண்டா? உயிர்ப்பலி கொடுப்பதுண்டா? அனல் குண்டம் இறங்கியது உண்டா? பிறகு எப்படித்தான் சாமியாக வாழ்ந்திருப்பது? என்ற கேள்வியை முன் வைக்கிறார். இவை அனைத்தும் விடையறியாக் கேள்வி என்பதைவிட சிந்திக்கத் தூண்டும் கேள்விகள் என்பது புரிகிறது.

கடவுளின் கடைசி நாள் என்ற கவிதையில் கடவுள் நிலையில் சிந்திக்கிறார். கடவுளுக்குக் கடைசிநாளான மரண பயம் வந்தால் அவன் சிந்திக்கும் செய்திகளைப் பட்டியலிடுகிறார்.

கடவுள் தனக்கொரு தேதி குறித்தான்
பூஜ்யம் பூஜ்யம் பூஜ்யம் பூஜ்யம்
பூஜ்யம் பூஜ்யம் பூஜ்யம் பூஜ்யம்
நாட்குறிப் பேட்டில் தேதி பொறித்தான்
அதுதான் தனது கடைசிநாள் என்றான்
அதுவரை வாழ்க்கை நீளமே என்றான்

மரணம் என்பது மிகவும் சுலபம்
மரண பயம்தான் மிகவும் கொடுமை

அவன் எப்போதும் போல ஆக்கல் அழித்தல் காத்தல் என்று முத்தொழில் செய்தான். சனாதனம் செய்தான். பாரதிதாசன் சொன்னதைப் போல ஓடப்பர், உயரப்பர், ஒப்பப்பர் ஆகிய வேலைகள் செய்தான். ஒருபுறம் வறுமையை உருவாக்கினான். மறுபுறம் செழுமையை உருவாக்கினான். ஆத்திகம் என்ற வன்முறையும், நாத்திகம் என்ற நல்லமுறையும் உருவாக்கினான். போர்களைத் தோற்றுவித்தான். சமாதனத்தை ஏற்படுத்தினான். பொய்கள் உரைத்தான். அவன் தொழில் சிறப்புற நடைபெற்றது.

அவனது கடைசிநாள் நெருங்க, நெருங்க அவனுக்குக் கவலை வந்தது. கவலை கொண்டான். வருத்தம் கொண்டான். வார்த்தைகள் குளறின. பதற்றங்களில் நடுக்கம், தலைச்சுற்றல், மயக்கம், முகவாட்டம், குழப்பங்கள் எல்லாம் தொடர்ந்தன. இந்நாள்களில் இரவைப் பகலாக்கினான். பகலை இரவாக்கினான். பிறப்பை இறப்பாக்கினான். இறப்பைப் பிறப்பாக்கினான். ஏழைகளைப் பணக்காரர்கள் ஆக்கினான். பணக்காரர்களை ஏழைகள் ஆக்கினான். தன் அமைதி கெட்டான். மரணத்திற்காக பயந்தான். இன்னொரு பிறவி பற்றிப் பேசினான். இறக்கும் நொடி தெரியக் கூடாது என்று கருதினான். கடவுள் புதிதாய் தீர்மானம் செய்தான்.

கடைசிநாளின் கடைசி நொடியில்
கடைசித் துளியின் கடைசித் துளியில்
கடவுள் என்னிடம் சத்தியம் செய்தான்
காற்றோடு கலந்து நித்தியம் செய்தான்

கடவுளின் இறப்பில் நான் திகைத்திருந்தேன்

கடவுளைத் தாண்டியும் நான் நகைத்திருந்தேன்

பொதுவுடைமைச் சிந்தனைகள்

என்னதான் நடக்குது இங்கே? என்ற கவிதையில் பொதுவுடைமையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் பேசுகிறார்.

என்னதான் நடக்குது இங்கே?

நீதியும் நேர்மையும் எங்கே?

உணவில்லாமல் பசியால் துடித்தவன் உணவு கிடைக்காமல் அல்லாடுகிறான். உணவுள்ளவன் உணவில்லாதவனைப் பற்றி எண்ணுவதில்லை. அனைத்து மக்களின் உணவினைப் பறித்துத் தின்பவன் கொளுத்துத் திரிகிறான். உணவைப் பறிக்க இயலாதவன், பறிகொடுத்தவன் இளைத்துத் திரிகிறான். இத்தகைய சமூகத்தில் நீதியும் நேர்மையும் கொட்டுக் கிடக்கிறது. நேர்மை என்றிருந்தால் இத்தகைய வேறுபாடுகள் இருப்பதில்லை. இச் சமூகம் நேர்மையில்லாத சமூகமாக உள்ளது. பசியைத்தான் தின்கிறான்.

கொள்ளையடித்தவன் மகிழ்ச்சியுடன் வாழ்கிறான். உழைப்பவன் எப்போதும் உழைத்துக் கொண்டே இருக்கிறான். வம்புச் சண்டைகள் பெறுத்திருப்பதால் உயர்வு தாழ்வுகள் என்றும் நிலைத்திருக்கிறது. விளைநிலங்கள் நீரில்லாமல் வறண்டு கிடக்கின்றன. இதனால் மனித வாழ்வுகள் முழுவதும் வறுமையால் நகருகின்றது.

குற்றம் புரிந்தவர்கள் சட்டத்தின் ஓட்டைகளில் வென்றுவிடுகிறார்கள். அதனால் அரசியல் வாதிகள் மக்களை வஞ்சிப்பதும், ஏமாற்றுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சத்தியங்கள், தர்மங்கள் பொய்த்துப் போய் விட்டன. வறுமைகள் சாட்டைகளாய் மக்களை சவட்டிக் எடுக்கிறது. இத்தகைய தேசத்தில் நீதியும் இல்லை. நேர்மையும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இத்தகைய வறுமைக்கும், மேட்டிமைத்தனங்களுக்கும் காரணமாக இருப்பது பார்த்தீனியச் சிந்தனைகள் என்பதைச் சுட்டுகின்றார்.

வறுமையே வயலில் முளைத்திருக்க
பார்த்தீனி யம்இங்கு செழித்திருக்க
சத்தியக் கோட்டைகள் பொய்த்திருக்க
வறுமையின் சாட்டைகள் உயிர்குடிக்க

என்ற வரிகள் சான்றுகளாகின்றன.

வௌவால் தேசம் என்ற கவிதையில் லஞ்சம் வாங்குவதின் வளர்ச்சியைக் குறிப்பிடுகிறார். பணம் மனித மனத்தில் எண்ணங்களாக உருவெடுக்கின்றன. ஆனபோதும் பணத்தின் மீதான மோகம் குறையவில்லை. பணம் ஒருபுறம் மொத்தமாகக் குவிந்து ஆடம்பர வாழ்க்கை வாழும் இவ்வுலகில் வறுமை மறுபுறம் திண்டாட்டம் கொடுக்கிறது. பணம் என்றாவது சேர்த்து விடுவோம் என்ற முயற்சியிலும் உழைப்பிலும் லட்சியத்திலும் பலரது வாழ்க்கைக் காத்துக் கிடக்கிறது. அதுவே முடிவுமாக மாறுகிறது.

கோடிகள் தாண்டிய சாதனை வரலாம்
முதல்பரி சுக்குத் தகுதியும் பெறலாம்
பொக்கைக் கிழவனும் கூடவே நானும்
பதைபதைப் போடு காத்திருக்கின்றோம்

சில்லறை பைசா அளவிற்கு லஞ்சம் வாங்குவது தவறு. நாலணா எட்டணா லஞ்சம் வாங்கினால் அவமானம் என்ற கருத்து நிலவிய நம் நாட்டில், தற்போது லஞ்சம் அத்தியாவசியமாகிறது. வளருகிறது. ரூபாய் நோட்டுகளாய் மாறியது. நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய், லட்ச ரூபாய் ஆனது. இத்தகைய வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சியுமாக மாறுகிறது. அதிகம் லஞ்சம் வாங்கியவர்கள் உத்தமர்களாகக் காட்சிப்படுத்தப்பட்டனர். முதல் பரிசு என்ற போட்டி லஞ்சம் வாங்குவதில் உருவாகியது. ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்ல என்ற மனநிலை உருவாகியது. லட்சங்கள் கோடிகளாகவும் மாறியது. தவறு, அவமானம், வருத்தம் என்ற நிலைமாறி லஞ்சம் புன்னகையாக மாறியது. புன்னகை முகத்திலும் வசனங்கள் வார்த்தைகளிலும் லஞ்சத்தின் ஆணிவேராக உள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கியவர் முதல் மேட்டிமையாளர் வரை லஞ்சம் வாங்குவதைக் கொள்கையாக வைத்துள்ளனர். இத்தகைய இந்திய தேசத்தில் புரையோடிய வாழ்க்கையில் எப்படியாவது பணம் சேர்த்துவிடுவோம். வாழ்க்கையில் அனைத்தும் மாறும். நாமும் மாறுவோம் என்ற நம்பிக்கையில் முதியவர் முதல் இளையவர் வரைக் காத்திருக்கின்றனர்.

வாழ்க்கையில் சமூக வெறுமைகள்

கண்ணாமூச்சி விளையாட்டு என்னும் கவிதையில் வாழ்கையின் வெறுமைகளைக் குறிப்பிடுகிறார். தனிமையில் மனிதன் படும்பாட்டை எழுதுகிறார்.

கண்ணாமூச்சி விளையாட்டு

வாழ்க்கை நகர்வது எதைக் கேட்டு

மனிதனுக்குத் தனிமை என்பது தானாக நிகழ்வதில்லை. சந்தர்ப்பங்கள், சூழல்களால் உருவாவது. மனிதனிடம் ஏற்படும் எண்ணங்களின் மாறுபாடுகளே சந்தர்ப்பங்களையும், சூழல்களும் உருவாகின்றன. உறவுகள் ஒன்றிணைந்து வாழ மறுத்து தனியாக விடப்படுகையில் தனிமைகள் உடைமையாகின்றன. மனதிற்குப் பிடித்தமானவர்கள் அருகருகே இருக்கும் போது உன்மத்தம் தோன்றுகிறது. அவர்கள் விலகிச் செல்லுகையில் தனிமை துரத்துகிறது. நாலு சுற்றுக்குள் அடங்கிய வாழ்க்கை நரகமாக மாறுகின்றன.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவே இருக்கும் இந்த வாழ்க்கையில் தனிமை என்பது வெறுமைகளை உருவாக்குவது. நாளை சந்திப்பேன் என்று கடக்கும் நாட்கள் வாழ்க்கையைக் குறைக்கிறது. தனிமை இருள் சூழ்ந்த வாழ்க்கை என்பதை உணர்த்துகிறார்.

என்ன செய்வதென
ஏதும் புரியவில்லை
விடியல் வரும்போதும்
வெளிச்சம் தெரியவில்லை

இன்னொரு தெரஸா என்ற கவிதையில் மருத்துவத்தில் நிகழும் ஏமாற்றுகளை எடுத்துக் காட்டுகிறார்.

இன்றைய நிலையில் வியாதிகள் வந்தால்
எமன் வரும் முன்பே செத்துப் போவோம்

என்று எச்சரிக்கை விடுக்கிறார். காரணம் மருத்துவத்துறை நிகழ்த்தும் கோமாளித்தனங்களைப் பட்டியலிடுகிறார். தும்மல் என்று மருத்துவரிடம் சென்றால் ரத்தம், சிறுநீர், மலம், எச்சில், ஈஸிஜி, பிஸிஜி, எக்ஸ்ரே, பிரம்மாண்ட எந்திரங்களின் மூலம் சோதனை என்று எடுத்தப்பின் ரசீது வரும்போது லட்சங்களில் இருப்பதைக் கண்டு பிணமாவோம்.

கையிலே காசு இல்லாதவன் வியாதி
குணமாக்கும் மந்திரம் இல்லாமல் தோற்கும்

நோயிலே வாடும் நடுத்தர மக்களைச்
சுடுகாடு மட்டும் சொந்தமாய் ஏற்கும்

பணக்காரர்களின் சுற்றுலாப் பயணிகள் போல மருத்துவமனைகள் செயல்படுகின்றன. நட்சத்திர மருத்துவ மனைகளும் உருவாகின்றன. சக்கரை, சுகர், பிரஷர், மாரடைப்பு, மூக்கடைப்பு, பிரசவங்கள், ஐ.ஸியூ போன்றவற்றில் நடப்பது அனைத்தும் துரோகங்கள் தான். வட்டியோடு பிடுங்கும் வன்முறைகள். கோவணம் தவிர எல்லாம் உருவும் மருத்துவர்கள் உள்ளனர். அரசனும் ஆண்டியாய் தான் அனுப்புவார்கள். இத்தகைய வாழ்க்கையில் இன்னொரு தெரஸா கிடைப்பது கடினம் எனச் சாடுகிறார். மேலும், பாரதியார் எழுதிய, தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினையும் அழித்திடுவோம் என்ற கவிதை வரியை மாற்றிச் சொல்லும் பாங்கு பொறுத்தாமாய் அமைகிறது.

தனியொரு வனுக்கு மருத்துவம் இல்லா

ஜகத்தினை போகியாய் ஆக்கத்தான் வேண்டும்

பூமியின் கடைசி மனிதன் என்ற கவிதையில் பிரபஞ்சத்தைப் பற்றிய சிந்தளைகளையும், மனித வாழ்வின் அவலங்களையும் உணர்த்துகிறார். இந்த உலகத்தில் மனிதர்கள் யாரும் இல்லையெனில் ஒரே ஒரு மனிதன் இறுதியாக உள்ளான் என்றால் அவன் செய்யும் காரியங்களைக் கவிதைகளாக வடிக்கிறார்.

சுயமாகச் செத்து, அழுது, சாவுச் செய்தியைச் சுயமாகச் சொல்லி, தானே மாரடித்து அழுது, சுடுகாட்டிற்குத் தானே நடந்து சென்று, தானே சிதையில் ஏறிப் படுத்து, தானே கொள்ளியை வைத்துக் கொள்கிற கடைசி மனிதனின் செயல்கள் கற்பனை செய்கிறார். அப்போது அவருக்குள் பல கேள்விகள் உதயமாகின்றன.

சுடுகாட்டில் பிணத்தை எடுப்பதற்கு எந்த வெட்டியான் காத்துக் கிடப்பான்? எரித்தப் பிணத்தின் சாம்பலை வாங்க யார் கிடப்பான்? கருமாதிகளை யார் செய்திடுவான்? உத்திர கிரியைப் பத்திரிக்கை யாருக்கு அனுப்ப இயலும்? என்ற வினாக்களில் இறப்பிற்குப் பின் மனிதர்கள் செய்யும் காரியங்களைப் பட்டிலிடுகிறார். இறந்த மனிதன் எப்படி இந்த வேலைகளைச் செய்யமுடியும் என்ற சிந்தனை நமக்குள் எழுகிறது.

துணைக்கு யாரும் வருகிறார்களா? என்ற கேள்வியில் மனிதன் துணைக்கு மனிதனைத்தான் தேடுவான் என உணர்த்துகிறார். ஒருத்தருக்கொருத்தர் தோள் கொடுப்பதற்கு, சேதி பரிமாறிக் கொள்வதற்கு, சிதை மூட்டிக் கொள்வதற்கு, இரங்கற் பா பாடுவதற்கு, புகைப்படம் எடுப்பதற்கு, வீட்டினில் வைத்துக் கும்பிடுவதற்கு, நினைவு நாள் செய்து வழிபடுபவதற்குத் துணை மனிதர்கள் தேவையாகிறது.

அடுத்த மனிதன் அரக்கனோ, அவதாரமோ, கடவுளோ, இறைவனோ தேடும் அளவிற்கு இப் பாத்திரம் கடைசி மனிதனும் கடவுளுமாகிறான்.

நானே பிறப்பு
நானே இறப்பு
நானே இறைவன்
நானே அரக்கன்
நானே பூமியின்
முதலாம் மனிதன்
நானே பூமியின்
கடைசி மனிதன்

என்பதான கற்பனை மேட்டிமைத் தனமில்லாத சுயமாக வாழும் வாழ்க்கையைச் சொல்லிச் செல்கிறது என்றே உணரமுடிகிறது.

சமூகத்தில் பெண்கள் நிலைகள்

அழகிய ஆணவம் கவிதைகள் பெண்கள் பிறக்கும் போதே பூக்களாய்த் தான் பிறக்கிறார்கள் என்கிறார். ஐந்தரை அடியில் பெண்மை எய்தி பூவாய் மாறுகிறாள். பேசத் தொடங்கிய நாட்களில் வேதமாய்ப் பேசுகிறாள். போம்மா என்று கொஞ்சிப் பேசிக் கோபமும் சேர்க்கிறாள். அவளின் பேச்சில் அன்பும் உண்டு. ஆளுமையும் உண்டு. ஆணவமும் உண்டு. மென்மை உண்டு. முள்ளும் உண்டு.

“பாசம் பெரிதினும் பெரிதுண்டு“

“ஆயிரம் கடலாய் மனஆழம்”

அவள் அறிவின் சிகரமாகிறாள். திறமையின் அடையாளம் ஆகிறாள். ஞானம் பெறுகிறாள். கடலின் ஆழம் போன்ற மனிதர்களின் மனங்களை உணர்கிறாள்.

உயிர் தருகிறாள். விடியலின் ஒளியாய் இருக்கிறாள். இசையாய் திட்டுகிறாள். அரூபமாய் அன்னையாகிறாள். தீயின் பிழம்பாகிறாள். சண்டை, சிரிப்பு எனப் பல தினங்கள் கடக்கிறாள்.

உறவின் உயிரும் என்மகளே
உயிரின் உறவும் என்மகளே
அவளின் முத்தம் தினம் வேண்டும்
அல்லது என்உயிர் சிதை தீண்டும்

கூழ்க்காரி கவிதையில் பண்பாடு என்பது சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கானது. பெண்களுக்கு அது வேலியும் ஆகிறது. பெண்மையின் வீரம் ஆணை நம்பி அல்ல என்பதையும் உணர்த்துகிறது.

அதிகாலை நான்கு மணிக்குக் குளித்து முடித்தாள். பொரி கடலைத் துவையலை அம்மியில் அரைத்தாள். அந்தத் துவையலின் சுவை நாக்கில் எச்சிலை ஊற வைக்கும். உப்பிட்ட கேழ்வரகினை மண்பானையில் சேர்த்து அடுப்பில் வைத்துக் கூழாக்கினாள். காய்ச்சி முடிக்கும் போது சூரியனும் கண் விழித்துவிடும். ஏழரை மணிக்கெல்லாம் கடையை விரிக்க வருவாள். பல தொலைவுகளிலிருந்து வாடிக்கையாளர்கள் வருவர். போலீஸ்காரர்களும், ரவுடிகளும் ஏராளமாகத் தொல்லை தருவர். அத்தனைக்கும் பதில் சொல்லுவாள். நடைபாதை நிழல் தாண்டி அவளுக்கு எந்தவொரு போக்கிடமும் இல்லை. இரண்டு மண்பானை வரகுக்கூழ் விற்பாள். வெங்காயம், மோர் மிளகாய்த் தொட்டுக்க

வைப்பாள். கிழிந்து போன சேலையை அணிந்திருப்பாள். கிழியாத புன்னகையை வீசுவாள். வியர்வை துளிகளை மட்டும் தான் நகைகளாக அணிவாள். வறுமை பெற்றெடுத்த உழைப்புச் சித்திரம் அவள். கூழ் முழுக்க விற்றாள் தான் நாலு காசு அவளுக்குக் கிடைக்கும். நாள் முழுவதும் நின்றிருப்பாள். பசி எப்போதும் அவளிடம் குடியிருக்கும். கால் இரண்டும் மரத்துப்போய் நின்றாலும் பழக்கமாச்சு என்று கூறுவாள்.

ஒரு வாய்க் கஞ்சி உன் புருஷன் ஊற்ற மாட்டானா? என்ற கேள்விக்கு, கடைசி மூச்சு வரைக்கும் உழைப்பு தான் என் உறவு என்று ரகசியமாய்ச் சொன்னாள். கேழ்வரகு என் புருஷன். வரகுக் கஞ்சி என் பிள்ளை. எனக்கு நானே கட்டியது இந்த மஞ்சள் கயிறு. இந்த உயிர் ஆண் பார்வை தீண்டாமல் காத்திருக்கிறது என்றாள்.

அவள் சொல்கின்ற தத்துவம்,

ஞானிக்கும் சித்தனுக்கும்
புலப்படாத சத்தியம்
அவளின் நிழல்கூட
அவளைவிட வெளுத்திருக்கும்
கேழ்வரகுக் கூழ்ருசியோ
தாய்ப்பாலைப் போலிருக்கும்

தையலாளி கவிதையில், தையல் எந்திரம் தைக்கும் பெண்ணின் வாழ்க்கையை விளக்கியுள்ளார். கொஞ்சம் வார்த்தை நிறைய புன்னகையுடன் பழைய தையல் எந்திரத்தை வைத்துத் தைக்க ஆரம்பிப்பாள். கடகட வெனச் சப்தம் எழுப்பும் அவள் எந்திரத்தின் ஓசை. மிகவும் சிறியதான அவள் கடையில் மெல்லியதாய்க் கொஞ்சம்

வெளிச்சம் இருக்கும். கத்தரிக்கோலும், நூல் கண்டுகளும், ஒட்டடைகளும், பாச்சாக்களும் நிறைந்த கடையில் கொளுத்தும் வெயிலில் வேர்வை வழிய தைத்துக் கொண்டிருப்பாள். சரியாய்த் தைக்கத் தெரியாதவள். எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் அவள் தவறுகளைத் திருத்திக் கொள்ளமாட்டாள். நாளைக்கே அவள் இறந்துபோனாலும் அவளுக்கென்று வாடிக்கையாளர் வேறு எவரும் இல்லை.

பொருந்தா உடைகள் என்உடல்காக்கும்
என்கூலி மட்டுமே அவள்உயிர்காக்கும்
என்பதால் கடைவேறு மாற்றியதில்லை
சரியான உடைவேறு போட்டதுமில்லை

என்ற வரிகள் தையல்காரியின் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுவதோடு, மனிதநேயமும், சகிப்புத்தன்மையும் புலப்படுகிறது.

தண்ணீர்க்காரி கவிதையில் வீடுகளில் தண்ணீரைக் குடத்தில் சுமந்து தரும் பெண்ணின் வாழ்க்கையைப் பேசுகிறது. எத்தனையோ மாடி வீடுகள், குழாயடிகள், தண்ணீர் வசதிகள், கேன்கள், வாகனங்கள் என்று பலவழிகளில் வந்தாலும், தண்ணீர்க் குடத்தைத் தலையில் சுமந்து வீடுகளில் சேர்க்கும் பெண்ணின் வாழ்க்கையை இக்கவிதை பேசுகிறது. தண்ணீர் வாழ்வின் அத்தியாவசியம் என்றாலும் இவர்களைப் போன்ற பெண்களின் வாழ்க்கை சமூகத்தின் அவலத்தைக் காட்டுகிறது. மறுபுறம் பெண்மையின் உழைப்பும் பெண்ணின் மீதான மதிப்பையும் உயர்த்துகிறது. இவர்களைப் போன்ற பெண்களிடம் பெறும் உதவியும், கொடுக்கும் கூலியும் மனிதநேயமும், சகிப்புத்தன்மையை உணர்த்துகிறது. அவளுக்காக பரிந்து கொடுக்கும் இதயமும் உணர்த்தப்படுகிறது.

உயரானமான பெண், உருவம் நிறைந்தவள். ஒல்லியான நீண்ட உலக்கைப் போன்று கைகளைப் பெற்றவள். தண்ணீர்க் குடங்களை, தலையிலும் இடும்பிலும், இன்னொரு இடுப்பிலும் தானே தூக்கிக் கொள்வாள். அப்பார்ட்மெண்ட்டில் மூன்றாம் மாடி, நான்காம் மாடிக்குச் செல்லும் போது மூச்சிரைக்கும். நகர்ந்து நகர்ந்து அவள் செல்லுவாள். பார்ப்பவர்களின் ஈரக்குலையும், உயிரும் பதறும். அவள் உடலில் வழிகின்ற வியர்வை தண்ணீரைவிட அதிகமாக இருக்கிறது. அவளது அத்தனை மூச்சுக்களும் தீர்ந்து போகும் அளவிற்கு மூச்சிறைக்கிறாள். ஒவ்வொரு மாலைப் பொழுதிலும் தவறாமல் வந்துவிடுவாள். அடைமழைக் காலத்திலும் அவள் வியர்வை நிற்காது. இருபது தளங்களுக்கும் அவள் தான் தண்ணீர் தருகிறாள். இந்தத் தண்ணீர் எல்லோருக்கும் தாகம் தீர்க்கிறது. அவளுக்கு மட்டும் பசி தீர்க்கிறது.

வீட்டுக்குள் குடிநீர்
இணைப்புமே வேண்டாம்
என்று மறுத்தேன்
அவளது குடத்துத்
தண்ணீருக் காக
அவள் வராமல்
போனால் என்
தாகத்தைப் பொறுத்தேன்
வேதனை செல்லும்அவள்
கண்ணீருக் காக

தொகுப்பாளினி கவிதையில் ரேடியோ ஸ்டேசனில் வேலை செய்யும் பெண்ணின் குரலையும், தெருவில் நாய்களின் மூத்திரச் சத்தத்தையும், குட்டிநாயின் முனகலையும் ஒப்பிடுகிறார். ஓலைப்பாயில் நாயின் மோளும் ஓசையும், குட்டி நாய்கள் முனகும் சத்தங்களும், காலைக்கடன் கழிக்கும் முக்கல் முனகலும், கோடித் தவளைகள் போடும் சத்தமும், சூறாவளி பாய்ந்துவரும் சத்தமும், வாந்தி எடுக்கும் சத்தமும் கேட்பதைப் போல தொகுப்பாளினி பேசுகிறார்கள்.

அவர்கள் பேசும் தமிழ் பன்னித் தமிழாக உள்ளது,

டயல் பண்ணி மெஸேஜ் பண்ணி
செண்ட பண்ணி டெடிகேட் பண்ணி

என்ற தமிழில் பிணங்களும் அலறியே எழுந்துவிடும். செந்தமிழும் ஆங்கிலமும் உயிரோட்டம் இல்லாத ஒப்பாரியாய் இருக்கிறது. திரைப்படப் பாடல்கள் அனைத்தும் தீர்ந்து போனாலும் பாடல்கள் போடுகிறார்கள்.

தொகுப்பாளினி பேச்சு
தகர டப்பாக்களில்
கல்போட்டுக் காதறுக்கும் இப்போதெல்லாம்
காதுகளை அறுத்தெடுத்துக்
கடலுக்குள் புதைத்துவிட்டு

இமயமலை போய்விடலாம் அப்போதெல்லாம்

கோலப்பொடிக்காரி கவிதையில் கோலப்பொடி விற்கும் பெண்ணின் வாழ்க்கையும் சமூக மாற்றமும் சுட்டிக்காட்டப்படுகிறது. வெள்ளை நிறக் கோலப்பொடி விற்கும் அந்தப்

பெண்ணிடம் நெடி வாசனை எப்போதும் இருக்கும். அடுக்குமாடி ஏற முடியாமல் கீழிருந்து ஓசை பெரிதாகக் கத்துகிறாள். நைட்டி போடும் தமிழ்ப் பெண்கள் கோலம் போட மறந்துவிட்டனர். சிலர் பிளாஸ்டிக் கோலத்தை ஒட்டிச் செல்கின்றனர். பசுஞ்சாணி தெளித்து கோலமிட்டுப் பூசணிப் பூ வைப்பதற்குத் தெரு இல்லை. அனைத்தும் அடுக்குமாடி வீடுகள்.

ஆழாக்குப் பொடிகூட
விற்காத நாளினிலே
ஒருவாயக் கஞ்சிஅவள்
குடிப்பதற்கு என்ன செய்வாள்?

இருந்தபோதும் இத்தகைய சமூக மாற்றத்தையும், கட்டடங்களின் மாற்றங்களையும், மாறிவரும் வாழ்க்கை முறைக்கும் அவள் சிறிதும் கவலைப்படவில்லை. என்னைப் போன்ற ஓரிருவருக்காக தினமும் கோலப்பொடி விற்க வருகிறாள்.

மண்கோலம் போடவில்லை
கோலப்பொடி வாங்குகிறேன்
மனக்கோலம் போடவில்லை
வறுமையினை வாங்குகிறாள்.

சோறாட்டி கவிதையில் அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு அவர்களின் வீடுகளில் மதிய உணவு வாங்கிக் கொடுக்கும் பெண்ணின் வாழ்க்கை பேசப்படுகிறது. விதவிதமான கைமணம் கொண்ட உணவு தருகிறாள். அவளிடம் பொய் இல்லை.

கொடுப்பது மிச்சச் சோறு தவிர அவளிடம் வேறு எதுவும் இல்லை. கூடையில் சாப்பாட்டு அடுக்குகளைச் சுமந்து கொண்டு முடுக்ககளில் விரைந்து நடப்பாள். வெயில், மழை, புயல், இடி, வெப்பம் இவைகள் எதுவும் அவளுக்குக் கவலைகளைக் கொடுத்ததில்லை.

அடுக்குகள் முழுக்க உணவுகள்
மனைவிகள் அனுப்பும் தினவுகள்
துல்லிய மாகவே சேர்க்கிறாள்
பசிநெருப் பினையே தீர்க்கிறாள்

மறுபடியும் எச்சில் பாத்திரங்களை வாங்கிக் கொண்டு வருவதற்கும் முடுக்குகளில் ஓடுவாள். மிச்சம் மீதிகளைக் கலந்து பிச்சைக்காரர்களின் பசிகளை நீக்குகிறாள். மிச்சச் சோற்றில் புதுவாசம் உள்ளது. பாசத்தைப் பிசைந்த அவள் கைகளில் வாசம் நிறைந்திருந்தது. அமுதம் எச்சில் சோற்றுக்கு ஈடாகது. அவள் நடைபாதைகளின் பசி தீர்க்கும் தேவலாயம். அமுதசுரபி என்னும் பேராலயமாக விளங்குகிறாள்.

நானுமே ஒருநாள் கைஏந்தினேன்
அதிர்ந்தாள் மறுத்தாள் பசிநீந்தினேன்
உனக்கு ஏனம்மா எச்சில்சோறு?
மறுத்தாள் மறுக்கவே மறுத்தேன் நானும்

உருட்டிப் போட்டாள் கண்ணீரோடு
பசித்துத் தின்றேன் நன்றியோடு

தந்தைப்பால் என்ற கவிதையில் கருத்து வேறுபாடு காரணமாகக் கணவனும் மனைவியும் பிரிந்து சென்றதால், கைக்குழந்தையுடன் தவிக்கும் தந்தையின் உணர்வுகள் பேசப்படுகிறது.

தனிமையால் தவிக்கும் குழந்தையின் உணர்வும், வேலைக்குச் செல்லும் தந்தை, குழந்தையுடன் இருக்க முடியவில்லை என்ற தவிப்பும் கவிதையின் ஆணிவேராக உள்ளது என்ற போதும். தாயுமானவரை நினைவூட்டுவதாக அமைகிறது. என்மகளே! என்மகளே! தாலாட்டுப் பாடவதற்கு எனக்கு நேரமில்லை. தாய்மடியில் நீ உறங்குவதற்கு அலுவலகம் அனுமதிப்பதில்லை. குழந்தை போதும் என்று என் கருவறையைப் பூட்டிவிட்டேன். மனைவியுடனான உறவு தீமை என்று என் மனக்கதவையும் மூடிவிட்டேன். தொலைக்காட்சியும், பொம்மைகளும் இருந்தபோதிலும் தனிமை மட்டுமே உன்னோடு சிரிக்கிறது. தொட்டிலில் தாலாட்ட மறந்திருக்கும் காலமிது. அதோடு தாய்மை உணர்வுகளும் மரத்துப்போய் விட்டது.

ஜீன்ஸோடு டிஷர்ட்டும்
அணிகின்ற அம்மாநான்
உனக்குத் தருவதற்குத்
தாய்ச்சேலை ஏதுமில்லை

தந்தைப்பால் தருவதற்கு
இயற்கையிலே வசதியில்லை
தாய்ப்பாலைத் தருவதற்கோ
வாழ்க்கையிலே வசதியில்லை

வேலைக்கு நான் செல்வதற்காக உனக்குத் தாய்ப்பாலை மறக்கடித்தேன். நினைத்து என் மனம் ஏங்கும் என்பதற்காக உனைத் தழுவும் சுகம் மறுத்தேன். நீ பிறந்த அடுத்த நொடி அலுவலகம் சென்றுவிட்டேன். சம்பளம் முக்கியம் என்பதற்காக தாய்மை கொன்றுவிட்டேன்.

பத்துமாதம் சுமப்பதற்குப்
பெண்களுக்கு நேரமில்லை
ஐந்துமாதம் போதுமென்று
சாமிக்குஏன் தோணவில்லை?

குற்றமுள்ள தாய்மை உணர்வு என்னிடம் உண்டு. தொடவும, அணைத்திடவும், விளையாடவும், தாய்ப்பால் உண்டு தூங்குவதை ரசிக்கவும் ஏக்கமும் உண்டு. மறுஜென்மத்திலும் நீ என் மகளாய் வந்தால் தவறாமல் இவையெல்லாம் உனக்குத் தருவேன். இப்போது முதல் தேதி சம்பளத்தைத் தருகிறேன் என்று தந்தைக்கு இயற்கை மறுத்தத் தாய்மைப் பண்பினை வார்த்தையால் வெளிப்படுத்தும் நுட்பத்தினை விளக்குகிறார்.

தமிழ் ஹைக்கூ ஆயிரம்

- இரா.மோகன்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்க் கவிதை எடுத்திருக்கும் புதிய பரிமாணம் ஹைக்கூ கீழ்த்திசைப் பௌத்த சிந்தனையில் முகிழ்த்தது. சீனத்துப் பண்பாட்டில் திளைத்தது. ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து மணம் வீசிய இக்கவிதையை அடையாளம் கண்டு, 1916 ஆம் ஆண்டில் ஹொக்கு என்ற பெயரால் தமிழுக்கு முதன்முதலில் அறிமுகம் செய்தவர் கவியரசர் பாரதியார். 1968 ஆம் ஆண்டில் நடை முதல் இதழில் ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை முதன்முதலில் மொழிபெயர்த்துத் தந்தவர் கவிஞர் சி.மணி, 1970 ஆண்டு வாக்கில் தமிழ் மரபுப்படி இக்கவிதைக்குச் சிந்தர் எனப் பெயர் சூட்டி, தமிழில் சோதனை முயற்சியாகச் சில ஹைக்கூ கவிதைகளையும் முதன்முதலில் எழுதி வெளியிட்டவர். வாமனக் கவிதைகள், மின்மினிக் கவிதைகள் என்ற பெயர்களையும் ஹைக்கூக்குச் சூட்டி மகிழ்ந்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான். ஜப்பானிய ஹைக்கூ (1987), இதுதான் ஹைக்கூ (1990) என்ற இரு நூல்களை வெளியிட்டு ஹைக்கூ கவிதையின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றியவர் முனைவர் தி.லீலாவதி. 1984 ஆம் ஆண்டில் புள்ளிப் பூக்கள் என்ற முதல் தமிழ் ஹைக்கூ கவிதைத் தொகுதியை வெளியிட்டவர் ஓவியக் கவிஞர் அமுதபாரதி. தொடர்ந்து 19895 ஆம் ஆண்டில் ஜப்பானிய ஹைய்கு வடிவக் கவிதைகள் என்ற அறிமுகக் குறிப்போடுமட். வாசல் ஓர் வாசகம் என்ற பதினான்கு பக்க ஆய்வு முன்னுரையோடும் சூரியப் பிறைகள் என்னும் தொகுப்பினை வெளியிட்டவர் முன்னணிக் கவிஞர் ஈரோடு தமழன்பன். 1988 ஆம்

ஆண்டில் இலங்கையில் கூடைக்குள் தேசம் என்ற தலைப்பில் முதன்முதலாகத் தமிழில் ஹைக்கூ வடிவக் கவிதைத் தொகுதியை வெளியிட்டவர் முரளிதரன். இன்று தமிழில் இருநூற்றுக்கு மேற்பட்ட ஹைக்கூ கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

Haiku தமிழில்

Haiku என்பதற்கு இணையாகத் தமிழில் ஹைகூ, ஹைக்கூ, ஹைய்கு, ஹொக்கு அய்க்கூ, ஐக்கூ என்னும் சொல்லாட்சிகள் வழங்கி வருகின்றன. மேலும் அதன் வடிவத்தையும், வீச்சையும் சுட்டும் வண்ணம் துளிப்பா, மினபா, அகத்தியக் கவிதை, கடுகுக் கவிதை, குட்டைக் கவிதை, குறுங்கவிதை, நறுங்கவிதை, மத்தாப்பூக் கவிதை, மின்மினிக் கவிதை, வாமனக் கவிதை முதலான பெயர்களும் கையாளப் பெற்று வருகின்றன. ஒரு மேதையின் குறுஞ்சிரிப்பு, கவிதை உலகத்தின் புதிய மழலை, சட்டைப் பைக்குள் ஒரு கவிதை, சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம் என்றாற் போல் பற்பல அணிநலம் வாய்ந்த அழகிய தொடர்களாலும் ஹைகூ கவிதை குறிக்கப்படுகின்றது. அணிலின் முதுகு, மின் கம்பிகளில் பறவைகள், சிவனின் நெற்றைப் பட்டை, மூன்று வரியில் வானவில், துப்பாக்கி ரவை, பாரசூட் ஆகியவற்றை ஹைகூ வடிவத்திற்குப் பொருத்தமான உவமைகளாகக் கவிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழில் ஹைகூ

ஹைகூ என்ற பெயரில் இப்போது தமிழில் வெளிவருகின்றவைகளில் போலிகளை விலக்கிவிட்டால் பலவற்றை ஹைகூ என்பதை விட சென்ரியூ என்று அழைப்பதே பொருத்தம். ஜப்பானில் சென்ரியூ ஹைகூவின் ஒரு புதிய பரிணாமம். ஹைகூவின் பழைய

இறுக்கமான கட்டுப்பாடுகளை உதறிவிட்டு அது சுதந்திரமாக இயங்குகிறது. ஹைகூவின் தனிப்போக்கான கற்பனா வர்ணங்களை விட்டுவிட்டு, சென்ரியூ மெய்ம்மையியத்தை (realism) எடுத்துக் கொண்டது. அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூர்த்த பார்வையுடன் அது கவிதையாக்கியது. ஹைகூவின் தத்துவ கனமும், கருத்தார்ந்த வினைமையும் (seriousness) குறைந்து, குறும்புத்தனமும் நகைச்சுவையும் சென்ரியூவின் பண்புகள் ஆயின. ஆனாலும் ஹைகூவின் அடிப்படையான வெளியீட்டு முறையை அது கைவிட்டு விடவில்லை. (விலங்குகள் இல்லாக் கவிதை, ப.51) என இன்று தமிழில் வெளிவந்துள்ள ஹைகூ கவிதைகளைக் குறித்து மதிப்பீடு செய்துள்ளார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

1. ஹைகூ அல்லது ஹொக்கு, 2. ஹைகாங்நொ ரெங்கா 3. ஹைபன் (Haibun – haiku prose), 4. சென்ரியூ (senryu – humorous or satiric poem dealing with human affairs, usually written in the same form of haiku).

ஒரு புதுவகை இலக்கியம், ஒரு மொழியில் அறிமுகமாகி வளரும் நிலையில் – தவிர்க்க முடியாத தன்மைகளில் ஒன்றாகவே இதனை நாம் கருத வேண்டும் என்று அப்துல் ரகுமான், தமிழன்பன் ஆகியவர்களின் கருத்தாகும்.

திரிவேணி சங்கமம்

ஜப்பானிய ஹைகூ கவிதைகளில் இயற்கையின் தரிசனமும் தத்துவப் பார்வையும் படிமப் பாங்கும் சிறப்பிடம் பெற, தமிழ் ஹைகூ கவிதைகளில் இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் நிகழ்வுகளும், அன்றாட நடைமுறை வாழ்க்கை அனுபவங்களும் முதலிடம்

பெற்றுள்ளன. இன்றைய நாட்டு நடப்புகளை – அரசியல் இழிவுகளை – சமூக அவலங்களை – பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை – அன்றாட வாழ்க்கைக் காட்சிகளை – நடைமுறை உண்மைகளைத் தமிழ் ஹைகூ கவிதைகள் அங்கதச் சுவையோடும் முரண் சுவையோடும் நகைச்சுவையோடும் கையாண்டுள்ளன. சுருங்கக் கூறின், அங்கதம், முரண் நகை ஆகிய சுவைகளும் ஒன்று சேர்ந்த திரிவேணி சங்கமம் மாகத் தமிழ் ஹைகூ கவிதைகள் காட்சியளிக்கின்றன. மூன்று அடிகளால் ஆன குறுவடிவம், ஆற்றல் வாய்ந்த ஈற்றடி, செட்டான மொழிநடை என்னும் முப்பெரும் பண்புகளும் அவற்றின் வெற்றியில் பெரும் பங்காற்றுகின்றன.

சுதந்திரச் சிந்தனைகள்

புதுக்கவிதையில் இடம்பெற்றிருப்பது போல் ஹைகூ கவிதையிலும் சுதந்திர இந்தியா பற்றிய கூர்மையான விமர்சனங்கள் இடம்பெற்றுள்ளன. பதச் சோறாக, ஹைகூ கவிதைகள் வெளிப்படுத்தி இருக்கும் சுதந்திர தினச் சிந்தனைகள் உள்ளன.

நம் இந்திய திருநாடு சுதந்திரம் பெற்று இன்று எழுபத்து ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனந்த சுதந்திரம், இன்பச் சுதந்திரம், வீர சுதந்திரம், கண்ணிலும் இனிய சுதந்திரம் என்றெல்லாம் பாரதியார் கனவு கண்ட சுதந்திரத்தைப் பற்றி ஹைகூ கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

ஆகஸ்ட் 15 ஆம் நாள் சுதந்திரம் பெற்ற தினம். இந்தத் தினத்தில் யாருடைய மனத்திற்குள்ளாவது துக்க உணர்வு தோன்றுமா? தோன்றும் என்கிறது நவதிலக்கின் ஹைகூ.

“சுதந்திர தினம்

மனத்திற்குள் துக்கம்

வந்தது ஞாயிற்றுக் கிழமை” (பூக்கள் பறிப்பதற்கில்லை, ப.32)

சுதந்திர தினம் இந்த ஆண்டு ஞாயிற்றுக் கிழமையில் வந்ததால், ஒருநாள் விடுமுறை போய்விட்டதே! இது இன்றைய மனிதனின் துக்கத்திற்குக் காரணம். சுதந்திர தினத்தில் விடுமறை வேண்டாம் உழைப்பு வேண்டும் என்ற உரத்த சிந்தனையை இன்று ஆங்காங்கே மூத்த அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். இத் தருணத்தில் இ.பரிமளத்தின் ஹைகூ சிந்தனையைக் கிளறி விடுகின்றன.

“சோம்பேறி நாட்டில்

சுதந்திர தினம்

விடுமுறை நாள்!” (மின்மினிக் கவிதைகள், ப.4)

ஒவ்வோர் ஆண்டும் விடப்படும் விடுமுறைகளால் மட்டும் நம்நாடு கோடிக்கணக்கிலே வருமானத்தை இழக்க நேரிடுகிறது. – ஒவ்வோர் இந்தியனும் நம் உள்ளத்தில் கல்வெட்டாய்ப் பொறித்து வைத்துக் கொள்ள வேண்டிய கசப்பான உண்மை இது!

“ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று”

நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே, சுதந்திரப் பள்ளு பாடினார் பாரதி. இன்றோ சுதந்திர இந்தியாவில் இருந்து கொண்டு நவதிலக் என்ற கவிஞர்,

“ஆடுவோமே பள்ளு பாடுவோமே

ஆனந்த சுதந்திரம்

அடைந்து விற்றோமென்று”

என்று பாடுகிறார். பாரதியின் வரிகளை இங்கே அப்படியே பயன்படுத்திக் கொண்டு இறுதியில் ஒரே ஒரு சொல்லை மட்டும் ஓசைப்படாமல் மாற்றியிருக்கிறார். நம்முடைய புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டை எங்கே கொண்டு போய் நிறுத்தப் போகிறது என்று சுட்டுகிறார்.

விமர்சன நோக்கில் நேருக்கு நேர் நின்று எதையும் அஞ்சாமல் கேட்கும் நெஞ்சுரம் இன்றைய ஹைகூ கவிஞர்களிடம் மேலோங்கி இருக்கிறது. சுதந்திரத் தினம் கூடி இருப்பவர்கள் மிட்டாய் தருகின்றார்கள். கொடி கொடுக்கிறார்கள். குத்துக் கொள்ள குண்டூசியும் தருகிறார்கள். அவர்களை நோக்கிக் கூரிய கேள்விக் கணை ஒன்றைத் தொடுக்கின்றனர். புதுவை தமிழ்நெஞ்சன்,

“கொடி கொடுத்தீர்
குண்டூசி தந்தீர்
சட்டை?” (தீவின் தாகம்)

இக் கவிதையின் ஈற்றடியில் – அதன் பெயர்ச் சொல்லில் – வெளிப்பட்டிருக்கும் அழுத்தமும் ஆற்றலுமட் சாட்டை அடிக்கு – சவுக்கின் கொடுக்கலுக்கு – நிகரானவை. இதன் வீரியத்தைச் சுட்டுவதற்கு,

“படுத்துக் கொண்டே படித்தேன்

தூக்கி நிறுத்தியது

ஹைகூவின் கடைசி வரி” (காந்தள் இதழ்)

என்ற வெற்றிச்செல்வனின் ஹைகூவையே நாம் மேற்கோள் காட்டலாம்.

இன்று அரசியல் மேடைகளில் இருந்து நயத்தக்க நாகரிகம் விடை பெற்றுச் சென்றுவிட்டது. வாய்க்கு வந்தபடி பேசுவது – இல்லை. ஏசுவது – என்பது வாடிக்கையாகி விட்டது. சுற்றுப்புறச் சூழலே மாசு அடையும் வகையில் ஒருவர் மீது ஒருவர் வசை மாரி பொழிவது, சேற்றை வாரி இறைப்பது என்பது வழக்கமாகி விட்டது. இத்தகைய சூழலில் தெரு முனையில் அரசியல் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருப்பதால், பார்த்துப் போகுமாறு தென்றலிடம் மென்மையான குரலில் கூறுகின்றனர். ஹைகூ கவிஞர் நெல்லை முத்து,

“தென்றலே பார்த்துப் போல

தெரு முக்கில்

அரசியல் கூட்டம்” (வைரப் படிகங்கள்)

தேர்தல் நேரம் வந்துவிட்டால் போதும், அதுவும் ஓட்டுப் போடும் நாளன்று பார்த்தால், உலக அதிசயங்களை எல்லாம் விஞ்சும் வகையில் இறந்தவர் வந்து போவார். எங்கே என்கிறீர்களா? வாக்குச் சாவடியில் தான். கவிஞர் தமழன்பனின் ஹைகூ ஒன்று இதனை நயமாகச் சித்தரித்துக் காட்டுகின்றது.

“ஓட்டுப்போட்டு விட்டுத்

திரும்பிவந்த பிணம் திடுக்கிட்டது.

தனது கல்லறையில் வேறொரு பிணம்" (சூரியப் பிறைகள்)

தேர்தல் நாளன்று பிணம் ஒன்று ஓட்டுப் போட்டுவிட்டுத் திரும்பி வருகின்றது. ஒரு சிறு ஐயம். பிணம் போட்டது உயிருடன் இருந்த போது பெற்றிருந்த தனது ஓட்டையா? அல்லது அடுத்தவர் ஓட்டையா? அது திடுக்கிடுவானேன்? கல்லறையில் அதன் இடம் இன்னொரு பிணத்தால் கைப்பற்றப்பட்டு விட்டது என்பதாலா? அல்லது எத்தனுக்கு எத்தன் இவ்வுலகில் உண்டு என்பதை முதன்முதலாக அனுபவத்தால் உணர்ந்து கொண்டதாலா? மண்ணுலகில்தான் மக்கள் தொகைப் பெருக்கம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். மயானத்திலுமா பிணத்தொகைப் பெருக்கம் நேர்ந்துவிட்டது? இவ்வளவு சிந்தனைகளையும் அலைஅலையாக நம் நெஞ்சில் எழுப்புகின்றது தமிழன்பனின் ஹைகூ கவிதை.

நம்நாட்டில் மட்டுமன்று – இன்று உலகம் எங்கிலும் – சட்ட மன்றம் என்றால் – பாராளுமன்றம் என்றால் – ஒரே அமளி துமளிதான்! கூச்சல் குழப்பம் தான்! அடிதடியும் கைகலப்பும் தான்! மைக்"கைப் பிடுங்குதல், பேப்பர் வெயிட்டைத் தூக்கி எறிதல், நாற்காலியை உடைத்தல், வேட்டியை அவிழ்த்தல், துகில் உரிதல், கூச்சல் போடுதல், அடிதடியில் இறங்கல், கலாட்டாவில் ஈடுபல் என்றாற் போல, ஆய கலைகள்" பற்பல அரங்கேறும் களங்களாக இன்று சட்ட மன்றங்களும் பாராளுமன்றங்களும் ஆகி விட்டன. இப்போக்கினை இன்றைய ஹைகூ ஒன்று சட்டமன்ற உறுப்பினருக்கு விடுக்கும் எச்சரிக்கை வடிவில் எடுத்துக்காட்டுகின்றன.

“இறுக்கிக் கட்டுங்கள்
இடுப்பு வேட்டியை
போகுமிடம் சட்ட சபை” (கவிமுகில், சூரியத் துளிகள்)

எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம். எனவே கட்டிய வேட்டி இடுப்பில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால் இறுக்கிக் கட்டுங்கள் என்று சட்டமன்ற உறுப்பினருக்கு யதார்த்தமான அறிவுரை ஒன்றினைக் கூறுகின்றார் கவிமுகில்.

இன்றைய ஹைகூ கவிதைகள் சொல் ஒன்று. செயல் வேறாய் வாழ்ந்து வரும் அமைச்சரையும் விட்டு வைக்கவில்லை. அவர்களின் இரட்டை வாழ்க்கைப் போக்கினை அங்கதச் சுவையோடும் முரண் சுவையோடும் எடுத்துக் காட்டுகின்ற ஆடலரசனின் ஹைகூ ஒன்று.

“ஆயிரம் மகிழ்வுந்தில்
அமைச்சர் பயணம்
எரிபொருள் சிக்கன விழா” (சேரிக்குள் தேர்)

ஆயிரம் கார்கள் முன்னும் பின்னுமாய் அணிவகுத்து வர, அமைச்சர் பயணம் மேற்கொள்ள எந்த விழாவில் கலந்து கொள்ள என்றா கேட்கிறீர்கள்? தெரிந்தால் மயக்கம் போட்டு விழுந்து விடுவீர்கள். எரிபொருள் சிக்க விழாவில் கலந்து கொள்ளத்தான் இவ்வளவு ஆர்பாட்டத்தோடும் ஆரவாரத்தோடும் செலகின்றார் மாண்புமிகு அமைச்சர்! என்ன அற்புதமான முரண்!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் – அரசியல் தலைவர்களால் – நாட்டு மக்களுக்கு நிலையான நன்மைகள் விளைகின்றனவோ என்னவோ, ஆனால் அவ்வப்போது அவர்களது வருகையால் சாலைப் போக்குவரத்தில் இடையிடையே தடங்கல்கள் ஏற்படுகின்றன என்பது இன்றைய சூழலில் மறக்க முடியாத உண்மை. நடைமுறை வாழ்க்கை அனுபவம். இதனை மித்ராவின் ஹைகூ மென்மையாக நகைச்சுவை உணர்வு தோன்றப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

“அமைச்சர் வரும் பாதை
கடக்கத் தவிக்கும் மக்கள்
கேலியாய்… வண்ணத்துப்பூச்சி!” (ஹைகூ கவிதைகள்)

இந்த வண்ணத்துப்பூச்சிக்கு எவ்வளவு கொழுப்பு பாருங்கள்! அமைச்சரின் வருகையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சாலையைக் கடக்க முடியாமல் மக்கள் அல்லாடித் தவித்துக் கொண்டிருக்க, அது மட்டும் எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல், சுதந்திரமாக அங்கும் இங்கும் பறந்து திரிகின்றது! இந்த லட்சணத்தில் அவதிப்பட்டு நிற்கும் மக்களைப் பார்த்துக் கேலியாய் ஒரு சிரிப்பு வேறு!

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று – இவை எல்லாம் நமக்கு நன்றாகத் தெரிந்த பற்று வகைகள்! ஆனால், நாற்காலிப் பற்று என்கிற ஒரு பற்றைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அரசியல்வாதிகளின் அடிமனத்தில் குடி கொண்டிருக்கும் பற்றுத்தான் அது! இந்தப் பற்றைப் பொறுத்த வரையில் தாய் எட்டடி பாய்ந்ததால், குட்டி பதினாறு

அடி பாயும் என்பது நிதர்சனமான உண்மை! எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ, கவிஞர் பல்லவனின் ஹைகூ ஒன்று உங்கள் கேள்விக்கு உரிய பதிலைச் சொல்லுகின்றது.

“இசை நாற்காலிப் போட்டி
இப்பொழுது வென்றது
அமைச்சர் மகன்”   (சின்ன நதிகள்)

இசை நாற்காலிப் போட்டியில் கூட- விளையாட்டில் கூட – இன்னொருவருக்குத் தன் நாற்காலியை விட்டுக் கொடுக்க முன் வரைவில்லை அமைச்சரின் மகன். அதுவும் இல்லாமல் நாற்காலியைக் கைப்பற்றும் போட்டி என்றால் எப்பொழுதும் வெற்றி வாய்ப்பு அவனுக்குத்தான் கிடைக்கும்!

நாட்டில் எத்தனை ஆட்சிகள் மாறினாலும் – எத்தனைத் தேர்தல்கள் வந்தாலும் – வறுமைக்கோடு அழியப் போவதில்லை. பட்டினிச் சாவுக்கு முற்றுப்புள்ளி வரப் போவதில்லை. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகள் இந்திய நாட்டுக் குடிமக்கள் அனைவருக்கும் கிடைக்கப் போவதில்லை. புதிய தேர்தல் நடந்து, புதிய ஆட்சி அமைந்தால் மட்டும் நிலைமை மாறிவிடுமா? நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடுமா? எல்லாரும் கவைக்கு உதவாத வெறும் பேச்சுத்தான்! வீண் கற்பனைதான்! இதனைப் பொட்டில் அடித்தாற் போல் ஐந்தே சொற்களில் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது அசோக்குமாரின் ஹைகூ கவிதை.

“புதிய ஆட்சி
புதிய தேர்தல்
வெங்காயம்”   (இன்னும் மக்கள்)

ஓர் அரசியல் தலைவருக்கு மிகவும் பிடித்தமான – அவர் அடிக்கடி கையாளுகின்ற – வெங்காயம் என்ற சொல்லைக் கொண்டே இன்றைய அரசியல் நிலையைச் சாடி இருப்பது இக் கவிதையின் தனிச் சிறப்பாகும். இத்தகைய சம கால அரசியல் அலசல்களை – சாடல்களை – இன்றைய ஹைகூ கவிதைகளில் பரவலாகக் காண்கின்றோம்.

சமூக அவலங்களின் வெளிப்பாடு

இன்றைய சமூக அவலங்களை மெல்லிய நகைச்சுவை உணர்வோடும் கூர்மையான அங்கதச் சுவையோடும் அடையாளம் காட்டுவதில் – விமர்சனம் செய்வதில் – ஹைகூ கவிதைகள் முன்னிற்கின்றன. வறுமைக் கொடுமை, தீண்டாமைக் கொடுமை, வரதட்சனைக் கொடுமை, வேலையின்மை, சாதி, சமய வேறுபாடு, கையூட்டின் பெருக்கம், விலைவாசி உயர்வு, சுற்றுப்புறச் சூழல் கேடு, கல்வித்துறை அவலம், குழந்தைத் தொழிலாளர் அவலம், முதிர் கன்னியர் அவலம், என்றாற் போன்று இன்றைய சமூகத்தில் கனன்று கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளையும் ஹைகூ கவிஞர்கள் தங்கள் கவிதைகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். நெஞ்சை அள்ளும் ஒரு சில சான்றுகளை மட்டும் ஈண்டுக் காணலாம்.

கையூட்டும் லஞ்சமும் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். இன்றைய சூழலில் லஞ்சத்திற்கு ஒரு காரியம் ஆக வேண்டும் என்றால் கூட நேரில் சென்று கையூட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எதுவும் நடக்காது.

"நலம் நலமறிய ஆவல்

மற்றவை நேரில்

கையூட்டுக் கடிதம் எழுதியது லஞ்சம்!" (சூரியத் துளிகள்)

இது கவிமுகிலின் நயமான ஹைகூ. இங்கே கடித இலக்கிய உத்தியைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கவிஞர்.

இன்றைய திருமணச் சந்தையில் நடக்கும் பேரங்களே தனிரகம் தான்! சாதாரணமாக, கறுத்த பெண் என்றால் – அவள் திருக்குற்றாலக் குறவஞ்சி கூறுவது போல, கறுப்பில் அழகியாக இருந்தால் கூட – திருமணம் கைகூடுவது என்பது அரிதினும் அரிய காரியமாகவே இருக்கும். ஆனால், மு.முருகேஷ் படைக்கும் கறுத்த பெண்ணுக்குத் திருமணம் உறுதியாகி, நல்லபடியாக நடந்து முடிந்தும் விட்டது. புக்ககம் செல்லும் வாய்ப்பும் அவளுக்குக் கிடைத்து விட்டது. எப்படி என்கிறீர்களா?

"கறுத்த பெண்

புகுந்தகம் வந்தாள் ....

கலர் டி.வி, யோடு" (விரல் நுனியில் வானம்)

கலர் டி.வி. என்ற சீர் வரிசையில் மணப்பெண்ணின் கறுப்பு நிறம் ஈடுசெய்யப்பட்டுவிட்டது. முதிர்கன்னியின் மன உணர்வுகளை இன்றைய ஹைகூ கவிதைகள் நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. அறிவுமதியின் ஹைகூ ஒன்று இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

"மணவறை

மெதுவாகப் பெருக்குகிறாள்

முதிர்ன்னி" (கடைசி மழைத்துளி)

இன்றைய கல்வி முறையில் மாற்றம் தேவை என்ற குரல் இன்று சிந்தனையாளர்கள் இடையே ஓங்கி ஒலிக்கின்றது. இதன் தாக்கத்தை இன்றைய ஹைகூ கவிதைகளிலும் ஆங்காங்கே காணமுடிகின்றது. ஓர் எடுத்துக்காட்டு,

“என்ன வேலை தெரியும்

நான் கான்வென்டில் படித்தவன்
சரி மூட்டை தூக்கப் போ” (தீவின் தாகம்)

போகிற போக்கில் – சின்னஞ்சிறு உரையாடல் வடிவில் – இன்றைய கல்வி முறையை விமர்சனம் செய்துள்ளது இந்த கவிதை. மூன்று வயதில் கான்வென்டில் படித்த போது புத்தக மூட்டையைத் தூக்கிச் சென்று வந்த அனுபவம், பின்னாளில் மூட்டை தூக்கும் வேலையில் சேருவதற்குப் பயன்படுகின்றது!

கல்வி முறையை மட்டுமின்றி, ஆசிரியர் கற்றுத்தரும் முறையையும் ஹைகூ கவிதை விமர்சனத்திற்கு உள்ளாகுகின்றது. கழனியூரனின் ஹைகூ ஒன்று இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

“அன்புடைமை அதிகாரத்தை
ஆசிரியர் கற்பிக்கிறார்
கையில் பிரம்புடன்….” (நட்சத்திர விழிகள்)

ஆசிரியர் கற்பிப்பது திருக்குறளில் இடம்பெற்றுள்ள அன்புடைமை ஆதிகாரத்தை, அவர் கையில் இருப்பதோ எந்த நேரமும் மாணவர்களைப் பதம் பார்க்கக் காத்திருக்கும் பிரம்பு. அருமையான முரண்!

இன்றைய ஹைகூ கவிதைகள் குழந்தைத் தொழிலாளர் நலத்திற்காகவும் குரல் கொடுக்கத் தவறவில்லை.

“ஞானப்பால் கிடைக்கலையாம்
தீக்குச்சி அடுக்கும்
சிவகாசி சம்பந்தன்கள்” (உடைந்து கிடந்த நிலவு)

என்னம் ஸ்ரீரசாவின் ஹைகூ குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசி நகரில் தீக்குச்சித் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் குழந்தைகளின் வாழ்க்கை அவலத்தை ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தரின் வாழ்வோடு தொடர்புபடுத்திச் சித்தரிக்கின்றது.

“தீப்பெட்டி
திறந்தால்
பிஞ்சு விரல்கள்” (கணையாழி)

என்னும் ஸ்ரீகுமரனின் ஹைகூ கவிதையும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது ஆகும்.

இந்தியத் திருநாட்டில் முதுகெலும்பான எழை விவசாயி ஒருவனின் வாழ்க்கை அவலத்தைச் சொல்லோவியமாக்கும் ஹைகூ இது.

“ஏர்பூட்டி, நிலம் உழுது,
நீர்ப்பாய்ச்சி, கதிர் அறுத்தான்
கடைசியில் வாய்க்கரிசி” (சிறகுகளின் சுவடுகள்)

இங்ஙனம் கனலும் சமூக அவலங்களையும் பிரச்சினைகளையும் பாடுவதில் இன்றைய ஹைகூ கவிதைகள் முனைப்பாக உள்ளன.

நடைமுறை வாழ்க்கைப் பதிவுகள்

அன்றாட, நடைமுறை வாழ்க்கையின் இயல்பான பதிவுகளும் ஹைகூ கவிதைகளில் காணப்படுகின்றன. இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு சில ஹைகூ கவிதைகளைக் காணலாம்.

நாள்தோறும் காலையில் எழுந்ததும் நாட்காட்டியில் முந்தின நாளின் தாளைக் கிழித்தல் என்பது அனைவரது வாழ்விலும் நடக்கும் ஓர் அன்றாட அனுபவம். இதனையும் ஒரு கவிதைப் பொருள் ஆக்கியுள்ளார் கவிஞர் பல்லவன்.

“என்ன செய்து கிழித்தாய்?
நாள்தோறும் கேட்கும்
நாள்காட்டி” (சின்ன நதிகள்)

எல்லாந் தான் படிச்சீங்க, என்ன பண்ணிக் கிழிச்சீங்க? என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு திரையிசைப் பாடலில் கேட்டது போல், என்ன செய்து கிழித்தாய்? என்று நாட்காட்டி கேட்பதாக இக்கவிதையைப் படைத்துள்ளார் பல்லவன். இந்த கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியாவிட்டாலும், நாள்தோறும் நாட்காட்டியின் தாளைக் கிழிப்பதை யாரும் நிறுத்தப் போவதில்லை. என்றாலும், இந்த ஹைகூ கவிதையைப் பொருளுணர்ந்து, மனம் கலந்து படித்தவர்கள் இனிமேல்

நாள்காட்டியின் தாளைக் கிழிக்கிறோம் என்று மட்டும் நினைக்க மாட்டார்கள். வாழ்நாளில் ஒரு நாளைக் கிழிக்கிறோம் என்ற உணர்வையே பெறுவார்கள். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால்,

> "நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
>
> வாளது உணர்வாய்ப் பெறின்"   (குறள், 334)

என்ற திருக்குறளின் ஹைகூ வடிவமே பல்லவனின் கவிதை என்பது விளங்கும்.

கல்லடி பட்டாலும் கண்ணடி படக் கூடாது" என்பார்கள். அதற்காகவே விகாரமான உருவம் கொண்ட திருஷ்டி பொம்மையைப் பலரும் பார்க்கின்ற இடத்தில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். இதெல்லாம் பழங்காலத்து நிலை. இன்று நடப்பது கணினி யுகம் அல்லவா? இந்த யுகத்தில் எது நடந்தாலும் வித்தியாசமாக இருக்க வேண்டாமா? எதையும் மாறுபட்ட கோணத்தில் சிந்திக்க வேண்டாமா? இதோ ஒரு ஹைகூ

> "மிகவும்
>
> அழகாயிருக்கிறதே
>
> திருஷ்டி பொம்மை" (ந.முத்து, எடை குறைவாய்....)

திருஷ்டி பொம்மைக்கே திருஷ்டி பட்டுவிட்டது! ஆம். மிகவும் அழகாய் இருக்கிறதே! என்று அதன் அழகைப் பார்த்த யாருடைய கண்ணோ பட்டுவிட்டது! ஆடலரசனின் ஹைகூ ஒன்றும் இதே சிந்தனையைப் பிறிதொரு கோணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

“எப்போதும்

காதலி என் கையில்

செல்லுலர் ஃபோன்” (ஐக்கூ அருவிகள்)

பயன்படும் நேரங்களில் எல்லாம் இன்றைய மனிதனின் கையிலும், பயன்படாமல் சும்மா இருக்கும் நேரங்களில் அவனது சட்டைப் பையிலும் (இதயத்திற்கு மிக அருகில்) வீற்றிருக்கும் செல்லுலர் ஃபோனுக்குக் காதலியை அமுதபாரதி உவமை கூறி இருப்பது பொருத்தமானதுதான்!

இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம் உண்டு. நீட்டி முழக்கி உபதேசம் செய்து கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து, அறிவுரை வேண்டாம் வழிநடத்திச் செல்லுங்கள்´ என்று கேட்டுக் கொண்டது தான் தாமதம். என்ன நடந்தது தெரியுமா? செந்தமிழினியனின் ஹைகூ கவிதை ஒன்று இதற்கான விடையைத் தருகின்றது.

“அறிவுரை வேண்டாம்

வழிநடத்திச் செல்லுங்கள்

எவரையும் காணோம்” (பரிதிப் புன்னகை)

உபதேசம் ஊருக்குத் தான் எனக்கல்ல’ என்ற கொள்கையைப் பின்பற்றி மாயமாய் மறைந்து விடுகிறார் அறிவுரை சொல்லிக் கொண்டிருந்த அன்பர்.

“சிரிக்காமலே

குழி விழுகிறது

எங்களூர் சாலைகளுக்கு” (முதலில் பூத்த ரோஜா)

என்னும் தங்கம் மூர்த்தியின் ஹைகூ கவிதையைப் படிக்கும் நம் முகத்தில் குமிண் சிரிப்பு அரும்புகின்றது. அங்கதச் சுவையும் நகைச்சுவையும் அழகாகக் கைகுலுக்கி நிற்கும் ஹைகூ இது!

'நியாய (?) விலைக்கடை' களில் இன்று நடக்கும் தில்லுமுல்லுகளுக்கு அளவே இல்லை. ஒருவர் எவ்வளவு விழிப்போடு இருந்தாலும் சரி, வாழ்வில் ஒருமுறையாவது ஏமாற்றத்திற்கும் ஆளாகாமல் தப்பிக்க முடியாது. 'ரேசன்' கடைகளில் இன்று ஒருவருக்கு இயல்பாகக் கிடைக்கும் இந்த வாழ்க்கை அனுபவத்தை, ந.முத்து தமக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் ஹைகூ கவிதையாக வடித்துள்ளார். அக் கவிதை இதோ.

“ரேசன் கடைக்காரருக்கு

குழந்தை பிறந்தது

எடை குறைவாய்” (எடை குறைவாய்....)

ஓஹோ, 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதன் உண்மையான பொருள் இது தானோ? இது தான் ஹைகூ!

முத்தாய்பாக, நறுக்குத் தறித்தாற்போல் நான்கே சொற்களில் ஹைகூவைக் குறித்து இப்படிச் சொல்லலாம். உருவத்தில் 'சுருக்' உணர்த்தும் முறையில் 'சுரீர்' – பார்வையில் 'பளிச்' – நடையில் 'நச்' – இதுதான் ஹைகூ!

1984 ஆம் ஆண்டு **அமுதபாரதி**யின் புள்ளிப்பூக்கள் என்ற ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

யார்

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?

இடி மின்னல்

ஏழையின் உடலில்
வியர்வையின் மின்னல்
இடிகளோ நெஞ்சில்....

இளமை

முதிர்ந்தால் என்ன?
இன்னும் இளமையிருக்கு
கண்களில்!

வெற்றி

முன்னால் நீண்டது முள்
சோர்வற்ற எனக்காக
பின்னால் மகிழ்ந்தது பூ

அந்தஸ்து

ஆணியில் தொங்குகிறது
அவனது மதிப்பு
சட்டையாக!

நாரை

நாட்பட நாட்படச்
சாயம் வெளுக்கும்
மயிர்க் கம்பிகள்

அழகு

தலைவிரி கோலத்தை
யார் அழகில்லை என்பது?
மரத்தைப் பார்

பேதங்கள்

எல்லா ரத்தமும் சிவப்பு
இதிலும்
எத்தனை 'க்ருப்பு'!

நலம்

என்ன நலந்தானே?
நல்ல நலம்
நலம் சிரித்துக் கொண்டிருக்கு – தனியே

தத்துவம்

குட்டிச் சுவர்தான்
அதன் தலையில் ஓர்
அற்புத இளஞ்செடி

1985 ஆம் ஆண்டு **தமிழன்பன்** எழுதிய சூரியப் பிறைகள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- மன்மதச் சாம்பலில்
  மறைந்து கிடந்தது ஒரு கங்கு
  சிவன் எரிந்தான்.

- நாளையும்

வர ஆசை சூரியனுக்கு
சாளரத்தில் புன்னகைக்கும் பரிமாற

- ஜீவ யாத்திரையில்
  ஆன்மாவின் கைவிளக்கு
  மரணம்.

- பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
  முத்தமிட்டுச் சொன்னது பூமி
  ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!

- ஓட்டு போட்டு விட்டுத்
  திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது
  தனது கல்லறையில் வேறொரு பிணம்.

- படித்து முடிக்கவில்லை
  பாட நூலை விளக்கு
  கறுத்து விட்டது.

- பயம்
  ஊர்ந்து கொண்டிருக்கும் இது
  பாம்பு போன தடம்.

- சிலம்பை
  உடைத்து என்ன பயன்?
  அரியணையிலும் அந்தக் கொல்லன்.

- ஆகாயமும் அழகு
  பூமியும் அழகு – ஆம்
  என் கையில் ரொட்டித்துண்டு.

- ரோஜாவை
  ரசிக்கும் பார்வையைத் துடைத்துக் கொள்
  மிதிபட்ட புல்லில் ரத்தம்.

2009 ஆம் ஆண்டு **வசீகரன்** எழுதிய குட்டியூண்டு என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- சுள்ளென்று வெயில்
  வரிசையில் குழந்தைகள்
  எப்ப வருவார் அமைச்சர்?

- அம்மாவுக்கு மட்டும்
  அரும்பொருள் புரிகிறது
  தத்தக்கா பித்தக்கா!

- கார்லையா?பைக்லயா?
  குழந்தையின் பதில்
  அம்மா இடுப்பில்!

- மூட்டை சுமப்பவனிடம்
  சிறுவன் கேட்டான்
  'நீ எந்தப் பள்ளிக்கூடம்?'

- கணினியில் அமர்ந்து
  சொல்லிக் கொடுத்தது குழந்தை
  கற்கும் அப்பா!

- மகிழ வைக்கும்
  ஒரே அழுகை
  பிறந்த மழலை!

- ஒரு பொக்கைக்கு
  துணை இன்னொரு பொக்கை
  தாத்தா மடியில் மழலை!

- தனித்து நின்ற குழந்தையிடம்
  யார் நீ என்றதும் சொன்னது
  எங்க அப்பாவுக்கு நான் பொண்ணு!

- கதையோடு பாட்டி
  கதை கேட்க நேரமின்றி
  கணினி விளையாட்டில் குழந்தைகள்!

- அம்மாவென அழைத்தது குழந்தை
  அடுத்த நிமிடம் விழுந்தது அடி
  கால் மீ மம்மி!

2008 ஆம் ஆண்டு **ஓவியம் தமிழ்ச்செல்வி** எழுதிய உடைபடும் வண்ணங்கள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- அரசு அறிவிப்பு
  வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்
  நடைபாதைவாசி?

- இறந்தும்
  சிரிக்கிறார் அப்பா
  புகைப்படம்

- எங்கள் வீட்டில்
  பகலிலும் பௌர்ணமி
  அம்மா சுட்ட தோசை

- அவளின் வருகையை
  செல்லமாய்ச் சொன்னது
  கொலுசு

- நில நடுக்கத்தில் பத்தாயிரம்
  ஆழிப் பேரலையில் ஒரு இலட்சம்
  காக்கும் கடவுள்

- நாட்டின் முதுகெலும்பு
  விவசாயி
  முதுகெலும்பாய் வாழ்க்கை

- பால் சுரக்கிறது
  வைக்கோல் கன்று
  ஆங்கில வழிக் கல்வி.

- அக்கினி சாட்சியாய்
  திருமணம்
  'ஸ்டவ்' வெடித்தது

- பெற்றவர் பட்டினி
  நடிகருக்குப் பாலாபிஷேகம்
  இந்தியா இளைஞர் கையில்.

- தூரிகையில்லை வண்ணமில்லை
  அழகிய ஓவியம்
  அந்திவானம்

2007 ஆம் ஆண்டு **சி.விநாயகமூர்த்தி** எழுதிய புன்னகை மின்னல் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- குற்றால அருவிக்கு
  கூட்டிச் செல்லாததால்
  மகன் கண்களில் சிற்றருவி.

- முதலில் கொடுத்தேன் கைது
  மீண்டும் கொடுத்தேன் விடுதலை
  லஞ்சம்.

- குளத்தில் பெண்கள் குளிக்கையில்
  ச்சே! எவ்வளவு அழுக்கு
  கரையில் நிற்பவர் கண்களில்.

- ஆண்கள் பெரும்பாலும்
  இராமன்களே
  சந்தேகப்படுவதில்.

- தண்ணீரைப் பதுக்கியதால்
  அரிவாள் வெட்டு
  இளநீர் மீது.

- நாற்காலியைத்
  தூக்கியெறிந்து சண்டை
  நாற்காலிக்காக.

- மழையில்லாமல், இரயில்லில்லாமல்
  தனியாய் மின்னல்…
  அவள் புன்னகை.

- தீக்குளித்த சீதையால்
  நிரூபிக்கப்பட்டது
  இராவணன் கற்பு.

- பதிலைத் தேடித் தேடி
  குனிந்து வளைந்ததோ?
  கேள்விக்குறி

- குடித்தது அவன் மட்டும்
  ’ஆட்டம்’ கண்டது
  குடும்பம்.

2005 ஆம் ஆண்டு **கன்னிக்கோவில் ராஜா** எழுதிய தொப்புள்கொடி என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- தொப்புள் கொடி
  அறுபட்ட நேரங்களில்
  உயிர்க்கும் ஆசைகள்

- எண்ணி அடுக்குகிறான்
  படிக்காத சிறுவன்
  தீக்குச்சி

- தேர்ந்த பேராசிரியர்
  திணறுகிறார்
  மழலை மொழி

- அன்னையின் தாலாட்டு
  பசி மறக்கும்
  அழும் குழந்தை

- வாழ்வனுபவம்
  சொல்லாமல் சொல்லும்
  சுருங்கிய முகம்

- கைத்தட்டலில் உயிர்ப்பிக்கிறது
  நம்பிக்கை
  முடவனின் நடனம்

- உனக்குள் உன்னைத் தேடு
  மௌனமாய்ச் சொல்லியது
  பாறைக்குள்ளிருக்கும் சிலை

- தற்கொலையில் காதலர்கள்
  சாதிக்கத் துடிக்கும்
  முதியவர்

- மகனின் கடிதத்தில்
  என்றென்றும் அன்புடன்
  காப்பகத்தில் தாய்

- உறக்கத்தில் முதிர்கன்னி
  நிரம்பி வழிகின்றன
  திருமணக் கனவுகள்

2005 ஆம் ஆண்டு **கம்பம் மாயவன்** எழுதிய மின்மினியின் வெளிச்சத்தில் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- ரசிக்கச் சொல்லி வரும்
  கிழிந்த கூரையினுள்
  முகம் நுழைக்கும் சுரைப்பூ.

- காவல் நிலையத்தில்
  பயமில்லாமல் கன்னிப்பெண்
  காணவில்லை படம்.

- பாக்கெட் நீர் குடித்து
  காவிரியில் எறிந்தான்
  பேருந்தில் செல்கையில்.

- வெட்டப்படும் மரங்கள்
  காயப்படும்
  வானம்.

- மழையென அழும் முதிர்கன்னி
  ஊர்கூடி நடத்தியது
  கழுதைக்கு மட்டும் கல்யாணம்.

- வீதியில் கிடக்கிறது
  ஞானம்
  புத்தகக் கடை.

- காடுகளை வேட்டையாடும்
  ஒரே மிருகம்
  மனிதம்.

- உயர்ந்த மலைக்குள்
  தாழ்ந்த செயல்
  மரம் வெட்டும் சப்தம்.

- எம்.எல்.ஏ மகன்
  அடிக்கடி வெளிநடப்பு செய்தான்
  கல்லூரி வகுப்பில்.

- இறந்த அப்பா
  இன்னும் வழிகாட்டுகிறார்
  அலமாரியில் புத்தகங்கள்.

2003 ஆம் ஆண்டு **இரா. இரவி** எழுதிய விழிகளில் ஹைக்கூ என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- விஞ்ஞானக் கண்டுபிடிப்பில்
  மூடநம்பிக்கை முடைநாற்றம்
  தொலைக்காட்சித் தொடர்கள்

- விலைபோனது
  கொள்கை இலட்சியம்
  கூடுதல் தொகுதிக்கு

- செடி வளர்த்தோம்
  கொடி வளர்த்தோம்
  மனித நேயம்?

- வாங்கினார்கள்
  வைத்துக் கொண்டார்கள்
  சுதந்திரம்

- பாம்பின் கால் பாம்பறியும்
  ஆளும்கட்சி ஊழல்
  எதிர்க்கட்சி அறியும்

- தமிழன் என்று சொல்லடா
  தலைநிமிர்ந்து நில்லடா
  ஆங்கிலக் கையொப்பம் ஏனடா?

- இல்லாத நாடு இல்லை
  இவனுக்கென ஒரு நாடில்லை
  தமிழன்

- உழைத்தால் உயர்வு
  ஓய்ந்தால் தாழ்வு
  வாழ்க்கை

- அப்பா மது போதையில்
  அம்மா தொ(ல்)லைக்காட்சி போதையில்
  குழந்தை கந்தகக் கிடங்கில்

- படித்தவன் பாட்டை
  எழுதியவன் ஏட்டை
  அரசியல்வாதி நாட்டை

2000 ஆம் ஆண்டு **பால பாரதி** எழுதிய இதயத்தில் இன்னும் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- திதி செய்ய மனமில்லை
  இன்னும் வாழ்கிறாள்
  மனதில் அம்மா

- என்ன பரிசு கொடுப்பது
  நாளை
  காதலியின் திருமணம்

- எத்தனை பேர் வந்தாலும்
  மறக்க முடியவில்லை
  முதலில் வந்த வரன்

- சமத்துவபுரம்
  கழிவு நீர் சுத்தம் செய்ய
  அதே கருப்பன்

- புரியாத ஊர்
  புரியாத மொழி
  ஆறுதலாய் அதே நிலா

- சாலை விபத்து
  வேடிக்கை பார்க்கும் விழிகள்
  மரித்துக் கிடக்கிறது மனிதம்

- சரஸ்வதி பூஜை
  அறிவியல் புத்தகத்திலும்
  குக்குமப் பொட்டு

- நன்றி மீண்டும் வருக
  பயமாய் இருந்தது
  அரசு மருத்துவமனை

- எந்தப் பூ மலரும்
  இப்படி
  அவளின் புன்னகை

- இதயத்தில் இன்னும்
  ஈரமாய்
  அவள் தந்த முத்தம்

1985 ஆம் ஆண்டு **பாரதி மணியன்** எழுதிய ஹைகூ50 என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- பெண் பார்க்கும் படலம்
  வீடு கடத்தப்பட்டாள்
  அழகான தங்கை!

- கணக்குப் புலியின்
  தப்புக் கணக்கு
  எட்டுக் குழந்தைகள்!

- உலர்ந்த ஆறு
  ஒட்டிக் கிடந்த
  உழவனின் வயிறு!

- யார் வரவை
  எதிர்பார்த்து.....?
  அலையும் அலைகள்!

- வழிப்பறிக் கொள்ளை
  நவீன மயம்!
  மோசடி நிதி நிறுவனங்கள்!

- வேண்டுதல் கூடியதற்காக
  சிதறுகிறது! பாவம்
  சிதறு தேங்காய்!

- எத்தனையோ முறைதான்
  ஆனாலும் அலுக்கவில்லை
  ஜன்னலோரப் பயணம்!

- காற்றுப் போன பலூன்
  கூம்பிப் போயிற்று
  குழந்தையின் முகம்!

- மழைக்காய் ஏங்கி
  காத்திருக்கிறான்
  தெருவோரக் குடை வியாபாரி!

- பொன்னகை பூத்த மணமகள்
  தொலைந்து போயிருந்தது
  புன்னகை!

1998 ஆம் ஆண்டு **கவிமுகில்** எழுதிய சூரியத் துளிகள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- ஆடிப் பட்டம்
  தேடி விதைப்போம்
  யாருடைய நிலத்தில்?

- இறுக்கிக் கட்டுங்கள்
  இடுப்பு வேட்டியை
  போகுமிடம் சட்ட சபை!

- விளைந்தது நாற்று
  குவிந்தது களஞ்சியம்
  கலையத்தில் இல்லை கஞ்சி!

- வறுமை வாசிக்கிறது
  அஞ்சல் வழிக் கல்வி
  கால் சட்டையில் கிழிசல்!

- வீட்டுக்காரர் மகிழ்ந்தார்
  பக்கத்து வீட்டில்
  திருடன்!

- முடிந்தது அறுவைச் சிகிச்சை
  அழுதார் மருத்துவர்
  காணவில்லை கத்தி!

- தரமுயர்ந்த கல்வி
  வீடுதோறும் பள்ளி
  வாங்கத்தான் பணமில்லை!

- நலம் நலமறிய ஆவல்
  மற்றவை நேரில்
  கையூட்டுக்குக் கடிதம் எழுதியது லஞ்சம்!

- குளித்துக் குடி
  குளிக்கிறோம்
  எங்கே தண்ணீர்!

- ஏகமாக ஏறிப்போச்சு
  விலைவாசி
  எம்.பி களுக்கு!

1995 ஆம் ஆண்டு **புதுவை இளவேனில்** எழுதிய இந்த என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- நேற்று தான் வைத்தேன்
  தொட்டித் தோட்டம்
  நேரம் பேசியது குருவி

- தனியாய்ச் சென்றது
  ஒத்தையடிப் பாதை
  நிலா வெளிச்சத்தில்

- கோடாரியின் பாய்ச்சல்
  கூச்சலிட்டு அலறியது மரம்
  காலடியில் காக்கைக் குஞ்சு

- கனவோடு
  சென்று வந்தாள் அக்காள்
  விமர்சையாய் ராதா கல்யாணம்

- படியளந்தாள் கோவில்
  பரதேசிகள்
  வழிபாடு தொடர்ந்தது

- குடையை விலக்குங்கல்
  நனைவோம்
  நாளைய மழை சந்தேகம்

- சடங்கு செய்ய வேண்டும்
  என்ன சாதி சொல்லுங்க்கோ
  சாதிச் சண்டையில் மாண்டவன்

- இது பாதை மாடுமல்ல
  எங்கள் வாழ்க்கையும் தான்
  நடைபாதை

- பாக்கெட் நாவலை
  கிழித்தெறிந்தேன்

கையெல்லாம் குருதி

- வள்ளி படிப்பாள்
  இந்தியாவின் வளமையை
  கிழிந்த தாவணியைப் போர்த்தி

1996 ஆம் ஆண்டு **அறிவுமதி** எழுதிய கடைசி மழைத்துளி என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- பள்ளிக்குப் போகாத சிறுமி
  செல்லமாய்க் குட்டும்
  ஆலங்கட்டி மழை

- மரம் வெட்டிய கோடரி
  பார்த்துக்கொள்
  கடைசி மழைத்துளி

- வீட்டிற்குள் குரோட்டன்கள்
  தொட்டிக்குள் மீன்கல்
  வானம் தொலைத்த நகரம்

- விடிந்து விடு இரவே
  விழித்திருக்கிறான்
  கூர்க்கா

- நொறுக்குவான் பண்ணையாரை
  எல்லாக் கோபங்களோடு
  சுடுகாட்டில்

- வாழ்த்து அட்டை
  முகவரியில் வருடினேன்
  எழுதிய உன் கையை

- முதியோர் இல்லம்

  யாரோ பாடிக் கொண்டிருந்தார்

  தாலாட்டு

- அகதி முகாம்

  மழையில் வருகிறது

  மண் வாசனை

- மணவறை

  மெதுவாகப் பெருக்குகிறாள்

  முதிர்கன்னி

- நெருப்பு தான் பெண்

  அம்மாவிற்கு அடிவயிற்றில்

  மாமியார்க்கு அடுப்படியில்

1994 ஆம் ஆண்டு **ராஜ முருகு பாண்டியன்** எழுதிய ஹைகூப் பறவைகள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- எதிரில் துரோணர்

  குறி பார்த்து நிற்கிறான்

  கட்டை விரலுடன் ஏகலைவன்

- திண்ணையிலிருந்து

  நிலவை ரசிப்போம்

  தொலைந்தது வீட்டுச் சாவி

- இந்த அழுக்கை
  எந்த நீரில் கழுவ
  சுட்டு விரலில் கரும்புள்ளி

- மழை வருவதற்குள்
  போய்ப் பார்க்க வேண்டும்
  அவன் போட்ட கோலம்

- நாட்காட்டி
  பார்க்கும்போது பயம்
  வாழாத நாட்கள்

- மெல்ல மெல்ல
  பழத்தை நறுக்கு
  உள்ளே வண்டு

- சுவர்கள் வெளுத்தன
  இன்றைய செய்தியில்
  தேர்தல் அறிவிப்பு

- கல்லாகவே இருந்து விடுகிறேன்
  மிதித்து விடாதே
  சுற்றிலும் இந்திரன்கள்

- அழகிய சிற்பம்
  ரசிப்பவர்க்குத் தெரியாது
  சிற்பியின் காயங்கள்

- உழைக்கவே வேண்டாம்
  தட்டும் சோறும் தரும்
  ஜனநாயகம்

1990 ஆம் ஆண்டு **கழனியூரன்** எழுதிய நட்சத்திர விழிகள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- ஆக்ஸிஜன் பூச்செண்டு தர
  புகைபோக்கி மலர்வளையம் வைக்க
  வளர்கிறது விஞ்ஞானம்

- அன்புடைமை அதிகாரத்தை
  ஆசிரியர் கற்பிக்கிறார்
  கையில் பிரம்புடன்....

- ஒரு கன்னத்தில் அடித்தான்
  மறு கன்னத்தைக் காட்டினேன்
  அங்கும் அறைந்தேன்.

- நேற்று வரை தூற்றியவர்கள்
  நாளை முதல் போற்றுவார்கள்
  இன்று அவன் இறந்துவிட்டான்.

- பளபளப்பாகக் கட்சிக் கொடிகள்
  நைந்து கிழிந்து
  தேசியக்கொடி ....

1993 ஆம் ஆண்டு **துறவி** எழுதிய சிறகுகளின் சுவடுகள் என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- ஓடாதீர்கள் ….. ஓடாதீர்கள்…..
  எதற்கு அவசரம்?
  நாளை சூரியன் வரும்.

- குழந்தையின் குறுக்கல் ரசித்து
  பெருமையில் திளைக்கும் தாய்.
  மூலையில் ரவிவர்மா ஓவியம்.

- படித்துப் படித்துப்
  பட்டம் வாங்கினோம்
  எரியாத ஈர விறகு.

- கோவிலில் கற்பூரம் ஏற்றினேன்
  ஜோதியில் தெரிந்தது
  அருகில் நின்ற பெண் முகம்.

- என் வீட்டின் உள்ளே
  நாணயத்தின் சப்தம்
  வாசல் நிறைய உறவு.

- புதைப்பார் யாருமில்லை
  அழுவார் யாருமில்லை
  மனதில் எத்தனை பிணங்கள்!

- ஏர் பூட்டி நிலம் உழுது
  நீர்ப் பாய்ச்சி கதிர் அறுத்தான்
  கடைசியில் வாய்க்கரிசி.

- கண்ணகி உடைத்த
  சிலம்பின் பரல்கள்
  பாண்டியன் விரலில் மோதிரமாய்.

- ஆழமாய்க் குழி வெட்டினேன்
  உற்றுப் பார்த்தால்
  புதைகுழியில் நான்.

- சிறகுகள் என்னவோ ஆகாயத்தில்
  பார்வையோ குப்பை மேட்டில்
  உயரத்தில் பறகும் மேட்டில்.

1994 ஆம் ஆண்டு **நவதிலக்** எழுதிய பூக்கள் பறிப்பதற்கில்லை என்னும் ஹைகூ தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் வருமாறு:

- தமிழ் இனிமை
  அம்மா
  இருப்பதால்!

- மனைவி சிரிப்பு
  பயமாயிருக்கிறது
  முதல் தேதி!

- சினிமா
  ச்சீய்
  கெட்ட வார்த்தை பேசாதே!

- அவள் சிரித்தாள்
  நான் விழுந்தேன்
  கன்னத்தில் குழி!

- சுதந்திர தினம்

  மனதிற்குள் துக்கம்

  வந்தது ஞாயிற்றுக்கிழமை!

  பெண் பிறக்கட்டும்

  குடும்பத்தோடு பிராத்தனை

  பிரசவ வலியில் பசு!

- பூக்கள் பறிப்பதற்கில்லை

  மனிதனால் இனி முடியாது

  செடிகள் சிரிக்கட்டும்!

- சாப்பிடாத சுவாமிக்கு

  நைவேதயம்

  பசியோடு பிச்சைக்காரன்!

- ஆடுவோமே பள்ளு பாடுவோமே

  ஆனந்த சுதந்திரம்

  அடைந்து விற்றோமென்று! …..

- பத்து மாத தவம்

  சாவதெற்கென்று தெரியாமல்

  பெண் சிசு!

மாதிரி விளாக்கள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 12

தொலைநிலைத் தொடர்க் கல்வி இயக்ககம்

இக்கால இலக்கியம் – கவிதை

காலம் 3 மணிநேரம் **மதிப்பெண்கள் 75**

அ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி

1. கண்ணன் என் தாய் என்பதைப் பாரதியார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
2. கிழவர் பாத்திரம் – வீரத்தாய் என்பதைப் பாரதிதாசன் வழி விளக்குக.
3. ஆதிமந்தி, மத்தியின் குணநலன்களை விளக்குக.
4. உழைப்பாளிகள் சுரண்டப்படுவதையும், சமூக நிகழ்வுகளையும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் எவ்வாறு விளக்குகிறார்?
5. மீரா குறிப்பிடும் சமூகக் கருத்துக்களை விளக்குக. .
6. வைரமுத்து தம் கவிதைகளில் காதல் உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
7. அப்துல் ரகுமான் கவிதைகளில் இயற்கை சிந்தனைகளை விளக்குக.
8. மேத்தா தம் கவிதையில் அரசியலை எவ்வாறு கிண்டல் செய்கிறார்?
9. கண்ணாடிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் காவல் மரம், கவிஞனின் ஜனனம் பற்றிய செய்திகளை விளக்குக.
10. வலி கவிதைகளின் வழி அகதிகள் படும் துன்பங்களை விளக்குக.
11. திணை மயக்கத்தில் அவள் பற்றிய உணர்வுகளை விளக்குக.
12. காந்தள் நாட்கள் கவிதைகள் உணர்த்தும் அடித்தட்டு மக்களின் பாதிப்புகளை விளக்குக.
13. கடவுளின் கடைசி நாள் ஆண்டாள் பிரிதர்ஷினி உணர்த்தும் கடவுள் மறுப்புச் சிந்தனைகளை எழுதுக.
14. ஹைகூக் கவிதைகளின் தொடக்கம் பற்றி எழுதுக.

ஆ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி

1. கண்ணன் காதலன், சேவகன், நண்பன், தாய் எனப் பல்வேறு நிலைகளைப் பாரதியார் வழி விளக்குக.
2. வீரத்தாய் நாடகத்தில் நிகழும் அரசியல் சூழ்ச்சிகளைக் கட்டுரை வடிவில் எழுதுக. .
3. ஆட்டன் அத்தியின் காதலையும் வீரத்தையும் விளக்குக.
4. பொதுவுடைமைச் சிந்தனைகளைப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் தம் பாடல்களில் எவ்வாறு வலியுறுத்துகிறார்?
5. ஊசிகள் கவிதைகள் உணர்த்தும் அரசியல் கருத்துக்களை விள்கதுக.
6. கொடிமரத்தின் வேர்கள் கவிதை தொகுப்பில் புலப்படும் தேசியச் சிந்தனைகளை எழுதுக.
7. பறவையின் பாதை கவிதைகள் உணர்த்தும் இறைமை கருத்துக்களைக் படிமம், குறியீடுகளின் வழி விளக்குக.
8. ஆகாயத்துக்கு அடுத்த வீடு கவிதைத் தொகுப்பில் தேசியக் கருத்துக்களை விளக்குக.
9. பா.விஜய் கண்ணாடிக் கல்வெட்டுக்களில் வரலாற்று நிகழ்வுகளைத் தொடர்புபடுத்தும் செய்திகளை விளக்குக.
10. வலி கவிதைகள் உணர்த்தும் ஈழத்து போரில் பாதிக்கப்பட்ட மக்கள் உணர்வுகளை விளக்குக.
11. ஈழத்துப் பிரச்சினைகளை இன்குலாப் தம் கவிதைகளில் எவ்வாறு புலப்படுத்துகிறார்?
12. ஆண்டாள் பிரிதர்ஷினி கவிதைகள் உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகளை விளக்குக.
13. ஹைகூ கவிதைகளின் உணர்த்தும் சுதந்திரச் சிந்தனைகளை விளக்குக.

பாடநூல்கள்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள்.
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்
3. கவியரசர் கண்ணதாசன், அட்டனத்தி ஆதிமந்தி, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை.
4. கல்யாண சுந்தரனார், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் பாடல்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. மீரா, ஊசிகள், சீதை பதிப்பகம், சென்னை.
6. வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள், சூர்யா லிட்ரேச்சர், சென்னை.
7. அப்துல் ரகுமான், பறவையின் பாதை, நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை.
8. மு.மேத்தா, ஆகாயத்துக்கு அடுத்த வீடு, கவிதா வெளியீடு, சென்னை.
9. பா.விஜய், கண்ணாடி கல்வெட்டுக்கள், குமரன் பதிப்பகம், சென்னை.
10. அறிவுமதி, வலி, கவிதா பதிப்பகம், சென்னை.
11. நெல்லை ஜெயந்தா, திணை மயக்கம், வாலி பதிப்பகம், சென்னை.
12. இன்குலாப், காந்தள் நாட்கள், அன்னம் வெளியீடு, சென்னை.
13. ஆண்டாள் பிரியதர்ஷினி, கடவுளின் கடைசி நாள், குமரன் பதிப்பகம், சென்னை.

14. இரா.மோகன், தமிழ் ஹைகூ ஆயிரம், சாகித்ய அகாதெமி வெளியீடு, புதுதில்லி.

பார்வை நூல்கள்

1. அ.சண்முகதாஸ், தமிழின் பா வடிவங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. க.பூரணச்சந்திரன், கவிதையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. எம்.வேதசகாய குமார், நவீன வாசிப்பில் செவ்வியல் இலக்கியம், காலசகம் பதிப்பகம், நாகர்கோயில்.
4. பா.மருதநாயகம், மேலை நோக்கில் தமிழ்க் கவிதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.